347

காவேரி

விக்ருதி – தை ,,, JANUARY – 1951

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
347 1-51.
25.1.51.
2259
199323

விலை 8 அணா

THIS SIGN MEANS SALES WITH SERVICE

நிலங்கள் செழித்துக் கொழிக்க

போர்ட்ஸன்

மேஜர் டிராக்டரைக் கொண்டு உழுங்கள்

இந்தியாவெங்கும் டிராக்டர் டீலர்
சர்விஸ் ஏராளமான ஸ்பேர் பார்ட்ஸ்
இவைகளுடன் கூடியது





போர்ட் மோட்டார் கம்பெனி ஆப் இந்தியா லிட்., பம்பாய்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

ஒரு நாடோடி
நாட்டை ஆள
திட்டம் தீட்டினள்,,

அதற்காக
நெஞ்சிரக்கம்
கொஞ்சமும் இன்றி
அவள் செய்த
வஞ்சகச் செயல்கள்!



ஸ்டூடியோ - சென்ட்ரல்

ஜூபிடரின்
மர்மயோகி

டைரக்ஷன் - கே. ராம்நாத்

ஜனவரி 14உ தமிழ்நாடெங்கும் முதல் ஆரம்பம்

சென்னை : பிரபாத் - - ராஜகுமாரி

மலிவாக சீக்கிரமாக சுலபமாக

அக்ரிகோ மண்வாரிகளை உபயோகியுங்கள்

விவசாயிகள், சுரங்கம், இருப்புப்பாதை முதலியவைகளில் வேலைசெய்பவர்கள், ரஸ்தாக்களை அமைப்பவர்கள் இவர்கள் யாவரும் டாடா அக்ரிகோ மண்வாரிகளையே விரும்புகிறார்கள். விசேஷமான ஹைகார்பன் எஃகால் தயாரிக்கப்பட்ட இம்மண்வாரிகள் நீடித்துழைக்கக் கூடியவையாதலால் இவைகளே கடைசியில் மிகவும் சிக்கனமானவை. உயர்தரமான அமைப்பு உள்ளவையாதலால் இவை கையாளுவதற்கு மிகவும் சுலபமாக இருக்கின்றன. ஆகையால்தான் அவை உங்களுடைய வேலையையும், நேரத்தையும் மிச்சப் படுத்துகின்றன.

டாடா அக்ரிகோ கருவிகள்

A I C
TRADE MARK

கிளை ஆபீஸ்கள்: பம்பாய், மதருஸ், கான்பூர், ஜலந்தர், நாக்பூர், விஜயநகரம், ஸெகிந்திராபாத்.

நீடித்த மலிவான உழைப்புக்காக அக்ரிகோ கருவிகளையே வாங்குங்கள்.

வருகிறது!
விஜயா வின்...
பாதாள பைரவி
டைரக்ஷன் - K.V. ரெட்டி, BSc(HONS)
தயாரிப்பு - நாகிரெட்டி : சக்ரபாணி...
VIJAYA PRODUCTIONS

ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?

உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல், குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — இலேசான ஜுரம் — சரீர இளைப்பு.

ஜம்மியின் லிவர்க்யூர்

ஈரல், குலை நோய்களுக்கும் அவைகள் பரவாமல் தடுப்பதற்கும் உதவுகின்றது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். ஆர்காட் ஸ்ரீனிவாஸ் சார் தெரு, பெங்களூர் ஸிடி. மற்ற கிளைஸ்தாபனங்கள்:— பம்பாய் - நாகப்பூர் - லக்னோ - கல்கத்தா - விஜயவாடா - விஜயநகரம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்
2, பிராடீஸ் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

பார்லி வாட்டரும், கஞ்சியும் இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்

பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சக்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-7 TAM

தீர்க்க தரிசனமா அல்லது தெய்வ வாக்கா!

ஜோஸ்யமா அல்லது திருகால ஞானமா!!

கிருஹங்கள் பேசுகின்றன!!!

உலகப் புகழ்பெற்ற ஜோதிஷ—ரேகா சாஸ்திர தாந்திரிக நிபுணரான ராஜ ஜோதிஷி பண்டிட் ஹரீஷ் சந்திர சாஸ்திரி 1950 வருஷத்தின் எதிர்காலப் பலன்களை கூறியது கல்கத்தா தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்தது. இன்று ஒரு அக்ஷரப் பிசகின்றி அவையாவும் மெய்யாகி விட்டது ஸ்ரீ அரவிந்தர், சர்தார்படேல் இவர்களின் மரணம், நேபாள மன்னரின் பட்டம் துரத்தல், அஸ்ஸாமின் கவர்னர், பிரதம மந்திரி மாறுதல், ஆசார்யா கிருபளானி, டாக்டர் பிரபூலாகோஷ், பஞ்சாப் பழைய காங்கிரஸ்காரர்கள் இவர்கள் புதுகோஷ்டி சிருஷ்டி, பூகம்பமும், ஆகாயவிமான விபத்துக்களும்—இவையாவும் அப்பெரியாரால் முன்னமே அறிவிக்கப்பட்டது. எனவே அவருடைய ஜோஸ்யம் எப்பொழுதும் பலிக்கிறது என்பதை வாசகர்கள் அறியலாம்.

இச் சக்திவாய்ந்த ரேகா சாஸ்திர ஜோதிட நிபுணர் தன்னுடைய யோகா தாந்திரிக சக்தியினுல் நிகழ்காலம், தற்காலம், எதிர்காலம் எல்லாவற்றையும் நுட்பமாக எடுத்துறைக்கிறுர். கிரஹக் கோளாறுகளை நிவர்த்திசெய்து சிக்கலான சட்ட வியவகாரங்களில் வெற்றிபெறச் செய்வதோடு, தன்னுடைய சக்திவாய்ந்த கவசங்களினுல் டாக்டர்களாலும், கவிராஜர்களாலும் குணப்படுத்தமுடியாத தீராத வியாதிகளையெல்லாம் ஸ்வஸ்தப்படுத்திவைக்கிறுர்.

சாந்தி கவசம்:- மன அமைதிக்கும் குடும்ப சுகத்திற்கும் பரீக்ஷையில் வெற்றிபெறவும் உடல் புத்தி இவைகளின் சக்தியை அதிகரிக்கவும் இது உதவும். சாதாரணம் ரூ. 5. ஸ்பெஷல் (உடனே பலனளிப்பது) ரூ. 20/-

பாகால கவசம்:- விரோதிகளை ஜயிக்கவும், வழக்குகளில் வெற்றிபெறவும், தொழிலில் பிரமோஷன் பெறவும், வாகினியாக இருக்கவும் உதவும். சாதாரணம் ரூ. 12. ஸ்பெஷல் (உடனே பலனளிப்பது) ரூ. 45/-

ந்ருஸின்ஹ கவசம்:- பெண்கள் மலடு மாறவும் சூதக சம்பந்தமான கோளாறுகள் மறையவும் உயிரற்ற குழந்தை பிரசவத்தை தடுக்கவும், மனோ வியாதியை குணப்படுத்தவும் சாதாரணம் ரூ. 10. ஸ்பெஷல் (உடனே பலனளிப்பது) ரூ. 29/-

ஆகர்ஷிணி கவசம்:- நீங்கள் விரும்புபவருடன் ஸ்நேகிதராளுலும் சரி விரோதியாளுலும் சரி நிரந்தர ஸ்நேகம் உண்டு பண்ணும் மிகவும் சக்திவாய்ந்தது, சாதாரணம் ரூ. 12. ஸ்பெஷல் (உடனே பலனளிப்பது) ரூ. 50/-

இந்தியாவிலும் பிரநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பிரபலஸ்தர்களிடமிருந்து நற்சாக்ஷிப் பத்திரங்கள் வந்துள்ளன.

இன்றே இவருக்கு எழுதுங்கள்:-

ஹவுஸ் ஆப் அஸ்டிராலஜி

141/1C ரஸ்ஸா ரோட், கல்கத்தா-26

போன்: ஸவுத் 978

மக்கள் என்ன கூறுகிருர்கள்?

மாதவிடாய் (தேவி பில்ஸ்)

(Patent Regd. No. CDL/688)

NOTE:-
Our product DEVIPILLS has been duly analysed by the Director Central Drugs Laboratory of India under Patent Regd. No. CDL/688

ஆயிரக்கணக்கில் வந்துள்ள கடிதங்களில் சிலவை.

வயிற்றுவலி நின்றுவிட்டதுடன் சரிவர ஏற்படுகிறது. Alangiam P. O.

Dear Sir, Dharapuram

சரியானபடி விடாய் ஆகாமல் எனது மனைவி வயற்றுவலியினுல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். "குமுதம்" பத்திரிகையில் தங்கள் "தேவிபில்ஸ்" விளம்பரத்தைக் கண்டவுடன் நான் மருந்துக்கு ஆர்டர் செய்தேன்.

அதை உபயோகித்ததில் வயற்றுவலி நின்று இப்பொழுது சரியாக விடாய் ஆகி வருகின்றது. எல்லாவிதமான மாதவிடாய்க் கோளாறுகளுக்கும் நான் உங்களுக்கு தேவிபில்ஸ் உகந்தமருந்து என்று சிபார்சு செய்கின்றேன். V. S. Natarajan

* * *

தேவி பில்ஸினுல் முழுதும் திருப்தி அடையலாம்

Vijaya Medical House

Sirs, Chailakalapudi

சீனு & கோ அனுப்பிவைத்த தேவி பில்ஸ் என் மனைவி உபயோகித்ததில் அதன் ஆச்சரியமான குணங்களைக் கண்டதோடு முழுதும் குணம் அடைந்து திருப்தி அடைந்தேன் என்று நான் சர்டிபை செய்கின்றேன்.

நான் இதை நன்றியோடு தெரிவித்துக் கொள்ளுவதோடு மற்ற எல்லோருடைய தேவைக்கும் உபயோகித்துக்கொள்ள சிபார்சு செய்கின்றேன்.

Z. J. Nageswararao
For N. Venkatarao

* * *

நம்பகமானது தீமையற்றது குணமுடையது

Dear Sirs, Ramnad

உங்களுடைய தேவிபில்ஸ் கோரிய பலனை உடனடியாக கொடுத்தது என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். அத்துடன் அது நம்பகமானதோடுகூட தீமையற்றதும் என்பதை சரியாக திட்டமாக்குகிறது. M. N. Srinivasan

* * *

என் மனைவி விரும்பிய பலனை அடைந்தாள் Abergeldie Rozelle

Sir, Ceylon

தங்கள் (ஸ்பெஷல்) தேவிபில்ஸ் பெற்றேன். எதை விரும்பினேனே அதை பூரண திருப்தியுடன் அடைந்தேன். எனது மனைவி தேவிபில்ஸ் உபயோகித்ததிலிருந்து அவள் சரியானபடி மாதங்களில் விடாய் அடைவதை சீக்கிரத்தில் அடைந்துவிட்டாள்.

தேவி பில்ஸ் நம்பகமானதும் பலனுடையதும் உயர்ந்ததுமானது என மிக்க மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். S. Ponnudurai

* * *

வேறுபல மருந்துகளினுல் உபயோகமில்லை என்றபின் இம் மருந்து வெற்றியளித்தது

Dear Sirs, COLOMBO.

பல வேறு மருந்துகளை உபயோகித்து வேறு வழியில்லை என நம்பிக்கை இழந்து கடைசியாக உபயோகித்த உங்கள் தேவி பில்ஸ் ஒரு வரப்பிரசாதம் போல என் மனைவிக்கு கிடைத்து உபயோகிக்க காந்தம்போல வேலை செய்தது—ஒரு புட்டி மருந்து திருமுன்பே படமுடியாத சிரமங்கள் எல்லாம் தீர்ந்து சந்தோஷமாக இருக்கிருள். அவள் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியும் ஆசியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். G. Ramaswamy, Mon.ragala

* * *

தீரமுடியாத கேஸ்களில் ஒரு கைதேர்ந்த டாக்டரைப்போல் தானே நடிக்கிறது.

Sirs, Kadmbur.

4 மாதங்களாக தவறிய மாதவிடாயினுல் என் மனைவி அவதியுற்று பல டாக்டர்

மாதவிடாய்

தேவி பில்ஸ் (Regd. CDL/688.) எக்காரணத்தினுலும், எத்தனை மாதமானுலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலிகளை கண்டு ஏமாருதீர்கள். உத்தரவாதமுள்ளது. விலை சாதா ரூ. 8-8-0. ஸ்பெஷல் ரூ. 10-8-0. (த. சி. தனி.)

கர்ப்பத்தடை

ஸ்பெக் மாத்திரைகள் (Regd No. 266) 12 நாள் உபயோகித்தால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவை தடுக்கும் மாதவிடாய் தவராது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம், டெபரரியாக கர்ப்பத் தடைக்கு ஸ்பெக் ஜெலலியை உபயோகிக்கவும் — ஸ்பெக் டாப்ஸ் — ரூ. 12-0-0. ஜெல்லி — ரூ. 6-8-0. (த. சி. தனி)

SEENU & Co. P. B. No. 1638 (3) **MADRAS-1**

Branch: 134, Serangoon Road, SINGAPORE

Agents: NEW COLOMBO MEDICAL STORES, 82, Main Street, COLOMBO-11

களால் சிகிச்சையுற்றும் திரவேயில்லை— பத்திரிகைகளில் உங்கள் விளம்பரத்தைக் கண்டு, உங்கள் தேவிப் பில்ஸ் வாங்கி உபயோகித்தாள். பின்னர் அதனுடைய அற்புத சக்தியால் சரியான விடாய் அடைந்து ஒருவித சிரமமும் இல்லாதிருப்பதைக்கண்டு ஆச்சரியமடைகினறேன்.

R. Perumalsamy Naidu, President
Panchayat Court

* * *

ஒரு வருஷத்திற்குமேல் நின்றிருந்தது உபயோகித்த சிறிது காலத்தில் மறுபடியும் ஒழுங்கான மாதவிடாய் ஆகிறது

Sirs, Sulivanpet.

ஒரு வருஷ காலமாக மாதவிடாய் கோளாரின் உபாதையினுல் அவஸ்தையுற்ற எனது மனைவிக்கு உங்கள் தேவி பில்ஸ் வாங்கிக்கொடுத்தேன். உங்கள் விபரத்தின்படி மருந்தை 7 நாள் உபயோகித்தாள் 8-வது நாள் குணமடைந்து ஒருவித சிரமமும் இல்லாமல் விடாய் ஆகி இப்பொழுது சௌகர்யமாக இருக்கின்ருள் பிறகுதான் உங்கள் தேவி பில்ஸன் பேரில் நம்பிக்கை உண்டாயிற்று. உங்களுடைய சமய உதவிக்காக முழுமனதுடன் வாழ்த்துகிறேன்.

Sub. V. N. Murugesa Mudaliar,
Pensioner

* * *

அபூர்வ சக்திவாய்ந்த மருந்து

Dear Sir, Vijayawada.

தேவி பில்ஸ் வி. பி. பி. 17-2-50ல் கிடைத்து உபயோகிக்க தேவையான குணத்தைக் கொடுத்தது. அது பயனடையக் கூடியதும் நம்பகமானதும் என நம்புகிறேன். அதனுடைய அபூர்வ சக்தியை ஒவ்வொருவருக்கும் அறிவிப்பதோடு தேவைப்படும் சமயம் உங்களையே நாடவேண்டும் என்பதையும் முடிவுசெய்து விட்டேன்.

Mukkala Suryarao,

* * *

கைவிடப்பட்ட கேஸ்களில் கூட ஒருவித தீங்கன்னியில் மிகவும் திருப்திகரமாகவே வேலை செய்கிறது.

Sir, Ganapavaram

உங்களால் அனுப்பப்பட்ட தேவி பில்ஸ் எனது குடும்பத்தில் உபயோகிக்கப்பட்டது— பெண்களுக்கே அதுஒரு அதிசயமருந்து. உடலுக்குக் கெடுதல் இல்லை. 4, 5, மாதங்கள் தாமதப்பட்ட மாதவிடாய், தேவி மாத்திரை சாப்பிட்டதும் வழக்கம்போல் ஆனது. உங்களுடைய இந்த மருந்துக்கு நிகராக வேறுஇல்லை.

உங்களுடைய மருந்துக்கு சீக்கிரத்தில் நல்ல பிராபல்யம் கிடைக்க விரும்புகின்றேன்.

M. Sundara Rao,
(Headmaster) H. A. School.

* * *

பயமின்றி உபயோகிக்கக்கூடிய பெயர் பொருத்தமுள்ள மருந்து.

அன்பார்ந்த ஐயா, Valavdi P. O.,

மூன்று வருடகாலமாக காலந் தவறிய மாதவிடாயினுல் கஷ்டப்படும் ஓர் பெண்ணிற்கு உங்கள் தேவி பில்ஸ் கொடுக்கப்பட்டது ஒரு வார முடிவிற்குள் எதிர்பார்த்த சௌகரியம் அடைந்தாள். பெண்களுக்கு மிகவும் உகந்த மருந்து தேவி பில்ஸ் என்று அப் பெண் கூறுகிருள்.

Dr. V. K. Shanmugam,
V. K. S. Medical Hall, Udumalpet.

List of 1st prize winners for C. No. 41:—(1) Sheoknmarlal, Patna. (2) L. Paja-panda, Bubaneshwar. (3) Bhuvaneshwar Singh, Kanpur. (4) S. A. Dananjaya Sarathy, Repalle. (5) A. V. M. Sah, Kancheepuram (6) V. Balasubramaniam, Trivellore. (7) R. Balakrishnan, Madras (8) R. S. Ahluwalia, Ludhiana. (9) T. J. Das, Sankarakoil. (10) Amirchand Rajput, Amritsar. (11) P. V. Abdulla, Bezwada. (12) B. Kasturchand Kabra, Golaghat. (13) V. Hariram Joshi, Ludhiana. (14) K. B. Chetri, Derababananak. (15) A. C. Bhuloka Rao, Unikili. (16) S. Ram, Vizag. (17) C. Shankardas, Ceylon. (18) Pt. Risal Singh, Humayunpur. (19) A. Ambayiram, Chinna Salem. (20) BSB. Sheikh, Ichalkaranji. (21) Manohar, Babu, Thana. (22) K. G. Kannan, Mathura UP. (23) E. M. Ali, Mattancherry. (24) M. A. Pansud, Bulandhshahr. (25) J. K. Prasad Verma, Behar. and (26) P. Davy, Sambalpur. In addition to these 12 persons are awarded 3rd prizes and 5 persons 5th prizes.

Full particulars are published in the RAINBOW dated 10—1—51.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 **போட்டி நெ. 43**

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல்இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY 8 NO. 41 • 52 to 67 = 238

52	66	65	55
63	57	58	60
59	61	62	56
64	54	53	67

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 41 on 21·XI·50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd

V Ramanathan
28/12/50
Agent Madras

முடிவு தேதி 27—1—51 விடை 12—2—51

பிரவேசக்கட்டணம்:- கூபன் 1-க்கு ரு. 1/-
6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரு. 5/-

266

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 59 முதல் 74 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டினாலும் 266 வரும்படியாக அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். **விதிகள்:-** தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும்; பிரவேசக்கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

THE RAINBOW COMPETITIONS No. 43, 306 (6), Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூபாய் 25,000 பரிசு** **போட்டி நெ. 44**

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 12—2—51 — விடை: 27—2—51

பிரவேசகட்டணம் கூபன் 1க்கு ரு. 1/- — 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரு. 5/-

270

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—60 முதல் 75 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 270 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

The Rainbow Competitions, No. 44,
306, (6) Mint Street, Madras-1

வரலக்ஷ்மிப் போட்டி - 9 முடிவு.

வரலக்ஷ்மிப் போட்டி நெ. 9

சரியான விடை

1. பேண்டி 2
2. நாணி 2
3. புகழ் 1
4. மருந்து 1
5. [illegible] .... [illegible]
6. நிலம் .... [illegible]
7. நெருக்கம் 1
8. [illegible] 1
9. [illegible] 1
10. ஆசனம் 1

We hereby certify that the above is the Solution in original deposited with us, by VARALAKSHMI COMPANY on 25th [illegible] in a sealed cover which was opend in our presence to day and that a copy of the above solution has been lodged with the bank.

For PREMIER BANK OF INDIA LTD.
V. Ramamurthy 9-12-50.
Agent, (MADRAS)

முதற் பரிசு (சரியான விடைக்கு)

தலைக்கு ரூ. 45—7—0 விதமும்

2வது பரிசு (ஒரு தப்புள்ள விடைக்கு)

தலைக்கு ரூ. 1—9—0 விதமும்

3-வது பரிசு (இரண்டு தப்புள்ள விடைக்கு)

தலைக்கு ரூ. 0—8—0 விதமும்

பகிர்ந்து வழங்கப்பட்டன.

பரிசுத்தொகைகள் 18-12-50 அன்று அனுப்பப்பட்டன.

பரிசு பெற்றவர்கள் சுருக்கமான ஜாபிதா.

மு. கோபாலன், சென்னை. வி. அருணாசலம், சென்னை. எம். வி. குமார், சென்னை. வி. எச். செல்லப்பா, சென்னை. ஆர். ராமராவ், சென்னை. கே. எஸ். வேதலல்லி, சிங்கல்பட்டு. ஆர். பெருந்தேவி அம்மாள், சின்ன காஞ்சிபுரம். பி. வி. வேணுகோபால், புதுப்பாடி. கிருஷ்ணம்மாள், கும்பகோணம். சரவணபவன், கொடவாசல் எஸ். ஆர், எஸ். மணி ஐயர், மாயவரம். எஸ். ஆர். வெங்கடராமன், மாயவரம். வி. முத்துராமலிங்கம், நாகப்பட்டிணம். பி. எஸ். பி. மூர்த்தி, ஜயங்கொண்டம். ஏ. கே. எம். ஆறுமுகம், திருச்சி, கே. நாராயணசுவாமி, கிரனூர். கே. முத்தய்யா, கிரனூர், எஸ். என். முகம்மதுயூசப், கிரனூர். எஸ். சோமசுந்தரம், மதுரை. எம். நடராஜப் பிள்ளை, மதுரை. டி. எம். குட்டப்பப் பிள்ளை, மதுரை. எஸ். டி. முத்துக்கிருஷ்ணன், மதுரை. எம், எஸ். அருணாசலம், மதுரை. கே. ஷாவுல்ஹமீது மதுரை. எம். சுப்பய்யா ஆசாரி, மதுரை. இந்திரா, பெரியகுளம். இரத்தினம் சேர்வை, குமாரம், ஜி. பர்வதம், திருப்பத்தூர், இராமநாதபுரம் ஜில்லா. ஜி. சொர்ணகந்தி, சிவகாசி. க. சுப்பய்யா பிள்ளை, அம்பாசமுத்திரம். ஏ. ராமசுப்பிரமணியம்செட்டியார், அம்பாசமுத்திரம். எம். ஏ. ரஹீம், திருவனந்தபுரம், ஜி பொன்னப்பன், திருவனந்தபுரம். வி, எம், ஏ, காதர், திருவனந்தபுரம் கே, மாடசாமி, திருவனந்தபுரம். ஹரிஹரய்யர், திருவனந்தபுரம், வி, எம், மஹாதேவய்யர், திருவனந்தபுரம். ஏ. கோபாலன் திருவனந்தபுரம் வி. சினிவாசன், திருப்பூர். எஸ். சிக்கண்ண செட்டி, மேடூர். எம், ஆர். நடராஜன் மேடூர், ஜி, சிதாராமன், கொடுமுடி. ஏ. மாணிக்கம், கிட்சிபாளையம், இ, நடராஜன், காரப்பட்டு. எம் என். ராமாச்சாரி, சேலம், பி, எஸ், மணி, பங்களூர். டி, எஸ், ராமச்சந்திரன், பூனா. எஸ், எம். ஸம்பத், பூனா. ஆர். ஜயா, புதுடில்லி. [மற்றவர்களுக்கும் தபால் மூலம் அறிவிக்கப்பட்டு விட்டது.]

நேயர்களின் நல்லாசிகள்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய ஸ்தாபனமாக விளங்கவேண்டும்.

வி. அப்துல் கபூர், கிரனூர்.

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம். மிகச் சுலபமான முறையிலும் யாவரும் எளிதில் பயன் அடையும் படியாகவும் தொகுக்கப்பட்டு வரும் வரலக்ஷ்மி 1, 2 வார்த்தைப் போட்டியை யான் மனமுவந்து வரவேற்கிறேன்.

வி. அப்துல்கபூர்
கிரனூர்.

தங்கள் 1, 2 வார்த்தைகளின் மூலம் அளிக்கும் அறிவு விருந்தின் பயனாக வரலக்ஷ்மிப்போட்டி ஒன்றே இந்தியாவின் மிகப் பெரிய போட்டி ஸ்தாபனமாக விளங்குமென்பதில் ஐயமில்லை. வரலக்ஷ்மிப் போட்டி மாதாந்தரமாக வெளியிடுவதை மாதமிருமுறைச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும் ★

ஏமாற்றத்துக்கு இடமேயில்லை.

கே. ரங்காராமானுஜம், வேலூர்.

ஐயா!

உங்கள் பேரட்டியைக் குறித்து முக்கியமான சிலவற்றைக் குறிக்க ஆசைப்படுகிறேன். உங்கள் போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் ஒவ்வொருவரும் அவர்களது புத்தி கூர்மையினால், கொடுத்திருக்கும் விடைகளையே யோசித்து எழுதுவது சுலபம். இந்த போட்டியில் ஏமாற்றமோ அதிர்ப்தியோ எற்பட காரணமே யில்லை. உங்கள் கம்பெனி மேன்மேலும் பெருகி இன்னும் பெரிய துகைகளைக் கொண்ட போட்டிகளை நடத்த வேண்டுமென்று மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன் ★

கே. ரங்காராமாநுஜம்
வேலூர்

மிகச் சிறந்தது.

ஆர். சுரோசனு. பெஸண்ட் ரோட், கும்பகோணம்.

மானேஜர் அவர்களுக்கு,

* * * தங்கள் வரலக்ஷ்மிப் போட்டி மிகவும் சிறந்தது. இப்போட்டி என்றும் நீடுழி வாழுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன் ★

அறிவுக்கு விருந்து

எம். செங்குலத்தான், கொண்டையம்பேட்டை.

நான் தங்கள் வரலக்ஷ்மிப் போட்டிப் பரிசைக் கவனித்தேன். இதில் அறிவுக்கு நல்ல வேலை கொடுத்து சிந்திக்கும் பண்பை ஊட்டுகிறது......... ★

சிரஞ்சீவியாக வாழ்க!

எம். ஆர் நடராஜன், மேடூர்.

Dear Sir,

தங்கள் வரலக்ஷ்மிப் போட்டியானது யாதொரு ஏமாற்றமும் தந்திரமும் இல்லாமல் நியாயமாய் நடத்தப் படுவதைக் கண்டு மகிழ்ச்சி யுறுகிறேன். இது காரணமாக என் நண்பர்களையும் இப் போட்டியில் கலந்து கொள்ளச் செய்தேன். வரலக்ஷ்மிப் போட்டி என்றென்றும் சிரஞ்சீவியாக நிலைத்து நண்பர்களை மகிழ்விக்க வேண்டுகிறேன் ★

[வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய நேயர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த வந்தனங்கள். நேயர்களின் அன்புக்கு என்றும் பாத்திரமாவோமாக —மானேஜர்.]

கூப்பன்களும் கட்டணமும் சேகரித்து அனுப்ப எங்கும் கலக்டர்கள் தேவை

 Govt. Regd. No. 816

பரிசு ரூ 6000

2-வது பரிசு 2000 முதற் பரிசு ரூ 3000 3-வது பரிசு 1000

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ **பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே** ★

முடிவு தேதி 10—2—51

		விடைகள் 1	விடைகள் 2
1	பெரிய இடத்துக் கலியாணமென்ருல்......களும் நிறைய இருப்பார்கள்.	சிப்பந்தி	சம்பந்தி
2	இது அழகை எடுத்துக் காட்டும்.	பருவம்	புருவம்
3	பெரிய மனிதர்களுடன் பழகுவதென்ருல்...........ப்படுவார்கள் சிலர்.	சங்கோசம்	சந்தோசம்
4	புது மாப்பிள்ளையின் இதிலே ஒரு விசேஷத்தைக் காணலாம்.	உடை	நடை
5	பொதுவாகவே புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் இது அதிகமென்று சொல்லலாம்.	புத்தி	பக்தி
6	பெரிய ஆசிரியருடைய கதை என்ருல் நல்ல இதை எதிர்பார்க்கலாம்.	கற்பனை	விற்பனை
7	தெய்வமெனப் போற்றிவருகின்றனர் பாரதநாட்டினர்.	மாது	மாடு
8	எதற்கெடுத்தாலும்...........ஐக் கூப்பிட்டுக்கொண்டேயிருப்பவர்களுமுண்டு.	பாரியாள்	பணியாள்
9	............ஐத் தாழ்த்திப் பேசினுல் பொறுப்பார்களா பெண்கள் ?	நாயகன்	தாயகம்
10	கலைகளில் இது செய்பவர்கள் பலர் உள்ளனர் பாரதநாட்டில்.	பயிற்சி	ஆராய்ச்சி

மேலே உள்ள கட்டத்தில் பத்து குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு அனுப்பப்படும். விடைகளை அப்படியே வார்த்தைகளாகவும் எழுதலாம். வார்த் தைகளுக்குப் பதிலாக 1, 2, என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம். 'பர்முடேஷன்' (Permutation) முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியார்டர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் எழுதவேண்டும். இப்போட்டியின் சரியான விடை மாசி இதழ் காவேரியில் வெளிவரும். நேயர்களுக்கும் தபால்மூலம் அறிவிக்கப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பனும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :-

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி

"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

"பாயிண்ட்ஸ்" முறை நமக்கில்லை! ஒரு தப்பு இரண்டு தப்பாக கணக்காக்கப்படமாட்டாது!

போட்டி 10-ன் சரியான விடை:—

(1) சந்தேகம் (2) சந்தை (3) தொழில் (4) பணி (5) கவனிப்பு (6) சுபாவம் (7) நியாயம் (8) பாய்ச்சல் (9) உறவு (10) வேகம்.

2 2 2 1 2 2 2 2 2 1

(பரிசு விவரமும் ஜாபிதாவும் அடுத்த இதழில்)



குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

Agent:— T. T. KRISHNAMACHARI & Co.

12 A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

காவேரி

விக்ருதி மலர் 10
- தை இதழ் 6 -

பொருளடக்கம்

பொங்கல் பிரார்த்தனை	...	3
மாவலிப் பொறிகள் — ராமய்யா	...	4
சபரிமலை ஐயப்பன் — தே. ஸ்ரீ. ரா.	...	9
எதிர்விஷம் — ஜி. எஸ். மணி	...	18
அழகின் தோல்வி — முகவை ஜி. எஸ். மணியம்	...	33
காலஞ்சென்ற பெர்தௌசி — என். சுப்பிரமணியம்	...	41
தங்க வேட்டை — ஸி. வி. ராமகிருஷ்ணன்	...	47
லண்டன் கடிதம் — லீலா கோபாலன்	...	54
ஜெய் ஸோம்நாத் (தொடர் கதை) — கே. எம். முன்ஷி	...	57
பயித்தியப் போக்கு — எஸ். கோமதி சுப்ரமணியம்	...	73
ஸ்ரீ ஸ்துதி — எ. கே. ராகவாச்சாரியார்	...	81
தெய்வம் தந்தது — மாயாவி	...	84

குறிப்பு:
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

புத்தாண்டு பொங்கல் வாழ்த்து

அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் எங்களன்பார்ந்த

இன்பம் ததும்பும் பொங்கல் வாழ்த்துக்களை

மிக்க ஆர்வத்துடன் அளிக்கும்

Tel: "SLATES" P. O. Box No. 12

மேனகா சுதேசி சிலேட் பாக்டரி

"புலி, மான், சைக்கிள், சுந்திரம்" மார்க் சிலேட்டுகள்
"கை" மார்க் சிலேட் பென்சில்கள், சாக்பீஸ் முதலிய
தயாரிப்பாளர்கள்

கும்பகோணம்.

199323

மேன்மையின்

பெருமை அநேக வருஷ

உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—"சைக்கிள்ஸ்" போன்: 3168

காவேரி

விக்ருதி மலர் 10 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—"பாரதியார் | தை இதழ் 6

பொங்கல் பிரார்த்தனை

பொங்கலோ பொங்கல். நமது இல்லங்களில் பால் பொங்க வேண்டும்; நாட்டிலும் அதற்கு ஏற்ப, சுபிக்ஷம் பொங்கவேண்டும். சூரிய பகவானும் வருண பகவானும் ஒருமித்து அளிக்க வேண்டிய நலம் இது. பயிர்கள் செழித்து அறுவடையாகி நாம் அதைக் கண்டு களித்து இறைவனை வழிபடும் காலம்.

சர்க்கரை வெல்லம் இவை கிடைப்பது அரிதாயினும் பொங்கல் பொங்கியே தீரும். அரசாங்கத்தாரின் ஹஸ்த விசேஷம் எப்பொருளின் மீதாவது பட்டால், உடனே அப்பொருள் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விடுகிறது. அப்படியே மலிவாகக் கிடைத்தாலும் அரைகுறையாகத்தான் கிடைக்கும். அதற்கும் படாதபாடு படவேண்டும். நமது பெண்கள் அணி வகுத்துக் கியூவில் கால் கடுக்க நின்று பெறவேண்டும். படிதாண்டாப் பத்தினிகளுக்கு இது காலமில்லை. பிறர் அரிய நடுச் சந்தியில் நின்றுதான் அரிசியோ வெல்லமோ, அதுவும் ஒருவரோடொருவர் மோதி முட்டிக்கொண்டு வாங்கவேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலை நீடிக்கா வண்ணம் சூரிய பகவானும் வருண பகவானும் செய்ய வேண்டுமென்று இப்புனித நாளன்று வேண்டிக்கொள்வோமாக.

நமது அரசாங்கத்தாரும் எல்லாப் பொருள்களிலும் தங்கள் தலையீட்டை ஸ்தாபிக்க முற்படாமலிருந்தால் நாட்டில் சுபிக்ஷம் வளரும் என்று மக்கள் அனைவரும் எண்ண ஆரம்பித்து விட்டார்கள். எனவே புதிய ஆண்டிலாவது கண்ட்ரோல்கள் அகன்று விலைவாசிகள் குறைய ஏதுவாக வேண்டுமென்று எதிர்பார்ப்போமாக.

செய்தித்தாளுக்கு இப்பொழுது சனியன் பிடித்திருக்கிறது. விஷம்போல விலை ஏறிக்கொண்டே போகிறது. தினசரிப் பத்திரிகைகள் தங்களுக்குள் ஓர் கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொண்டு பக்கங்களைக் குறைத்துக்கொண்டும் விலையை ஏற்றிக் கொண்டுமுள்ளன. வார மாதாந்தரப் பத்திரிகைகளுக்குச் செய்தித்தாள் விலை சாதாரணமாகவே ஜாஸ்தி. இப்பொழுது மிகவும் நெருக்கடியான நிலைமை. எனவே இனி, பக்கங்களைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் வாசகர்கள் அருந்தும் விருந்தின் சுவை குன்றாமல் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கட்டுரையும் கதையும் நான்கு பக்கங்களுக்கு மேலாகாமல் எழுத்தாளர்கள் எழுதி உதவ வேண்டும். இல்லையேல் அவை எவ்வளவு உயர்ந்த கற்பனையாயிருந்தாலும் அதை நிறுத்தவேண்டிவரும். இவ் விஷயத்தில் எழுத்தாளர்கள் பூரண கவனம் செலுத்தி நெருக்கடியைச் சமாளிக்க உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

* * *

இந்த இதழைச் சபரிமலை ஐயப்பனைப் பற்றிய கட்டுரை ஒன்று அலங்கரிக்கிறது. ஓர் பத்திரிகை நிருபர் யாத்ரிகராகச் சென்று பக்தகோடிகளுடன் பழகியும், அப்பிரதேசத்துப் பாடல்கள் சரித்திரங்கள் இவைகளை ஆராய்ந்தும் எழுதப்பட்ட சித்திரம் இது. இதனை அனைவரும் ஊன்றிப்படிப்பார்கள் என்று நம்புகிறோம்.

'அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்' என்று பிராபல்யமான கட்டுரைகளை எழுதிவந்த ராமையா அவர்கள் "மாவலிப் பொறிகள்" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக இனி **'காவேரி'**க்கு விஷயதானம் செய்ய இசைந்துள்ளார்கள். வாசகர்கள் அதை மிகவும் ரசிப்பார்கள் என்று கூறத் தேவையில்லை. முதல் கட்டுரை இந்த இதழில் ஆரம்பமாகிறது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

தமிழ்நாட்டு மக்களில் பலரிடம் வயிறு குலுங்கச் சிரிக்கும்படியான பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் உண்டு. இவைகளைப்பற்றி எழுதும்போதும் பேசும் போதும் சலிப்பே தட்டாது: தட்டவும் கூடாது. ஏனென்றால் சமூகத்தொண்டில் மேலானது அப்படிச் செய்வதே. சிரிக்கச் சிரிக்கப் பரிகாசம் செய்வது என்பது ஒரு பிராசீன அலங்காரம். ஆனால் சிறிது பிரயாசமான காரியம்—வினையில்லாமல் வேடிக்கையாகவே யிருக்க வேண்டுமல்லவா? அதுதான் பிரயாசம்! அதற்காகவே இக்கட்டுரைக்கு, "மாவலிப் பொறிகள்" என்று பெயரிட்டிருக்கிறேன். மாவலி யென்பது வெகு அற்பமான வாணவேடிக்கை. பனைமரத்தினின்று எடுத்த சரடுகளைப் பொடிசெய்து, அடக்கப்படுத்தி, ஒரு கயிற்றின் நுனியில் கட்டி, தீவைத்து, தலையைச் சுற்றிச்சுற்றி ஆட்டினால் பொறிகள் பறக்கும். தீப்பொறிகளாயினும், உடலில் பட்டாலும் காயமாகாது. பார்ப்பதற்கும் தமாஷாயிருக்கும். மாவலி யென்பது வெகு சாமான்ய ஜனங்களுக்கே உரிய வஸ்து. நானும் நீங்களும் சாமான்ய ஜனங்கள்தானே!

* * *

டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடக்கும் சங்கீத விழாக்களின் சம்பிரதாயங்களைக் குறித்துச் சிறிது கவனிப்போம். சுமார் இருபத்தைந்து வருஷங்களாக விழாக்கள் நடைபெறுகின்றன; இன்னும் ஜனங்களின் நடவடிக்கைகளில் நாகரிகத்தைத் தழுவிய மாறுபாடுகள் ஏற்படவில்லை. கச்சேரிகள் ஒன்றாவது குறிப்பிட்ட நேரத்தில் துவங்குவதில்லை. பத்து நிமிஷங்களாகிலும் காலதாமதமாகத்தான் துவங்குகின்றன. கோஷ்டியாரோ ஆரம்பம் முதல் அந்திவரையில் உள்ளே நுழைவதும் வெளியே போவதுமாகவே இருக்கிறார்கள். கச்சேரியோ களை கட்டுவதற்கு அரைமணி நேரம் ஆகும். அதற்குப்பின் போவோம், என்று காலதாமதமாய் வருபவர்கள் சிலர். சபை நிரம்பி யிருக்கும்போது நாம் போனால்தான் நம்மைக் கவனமாய் எல்லோரும் பார்ப்பார்கள் என்றிருப்பவர் சிலர். காசு கொடுத்து டிக்கட் வாங்கியிருக்கும்போது, நமது இஷ்டம் போல்தான் போவோமே, என்பவரும் சிலர். ஆகக்கூடி சம்பவிக்கும் நிர்ப்பந்தம் என்னவென்றால், விச்ராந்தியாக அமர்ந்து கேட்போம் என்றிருக்கும் ரசிகர்களுக்குப் பிராணசங்கடமே. கால்களை மடக்கி உள் அடக்கவேண்டும்; விரல்கள் நசுங்கிப்போம்; ஸ்திரீகள் வந்தால் எண் சாண் உடம்பை ஒரு சாணில் அடக்கிக் கொண்டு ஒதுங்கிக் கொள்ளவேண்டும். அந்நிய புருஷர்கள் பக்கத்தில் உட்காரும் வழக்கத்தை அனுசரிக்காத ஸ்திரீ ஒருவர் வந்து, ஏற இறங்க முறைத்துப்பார்த்தால், தன்னுடைய இடத்தைவிட்டுவிட்டு வேறொரு இடத்துக்கும் போகவேண்டி வரும்.

சென்ற மாதத்தில் நடந்த கச்சேரிகளில் மேற்கூறிய சங்கடங்கள் சொல்லத்தகாத அளவில் காணப்பட்டன. ஒரு வயோதிக ரஸிகர் ஒருவர், ஒவ்வொரு கச்சேரியிலும் மேடையின்மீது ஏறி, பாடிக்கொண்டிருக்கும் வித்துவானை வாழ்த்தியும் க்ஷேமலாபம் விசாரித்தும் செய்த சேஷ்டையைக் கண்டிக்க யாரையும் காணவில்லை. வித்வான்களும் "ஆஹா! ஹோ! ஹோ!" என்று பல்லைக் காட்டிக்கொண்டும், பாட்டை நிறுத்திவிட்டும் பதில் சொன்னது வெகு விகாரமாயிருந்தது. பரதநாட்டியக் கச்சேரியொன்றில் சில பிரமுகர்கள் தங்களுக்குப் பிரியமான உருப்படிகளையே சொல்லச் சொல்லி நடிகையின் நிகழ்ச்சியை நடத்திவைத்தது பலபேருக்கு அருவருப்பை விளைவித்தது. பொதுஜன கோஷ்டியில் அனைவரும் சமம் என்கிற அல்ப விஷயத்தை அவர்கள் அறியவில்லை. பிரமுகர்கள் வெகு சிரேஷ்டமான ரசிகர்களாயிருக்கலாம்; நடிகையும் அவர்களுடைய மெச்சுதலையே சிலாக்கியமாகக் கோரலாம்; ஆயினும் ஒரு ரூபாய் கொடுத்தவர் முதல் பதினைந்து ரூபாய் கொடுத்தவர்வரையில் கோஷ்டியில் சமத்துவத்துக்கு உரியவராதலால், சிலர் மாத்திரமே கோஷ்டிக்குச் சட்டாம் பிள்ளைகள் போலவும், மேடைக்கு அதிபதிகள் போலவும் நடந்துக்கொள்ளுவது வெகு அசம்பாவிதம். இத்தகைய தலைக்கிறுக்கு மதராஸில் வெகுபேருக்கு உண்டு. இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் எப்படியிருந்ததோ அப்படியேதான் இன்றும் இருக்கிறது!

தற்காலத்தில் சென்னையில் சங்கீதத்தின் நிலைமை யெப்படியிருக்கிறதென்றால், சில வாக்கியங்களில் பதில் சொல்லலாம். குணம் குறைவு. பலம் அதிகம். நிகழ்ச்சிகளின் நிலைமை, "குண்டுசட்டியில் குதிரைப்பந்தயம்" போல்தான். பழைய வித்வான்கள்தான்; பழைய உருப்படிகள்தான்; பழைய அபஸ்வரம்தான்; பழைய விவஹாரம்தான்; ஒன்றிலும் புதுமையில்லை. கோஷ்டிகள்மாத்திரம் அபரிமிதமாகப் பெருகிவிட்டன. ஆனால், முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, "ரசிகர்கள்" எனப்படும் கூட்டத்தில் புதியவர்கள் ஒருவருக்கும் இடம் கிடைக்காது. வெகு சிலர்தான் ரசிகர்கள் என்கிற பட்டங்களை வகிக்கக்கூடியவர்கள் போலும்! அவர்களுக்குத்தான் இன்னமும் முதல் வரிசைகளில் பிரத்தியேக ஆசனங்கள் அமைக்கப்படுகின்றன. அவர்கள் இன்னும் எங்குவேணுமென்றாலும் இஷ்டம்போல் உட்காரலாம்! எப்பொழுது இஷ்டமோ அப்பொழுது உள் நுழையலாம், வெளியேறலாம்! சிரிக்கலாம், இருமலாம், கனைக்கலாம், நடுக்கோஷ்டியில் எழுந்திருந்து வேஷ்டியை அவிழ்த்துக் கட்டலாம், எங்கேயோஇருப்பவன் ஒருவனைச்சிட்டிகை போட்டுக் கூப்பிட்டுத் தம் பக்கத்தில் அமரச் செய்யலாம்! பாக்கியிருக்கும் கோஷ்டியார் அனைவரும்—பசுக்களும் புழுக்களுமே!

சுமார் பத்து வருஷங்களாக வட இந்திய சங்கித வித்வான்கள் சென்னைக்கு வருஷந்தோறும் வந்து, அவர்களுடைய சங்கித பத்ததியை நமக்குப் பரிச்சயம் செய்திருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் கச்சேரி செய்யும்போது நம்முடைய வித்வான்கள் ஒருவரேனும் வந்து பூர்த்தியாகக் கேட்பதை இன்னும் காணோம். காரணம்? மமதை! சுவைக்குறைவு! அலக்ஷியம்! அக்பர் அலிகான் என்னும் உஸ்தாத் ஒருவர் 'சாரோத்' என்ற வாத்தியத்தில் கச்சேரி செய்த தினம், நமது பிரபல வித்வான்களுள் ஒருவரை "வாசிப்பு எப்படி" என்று கேட்டதற்கு, அவர் "ஆஹா! என்ன அபாரமாயிருக்கிறது! என்ன சுத்தம், என்ன கார்வை, என்ன கோர்வை" என்றார். ஐந்து நிமிஷங்களுக்குள் இவரே மற்றொரு ரசிகரிடம் "தூக்கம் வந்துட்டுது, ஸார், எத்தனை நாழி இதைக் கேட்க முடியும் நான் போறேன்" என்று சொன்னது என் காதில் விழுந்தது. நம்முடைய சங்கீத வித்வான்களும், அவர்களுடைய சங்கீதமும் பெருமைப்படாமலிருப்பதற்குக் காரணம் இத்தகைய ஆத்மஹதியேயாகும்!

வெள்ளையர்களுடைய ஆசாரங்களையும், அவர்களுடைய ஒழுங்கு பாட்டையும், கண்டிதத்தையும், நாம் மெச்சிக்கொள்ளுகிறோமல்லவா? சங்கீத நிகழ்ச்சிகளில் அவர்களுடைய பழக்க ஒழுக்கங்கள் என்னவென்று கவனிப்போம்! நிகழ்ச்சிகள் நடைபெறும் கொட்டகைகள் சில மூவாயிரம் ஜனங்கள் வீற்றிருக்கும்படியானதாகவும் இருக்கும். கச்சேரிகள் துவக்கமாவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் கதவுகள் அடைக்கப்படும், பிரகாச

மான விளக்குகள் அணைக்கப்படும். ஒருவரும் உள்ளே செல்லலாகாது, வெளியே வரலாகாது. சப்தமே இருக்காது. பத்து நிமிஷத்திலோ, பதினைந்து நிமிஷத்திலோ ஒரு உருப்படி தீர்ந்த பின்னர்தான், இருமலும், தும்மலும் உண்டாகும்; வெளியே போகிறவர்கள் போகலாம், காலதாமதமாக வந்தவர்கள் வரலாம். அதிகக் காசு கொடுத்தவனுக்கும் இந்த ஒழுக்கம்தான், அல்பக் காசு கொடுத்தவனுக்கும் இந்த ஒழுக்கந்தான். மேடையிலிருக்கும் வித்வான், கோஷ்டியில் காணப்படும் எவனையும் பிரத்தியேகமாகச் கவனிக்கமாட்டான். ஒலிபரப்பும் கருவிகள் கிடையாது. எத்தகைய பெரிய உத்தியோகஸ்தனாயிருந்தாலும் சரி, அரசியல் தலைவராயிருந்தாலும் சரி, பிரத்தியேக மரியாதை கிடையாது; அரசர் ஒருவருக்கு மாத்திரமே அத்தகைய மரியாதை.

வெள்ளையர்களிடமிருந்து எவ்வளவோ விஷயங்கள் நாம் கற்றுக்கொள்ளவேண்டும்! எல்லாவற்றிலும் முக்கியமானது ஒன்றுண்டு. என்னவெனில், எந்தச் சமூகத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும், பொதுஜனங்களுக்கு அருவருப்பை அளிக்கக்கூடிய நடவடிக்கை எதையும் எவனும் செய்யலாகாது என்பது. அந்தக் கண்டிதம்தான் நம் தேசத்தில் கிடையாது. அவன் பணக்காரன், என்ன வேண்டுமானாலும் சாதிக்கலாம்; அவன் பெரிய உத்தியோகஸ்தன், என்ன செய்தாலும் கேட்பாரில்லை; அவன் பெரிய போக்கிரி, அவனோடு இழுத்துப்பறித்துக் கொண்டு நிற்க யாராலும் முடியாது, என்கிற வசனங்கள் இன்றும் வழங்கிவருகின்றன! எப்போதுதான் இந்த வசனங்கள் தொலையுமோ?

பணமுள்ளவர்களும் செல்வாக்குள்ளவர்களும் சாதிக்கும் சாதனைகள் மிகப் பலவுண்டு. பங்கீட்டு நிபந்தனைகளை மீறி, கலியாணம் அல்லது வேறு வைபவத்தை முன்னிட்டு நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விருந்தாளிகளுக்குச் சாப்பாடு போடுவது இன்னும் சகஜமாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான அழைப்புப் பத்திரிகைகளை அனுப்பிவைத்து, ஜனக் கூட்டத்தைத் திரட்டி, திரண்ட ஆட்களை ஒழுங்கு படுத்தவேண்டி, போலீஸாரையும் கூப்பிட்டுவிடுவதும், அவர்களையும் மீறி, கூட்டம் அதிகரிக்க, நல்லவன், கெட்டவன், விருந்தாளி, சோம்பேறி, எல்லோரும் தண்டடிப் பிரயோகத்தில் மாட்டிக்கொள்வதும், சில வருஷங்களாகச் சகஜமாயிருக்கிறது. அடிபட்டவர்களில் வெகு சிலர் அடியையும் மறந்து அடுத்த தினமே விருந்துச் சாப்பாட்டுக்குப் போவதும் சகஜமாயிருக்கிறது. எதற்காக இப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டாலோ, “அவரோ மிகவும் நல்லவர்; இப்படியெல்லாம் சம்பவிக்கும் என்று எண்ணினாரா? பெரிய கூட்டமோ திரண்டு போய்விட்டது. நடுவாந்தரத்திலே இருக்கிறவா அடிச்சுப்பிட்டா அவர் என்ன செய்வார்?” என்பதும் சகஜமாயிருக்கிறது. தமிழ் நாட்டின் அலாதிப் போக்கில் இது ஒன்று. எத்தகைய அனாசாரமான காரியம் ஒருவன் செய்தாலும், எவ்வளவு அநாகரிகமாயிருந்தாலும், வீண் ஜம்பம், வீண் செலவு, சகிக்கத்தகாத படாடோபம் அவனிடம் இருந்தபோதிலும், “மனுஷன் நல்லவர் ஸார்! அவர் மட்டுக்கும் ரொம்ப சுலபி, நாடோடி, நல்ல ரஸிகர் அவரைச் சேர்ந்த மனுஷாள் எல்லாரும் ஒருமாதிரி. அவாள் நடுவிலே ஆப்பிட்டுண்டு ரொம்ப கஷ்டப் படறார் மனுஷர்” என்பார்கள்! நடுவிலே அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுகிறார் என்கிற சாக்கில் அயோக்கியத்தனமுள்ள ஆட்கள் பலபேர் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். பழியைச் சுமத்த, உற்றார் உறவினர். சுற்றுப்பக்கத்து மனுஷாள் ஒருவரும் இல்லாவிடினும் கூட, தப்பித்துக்கொள்ள மார்க்கமுண்டு! எப்படி? ‘காலவித்தியாசம், ஸார், காலவித்தியாசம்! கிரகதோஷம்! பாருங்கோ, அப்படி அவர் புத்தியைக் கெடுத்துப்பிட்டது! வேளானுகூலம்! தலையெழுத்து! அவரைப் பழிச்சு உபயோகமில்லை! அவருடைய தெசாநாதன் அந்தமாதிரி இழுத்துவிட்டுட்டான்!’ இப்படியெல்லாம் சொல்லி மெழுகிவிடுவது!

இன்னும் இரண்டு நாட்களில் சூன்ய மாதம்போய், தைமாதம் வருகிறது. கலியாண முகூர்த்தங்கள் வைக்கவேண்டியதுதான். எத்தனை பேருக்குக் காலவித்தியாசமோ, கிரகதோஷமோ, வேளானுகூலமோ! எப்படிச் சொல்லலாம்? ஆனால் இன்னுமொரு தமாஷைக் கவனிக்க வேண்டும். மணம் புரிந்துகொள்ளும் சிறுவர்களும் சிறுமிகளும் படாடோபம், வீண்

செலவு, இவைகளைக் கண்டித்துப் பேசவும் எழுதவும் தயாராயிருப்பார்கள்; காலேஜ் சங்கங்களிலும், இயக்கக் கூட்டங்களிலும் வெகு சூரத்தனத்துடன் கர்ஜிப்பார்கள். பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் வீட்டுக்காரர்களிடமிருந்து பணம் பறிக்கலாகாது என்பார்கள்! மணக் கோலங்கள் சுருக்கமாகவும் ஆடம்பரமற்றதாகவும் காணப்படவேண்டுமென்பார்கள். நகை நட்டுகள், ஆபரணங்கள் எல்லாம் அடக்கமாக இருக்கவேண்டுமென்பார்கள். மந்தை கூட்டி, சந்தை வளர்ப்பதுபோலக் கலியாணச் சடங்குகள் நடத்தப்படலாகாது என்பார்கள். ஆனால் தங்களுடைய கலியாணங்கள் நடைபெறும் காலத்தில் இந்தப் பேச்செல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோம். வெகு சூரத்தனத்துடன் பேசின பையன்கள் பலபேர் நபும்சகன்களைப்போல நடந்துகொள்வதைப் பார்க்கலாம்; தங்களுடைய தாய் தகப்பன்மார் இஷ்டப்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டு, சர்க்கஸ் குரங்குகளைப்போல் கூத்தாடுவது சர்வசகஜம். பையன்கள் மாத்திரமா, பெண்களும் அப்படியே! காரணமாக என்ன சொல்லுவார்கள் தெரியுமா? நாங்கள் என்ன செய்வது? எங்களுடைய தாய் தகப்பன்மார் குப்புறப்படுத்துக்கொண்டு சத்யாக்கிரஹம் பண்ணினர்கள்—சரியென்று விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று! எப்படி சமாதானம்? சிறியவயதில் ஆத்துமத்துரோகத்துக்குக் காரணம் தாய்தந்தையருடைய பிடிவாதம்! முதிய வயதில் ஆத்மத் துரோகத்துக்குக் காரணம் உற்றார் உறவினர் சுற்றமுள்ள நண்பர்கள் இவர்களுடைய வேண்டுகோள். ஆகவே, மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவர்களே அதிகம். அவர்களைக் கண்டிக்கவும் ஆட்கள் கிடையாது! இப்படியாகவேதான் தமிழ்நாட்டில் அர்த்தமில்லாத பழக்க ஒழுக்கங்களும், ஆசாரங்களும், சடங்குகளும் வெகுகாலமாக வழங்கி வருகின்றன. அவைகளால் தீமையதிகம் என்று நிச்சயப்படுத்தியும், சீர்திருத்தத் தயாராயிருக்கும் ஆட்கள் அரிது. குலாசாரம், ஜாதியாசாரம், மதாசாரம், சமூக ஆசாரம் என்று அழைக்கப்பட்டு அநேக வித அசந்தர்ப்ப ஆசாரங்கள் குடிகொண்டிருக்கின்றன. எங்கே பார்த்தாலும் அழுக்கு; சங்கீதத்தில் அழுக்கு; சாத்திரத்தில் அழுக்கு, அரசியலில் அழுக்கு; சமூகத்தில் அழுக்கு. சர்வம் அழுக்கு மயம்! ●

புத்தாண்டு பொங்கல் வாழ்த்து

அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்

எங்கள் அன்பார்ந்த இன்பம் ததும்பும் பொங்கல் வாழ்த்துக்களை அளிக்கின்றோம்.

கலியாண காலத்தை உத்தேசித்து பட்டுப்புடவைகள், பாவாடைகள் & நூல் ஜவுளி தினுசுகள் ஏராளமாகத் தருவித்துள்ளோம். விலை நயம் கியாரண்டியானவை, வசீகரமான நவீன தினுசுகள். இன்றே விஜயம் செய்து ஆதரிக்க விரும்புகின்றோம்

பட்டு ஜவுளி வியாபாரிகள்

ருக்மணி ஸில்க் எம்போரியம்	**ராதா ஸில்க் எம்போரியம்**
பெரியதெரு :: கும்பகோணம்	மயிலாப்பூர் :: மதராஸ்-4
டெலிபோன்: 58	டெலிபோன்: 84188

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 60,00,000

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா

பைஜ்நாத் ஜலான்

கோவிந்த்லால் பங்கூர்

மதன்மோகன் R. ரூயியா

மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா

மோதிலால் தபூரியா

நவீன் சந்த்ர மபட்லால்

P. D. ஹிமத்சிங்கா

R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

சபரிமலை ஐய்யப்பன்

தே. ஸ்ரீ. ரா.

"ஐயப்பனே, தேவர் அடிகள் சற்று விலகலாமா"?

"ஐயப்ப! தேவர் அடிகள் மேலே செல்லலாம்"

மலை வழியாய் உயர்ந்துகொண்டு போகும் முஸ்லிம், ஹிந்து இரு யாத்திரிகர்களின் சம்பாஷணை இது. ஹிந்து என்ன முஸ்லிம் என்ன, எல்லாரும் ஐயப்பர்களே. ஒரு ஐயப்பன் மற்றொரு ஐயப்பனை வழி விலகச் சொல்லும் சொற்கள் இவை. எல்லோரும் சபரிமலை ஐயப்பனின் பக்தர்கள். ஐயப்பன் என்று காரணப் பெயர்பூண்டு கோயில் வந்து சேரும் பக்த கோடிகள், தரிசனம் செய்ய ஆற்றலுள்ளவர்கள்; ஒரு மண்டலம் மலையின்கிழ் தவஞ் செய்து புனிதமானவர்கள்; தெய்வ அருள் வேண்டி, திடச் சித்தமுள்ளவர்கள், ஞானிகள் தெய்விக உணர்ச்சியால்; ஐயப்பன் வழிபாட்டில் எல்லோரும் உற்றார் உறவினர்களானவர்கள்; ஜாதிமதபேதமின்றி, சலியாப் பற்றுடன், படிவிலும் கட்டுப்பாட்டிலும் ஒரு மனதாகி, நம்பிக்கையில் பிணிப்புண்டு, உள்ளும் புறமும் பிரம்மசரிய விரதத்தில் தூய்மை எய்தி, சன்னிதி யடையும் சன்னியாசிகள்.

ஆம், முதியோர், இளைஞர், முஸ்லிம்கள், இந்துக்கள் எல்லோரும் உபவாசத்தையும் விரதத்தையும் கைக்கொண்டு ஒவ்வொரு வருஷமும், ஜனவரி மாதத்தில் அடர்ந்த காட்டினுள் சபரிமலை ஏறித் தெய்வ வழிபடும் ஐயப்ப பிரார்த்தனை முடிக்கும் யாத்திரிகர்கள், திரள் திரளாகச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இம் மகிமை தாங்கிய திருவிழா ஒரு மகத்தான அமைப்புப் பெற்றது என்று கண்டு, பல தினங்களாக அங்கேயே தங்கி, தவசிகளுடன் கலந்துகொண்டு உற்சவத்தின் பொருளை யறிய ஒரு பத்திரிகை நிருபரும் யாத்திரிகரானார். விரதம் முடித்து பக்தர்களுடன் மலையேறி, அவர்கள் பஜனைப் பாடல்களிலிருந்தும், அந்நாட்டுப் பாடல்களிலிருந்தும், யாத்திரிகர் சம்பாஷணைகளிலிருந்தும் அவ்வூர்ப் பெரியோர்களிடமிருந்தும் நிருபர் மனத்தில் உருவாகிய சித்திரம் இது :—

எங்கும் பாலைவனம். வளம் குறைந்த, தீமலிந்த சோர்வுறச்செய்யும் நாடு அரபி நாடு. மக்கள் ஜீவனம் சலியாத் திண்டாட்டம். தொட்டில் நாள் முதல் கல்லறை காலம்வரை வாழ்க்கை ஒரு அணையா அல்லலும் இன்னலும். அதுவும், அரேபியாவில் ஹாலெப் நகரம் இத்தகைய வாழ்க்கை நிலையை வலியுறுத்தி நின்ற காலம் அது. இந்நகரின் ஒரு வீட்டில் ஆலி என்பவனும் பாதிமா என்னும் அவன் மனைவியும், தங்கள் மகன் பாபர் என்பவனைப் பற்றி அடங்காத் துயரமுற்றிருந்தனர். மகன் சிறு வயதிலிருந்தே ஒரு தனிப்போக்காகத் தோன்றினான். பெற்றோர்கள் சொல்வதை நேர்முகமாக மறுதலிப்பதில்லை. எனினும், அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் தங்கள் கருத்துக்கும் புத்திமதிக்கும் மாறாகவே தோன்றின. சில நாட்கள் சுறு சுறுப்பு; மற்ற நாள் உறக்கம்!

ஒரே மகன், செல்வச் சிறுவன், அதிகமாகக் கண்டிக்க முடியவில்லை. பாபர் தன் போக்கே போகலாயினன். குடும்ப வழக்க பழக்கங்களில் பற்றில்லை. அரசாங்கப் பட்டாளத்தில் மற்றச் சிறுவர்களைப்போல் சேர்ந்து சேவகம் செய்து ஜீவனம் தேடி நிற்க மறுத்தது அவன் மனம். குதிரைச்சவாரி செய்வதில் மேதையானுன், திடகாத்திரன்; ஆனுல் ஆகாரமின்றி, வெய்யிலிலும் பனியிலும் அப்படியே நாட்கணக்காக மணல் குன்றில் உட்கார்ந்து விடுவான். கண்மூடி மௌனியாவான். பெற்றோர்களும் மற்றவர்களும் இவன் ஒரு தனிப் பிறவி என்று விட்டுவிட நேர்ந்தது. ஒரு சமயம் மதவிஷயமாக வருஷாந்தரச் சபையில் கடவுளைப் பற்றி ருசிகரமான சர்ச்சை எழ, பாபர், கடவுள் உண்டென்று மனிதனுக்குச் செய்கையில் அறிவித்தாலன்றி, எவனும் வெறும் நம்பிக்கையில் பக்தனுகான் என்று அடித்துச் சொல்ல, சபையில் ஆரவாரம் அதிகரித்தது. பாபர் வெறுப்புடன் வெளியே சென்றுன்.

குதிரைமீது எண்ணங்களைப் பறக்கவிட்டு வேகமாய் நகரின் வெளியே சென்றுகொண்டிருக்கையில் திடீரென்று குதிரை மிரண்டு தாவிற்று. பாபர் காற்றில் பறந்தான். தொப்பென்று மண்ணில் கவிழ்ந்தான். அப்பொழுதுதான் தன் நிலையடைந்தான், என்ன இது? மண்ணு? எங்கும் கற்பாறை, தன் தோள்களைக் கிறி ரத்தம் வழிந்து ஓடக் கூர்மையான நுனியிலிருந்து தலையை உயர்த்தினுன். என்ன? மண்டை உடைந்திருக்க வேண்டுமே! ஆனுல் தோள் மாத்திரம் கிழிந்து நசுக்குண்டது! நான் பிழைத்திருப்பது—? இதுதான் கடவுள் செயலா?

இச் சம்பவத்தின் பின்பு ஆலியும் பாதிமாவும், மகன் பாபரைப் பற்றி அநேக வருஷங்கள் ஒரு சமாசாரமுமில்லாதிருந்தனர். ஒரு நாள், அதாவது அவர்கள் காலமாகுமுன், புதல்வனைப் பற்றி நம்பமுடியாத ஒரு செய்தி கிடைத்தது, அரபி நாட்டை விட்டு, பாபர் ஒரு ஓடக்காரன் வேலையாளாகப் பேரீச்சம்பழ மூட்டைகளடுக்கிய ஒரு சிறு தோணியில் கேரள நாடடைந்து, பின்பு மலையாளக் காட்டினுள், தனியே திரிந்து வாழும் ஒரு சிறு குதிரைப்படைத் தலைவனுக விளங்கி வருகிறுன் என்றும், அவன் பழைய பழக்கம் —தன்னந்தனியே இரண்டு மூன்று நாள் கண் மூடி நெஞ்சடக்கி உட்கார்ந்துவிடுவது-இன்னும் அவனைத் தூண்டிக்கொண்டிருக்கிறதென்றும், கொள்ளைக் கூட்டமாயினும், தங்களுக்கு எட்டு நாட்களுக்கு வேண்டிய பொருளை மட்டும் நிறுத்திக்கொண்டு எஞ்சிய வஸ்துக்களை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவது என்றும் இவ்வாறு பல தகவல்கள் வந்து கொண்டிருந்தன. பழைய நாட்களில், பாரத-அரபி வியாபார நட்பு வலுவுற்றிருந்த தென்பது சரித்திரப் பிரசித்தமல்லவா?

* * * *

இந் நாடக ஆரம்ப காலம், ஆகஸ்ட் மாதம், கி. பி. 1002ஆம் ஆண்டு. அரங்கம். மதங்க வனம்; பெரியார் நதியும், அருகே உதகவாகினி சிற்ருறும் சூழ்ந்த நீர் வளம் நிலவளம், சபரிமலைக் குன்று, எதிரே அடர்ந்த காடு, பயங்கரமான வேங்கைப் புலிகள், மதம் பிடித்த யானைக் கூட்டங்கள். கரு நாகங்கள், மலைப் பாம்புகளும் விஷ ஜந்துக்களும் சலசலவென்று குதித்து ஓடும் கம்பள ஓடையின் சத்தம்.

"என்ன இது? எங்கிருக்கிறேன் ஹ! மண்டையில் ரத்தக் காயம்."

"பேச வேண்டாம். இன்னும் சற்று இளைப்பாற வேண்டும்"

"தாகமெக்கிறது, நீர் வேண்டும்"

"சரி இதோ"!...............

கால் மணி சென்றிருக்கலாம்; காயத்துடன் கிடந்தவன் கண்ணை விழிக்கிறுன். ஞாபகம் வர நடந்ததை உணர்கிறுன். ஆம், மிருக வேட்டையாடும் வலையில் சட்டென்று கவிழ்ந்துவிட்ட குதிரையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் தருணம், தொப்பென்று மரத்திலிருந்து வாளுடன் குதித்த எதிரிகள்—தன்னிடத்தில் முன்பு வேலையிலிருந்தவர்கள் சூழ்ச்சி செய்ததால் துரத்தியடிக்கப்பட்டவர்கள் — வெகு நாள் வைரம், பழிக்குப்பழி வஞ்சம் தீர்க்கச் சதி செய்து, இப்பொழுது தங்கள் இலட்சியத்தை நிறைவேற்றக் கூரிய வாளை உயர்த்திஞர்கள்.

ஆனுல்———!

'சர்!' என்று சீறிவந்தன அநேக அம்புகள். வாளேந்திய, கொலைசெய்ய உயர்த்திய கைகள் நின்றன. அடுத்த நிமிஷம் கடகடவென்று கடிந்துவந்தது பூதாகாரமான கருங் குதிரை. அதன் மேலிருந்து காற்று வேகமாய்த் தாவினுன் ஒரு யுவன். சில நிமிஷங்கள் கடும் போர். பின்பு மரத்திலிருந்து கொலை செய்யக் குதித்தவர்களின் தலைவன் தலை அறுபட்டுக் கீழே புரண்டது. அவ்வளவுதான். மற்றவர்கள், அதிகக் காயமடையாதவர்கள், ஓட்டம் பிடித்தனர். சமயத்தில் உதவி செய்யவந்த யுவவீரன் கீழே காயப்பட்டுக் கிடந்தவனைத்

தூக்கியெடுத்துக் குதிரைமீது கிடத்தி மெதுவாகச் சென்றான். பின்பு குதிரைமேல் கிடந்தவன் பிரக்ஞை இழந்தான்.

ஆம், இப்போது அதெல்லாம் ஞாபகம் வந்தது. இரவு முழுவதும் தன்னைக் காத்து வந்த சிறுவனின் சிகிச்சை வெற்றியடைந்த அறிகுறியாக துயிலெழுந்தவன்போல் எழுந்தான். சிறுவனை உற்று நோக்கினான். வெகு நேரம் சென்றது. பின்பு மிகவும் தாழ்ந்த குரலில், வணக்க உணர்ச்சியில்,

"என் பெயர் பாபர், அரபி தேசத்தவன்"

"தெரியும், நீ இனி இங்கேயே தங்கலாம், ஒரு குறைவும் வராது."

"அப்படியா? இத்தேசத்து உத்தரவு? உயிருடனோ, கொன்றோ அதிகாரிகளிடம் என்னைப் பிடித்துக்கொண்டு போவது?"

"அந்த உத்தரவு ரத்து. நான் இவ்வரசாங்கத்தின் முக்கிய அதிகாரி. இதோ அரசனின் ஆணை, படித்துப்பார்."

பாபர் கண்களில் நீர்த்துளி. ஏன் இவன் என்னைக் காக்கவேண்டும்? சிந்தனைத் தொடர் இழுத்துக்கொண்டே போக அங்கேயே உட்கார்ந்துவிட்டான் அரபிக்காரன். இளைஞன்—காப்பாற்றிய வீர இளைஞன்—மெதுவாகக் குதிரைமேல் தாவி மறைந்தான். அரபிக்காரன் கண் திறந்தது! "வாவர் சாமி இயக்கம்" உதயமாயிற்று. அப்படியே ஏழு நாள் உட்கார்ந்தபடியே கண்மூடி மௌனியானான். 'வாவர்சாமியானான்!

* *

குதிரைமேல் தாவிச் சென்ற சிறுவன் வாயுவேகமாகச் சபரிமலையடைந்தான். மாலை இருட்டு, ஊர் அடங்கியிருந்தது.

எங்கும் நிசப்தம். என்ன இது? மலையைக் கவ்வியிருந்த கும்மிருட்டில் சுடர்விட்டெரியும் தீவட்டிகள்! குதிரையை மறைத்து மேலே சென்றான் சிறுவன்,

ஆம், பழைய பெருச்சாளியே! உடையான் என்ற சனியன்தான். பெயர்போன கள்வர் தலைவன்; அவ்வட்டாரத்தையே பிசாசுபோல் ஆட்டிவைக்கும் பேயாண்டி. குரூரன், ஆனால் தீரன். அக்கம்பக்கத்துச் சிற்றரசுகளுக்குத் திகிலாய்த் திரிந்த கொடுங்கோலன். பன்முறை, தன் தந்தை இவனை எச்சரித்தது ஞாபகம் வந்தது. எல்லோரையும் அடக்கி ஆளும் உடையான் தன் தந்தையை மாத்திரம் அச்சமுறச் செய்யமுடியவில்லை. ஒருதடவை இவன் அட்டூழியம் தாங்கமுடியாமல் பொதுமக்கள் தத்தளிக்க, சபரிமலை கோயில் பூசாரியான தன் தந்தையிடம் ரகசியமாக இரவில் வந்து முறையிட, அதே நிமிஷத்தில் அருகிலிருந்த சிற்றரசனிடம் சென்று ஒரு படையைக்கொண்டு துஷ்டனை அடக்கினார் விலங்கிடப்பட்டுச் சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்ட உடையான், கண்ணில் தீ பறக்க ஒருநாள் இதற்குத் தக்கபடி வஞ்சம் தீர்த்துக்கொள்கிறேன் என்று பகைக்கும் சபதம் செய்தது, இன்னும் சிறுவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. மெதுவாகக் கீழே குதித்து, சத்தமின்றி அருகே நின்ற பலா மரத்தின்மீது ஏறி உச்சியடைந்து நோக்கவே மனதைக் கலக்கும் கோர சம்பவத்தைக் கண்டான்.

உடையான் வாளில் ரத்தம் தோய்ந்திருந்தது. பிளவுண்டு பிராணனைவிட்ட தந்தையின் முகம் சாந்தியின் மலர்ச்சியில் மிளிர்ந்திருந்தது. கொலைகார உடையான் முகம் விகாரமுற்று மீசை துடித்தது. ஒரு தடவை பார்த்துவிட்டு, சிறுவன் அப்படியே கீழே இறங்கி, சந்தடி செய்யாமல் தன் குதிரையையடைந்து ஏறி மறைந்தான். மறுபடியும் சபரிமலையை நல்லிருள் கவ்விக்கொண்டது. உடையான் வாளை உறையிலிட்டு ஆட்களைத் திரட்டி அன்றே விடியுமுன் பந்தலம் என்ற மலையாள நாட்டுச் சிறுபாளயத்தைத் தாக்கினான். இரவில் அதைத் கைப்பற்றி அதன் அரசனைத் துரத்தினான்.

* * *

ஒரு மாதஞ்சென்றது. ஒருநாள் நள்ளிரவு. எங்கும் தீவட்டிகள். வெகு வேகமாக அநேகர் மூட்டைமுடிச்சுகளுடன் சத்தமின்றி நடந்துபோகின்றனர். மதுரை நகரவாசிகள், மனவிக்கிரம அரசனின் மக்கள், ராஜவிச்வாசிகள், சோழ மன்னனால் முறியடிக்கப்பட்டு அரசனுடன் ரகசியமாக வெளியேறினார்கள். மனவிக்கிரமனைச் சூழ்ந்து கொண்டு ஆபத்து வராமல் பாதுகாத்துப் போகின்றனர். வண்டிப்பெரியார் என்ற ஊர் வந்துசேர, கொஞ்ச தூரமே இருந்தது.

ஆனால் அதற்கிடையே ஆபத்துக் குறுக்கிட்டது. உடையான் கும்பல்தான்! கொள்ளைக்காரர்கள் திடீரென்று நாலா பக்கத்திலும் சூழ்ந்துகொண்டனர். மிகவும் சிக்கலான நேரம், 'அரசன் எங்கே' 'மனவிக்கிரமன் எங்கே,' என்று கேட்ட வண்ணம் போக்கிரிகள் புகுந்து அரசனையும் பொக்கிஷத்தையும் தேடித் திரிந்தனர். அட்டகாசம் செய்தனர்.

ஒரு நிமிஷம். உடனே, தடாரென்று பிடித்திருந்த தீவட்டிகள் ஒவ்வொன்றாகக் கீழேவிழுந்தன. 'ஐயோ அப்பா' என்ற அவயக்குரல். அதே சமயத்தில் வில் பிடித்த இளைஞன் பிரும்மாண்டமான ஒரு யானை மீதிலிருந்து வாளா வண்ணமாய் அம்பெய்துகொண்டு கடுகினான். யானையோ மதம் பிடித்து அங்கு மிங்கும் சூழ்ந்து கொண்டிருந்த கொள்ளைக்காரர்களைத் தூக்கி எறிந்து, காலால் துவைத்துப் பிசைந்து கொன்றது.

"மதயானை"! என்ற அபாயக் குரல் எழவே கொள்ளைக்கூட்டம் மறுநிமிஷம் ஓடி மறைந்தது. உடனேயே மதயானையும் அடங்கி நின்றது. புகலிடம் காண ஓடின மதுரை மன்னனும் மக்களும் எதிர்பாராது ஆபத்து வேளையில் காத்து இரட்சித்த இளைஞனையறிய யானையண்டை நெருங்கினார்கள். தெய்விகத் தோற்றமளித்த இளைஞன் புன்னகையுடன் கம்பீரமாக வீற்றிருந்தான். என்ன கேட்ட போதிலும் தன்னைப்பற்றி ஒரு விஷயமும் பேச மறுத்துவிட்டான். கொஞ்ச தூரம் அவர்களுடன் சென்று நகரம் சேருமுன், யானையை விட்டு விட்டுக் காத்துநின்ற குதிரை மேலேறி மனவிக்கிரமனிடம் விடைபெற்றுக் கொண்டு மறுபடியும் காட்டினுள் மறைந்து விட்டான்.

அரசன் சிறுவனையும் அவன் முக காந்தியையும் தீரச் செயலையும், அம்பெய்யும் திறனையும் மறக்க முடியவில்லை. வண்டிப் பெரியார் அடைந்ததும் சிதைந்த அவன் சேனையும் கொஞ்சம் கொஞ்சமாக வந்தடைந்தது. மனோதிடமடைந்து சிறுவன் முகம் குறையா உற்சாகமூட்ட, வெற்றி நம்பிக்கையுடன் திரும்பி மதுரையடைந்து முற்றுகையிட்டு வெற்றியும் பெற்றான். பூன்ஜார் அரச வம்சத்தைத் தோற்றுவித்தான். நீதிநெறி வழுவா மேன் மன்னனாய் அரசு செலுத்தினான். வெகுநாள் வரை தன் வெற்றிக்குப் பேருதவி செய்த அந்நிய நாட்டுத் தலைவன் வாவர் என்பவன் ஏன் வந்தானென்றும், காட்டினுள்ளுள்ள ஒரு இளைஞனுக்கு இது திருப்தியாயிருக்கும் என்றும், ஏன் இவ்வயல் தேசத்தான் அவ்

விளைஞனைத் திருப்தி செய்யவேண்டுமென்றும் எண்ணி எண்ணி விடையின்றி அவ்விளஞ் சிங்கமான சிறுவனிடம் ஏதோ தெய்விகத் தன்மை இருக்கவேண்டுமென்று மனந்தேறலானான். பல தடவை இளைஞனைத் தேடி அரண்மனைக்கு அழைத்துவர முயன்றான். பலிக்கவில்லை. அவன் ஞாபகமாக, மாவுத்தன் ஈட்டியை, இளைஞன் யானையேறி வந்து தன்னைக் காத்த சம்பவத்தை ஒட்டி, தன் கொடிச் சின்னமாக்கினான்.

நிற்க, நாட்டில் வியாபாரிகளிடையேயும் செல்வந்தரிடையேயும் அரசாங்க வட்டாரத்திலும் படையினரிடத்தும், உடையான் கதையும் தீரச் செயல்களும் நாளாகப் பரவிவந்தன. பகிரங்கக் கொள்ளை, சூறையாடல், பறிமுதல். கொலை இவ்வாறு அவன் சரித்திரம் சென்றுகொண்டிருந்தது. இடை இடையே, வாவர் தலைவன் புகழும் ஓங்கி வளர்ந்தது. எந்தெந்த இடத்தில் வாவர் தலைவன் தலையிட்டானோ அங்கெல்லாம் உடையானின் அட்டகாசம் அடங்கிவிட்டது. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் திரும்பக் கொண்டு வந்து கொடுக்கப்பட்டன என்றால் அது வாவர் உதவியால் தான். இப்படி கள்வர் தலைவனுக்கு மாற்றாக அரபித் தலைவனின் கீர்த்தியும் எங்கும் பரவிவந்த நாள் அது. "வாவர் வெற்றி வெண்பா" "வாவர் மணி மாலை" என்று இன்றும் ஒலிக்கும் நாட்டுப் பாடல்கள் எங்கும் பாட ஆரம்பித்தார்கள், நாடகம் போட்டனர். உடையானுக்கும் வாவருக்கும் கடும் போட்டி மூண்டது. என்ன ஆச்சரியம்! அரபிதேசத்திலிருந்து வந்தவன், வழி பறிப்பவர்களுடன் சேர்ந்தவன், தலைவனானான். தனியே இடம் அமர்த்தி ஒரு சிற்றூரை நிர்மாணித்து பரதேசிகளையும் கபோதிகளையும் அனாதைகளையும் கொணர்ந்து குடிபுக வைத்து, வளம்பெற்ற ஒரு சிறு நாடாக்கி, வாவர் ஆதரவின் கீழ் ஒரு தனி ஆளுகையேற்பட, உடையானுக்கும் வாவருக்கும் கேண்மைக்கும் நன்மைக்கும் பாம்பு—கீரி பகைமை ஓங்கி வளர்ந்து வந்தது! கடைசியில் இருவரும் ஒரு கை பார்த்துவிட வேண்டுமென்று ஆற்றலெழச் சமயம் காத்து நின்றனர்.

மாலை அந்திப்பொழுது. ஒருநாள் சுருநாகப்பள்ளி என்ற திருவிதாங்கூர் சுற்றுப்புறப் பட்டணத்தை உடையான் ஆட்கள் சூழ்கின்றனர் என்ற செய்தி ரகசியமாக வாவருக்கு வந்தது. அடுத்த ஊர் பாளயக்காரர்களும் உதவிவேண்டி அழைப்பும் அனுப்ப, குதிரைப் படையுடன் மறு நிமிஷம் வாவர் விரைந்து சென்றான்.

ஆனால் வழி தெரியாமல் திகைத்தான். கடைசியில் திரும்ப வேறு பக்கம் சென்று ஊரை யடையுமுன் உடையான் வேலையை முடித்துவிட்டான். பாதை தப்பினதும் நேர் வழி செல்ல ஒரு இளைஞன் வழிகாட்டியானான். அவன் எங்கே, என்று பரபரப்புடன் தேடும் போது உடையான் ஆட்கள் வாவரைச் சூழ்ந்துகொண்டனர். வாவர் கட்டுண்டு இழுத்துச் செல்லப்பட்டான். வெற்றியின் ஆரவாரத்தில் அவ்வூர் காளி மண்டபத்தின் எதிரே நிற்கும் பலாமரத்தில் அவனைத் தூக்கி விடும்படி கர்ஜனை யிட்டான் உடையான். குதிரைமேல் கடத்தி வாவரை மரத்தண்டை சேர்த்தார்கள்.

அவ்வளவுதான்! உடனே 'ஐயோ அப்பா"! என்ற அவயக் குரல் இரவின் நிசப்தத்தைப் பிளந்தன. என்ன இது! நம்மவர்களின் அபாயக் குரலல்லவா இது? உடையான் உடனே பறந்து வந்தான். வாவரைக் காணவில்லை. குதிரையும் காணோம்! இருபதுக்குமேல் உடையான் ஆட்கள் அம்பினால் அடிபட்டு அலறிக் கிடந்தனர். 'யாரோ ஒரு இளைஞன் திடீரென்று

தோன்றினான். சளையா வேகத்துடன் வில்லால் சரமாரி. திவட்டிகளை எடுத்துத் தேடிப் பார்க்கையில் இளைஞனையும் காணோம், வாவரும் மறைந்துவிட்டான். அவனைத் தூக்கிலிட உயரக்கட்டின கயிறு மாத்திரம் காற்றில் தொங்கி அலைந்தது' என்றார்கள் அடிபட்டவர்.

"யாருடா இவ்விளைஞன்! பெரும் ஐயப்பனாயிருக்கிறானே!"

"ஐயோ அப்பா! என்ற அவயக்குரல் கேட்கும்போது உதவிபுரிகிறான் என்கிறது உண்மையாயிற்றே! இவனா ஐயப்பன்! நல்ல அய்ய அப்பன்! இவனை ஒரு கைபார்த்து விடவேண்டியது தான்." என்று தன் ஆட்கள்முன் சபதம் எடுத்தான் உடையான்.

"ஐயா, அப்பனே! நீ யார்? எத்தனை தடவை என்னைக் காத்து நின்றாய்? ஏன்? உன்னைப் பல தடவை கேட்டேன், பதிலில்லை. உன்னுடைய முழு அன்பையும், நம்பிக்கையையும் பெற, இதோ இவ் வாளின்மேல் ஆணை! இதுகாறும் இவ்வாள் எனக்கு உதவியாயிருந்தது. இனி நீ தான் துணை. நானே உனக்கு அடிமை உன் இச்சையே எனக்கு ஆக்கினை. இவ்வாளின்மேல் இனி நான் நிற்கவில்லை, உன் ஆதரவின் மேல் தான். இதோ இவ்வாளை உடைக்கிறேன். என் மனம் இப்பொழுதுதான் சாந்தியடைகிறது. ஆம், வாளின்வழி கொலை, களவு, இறுமாப்பு; உன் அருளின்வழி சாந்தி, நன்மை, பிறருக்குக் கைங்கரியம், உனக்கு. என் ஐயா—அப்பா, ஐயப்பா என்று பெயரிடுகிறேன். ஐயப்பா கருணைபுரி! என்னைவிட்டகலாதே. நீ இருந்தால்தான் சாந்தி உண்டு. வேறு பிறவியாகிறேன். இதுதான் என் முக்திபோலும்! இந்நற்கதியடையவே என்னை அரபி பாலைவனத்திலிருந்து உன் திருவருள் அழைத்ததுபோலும்!" இவ்வாறு கண்ணைமூடி வாவர் எதிரிலிருந்த புன்னகைபூத்த இளைஞனை, தன்னைத் திரும்பவும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய நண்பனை—புகழ்மாலை பாடி துதிசெய்தான். வெகுநேரஞ் சென்று கண்ணைத் திறந்தான். இளைஞனைக் காணவில்லை!

தூக்கமூண்டு அப்படியே படுத்துவிட்டான் வாவர். மறுநாள் விடியற்காலை ஒரு பெரியவர் வந்து "ஐயப்பா!" என்று சொல்லி உட்கார்ந்தார். இக்குரலைக் கேட்டதும், சீறி எழுந்தான் இரண்டு நாளாய்ப் பட்டினியாய்க் கிடந்த வாவர்.

"என்ன" ஐயப்பாவா! யாரது?"

"ஆம், ஐயப்பா, நீயும் ஐயப்பாதான் "

"நீங்கள்........."?

"நானும் ஐயப்பன் தான்"

"என்ன இது? ஐயப்பனென்று ஒரு இளஞ் சிங்கத்தை அறிவேன், ஆனால் நான் ஐயப்பனில்லை"

"ஆம் நானும் அறிவேன். அவனை யார் யார் அறிவாரோ அவர்கள் எல்லோரும் ஐயப்பர்கள் தான்! இதுவே ஒரு பெரும் சங்கமாகி, பின் சமூகமாகப்போகிறது. அதற்குத்தான் நான் இங்கு வந்தேன். ஐயப்பனின் புத்திமதி. நீ இப்போது இருக்குமிடம் எருமலி என்ற கிராமம். நீ இங்கிருப்பதை யறிந்து உன் ஆட்கள் ஊரிலிருப்பவர்கள் எல்லாரும் உன்னை அழைத்துப்போக வருவார்கள். ஆனால் நீ இங்கேயே தங்குவாய். இது ஒரு முக்கியத்துவ வாய்ப்பெய்தும் நாடாக விளங்கப்போகிறது. கேரள நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் சரி, நடுவே அமையப் பெற்றது. இருபுறத்தாருக்கும் சமத்துவம், சகோதரத்துவம் சன்மார்க்கம் பரவ, சேவை செய்வாய்"

புத்துயிர் பெற்றெழுந்தான் வாவர். ஒரு புது, புனிதமான, உயர அழைத்துப் போகும் உணர்ச்சி மேலிட்டது. மனத்தில் கீதம், கண்ணில் ஒளி, ஆர்வமும் ஆற்றலும் பெற்று அவயவங்கள் சேவைக்குத் துடித்தன. பெரியவரை வணங்கினான். அவர் தாம் அணிந்திருந்த ருத்திராக்ஷ மாலையை எடுத்து, பணிந்தவன் கழுத்தில் அமைத்தார். தன் தலையையும் பின் உடம்பையும் போர்த்துத் தொங்கின பாகையை விலக்கினான். உடனே பெரியவர் தம் காவி உடையை அளித்தார். வணக்கத்துடன் வாங்கி யணிந்த வாவர்—"வாவர்சாமி"—சந்நியாசியானான். வாவர் ஆட்கள் அதே சமயத்தில் அங்குவர, பெரியவர் விடைபெற்று அகன்றார். மடங்கொண்டு, எருமலி சாமியாராய் அமர்ந்தான் வாவர் சாமி!

* * *

நாடகம் கடைசி அங்கம். கேரள பாண்டிய ஐக்கியம் உருவாகி வலிவுறும் சமயம், அமைதி நிலவும் நாள்; கொள்ளைக் கூட்டத்தார் அடங்கி வரும், நீதி நெறிகளை பொலியவிருக்கும் அறிகுறிகள், உடையான் கும்பலின் அந்தி வேளை. வாளாவிருப்பனா அவன்? வாவர் சாமி யாரின் கீர்த்தி அவன் பெயருக்கு உலைவைத்தது. அவ்வப்போது மறைந்து காணும் இளைஞனின் மேன்மை கொடிகட்டிப் பறந்தது. ஆம், தன்னைப்போல் இவனும் ஒரு மனிதன் தானே, மனிதனால் ஆகாதது என்ன? ஐயப்பன் தெய்வீகப் பிறவியா? என்ன புரளி இது? ஒரு கை பார்த்துவிட வேண்டியதே. வாவர் சாமியும் பெருகி வரும் அவன் மடமும் ஒடுக்கப்படவேண்டியவை இதுதான் சமயம். அடுத்த வாரம் எருமலியில் வருடாந்தரத் திருவிழா? ஹூம்! திருவிழாவாம்! பார்த்து விடுவோம்' என்று உறுமினான் உடையான்.

ஆம்! அவனும் இப்போது ஒரு சிற்றரசனும், சேனாதிபதி வீரன் இளையக் கொம்பன் என்பவனை உடனே வந்துசேர ஆள்விடுத்தான். அவன் வந்தவுடன் சபை கூட்டி, திருவிழாவில் கலந்து அதைத் தடுக்க ஏற்பாடுகள் நடந்தன.

ஆனால், இணையக்கொம்பன் தம்பி குமரன் என்பான் வாவர்சாமி மடத்துப் போஷகன். உடனே மடத்திற்குச் செய்தி அனுப்பப்பட்டது. வாவர் சாமியார் போரிடத் தயாராயில்லை. எனினும் இத்துஷ்ட உடையானின் கொட்டத்தை அடக்கினால்தான் நாட்டிற்கு அமைதி யேற்படுமென்று தீர்மானித்தார். தகுந்த ஏற்பாடுகள் நடக்க வாரம்பித்தன.

நடுவே ஒருநாள் நள்ளிரவு, வாவர் தூங்கிக் கொண்டிருக்கும்போது உடையான் ஆட்கள் சந்நியாசி வேடம் தரித்து, காலையிலேயே பூஜைகளில் கலந்துகொண்டு இரவில் எழுந்து அப்படியே சாமியாரைத் தூக்கிப்போயினர்.

ஆனால் என்ன நேர்ந்தது? இருவர் காலில் விஷந்தீண்டியது. சீறிக்கொண்டே இருவரையும் சுற்றிச் சுற்றி ஒரு பாம்பு கடித்தது. அவர்களும் கதறிக்கொண்டு மாண்டனர். மற்றிருவரும் பாம்பிற்கஞ்சி, கட்டிலைவிட்டு மறைந்தோடினர். வாவர் கண் விழித்தார். என்ன இது? நடுக் காட்டில் இருக்கிறோம் என்று எழுந்து பார்க்கையில் இருவர் மாண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார், இதற்குள் மடத்திலிருப்பவர்கள் விழித்துக்கொண்டனர். சாமியாரையும் அன்றே வந்த நான்கு போலிச் சந்நியாசிகளையும் காணாது, சந்தேகம் வந்து உடையான் சூழ்ச்சி இது என்று தெளிந்து, கையில் திவட்டிகளுடன் ஆட்களைத் திரட்டிக் கொண்டு தேடிக்கொண்டே வந்தனர். வாவரைக் கண்டு பேரானந்தமடைந்து அழைத்துப் போயினர். வாவர் மனதில் " இது ஐயப்பனின் கருணையன்றி வேறில்லை. நாகம் கடித்து இரு எதிரிகள் மாளவா? அவன் கருணைதான் இது" என்று ஐயப்பனிடம் பூரண விசுவாசம் கொண்டார். மடம் அடைந்ததும், ஐயப்பன் நின்றுகொண்டிருப்பதைக் காணவே எல்லாச் சந்தேகமும் மறைந்தது. 'இனி உன் பாதமே கதி என்று ஐயப்பனைச் சரணமடைந்தார் வாவர் சாமி.

மறு நாள், உடையானைத் தாக்கத் தக்க ஏற்பாடுகள் நடந்தன. பாண்டிய நாட்டிலிருந்தும், கேரள நாட்டிலிருந்தும் ஆட்கள் திரள் திரளாய்க் கூடினர். அவர்களைப் படைபடையாக அணிவகுத்து இருபெரும் சேனையாக்கி ஒரு சேனையை வாவரிடம் ஒப்படைத்து, மற்றொன்றை கடுத்தா என்ற சேனாதிபதியிடம் ஒப்படைத்து, படையெடுப்பு முஸ்திப்பைச் சவிஸ்தாரமாக எச்சரித்தார் ஐயப்பன்.

குணத்தில் உயர்ந்தவை! தரத்தில் சிறந்தவை!!

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலையில்
தயாரிக்கப்படும்

- உயரிய ஆனந்தா பன்னீர் நெ. 240
- ,, ,, அரைக்கீரைவிதைத் தைலம்
- ,, ,, சந்தனாதித் தைலம்
- ,, ,, வாசனைச் சுண்ணாம்பு
- ,, ,, ஓமம் வாட்டர்
- ,, ,, சோம்பு அரக்கு
- ,, ,, டிஸ்டில்டு வாட்டர்
- ,, ,, ஜெயின் பல்பொடி
- ,, ,, பாபுலர் பல்பொடி (பாக்கெட்)

இவைகளையே

எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள். எல்லா இடங்களில் கிடைக்கும்.
விபரங்களுக்கு எழுதுக:-

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலை
இராயப்பேட்டை, - மதராஸ்-14.

நடப்பதை உளவு தெரிந்த உடையான் போருக்கு ஆயத்தமானான். காரிமாலா வென்ற ஊரின் மலைச்சரிவில் அவன் கோட்டையை அரண் அமைத்தான். இதற்குத் துவாரபாலகர்களாக இரு கோட்டைகளை, இரு மூலைகளிலும், இஞ்சிப்பரா, தலப்பரா என்ற இடங்களில் விரைவாக அமைத்தான்.

* * *

யுத்தகளம்! ஐயப்பன் சேனைகள் இரண்டு கோட்டைகளையும் ஏககோபித்துத் தாக்கின. தலப்பரா கோட்டை இரண்டே நாளில் தவிடுபொடியாயிற்று. ஆயினும் இஞ்சிப்பரா சளையாமல் நின்றது. அக்கோட்டையமைப்பின் சாதுரியம் இன்றும் புலனாகும். மலைச்சரிவில் சற்று உயரத்தில் நின்று அட்டகாசம் செய்தது. சுற்றிலும் அதாவது மூன்று பக்கத்திலும் பெரியதோர் அகழி.

நான்கு நாள் முற்றுகை ஒன்றும் பயனைத்தரவில்லை. இரு சேனைகளையும் ஒன்றுதிரட்டி ஒவ்வொருவனையும் பாரமான கல்லைத் தூக்கிக் கொண்டு வரும்படி ஐயப்பனின் ஆக்ஞை. சுமார் இருநூறு பெயர்கள் எதிரே நின்ற மலைக்குன்றை உடைத்துக் கல்லாய்ப் பிளந்து கொண்டிருந்தனர். ஒரு நாள் முழுவதும் அகழியின் ஒரு பாகத்தைக் கல்லால்மூடச் செலவிட நேர்ந்தது. அகழிக்கு நீர் பாய்ச்சிவந்த அருகே ஓடின அமுத நதியையும் கல்லால் அணை கட்டித் தடுத்து வேறு இடத்தில் மடை திறந்து நீரை மறையவிட்டனர். கடைசியில் இரண்டாம் நாள் விடியுமுன் அகழியைத் தாண்டினர் ஐயப்பன் படையினர். மேலிருந்து கல்லுகளை உருட்டி விடாதபடி ஐயப்பனின் வில்லாளிகள் கோட்டை மதில் காவலாளிகளை அம்பெய்து வீழ்த்திக்கொண்டிருந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக முற்றுகை வலிவடைந்தது. சாயங்காலம், கோட்டை ஐயப்பன் படையினருக்குக் கைவசமாயிற்று. எஞ்சிய ராணுவம் காட்டினுள் புகுந்து காரிமாலா கோட்டைக்குப் பறந்தோடிற்று.

இரண்டு நாள் இளைப்பாறி, பின்னர் காரிமாலா கோட்டையைப் பிடிக்கப் புறப்பட்டனர். இது ஒரு விசேஷ மதிப்பு வாய்ந்த முற்றுகையாயிற்று. இன்றும் வருடமொருதரம் ஐயப்பன் திருவிழாவில் இப் பாட்டைப் பாடி அநேக பக்தர்கள் படைக்கோலம் பூண்டு கலந்து கொள்வதைப் பார்க்கலாம்.

ஒவ்வொரு படை ஆளும் இலைப்பச்சை உடையணிந்து ஒரு பெரிய புதரையும் அடர்ந்த மரக் கிளையையும் தன்னை மறைத்துக் கொண்டு தாங்கிச் சென்று அடியடியாக, சூரியனில்லாத வேளையில் காரிமாலா அணுகி நின்றான். இரவும் பகலும் கோட்டை மதிளின்மேல் கண் கொட்டாது காத்துநின்ற பாராக்காரர்களுக்கு ஒன்றும் புலனாகவில்லை. எங்கும் அடர்ந்த காடு. சிலசில மரங்கள் சில வேளை அடியோடு பெயர்ந்து நகருவது போலிருந்ததை அவர்கள் கவனித்தவர்களில்லை.

முழு ராணுவமும் கோட்டை வாயிலடைந்ததும் உயர்ந்து திடமாய் நிற்கும் மதில் சுவரைத் தாக்க ஐயப்பன் யோசனை வந்தது. கோட்டையின் தெற்கே ஒரு குன்று. அதில் உயர்ந்து பருத்து வளர்ந்த மரங்கள் அநேகம். அவைகளை வெட்டிச் சாய்ப்பது என்று உத்தரவு. ஒரு நிமிஷம் நிசப்தம்; அடுத்த நிமிஷம் தடார் தடார் என்று பெரிய பெரிய மரங்கள், கீழே வடக்கில் நின்ற கோட்டை மதிளின் மேல் பீரங்கிபோல் அதிவேகமாய் விழுந்து சுவரைத் தவிடுபொடி யாக்கின! உடையான் சேனை காலாள் படையேயன்றி வில்லுப்படையல்ல என்று ஐயப்பன் உணர்ந்ததால்தான் மரங்களைத் தடாரென்று வெட்டிச் சாய்த்ததைத் தடுக்க முடியவில்லை.

மதிள் சுவர் மண்ணாகிப் போகவே அதன் வழியே விரைந்து பாய்ந்தனர் ஐயப்பன் வீரர்கள். அன்று நாள் முழுவதும் கடும்போர், உடையான் கடுத்தாவின் வாளுக்கு இரையானான்! அவன் சேனை பொடிப்பொடியாகி மறைந்தோடிற்று. ஜய பேரிகையுடன், வீரச் சங்குடன், வாவரும், கடுத்தாவும் "ஐயப்பனுக்கு ஜே!" பொழிந்த வண்ணம் நடு மண்டபத்தில் வந்து நின்றார்கள்.

ஆனால் ஐயப்பன் எங்கே? என்ன அழைத்தும் அழகிய இளஞ்சிங்கன் ஐயப்பனைக் காணோம்! ஆனால் ஒரு ஜோதியைக் கண்டார்கள். அதை நோக்கி அவ்வளவு பேரும் வந்து சேர, அது சபரிமலையில் கொண்டுவந்து விட்டது. முன்பு கொள்ளைக்காரனால் சூறையாடப்பட்ட இடிந்துவிழுந்த கோயிலைச் செப்பனிட்டார்கள். அத் தூய ஜோதி அங்கேயே தங்கிவிட ஐயப்பனைத் தெய்வச் சிலையாக்கி அதைத் தெய்வமாய்த் தொழுது நின்றனர். இன்றும் வாவர் மடம் இத்திருவிழாவில் கலந்துகொள்கிறது! ●

சிங்கப்பூரில் "காவேரி" பிரதிகள் கிடைக்குமிடம்
T. S. மணியம் பிரதர்ஸ்,
இந்தியன் நியூஸ் ஏஜென்ஸி,
போஸ்டு பாக்ஸ் நெ. 1326 ;; சிங்கப்பூர்—2

HVM. 139-173 TM

எதிர் விஷம்

ஜி. எஸ். மணி

அந்தி மயங்கும் அவ்வேளையிலே அவன் அந்த மரத்தடியிலே போயமர்ந்து கொண்டான்.

அந்த இடம்தான் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பிரும்மாண்டமாகப் பரவிப் படர்ந்து நின்றது அம்முதிய ஆலமரம். அதன் அடியிலே மலைமலையாக வளர்ந்து ஓங்கி நின்றது பாம்புப் புற்று. உண்மையில் கறையான் புற்றுத்தான்; அதைத் தின்னவரும் பாம்பு அங்கேயே குடியேறியும்விடுகிறது—மனித சரீரத்திலே விஷம் புகுந்து ஹ்ருதயத்திலே தங்கிவிடுகிறதைப்போல. நெஞ்சின் ரத்த ஓட்டமென்பது விஷச் சுரப்புத்தானு? அந்த விஷயம் அளவுடன் நிற்கும்வரையில் உயிருக்கு இனிமையைத் தருகிறது; அதிகமானுல் உயிரையே குடித்துவிடுகிறது; சாவு என்பதற்கு வியாக்யானம் இதுதானே?

சாவிற்காக உடலா அல்லது உடலுக்காகச் சாவா?

புற்றுக்காகப் பாம்பா அல்லது பாம்பிற்காகப் புற்று?

அந்தப் புற்றுக்கு வெகு அருகிலேயே—ஏன், புற்றின்மீதே என்றுகூடச் சொல்லிவிடலாம்—அவன் உட்கார்ந்திருந்தான்.

அவன் வாழ்வும் ஒரு கறையான் புற்றே; அவன் உடலும் கறையான் புற்றே; தொட்டவுடன் பொல—பொலவென்றும் உதிரும் நிலையிலுள்ள அவன் உடம்பில் பாம்பாகிற விஷ நெஞ்சு வாசம் செய்கிறது.

நஞ்செனும் நெஞ்சு! புற்றில் பாம்பு!

அப்போதைய அவனது சூழ்நிலைக்கும்—அவனுக்கும் அற்புதமான பொருத்தமாக அமைந்துவிட்டது.

ஆகவே அந்த இடம் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது—பாம்பு புற்றைப் பிடிப்பது போலே—நஞ்சு நெஞ்சைப் பிடிப்பதுபோலே—அவன் அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டான்.

அடிமரத்தின்மீது அப்படியே சாய்ந்துகொண்டான்; கால்களை ஒரே அடியாக நீட்டிவிட்டான்.

மாலை நேரம் மேலும் மங்கியது; அந்தி மயக்கத்திலே இருளின் முதல் ரேகை வந்து கலந்தது. சுற்றிலும் நின்ற மரம் செடிகள் நிறம் மாறி இருளோடு ஒன்றின; தூரத்திலே காணப்பட்ட பெரிய பெரிய தோப்புத் துரவுகளில் அந்தகாரம் கவிழ்ந்து கொண்டது. பக்கத்திலே நீண்டு கிடந்த பாதையும் வெகு விரைவிலே மங்கி மறைந்துகொண்டே போயிற்று.

அவ்வழியே புழுதியைத் துவைத்துக்கொண்டு ஒரு உருவம் வந்து கொண்டிருந்ததும் புலப்பட்டது. தலையில் கனத்த முண்டாசு; தோளிலே தொங்கிய மண்வெட்டி; வரிந்து கட்டிய வேட்டி—வந்தது ஆணுருவம்தான்.

வந்தவன் ஆலமரத்தடியிலே யாரோ 'விழுந்து கிடப்பதை'க்கண்டு வழியிலே நின்றுன். நின்ற இடம் விட்டு நழுவாமலே குரல் கொடுத்தான்:

"யாரங்கே படுத்துக் கிடக்கிறது?"

பதில் வரவில்லை.

"மரத்தடியிலே யாருங்கறேன்?" என்றுன் இன்னம் உரத்த குரலில்.

அப்போதும் நிசப்தம்தான்.

"ஏய்? உசிரு—கிசிரு இருக்குதா? இல்லாட்டி செத்துக்கித்துப் பூட்டியா?" என்று கூவினுன் மறுபடியும்.

"எங்கே இருந்தாலும் சாவு விடாதப்பனே? துரத்திக் கொன்றே தீரும்" என்று 'பளிச்' சென்று பதில் வந்தது.

"அதுதானே பார்த்தேன்? சாவு உன்னைத் தேடி வர்றத்துக்குள்ளே அதையே தேடிக்கிட்டு நீ போகத் துணிஞ் சுட்டியோ? பாம்புப் புத்து மேலே போயி படுத்துக்கிட்டு கெடக்கிறியே? எளுந்திரிச்சு எட்டிப் போய்டா! நல்ல பாம்பு—மொறட்டுப் பாம்பா ஒண்ணு கெடக்குது அந்தப் புத்துக்குள்ளே!" என்று எச்சரித்தான் வழியிலே வந்தவன்.

"விஷத்துக்கு எதிர் விஷம் எங்கிட்டே இருக்குது—நீ ஒண்ணுக்கும் கவலைப்படாமெ உன் வழியிலேபோ" என்று எதிர் பதில் வந்தது.

அத்தகைய துணிவைக் கண்டு வந்தவன் துணுக்குற்றிருக்க வேண்டும்— "நீ என்ன பாம்புப் பிடாரனா—இல்லாட்டிப் பைத்தியமா?" என்று கேட்டான்,

"இரண்டும்தான்; நானே ஒரு விஷப் பாம்பு—என்னைச் சீண்டுகிறவர்களைக் கடித்துப் போடுவேன்; பைத்தியம்னே வச்சுக்கிட்டாலும் நீ என்ன செய்யப் போறே? புத்துப் பாம்புதான் என்ன செய்ய முடியும்?"

"அட கஷ்டமே! பைத்தியம்தான் போலிருக்குது!" என்று சொல்லிவிட்டு வந்தவன் தன் வழியே சென்றான்; அவன் பின்னே புழுதிப் படலம் புரண்டு விழுந்தது.

இருட் படலம் கனத்து விழுந்தது.

மையிருளில், அவ்விடத்தில், அம்மாதிரி, தனிமையில் அமர்ந்திருந்தது அவனுக்கு அளவற்ற ஆனந்தத்தையே கொடுத்தது.

தனிமை என்று சொல்வது தவறு. பாம்பொன்றும் கூடவேதான் இருந்தது. புற்றுப் பாம்பு இருந்தாலும்-இல்லாவிட்டாலும்-அவனது மனப் பாம்பு எப்போதும் சீறியபடியே இருந்தது.

மகுடியின் ஓசைக்கேற்றபடி அது படமெடுத்தாடிக்கொண்டேயிருந்தது.

அந்தராத்மாவின் குரல் இனிமையுடன் குழையும்போது அது பரவசமாகி ஆடும்; உணர்ச்சிக் குமுறலிலே குரல் சீறும்போது அவன் மனப்பாம்பும் நஞ்சைக் கக்கும்.

"உன்னைப் பாம்பு பிடுங்க!" என்று அவனை அநேகர் சபித்திருக்கிறார்கள். நிஜப் பாம்பு பிடுங்குமோ — பிடுங்காதோ — மனப் பாம்பு சதா சர்வதா அவனைக் கொத்திக்கொண்டே இருந்தது.

அந்த விஷத்தின் வேகம் தாங்காமல் ஒவ்வொருமுறை ஒவ்வொரு விதமாக அவன் நடந்துகொண்டான்.

ஏதேதோ செய்தான்; எங்கெங்கோ சுற்றினான்—ஓரிடத்திலும் அவனுக்கு நிலை கொள்ளவில்லை. கடைசியில் தான் பிறந்து வளர்ந்த இடத்துக்கே திரும்பிவிட்டான்.

அந்தச் சிறு கிராமம் அவன் பிறப்பிடம்; அவன் வாசஸ்தலம்; அவன் சொர்க்க பூமி, நஞ்சை அவனுக்கு ஊட்டிய இடமும் அதுவாகவே அமைந்துவிட்டது.

ஆனால் — அதெல்லாம் 'முன்னொரு காலத்தில்' என்றே சொல்லவேண்டும். இப்போது அந்த ஊரில் அவனுக்கு உப்புமில்லை; உறைப்புமில்லை. வெறும் கறையான் புற்றுத்தான்.

அந்த ஊரின் ஒவ்வொரு மூலை முடுக்கும் அவனுக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அவன் சுற்றித்திரியாத இடமில்லை; ஏறாத மரமில்லை; தெரியாத மனிதரில்லை; நீந்தாத குளமில்லை. ஊரின் மத்தியில்—அதன்—ஹ்ருதயமேபோல் ஓடிய ஆற்றில் இத்தனை வளைவு—நெளிவுகள் என்று அவனால் பளிச்சென்று சொல்லமுடியும். இன்ன இன்ன இடத்திலே மடுக்கள் என்பதும் தெரியும்—ஏன்? அந்த ஆற்று மணலைக் கூட அவன் உத்தேசமாக மதிப்பிட்டுச் சொல்லிவிட முடியும்!

கண்களைக் கட்டிவிட்டு அவனைக் கொண்டு போய் ஓரிடத்தில் நிறுத்தினால் 'அந்த இடம் இன்னதென்று' அவனால் அப்போதுகூடத் தயங்காமல் சொல்லமுடியும். கண்களைத் திறவாமலே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அவன் அப்போதும் குறிப்பாக நடந்து செல்லமுடியும்,

பகல் பொழுதெல்லாம் அந்த ஊரிலே ஒரு இடம் பாக்கியின்றி அவன் சுற்றிச் சுற்றி அலைந்து திரிந்தான். தெரிந்த வரையும்—தெரியாதவரையும்கூடப் பார்த்தான்.

ஆனால் ஒரு வித்யாஸம்; அவனுக்குத் தெரிந்தவர்கள் கூட அவனைத் தெரிந்து கொள்ளவில்லை; அவனுக்கே தெரியாத முகங்களைப்பற்றிய கவலையில்லை.

அவனோடு நெருங்கிப் பழகியவர்களே அவனை அறிந்துகொள்ள முடியாதபடி, அவ்வளவுக்கு அவன் உருமாறிப்போய்விட்டதைக் குறித்து அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

அவன் அடியுடன் மாறியிருந்தும் அவன் கிராமத்திலே அவ்வளவாகப் பெரிய மாறுதல்கள் ஏதுமில்லை.

பிடாரி கோவிலைப் புதுப்பித்திருந்தார்கள்; 'இடிந்த பாலம்' என்று சொல்லப்படுவதைச் சிறிது செப்பனிட்டிருந்தார்கள்; ஆற்றங்கரையின் படித்துறையை ஏதோ கொஞ்சம் மராமத்துச் செய்திருந்தார்கள்; அவ்வளவே.

ஒரு காலத்தில் அவன் குடியிருந்த தெருப் பக்கம் போயும் பார்த்தான். அவன் வாசஸ்தலம் என்று சொல்லப்படும் இடத்திலே இடிந்துபோன இரண்டொரு குட்டிச் சுவர்களே நிற்கக் கண்டான்; நிலை பெயர்ந்துபோன கதவு ஒன்று மட்கி மடிந்துகொண்டிருந்தது. மேற்கூரை யெல்லாம் போன இடமே தெரியவில்லை. அங்கும், வாயிற்புறத்து அறையின் ஜன்னல் இருந்த இடமென்பதாக நினைவில் மிதந்த இடத்திலே, மலை மலையாகப் பெரிய பெரிய புற்றுக்களே வளர்ந்திருந்ததைக் கண்டான்.

அப்புறம்—அவன் இருந்த ஜாகைக்குப் பக்கத்து வீடு! அவன் நினைவைவிட்டு ஒரு கணம்கூட அகலாத அடுத்த வீடு! அந்த ஜன்மாவில் அவனால் மறக்கவே முடியாத அந்த வீட்டுப் பெண்!

பொங்கிவந்த ஆர்வத்துடனே அந்த வீட்டையும் ஆவலோடு கவனித்தான்—அங்கும் பழைய பொலிவு இல்லை; 'அவள்' அங்கிருந்த போது திகழ்ந்த களையில்லை; அவ்வீட்டினுள்ளும் அழகில்லை; மகிழ்வில்லை.

இன்னும் சில ஆண்டுகள் கழிந்தவுடன் அவன் வீட்டைப் போலவே 'அவள்' வீடும் குட்டிச்சுவராகிவிடும் என்று கண்டுகொண்டான். அப்போதைக்கு அந்த நினைப்பு அவனுக்குப் பெரு மகிழ்வையே கொடுத்தது.

அவள் வீட்டாரைச் சேர்ந்தவர்களில்—அவளுடைய பெரிய தகப்பனாரை அவன் அடையாளம் கண்டு கொண்டான்; பாவம்—தொண்டு கிழமாகி விட்டார் அவர்; தலையிலிருந்து பாதம் வரையில் 'கிடுகிடு'ென்று அவருக்கு ஒரே நடுக்கம்; அவரைக் கண்டதும் அவரோடு பேசாமலிருக்க அவனால் முடியவில்லை.

"தாத்தா! நான் அயலூர்; உங்கள் வீட்டிலே ஒருவேளை அன்னம் கிடைக்குமோ?"

பெரியவர் அவனைக் கூர்ந்து நோக்கினார்; "சாப்பாடா? நானே இந்தத் தள்ளாத வயசில் பிறர் கையைத்தான் எதிர்நோக்கியிருக்கிறேனப்பா; பெண்டாட்டியுமில்லை—பெண்ணுமில்லை—வந்து வந்து என்னிடம் கேட்டாயே அப்பனே?—ஐயோ—பாவம்!" என்று நடுங்கிய குரலிலே அவர் பரிவுடன் பதில் சொன்னார்.

"அன்புமிக்க உங்கள் பரிவே போதும்; வயிற்றுப் பசியை நான் பொறுத்துக்கொள்ள முடியும்; சற்று உங்கள் வீட்டுத் திண்ணையில் இளைப்பாறிவிட்டுப் போகிறேனே?"

"ஆஹா., தாராளமாக உட்கார்ந்து களைப்பாறு."

"இந்த அடுத்த வீடு இப்படிக் குட்டிச்சுவராகி நிற்கிறதே? கதியற்ற மனிதர்கள்தான் உண்டு என்று நினைத்தேன்; கவனிப்பாரற்ற வீடும் உண்டா?"

"இதில் ஆச்சரியத்துக்கு இடமேயில்லையப்பா; மனிதன்—மரம்—செடி—கொடி—கல்—கட்டை—எல்லாவற்றுக்குமே 'பொங்குசனி—மங்குசனி' உண்டு. இந்த அடுத்த வீடு இருக்கிறதே, அது இந்த ஊர் புரோகிதரின் வீடு; அவர் காலத்திலே அவர் நல்ல வாழ்க்கை தான் நடத்தினார்; அவருக்குப் பிற்காலம் அவர் பிள்ளை யொருத்தன் பெயர் சொல்லவே இல்லை; 'படு தத்தாரி'யாகித் திரிந்தான்; புரோகிதரின் பிள்ளையென்று சொல்லக் கூடிய யோக்யதாம்சமே அவனிடம் எள்ளளவு கூட இல்லவே இல்லை; எழுத்து வாசனையே இன்றி, படுகாவாலிப் பயலாய் அட்டஹாஸம் செய்துகொண்டிருந்தான். பீடி—புகையிலை—பொடி—வெற்றிலை பாக்கு—ஒன்று பாக்கியில்லை—திடீரென்று ஒருநாள் எங்கேயோ போய்விட்டான்—அவன் போய் இப்போது பத்துப் பதினைந்து வருஷங்களுக்கும் அதிகமாகவே இருக்கும். எங்கே போனானோ? உயிருடன்தான் இருக்கிறானோ? செத்தே தொலைந்துவிட்டானோ?" என்று பேசினார் கிழவர்.

அவன் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான். தன்னைப் பற்றிய கதையைத் தானே கேட்டதில் அவனுக்கு எல்லையற்ற திருப்தி உண்டாயிற்று. அதிலும் பெரியவர் சொன்ன விதம் பரமானந்தத்தை ஊட்டியது.

'அதே பிள்ளையாண்டான்தான் இப்போது உங்கள் எதிரில் உட்கார்ந்துகொண்டு—உங்கள் வாய் மூலமே தன் கதையைக் கேட்டபடி கல்லுக் குண்டாக இருக்கிறான்' என்று சொல்ல வேண்டுமென்பதாக அவனுக்குத் தோன்றியது; ஆனால் சொல்லவில்லை.

அவர் சொல்லியது அனைத்தும் அப்படியே உண்மை.

மஹா பண்டிதராய் விளங்கிய புரோஹிதரின் வயிற்றிலே ஜனித்தும்கூட அவனுக்

கென்னவோ படிப்பே சற்றும் ஏறவில்லை. யார் செய்த பாபமோ? எழுத்து வாசனை என்பதே அணுவளவு கூட அவனிடம் இல்லை,

வாய் பாடமாகவாவது அத்யயனம் செய்து வைக்க முயன்றார்கள்; அதுவும் பலிக்கவில்லை.

'அக்னி ஹோத்திரம்' என்பது அவனுக்குச் சிகரெட்டுப் புகைத்தல். 'சமிதா தானம்' என்பது மரக்கிளையில் ஏறி அமர்ந்துகொண்டு-மாங்காயோ—அல்லது நாவல் பழமோ தின்னல்—முதலியவை.

அவன் வளர்ந்த சூழ்நிலையே அப்படிப் பட்டது; கருர்—கண்டிப்புடன் அவனை வளர்க்கச் சிரத்தையுள்ளவர்கள் இல்லை; தகப்பனார் அவன் அறியாக் குழந்தையாக இருந்த போதே காலம் சென்றுவிட்டார். தாயாரை அவன் எளிதில் ஏமாற்றிவிடக் கற்றுக் கொண்டுவிட்டான்.

"அட, கொலை பாதகமே! என் வயிற்றிலே வந்து பிறந்து ஏண்டா என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிறாய்? ஊரில் ஒருவர் பாக்கியில்லாமல் உன்னைக் கரித்துக்கொட்டுகிறார்களே? இத்தனை கண்கள் கரித்தும் உனக்குச் சாவு வரவில்லையே? உன்னைப் பாம்புபிடுங்க!" என்று அவனைப் பெற்றவள் வயிறெரிந்தாள்.

அவன் அவள் தாபத்தைப்பற்றிச் சிறிதேனும் அக்கரை காட்டாமல் ஊர் சுற்றக் கிளம்பிவிடுவான்.

ஊரில் யாரைப்பற்றியும் அவனுக்கு அக்கரையில்லை; யாரிடமும் அவனுக்குப் பயமும் கிடையாது; பயமே அவனுக்குத் தெரியாது. நட்ட நடுநிசியில் நிர்ப்பயமாய் அவன் சுடுகாட்டையும் சுற்றிவருவான்.

உற்ற தோழர்களோ—அல்லது வயதில் பெரியவர்களோ-யாராயிருந்தாலும் சரி, அவன் மனப்போக்கிற்குச் சிறிது விரோதமாகப் போய் விட்டாலும்சரி-பாம்பாகவே அவன் சீறுவான். அவன் இஷ்டப்படிதான் எல்லோரும் நடக்க வேண்டும்; மற்றவர் இஷ்டத்துக்கு அவன் ஒருபோதும் அடிபணியவே மாட்டான். அவனிடம் வம்பிற்கு நிற்க அந்தக் கிராமத்தில் யாருமே துணியமாட்டார்கள்.

அவனுக்கு ஆறேழு வயதாக இருந்தபோது நடந்த விஷயம் ஒன்று அப்போது அவன் நினைவிலே சுழன்றது.

விளையாட்டின் போக்கிலே சிறு பையன் ஒருவனை அவன் அடித்துவிட்டான். அது கேட்டு அந்தப் பையனின் தாயார் பிரமாதமாகச் சண்டைக்கு வந்துவிட்டாள். அந்த ஸ்திரீ சொன்னாள்:

"ஏண்டா காவாலிக்கழுதை? அடுத்தவேளைச் சோற்றுக்கு கதியில்லாத தரித்திரமே? என் குழந்தையை நீ கைநீட்டி அடிக்கலாயிற்றா? படிப்போ—எழுத்தோ—ஒன்றுமில்லாமல் ஊர் சுத்துகிற தடிக்கழுதை, நீ கெடுவதுமல்லாமல் ஊர்க்குழந்தைகளையும் ஏண்டா குட்டிச்சுவராக்குகிறாய்? உன் திமிர் ஒடுங்க! உன் கையைப் பாம்பு பிடுங்க! உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்று வாயாலும் பொரித்துக் கொட்டியபடி ஒரே பாய்ச்சலில் அவனது இரு கைகளையும் சேர்த்து இறுக்கிக்கொண்டு பளீர்பளீர் என்று கன்னத்திலே நான்கைந்து அறைகள் விட்டாள்.

அவன் கன்னம் சிவந்துபோய் விட்டது; வலி பொறுக்கமுடியாத நிலையில் அவன் அவள் பிடியிலிருந்த தன்னிரு கரங்களையும் திமிறி விடுவித்துக்கொண்டு, அவளே எதிர்பாராத வகையில், அவள் கையைப் பிடித்திழுத்து வெடுக்கென்று நன்றாய்க் கடித்துவிட்டான்.

வலி பொறுக்காமல் அந்த ஸ்திரீ துடித்தாள்; கையை உதறிக்கொண்டாள்; அப்புறம் அவள் அவனைப் பேசிய பேச்சும், ஏச்சும் மிகவும் கேவலமான தொனியில் எழுந்து நின்றன.

அப்போது, முதல் தடவையாக், அவன் உள்ளத்திலே பொறுக்கமுடியாத வெறுப்பு எழுந்து நின்றது; அதிலும் பெண்களிடம், பொதுவாக, அவன் அருவருப்பு மேலோங்கி நின்றது. நாளடைவில் உள்ளூரவே வெறுப்பு விஷமாக வளரத் தொடங்கியது.

இருபத்தோராவது வயதிலே அவன் அந்தச் சிறு கிராமத்தின் வணங்காமுடி மன்னனாகத் திகழ்ந்தான். அவனுக்கேற்றாற்போல் சகபாடிகள் சிலரும் சேர்ந்தனர்; புகையிலையின் பல விதப் பிரயோகங்களையும் அவன் கற்றுக் கொண்டான்.

தலையை நிமிர்ந்து கொண்டு, யாருக்கும் அடங்காத தோரணையிலே, அலட்சிய நோக்குடன், அவன் ஊர்த்தெருவில் ராஜநடை போட்டுக்கொண்டு போகும்போது இளம் வயதுப் பெண்கள் உள்ளே பாய்ந்தோடி, கதவை மூடிக்கொள்வார்கள். வாயில் வெற்றிலைபாக்குப் புகையிலையைக் குதப்பியபடி, ஒரு சிமிட்டா பொடியையும் எடுத்து உறிஞ்சிக் கொண்டு அப்போதெல்லாம் அவன் எக்காளம் போடுவான்.

திமிர்கொண்டு அவன் திரிந்தான் என்று சொல்வதில் தவறு ஒன்றுமேயில்லை; அதை

அவனே ஒப்புக்கொண்டான்; அப்படி இருந்த தில் அவனே அதிகப் பெருமையும் பட்டுக் கொண்டான்.

யாரும் அவனுக்கு எதிரில்லை; கடவுளும் அவனுக்கு நிகரில்லை.

அப்படிப்பட்டவன் ஒரேயொரு இடத்தில் மட்டும் பலஹீனம் காட்டி விட்டான். ஒரு பெண்ணிடத்திலே தன் ஆண்மையைப் பறி கொடுத்துவிட்டான், தன்னிடமிருந்த சகலத் தையும் அவன் அவளிடம் பணயமாக வைத்து விட்டான். அது தகர்த்தெறிய முடியாத ஒரு பலஹீனமாக அவனிடம் பதிந்து விட்டது.

அந்த அபாக்யவதி அந்த அடுத்த வீட்டுப் பெண்தான்; அந்தக் கிழவரின் தம்பி மகள். சந்தேகமில்லாமல் அவள் அபாக்யவதியே—இல்லையென்றால் அவன் உள்ளம் அவளுக்கு அடிமையாவானேன்? நஞ்சு ஊறும் நெஞ்சைப் படைத்திருந்த அவனுக்கும் அவளுக்கும் எந்த வகையில் பொருத்தம்?

அவள் அவனுக்கு எதிர் விஷம்—ஆம்—எதிர் விஷம்—மாற்று விஷம்.

அவளுக்கு அவன் எதிர்விஷமா அல்லது அவனுக்கு அவளே மாற்று மருந்தா?

அவன் சற்றே புரண்டுகொடுத்தான்; முதிர்ந்து வளர்ந்திருந்த ஆலமரம் அவன் முது கிலே உறுத்தியது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

பின் நிலவு புறப்பட்டு வெகு நேரமாகிவிட் டது. மரத்தின் இலைகளினூடே தரையில் வந்து விழுந்த நிலாக் கதிர்களும் இலை நிழலு மாய்ச் சேர்ந்து விசித்திரக் கோலமிட்டன.

எதிரே நோக்கினான்: ஆற்றங்கரை; பால் நிலவு பொழியும் படித்துறை; இரு கரையும் பெருகியோடும் ஆறு—

பல வருஷங்களுக்கு முன்பு—அவனும், அவ ளும்—ஒரு நாள் அதிகாலையில் அதே படித் துறையில் கடைசி முறையாகச் சந்தித்த போது அவன்—அவளை—

ஆல மரத்தின் மேலிருந்த ஆந்தையொன்று அலறியது.

அன்றும் இதே போலத்தான் ஆந்தை அலறியது—அவள் அதைக்கேட்டுப் பயந்து விட்டாள்.

அவன் அன்றும் பயப்படவில்லை; இன்றும் பயப்படவில்லை.

ஆலமரத்தின் மேலிருந்து ஆந்தை ஓயாமல் கூவியது; அடுத்தடுத்து கூவிக்கொண்டே யிருந்தது. சிந்தனையை நிறுத்திவிட்டுச் சிறிது நேரம் அதன் அலறலைக் கேட்டுக்கொண்டே யிருந்தான்.

ஆந்தை பறந்து போகவுமில்லை; கிறீச்சிடு வதை நிறுத்தவுமில்லை; அவன் தலைக்கு நேரா கவே வந்தமர்ந்துகொண்டு அலறத் தொடங் கியது.

அவன் பொறுமையிழந்து எழுந்தான்; 'சூ—சூ' என்று அதை விரட்டினான்; சிறு கற்களைப் பொறுக்கி மேலே வீசினான். அது எங்கோ பறந்து போய்விட்டது.

மீண்டும் வந்து அமர்ந்துகொண்டான்.

நிலவு மிக மதுரமாயிருந்தது.

அவள் பெயரும் மதுரம்தான். அவள் பேச் சும் மதுரமானதே; அவள் பார்வையும் மது ரமே; அழகிலும் மதுரமே—

"அதரம் மதுரம்; நயனம் மதுரம்; வதனம் மதுரம்; கமனம் மதுரம்" என்று எப்போதோ யாரோ, ஸ்தோத்திரம் பாடியது அப்போது அவன் நினைவுச் சுழலிலே மிதந்து வந்தது.

'மதுரம்' என்றால் இனிமையென்று பொருள்,

அவள் அவனுக்கு இனிமையை ஊட்டு வதற்குப் பதிலாகக் கசப்பையே கொடுத்து விட்டாள். மாருத கசப்பையே அவன் ஹ்ருத யத்தினுள் ஊற்றி விட்டாள்.

அவளிடம் மற்ற எது மதுரமாயிருந்தாலும்—ஹ்ருதயம் மட்டும் மதுரமானதில்லை—இனி மைக்குப் பதில் கொடிய விஷமே துளும்பி நின்றது அவள் ஹ்ருதயத்திலே.

ஹ்ருதயம் விஷமென்றால் அவளிடம் மற்ற எதுவுமே மதுரமில்லை—அவளே விஷம்; விஷப் பிண்டம்! மதுரமே விஷம்—விஷமே மதுரம்—

அவன்? எதிர் விஷம்? அவளுக்கு எதிர் விஷம்!

அவர்களிடையே நேர்ந்த சோதனையிலே வெற்றி பெற்றது யார்? எதற்காக அந்தச் சோதனை?

பாவாடை கட்டிய சிறுமியாக அவள் வளைய வந்தபோதிருந்தே அவனுக்கு அவளிடம் அலாதியானதொரு கவர்ச்சி பிறந்து வளர்ந்து வந்தது.

சிற்றெறும்பைப் போன்ற சுறு சுறுப்பு அவளுக்கு; ஓரிடத்திலும் சோம்பி நிற்காமல், எப்போதும் அவள் ‘துரு துரு’ வென்று திரிந்துகொண்டேயிருப்பாள். மை தீட்டிய விழிகளுடன் பச்சைப் பாவாடையுடனும், பச்சைக் கவுனுடனும், நான்கு புறங்களிலும் பார்வையைச் சுழற்றியபடி, சிலேட்டுப் புஸ்தகங்களுடன் பக்கத்திலிருந்த கிராமப் பள்ளிக்கு அவள் குதித்து குதித்துப் போகும் போது—அந்தக் காட்சி அவன் மனதைச் சுண்டிச் சுண்டி இழுக்கும்.

அவள் வரும் சமயத்துக்குச் சரியாக, வழியில், ஏதாவது ஒரு மரத்தின் மீது ஏறி, கிளையில் அமர்ந்தபடி, அவளை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருப்பான். தூரத்தில் அவள் மான் குட்டியைப் போலே துள்ளி வருவதுதெரிந்ததும் அவன் உள்ளமும் மகிழ்ச்சி கொண்டு துள்ளும்.

அவன் இருக்குமிடத்தை அவள் நெருங்கியதும்—

"என்னடீ மதுரம்! பள்ளிக்கூடம் போறயா?"

அவன் குரல் கேட்டு அவள் அண்ணுந்து பார்ப்பாள்.

"என்னடா குரங்கே! மரத்திலே ஏறி, உக்காந்தூட்டியா?"

"‘குரங்கு’ என்கிறயே? குரங்கு என்னபண்ணும் தெரியுமா? மேலே விழுந்து கடிக்கும்! ஜாக்கிரதை—ஓடிப் போய்விடு! இல்லாவிட்டால் கடிப்பேன்!"

"அடே, சும்மா — விளையாட்டுக்குச் சொன்னேண்டா; அதுக்குள்ளே கோவிச்சுக்கிருயே?—டே, டே? எனக்கு ஒரு மாங்காய் பறிச்சுப்போடடாப்பா?" என்று அவள் கெஞ்சுவாள்; அந்தக் குரலில் கெஞ்சுதலுடன்–கொஞ்சுதலும இருப்பதாக எண்ணி, அவன் ஆனந்தப்படுவான்.

புதிதாகப் பறித்த மாங்காய் என்ருல் அவளுக்கு உயிர்.



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

DON'T WORRY !!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) நாதம் & கோ.
மட்டஞ்சேரி
கொச்சின்

(2) இண்டோ மெடிகல் சப்ளைஸ்
205, தங்கசாலைத்தெரு,
(மிண்ட் ஸ்டிரீட்)
மதராஸ்-1

(3) நியூ டவுன் ஏஜன்ஸிஸ்
804-B. "ஹரிநிவாஸ்"
வின்ஸெண்ட் ரோடு
தாதர் - பம்பாய் - 14

(4) L. M. முகர்ஜீ & ஸன்ஸ் லிமிடெட்
167, தாரம்தலா தெரு
கல்கத்தா

(5) ஆந்திரா எம்போரியம்
76-78, டூப்ளெக்ஸ் தெரு
புதுச்சேரி

(6) பயனீர் பார்மஸி
183, மெயின் ரோடு
பேட்டா - கொளும்பு
(இலங்கை)

(7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி
72, அம்பாங் தெரு
கோலாலம்பூர் (மலேயா)

Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms

READ WHAT SATISFIED CUSTOMERS SAY !

K. P.; Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K. L. R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends,'

Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.



"மாங்காய் வேணுமிங்கிறயே? மாங்காய் தின்னுவியா? பள்ளிக்கொடம் போவியா?"

"ஏன்? மாங்காய் தின்னுண்டே பள்ளிக்கூடம் போறேன்?"

"மாங்காய் தின்ருல் படிப்பு வராது, படிக்கவேணும்னு இருந்தால் மாங்காய்தின்னக்கூடாது!"

அதைக்கேட்டு அவள் முகத்தை ஒரு விதமாக நொடித்துக்கொள்ளுவாள். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அற்புதக் காட்சியாக இருக்கும் அது. அவள் அழகு காட்டுவாள்—அதில் இனிமை சொட்டும்.

"போடா சரிதான்—மாங்காய் போடாவிட்டால் போயேன்? உன்னைப்போலேன்னு நெனச்சியோ—படிப்பு வராத முட்டாளாய் இருக்கறதுக்கு?" என்று பிணங்கிக் கொண்டுபோகப் புறப்படுவாள்.

அவளைத் தவிர — வேறு யாராய் இருந்தாலும் சரி; அவனை 'முட்டாள்' என்று சொன்னாலோ — 'குரங்கு' என்று சொன்னாலோ — வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு நிற்பான். சும்மா விடமாட்டான். கன்னம் பழுத்துவிடும்! வயதில் மூத்தவர்களாயிருந்தால் கல்லெறிபட்டே தீரவேண்டும்.

அவள் என்ன சொன்னாலும் அவனுக்கு உறைக்காது. இந்த விஷயம் அவளுக்கும் நன்ருகத் தெரியும். அதனால்தானே என்னவோ—அவள் அவனைப் பார்க்கும்போதெல்லாம் ஏதாவது சொல்லி ஏசிக் காட்டத் தவறவே மாட்டாள்.

ஒரு சமயம் அவள் தன்னை வெகு ஜோராகச் சிங்காரித்துக்கொண்டு, எங்கேயோ போவதற்குத் தயாராகி யிருப்பவளைப்போலே, 'சிலுக் சிலுக்' கென்று இங்குமங்குமாய் ஒய்யார நடைபோட்டுக்கொண்டிருந்தாள்.

அவளைக் கவனித்தான் அவன். "பிரமாதமா அழுகுபடுத்திக்கொண்டிருக்கியே! எங்கேடீ போகப் போறே மதுரம்?" என்று கேட்டான்.

"கல்யாணபுரத்துலே எங்க உறவுக்காரர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகப் போறேண்டா" என்று பெருமை பிடிபடாமல் அவள் பேசினுள்.

"ஏண்டீ? திரும்பிவர ரொம்ப நாளாகுமோ?"

"இனிமே இங்கே வரவே மாட்டேன்!"

"நிஜமாகவா?" என்று அவன் வருத்தமுற்று வினவினுன்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்: "இல்லேடா இல்லே! சும்மாச் சொன்னேன்; ஒரு வாரத்துலே வந்துவிடுவேன்."

அவன் அவளை அப்படியே விழுங்கிவிடுபவனைப்போல் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

"என்னடா என்னை அப்படிப் பாக்கறே! கண்ணாலேயே சுட்டுவிடுவேபோலிருக்கே?" என்று கேட்ட அவள் தன்னையுமறியாமல் தலை குனிந்தாள்.

தாங்கமுடியாத உள்ளத்துடிப்பே அவனை அப்படிக் கேட்கத் தூண்டியிருக்கவேண்டும்: "மதுரம்! என்னை நீயே கல்யாணம் செய்து கொள்ளுவியா மதுரம்? நான் உன்னைப் பண்ணிக்க ஆசைப்படறேன்!" என்று அவன் தன்னை யறியாமலேயே கேட்டுவிட்டான்.

அவள் தலை நிமிர்ந்து அவனை நோக்கினுள்; கண்ணிலே சொல்லமுடியாத ஏளனக் குறி; உதட்டிலே ஒரு கோணல்; முகத்திலே வெறுப்புக் கலந்த ஒரு சுழிப்பு—

"எழுத்து வாசனையே இல்லாமெ—வெறும் தடிப் பயலாய் திரியும் உனக்கு, கல்யாணம் வேறயா — கல்யாணம்? — தூ! என்னைப் பார்த்துக் கேக்கவே உனக்கு வெக்கமா யில்லே?" என்று 'பளிச்'சென்று பதில் சொல்லிவிட்டு ஓடியே போய்விட்டாள்.

அப்போது அவள் தாவணி அணிந்து நின்ற பருவம்.

அவனுக்கு வயது பதினறு இருக்கும்.

அவ்வளவு அலட்சியமாக அவள் பதில் சொல்லிவிட்டுப் போனது அவனுக்கே பிடிக்கவில்லை; பொறுக்க முடியாத வருத்தமும், துக்கமும் அவன் மனதைக் கவ்வி யிழுத்தன.

இருந்தாலும் அவன் அவளை மன்னித்துவிட்டான். அவளைப் பொறுத்தமட்டில் அவன் அவ்வளவுக்குப் பலஹீனமுற்றிருந்தான். அவள் என்ன சொன்னாலும் அவன் பொறுத்துக் கொள்ளத் தயார்—

செடியாக நின்றது கொடியாக வளர்ந்தது.

அவள்—மொட்டாக நின்றவள்—மணத்தை அள்ளிச் சொரியும் அற்புத மலராக மலர்ந்தாள். பருவம் அற்புதமாக அவளைச் சமைத்து விட்டது; அழகின் எல்லை புதிய சோபையுடன் அவள் அங்கமெங்கும் சுடர் வீசியது.

அவன் முரட்டுக்காளை; கட்டுத்தறியின்றி, தன்னிச்சையாகத் திரிந்த முறுக்கான காளை; அடக்குவாரின்றி. சுற்றிவந்த கோயில் காளை.

வயதுவந்த பிறகு அவளுக்கு, முன்போலன்றி, புதிய கட்டு திட்டங்கள் வந்து புகுந்து கொண்டதென்றாலும்—அவர்கள் சந்திப்புக்கு ஊறு எதும் நிகழ்ந்துவிடவில்லை.

அண்டை அண்டை வீடுகள்; கோயில்; குளம்; ஆற்றங்கரை—அதிலும் குக்கிராமம்—காவல் கட்டுகளுக்குத் தப்பி காற்றும், நெருப்பும் ஒன்று சேருவதைத் தடுக்க யாரால்தான் முடியும்?

சாய்ந்து படுத்திருந்தவன்மீது மரத்திலிருந்த ஏதோ எச்சமிட்டது. காக்கையோ—குருவியோ—ஆந்தை தானோ? அதைத் துடைத்தெறிந்துவிட்டுச் சற்றே நகர்ந்துகொண்டான்.

புற்றின்மீது கை பட்டது; அந்த இடத்தில் மண் கொஞ்சம் இடிந்து பொல-பொலவென்று சரிந்தது அந்தப் புற்றிலே பாம்பு ஏதோ இருப்பதாக அந்த மனிதன் சொல்லிப் போனானே? பாம்பையும் காணோம்—தேளையும் காணோம்—

அல்லது அவனை நெருங்கவே அந்தப் பாம்பு பயப்படுகிறதோ என்னவோ?

அண்ணாந்து பார்த்தான்: நிலவு வானத்தின் உச்சிக்கு வந்துவிட்டது.

அவன் வாழ்விலும் இனிமையின் உச்சியை அடைந்த கட்டம் அப்போதுதான்—

அதிகாலையிலே ஆற்றிலே குளிக்க அவள் வந்தாள். அவ்வளவு சீக்கிரமாக எழுந்து யாருமே அதற்குள் ஆற்றங்கரைக்கு வரவும் மாட்டார்கள் அந்த ஊரில்—

அவள் வந்ததுபற்றி அவனுக்கே வியப்பாகத்தானிருந்தது.

"மதுரமா! அதற்குள்ளாகவா குளிக்கவந்துவிட்டாய்?"

"ஆமாம்; நீகூட அதற்குள்ளாகவா எழுந்து வந்துவிட்டாய்?"

"நீ வந்திருப்பாயோ என்று பார்க்கத்தான் வந்தேன்!"

"ஆனால் உன்னைப் பார்க்க நான் வரவில்லை; இன்னும் நேரமான பின்னர் ஆற்றுக்கு வந்தால் நீயும் கூடவே வந்து என்னையே - நூறுபேர் மத்தியில் - விறைக்க விறைக்கப் பார்ப்பாய்—எனக்கு அது ரொம்பக் கஷ்டமாக இருக்குமென்று நினைத்து - உன்னைப் பாராமலிருக்க முன்னதாகவே வந்தேன். நீயும் என்னடா என்றால் இப்போதே என்னைப் பார்க்க வந்துவிட்டாய்! தொந்தரவுதான்!" என்று சொல்லிச் சிரித்தாள்.

அவனும் சிரித்துக்கொண்டே, "ரொம்பசரி; இதிலிருந்தே உன்னிடம் நான் வைத்திருக்கும் ஆசையைத் தெரிந்துகொள். இனியும் நாலு பேருக்கு நடுவில் நான் உன்னைப் பார்க்கக் கூடாது என்றிருந்தால் – இதேபோல் – சீக்கிரமாகவே எழுந்து ஆற்றுக்கு வந்துவிடு. பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன்?" என்றான்.

"சரி; இன்றய போதுக்கு என்னைப் பார்த்துப் பேசித் திருப்தியடைந்துவிட்டாயல்லவா? நான் குளிக்கவேண்டும்; பார்த்துக் கொண்டே எதிரில் நிற்காதே; அந்தப்புறம் போய்விடு."

உடனே அவன் போகத் திரும்பினான். நாலடி நடந்திருப்பான்; அவள் அவனை மீண்டும் அழைத்தாள்.

திரும்பிவந்து நின்றான்.

"தேய்த்துக் குளிக்கச் சோப்புவேண்டும்; டவுனுக்குப்போனால் எனக்கு வாங்கி வருகிறாயா?" என்று கேட்டாள்.

"ஆகட்டும்" என்றான்.

"மத்தியானம் பணம் கொடுக்கிறேன்: ஆனால் உன்னிடம் நான் கேட்டதாக வேறு யாரிடமும் சொல்லிவிடாதே?"

"நீ பணம் கொடுத்து நான் என்ன உனக்கு சோப்பு வாங்கித்தருகிறது? உன் வேலைக்கா

ரனில்லே நான்; ஆனால் உன் அன்பன் - உன் பக்தன் - உனக்கு வேண்டுமென்பதை யெல்லாம் மனம் விட்டு என்னிடம் சொல்லு. நானே சந்தோஷமாக உனக்கு வாங்கித் தருவேன்—''

''ஆனால் பணம்?—'' என்று அவள் மறுபடி குறுக்கிட்டாள்.

''பணமா? உன் அன்பு எனக்குக் கிடைத்தால் போதும்; நினைத்ததையெல்லாம் கொடுக்கும் காமதேனு அதுவே!''

''நிஜமாகவா சொல்லுகிறாய்?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''சத்தியமாக!'' என்று அவன் சொன்னதும் அவள் முகத்தில் தோன்றியது—அதிசயமா அல்லது மலர்ச்சியா என்பதைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை.

பருவத்தோடு அவளிடம் தோன்றிய சில மாறுதல்களையும் அவன் கவனித்தான்.

முன் மாதிரி அவனை 'டா' போட்டு அழைப்பதில்லை. துடுக்காகப் பேசி ஏசுவதில்லை; பல முறைகள் அவனைப் பரிஹாஸம் பண்ணுவது போலே அவள் பேசினாலும் அந்தப் பேச்சிலே நாசுக்கும், நளினமும் இருப்பதாக நினைத்துக் கொண்டான். நாகரிகமற்ற முறையில், மூர்க்கத்தனமாக அவன் பேசி நடந்துகொண்டாலும்—கண்யமான முறையிலே அவற்றை ஏற்றுக்கொண்டோ அல்லது திரஸ்கரித்தோ—உசிதம்போல் அவள் நடந்து கொண்டதாக எண்ணி அவன் மகிழ்ந்தான். படித்த பெண்ணல்லவா?

என்ன இருந்தும் அவனுக்கு ஒரு சந்தேகம்; அதுவும் கடைசி வரையில் தீராத சந்தேகமாகவே தங்கிவிட்டது:

அவளிடம் அவன் வைத்த அன்பு அளவற்றது; எல்லைகாண முடியாதது; ஆழம் அறியவே முடியாதது. அதேபோல் அவனிடம் அவளுக்கு அன்பு இருந்ததோ? அவள் நடந்து கொண்ட விதம் இல்லையென்றே நினைக்கத் தோன்றியது. அவனைப்போல் முழு அன்பில்லாவிட்டாலும் கொஞ்சமாவது—அதில் பாதியாவது—கால்பாகமாவது அவளுக்கு இருந்ததோ? தீர்மானமாக அதையும் சொல்ல முடியவில்லை.

அடிக்கடி தனிமையில் சந்தித்து அவனுடன் பேச அவளும் உடன்பட்டே வந்தாள். ஆசை வெறிகொண்டு அவன் என்ன பிதற்றினாலும் அவள் பதிலுக்குச் சிரிப்பதே வழக்கம்; ஒவ்வொரு சமயம் மௌனமாக அவன் பேச்சை ஏற்றுக்கொள்வது போலவும் தோன்றியது. அநேகமாகத் திரஸ்கரிப்பது போலவே இருந்தாலும்—அத்தகைய திரஸ்காரமும் மதுரமானதாகவே புலப்படும். அன்பின் பெயரிலே அவன் ரகசியமாக அவளுக்கு வாங்கித் தந்த சோப்பு, பௌடர், புஷ்பம் போன்ற பரிசுகளை மலர்ந்த வதனத்துடன் பெற்றுக் கொள்ளவும் செய்வாள்.

என்ன இருந்தாலும் அவளை உள்ளபடி புரிந்துகொள்ள அவனால் முடியவில்லை: அவளைப் புரிந்துகொள்ள அவன் பெரு முயற்சி செய்தான்—ஆனால் வெற்றி கிட்டவில்லை.

உண்மையில் அவளுக்கு அவனைப் பிடிக்கவேயில்லையென்றால்—அவன் முகத்தில்தான் விழிப்பாளோ?

உண்மை வெளிப்படாமலே இருக்கும் வகையில் அவள் அப்படியெல்லாம் வேஷம் போடுகிறாளோ என்றுகூட அவன் ஒவ்வொரு சமயம் நினைத்துக்கொண்டு மாய்ந்ததுண்டு.

படித்த பெண்ணுடன் பழகும் சங்கடத்தைப் பற்றி அப்போதுதான் அவன் ஒருவாறு உணர்ந்துகொண்டான்.

இருளில் துழாவும் அந்த நிலையிலே அதிக நாட்கள் பொறுமையோடிருக்க அவனால் முடியவில்லை.

''ஒன்றுமே புரியாத நிலையில் என்னை வைத்து இப்படி வதைக்கிறாயே, மதுரம்? உன் மனசைத்தான் எனக்குத் திறந்து காட்டிவிடேன்?'' என்று ஒரு நாள் உள்ளத் துடிப்புத் தாங்காமல் அவளிடம் கேட்டுவிட்டான்.

அப்போதும் அவன் கேட்பது புரியாதது போன்ற பாவனையே அவளிடம் புலப்பட்டது: ''என்ன சொல்லச் சொல்லுகிறாய் என்னை?'' என்றாள்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவதில் உனக்கு இஷ்டமா—இல்லையா? ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடு; உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.''

முதலில் ஒரு நிமிஷம் அவள் மலைத்துப் போய் நின்றாள்—உடனே சிரித்தாள்: ''ஏ, அப்பா! அதிகம் கொதி பொறுக்காத நொய் யரிசியைப் போலே குழம்புகிறாயே? இந்த ஒரு நாளும் பொறுத்துக்கொள்; நாளைக்கு நிச்சயமாய்ச் சொல்லி விடுகிறேன்'' என்றாள்.

'என்னதான் படித்திருந்தாலும் பெண்ணல்லவா? சொல்ல வெட்கப்படுகிறாள் போலிருக்கிறது; தைரியத்தை வருவித்துக்கொண்டு

நாளைக்குத்தான் சொல்லட்டுமே?' என்று அவன் அப்போது நினைத்துக்கொண்டான்.

மறுநாள் அவளைப் பார்த்தபோது அவள் சிரித்துக்கொண்டே வந்தாள்.

அவனும் சிரித்துக்கொண்டே பொங்கியெழும் ஆவலுடன் நின்றான்.

இடுப்பில் மடித்துவைத்திருந்த காகிதம் ஒன்றை எடுத்து அவன் எதிரே நீட்டினாள் அவள்; அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "வாய்விட்டுச் சொல்ல வெட்கமாக இருக்கிறது; நீ எனக்குக் கொடுத்த பரிசுகளுக்கெல்லாம் பதிலாக—என் பரிசென்று இதை உனக்குக் கொடுக்கிறேன்; என் மனதை இந்தக் கடிதத்திலே திறந்து காட்டியிருக்கிறேன்; என்ன எழுதியிருக்கிறேனென்பதைத்

தெரிந்துகொள்வதில்தான் உன் புத்திசாலித்தனம் அடங்கியுள்ளது" என்று சொல்லிவிட்டு மேலும் ஒரு கணம்கூட அவனெதிரில் நிற்காமல் ஓடியே போய்விட்டாள்.

அவன் மலைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டான்.

கையில் பிடித்திருந்த அவள் கடிதத்தை உற்று நோக்கி உறுத்தி விழித்தான். எழுத்து வாசனையே சிறிதும் இல்லாதவனுக்கு ஒரு பெண்ணிடமிருந்து கடிதம் - காதல் கடிதம்!

யாருமே பார்த்திராத கடவுளைப்பற்றி-படித்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்கள் கூட அறிந்துகொள்ளும் அளவுக்கு-அவனும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அவள் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாளென்பதுபற்றி - கல்வியறிவென்பதே கடுகளவும் இல்லாத அவனால் எப்படித்தான் அறிந்துகொள்ளமுடியும்?

படிப்பில்லாத பெருங் குறைபற்றி அப்போதுதான் அவன் பூரணமாய் உணர்ந்துகொண்டான்.

அவன் அறிவின்மையைப்பற்றி, அவள், பழைய ரீதியிலே, மீண்டும் இடித்துக் காட்ட முற்பட்டுவிட்டாளோ — என்று ஒரு கணம் அவன் சந்தேகப்பட்டான். அதில் அவள் அதிக ஆனந்தமடைகிறாளா? மனதின் மறுபுறம் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ள மறுத்தது.

அவன் கல்வி அறிவு பெறாத குறையை அவனுக்கு நன்றாக உணர்த்தவே அவள் விழைகிறாள் என்பதாக எண்ணிக்கொண்டான்; அந்தக் குறையை நினைத்து நினைத்து அவளும் சதாசர்வதா ஏங்குகிறாளென்று அவனுக்கும் உணர்த்தவே இப்படிக் கடிதம் எழுதிக் கொடுத்திருப்பாளென்று நினைத்துக்கொண்டு வருந்தினான்.

அதில் என்ன எழுதியிருப்பாள்? எப்படித் தன் மனதைத் திறந்து காட்டியிருப்பாள்? அவள் படித்த பெண்; ஆகவே அழகாகவும் நளினமாகவும், தன் அன்பை வெளிப்படுத்தியிருப்பாள்—அவள் காதல் மொழிகளை அவனே படித்துக்கொண்டு மகிழ அவனுக்குக் கொடுத்துவைக்கவில்லையே? என்ன முட்டாள் தனம்! என்ன முட்டாள் தனம்!

இனியாவது அவன் கல்வியறிவு பெற வேண்டுமென்பதாக அவன் தீர்மானம் செய்துகொண்டான், அவள் சரியானபடி அவனுக்குப் பாடம் கற்பித்தாள்; சுய உணர்வு பெறும் வகையில் அழகாகப் புத்திபுகட்டினாள்; இனி மேலாவது அவன் படிப்பில் கவனம் செலுத்தி, கடைத்தேறவேண்டும்—

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்; முத்து முத்தாக எழுதியிருந்தாள்; ஐந்தாறு வரிகளே காணப்பட்டாலும் கையெழுத்து ரொம்ப அழகாக மிளிர்ந்தது. படித்த பெண் அல்லவா? சுருங்கச் சொல்லி விளங்கவைத்திருப்பாள்.

அந்தக் கடிதத்தைப் பன்முறை முத்தமிட்டுக்கொண்டான்.

விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமே? அதற்குப் படிக்கத் தெரிந்தவன் ஒருவனுடைய உதவியைத்தான் நாடவேண்டும்.

முன்பின் பழக்கமில்லாத அந்நியன் ஒருவனிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டான்.

முதலில் தன் மனதிற்குள்ளாகவே அதையொருமுறை படித்துப் பார்த்துக் கொண்ட அந்த மனிதன் திடீரென்று விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினான்.

"என்னய்யா சிரிக்கிறீர்? என்ன எழுதியிருக்கிறது?"

அந்த மனிதன் மீண்டும் சிரித்தான்; அவனையே பார்த்துக்கொண்டே சிரித்தான்: ரொம்ப வேடிக்கையாக இருக்கு; படிக்கிறேன், கேளும் என்று சொல்லிப் படிக்கலானான்.

"உலகம் கண்டிராத வடிகட்டின மூடம் நீ; மனித சமூகம் முன்னேறும் வேகத்தைக் கொஞ்சம்கூட உணராதவன்; எழுத்து வாசனையே இல்லாதவன்; ஆனால் கல்யாணம் செய்துகொள்ள மட்டும் ஆசைப்படுகிறாய்! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள எவள் தான் சம்மதப்படுவாளென்று நீ நினைக்கிறாய்? கழுதைகூட உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாது. உன்னிடம் கழுத்தை நீட்டுபவளை—ஆயுள் முழுதும் வைத்துக்கொண்டு பராமரிக்கத் தகுந்த யோக்கியதை உன்னிடம் என்ன இருக்கிறது? உன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் வழி முதலில் உனக்குத் தெரியுமா? உன் கல்யாணத்தைப் பற்றிக் கனவிலும் நினைக்காதே. அவ்வளவுக்குப் பொறுப்பற்ற அசடன் நீ."

அவள் எழுதியிருந்தது அதுதான்.

தூய்மை நிறைந்த அவன் அன்புக்குப் பதிலாக அவள் அளித்த பரிசு அதுதான்.

அப்படியென்றால் அவனை வெறும் விளையாட்டுக் கருவியாகத்தான் அதுவரை அவள் கருதி வந்தாளா?

பொழுது போக்கிற்காக மண் பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடும் குழந்தைக்கு

விளையாடுவதற்கு வேருெரு வாய்ப்புக் கிடைத்ததும் மண் பொம்மையை அப்படியே போட்டு விட்டுத் திரும்பிப்பாராமல் போய் விடுமே—அதே போன்ற நிலையில்தான அவளும் இருந்தாள்?

அவள் பேசியதெல்லாம் வெளிவேஷம்தான? நய வஞ்சகி—கிராதகி—படித்த லட்சணமா இது?

அவன் ஆசையனைத்தும் அதே கணத்தில் நஞ்சாக மாறிவிட்டது. வெளிப்பட வழி தேடியபடி அந்த விஷம் அவன் நெஞ்சைத் துளைக்கத் தொடங்கியது.

பெண் வர்க்கத்தையே விஷப் பாம்புகளாக அவன் கருதத் தொடங்கிவிட்டான்.

அதன் பின்னர் அவன் அவளிடம் நடந்து கொண்ட விதம் அவனுக்கே புரியாத ஒரு புதிர், அவனுக்கே வியப்பூட்டிய ஒரு வேடிக்கை—

மீண்டும் ஆற்றங்கரையிலே அவளைச் சந்தித்தான்.

அவனைப் பார்த்து அவள் சிரித்தாள்,

"நீ என் தெய்வம்; நான் உன் பக்தன்" என்ருன் மறுபடியும்.

"கடிதத்தின் விஷயத்தைத் தெரிந்துகொண்டாயா?" என்று அவள் கேட்டாள்.

"என்ன எழுதியிருப்பாயென்று நானே ஊகித்துக்கொண்டேன்; உன் அன்பினல்-எழுத்தறிவில்லாத எனக்குக்கூட, கொஞ்சம் கெட்டிக்காரத்தனம் பிறந்துவிட்டது!"

சொல்லமுடியாத வியப்புடன் அவள் அவனைக் கூர்ந்து நோக்கினள்—"வேறு யாரிடமும் அதைக் காண்பிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"எதற்காக அதை நான் பிறரிடம் காட்டவேண்டும்? நீ எனக்கு மனமுவந்து அளித்த காதல் பரிசல்லவா அது! அதை எனக்குள்ளேயே ஐக்யப்படுத்திக்கொண்டுவிட்டேன்."

அவள் முகத்திலே விவரிக்கமுடியாத வேதனை; எதையோ சொல்லமுடியாத தவிப்பு-உள்ளத்தைப் பிடுங்கியெடுத்த ஏதோ கலக்கம்—

அவள் பட்ட அவஸ்தையை அவன் நன்ருகக் கவனித்தான்; உள்ளூற ஆனந்தப்பட்டான்.

எதையோ மென்று விழுங்கிக் கொண்டு அவள் பேசத் தலைப்பட்டாள்: உன்னைப் பண்ணிக் கொள்ளத்தான் எனக்கும் ஆசை; ஆனல்—என் வீட்டில் சம்மதப்படமாட்டார்களே?—தைபிறந்ததும் எனக்குக் கல்யாணம்; இன்னம் ஒரு மாதம் பாக்கியிருக்கிறது-தேதிகூடக் குறித்துவிட்டார்கள்—என் மனசை—எப்படித்தான் சொல்லுவேன்!—இதைத்தான் என் கடிதத்திலே உனக்குத் தெரிவித்தேன்."

அவளுடைய நெஞ்சுத் துணிவைக் கண்டு அவனே திடுக்கிட்டு விட்டான்! என்ன சாதுர்யமாகப் பொய் சொல்லுகிருள்; வாய் கூசாமலே இப்படி விளாசுகிருளே!

எதிர்நடை போட அவனும் தயாராகி விட்டான்!

"இப்படித்தான் ஏதாவது இருக்குமென்று நானும் ஊகித்துக் கொண்டுவிட்டேன்! இருந்தாலும் நீ யாரைப் பண்ணிக்கொள்ளப் போகிருய்?"

அவள் சற்றே யோசித்தாள்; 'சொல்லுவதா—வேண்டாமா' என்பதுபோலக் கொஞ்சம் தயங்கினள்; அப்புறம்:

"உன்னையில்லை; அந்த மட்டும் நிச்சயமாகி விட்டது. உனக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியது இவ்வளவுதானே?"

"ஆமாம்;—அதனலென்ன? பரவாயில்லை—நீ எனக்குக் கடிதம் கொடுத்தபோதே—'கல்யாணத்தைப்பற்றி இனி சிந்திப்பதேயில்லை' யென்பதாக நானும் உறுதிகொண்டுவிட்டேன்!"

"நிஜமாகவா!" என்று அவள் நம்பமுடியாதவளைப்போலே வினவினள்.

"ஸத்தியமாக!—'பெண்' என்ருலே இப்போது எனக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது!"

"என்னைக்கூடவா?" என்று கேட்டாள்.

"ஒரு சிறிது வித்யாஸம்: நீ கசப்பில் இனிப்பு; இனிப்பிலே கசப்பு!"

"புரியவில்லையே?"

"எனக்கும்தான் உன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை."

"ஸத்தியமாகச் சொல்லுகிறேன். உன்னை எனக்குப் பிடித்தே இருக்கிறது; இப்போது உன்னுடன் இருக்கவே ஆசைப்படுகிறேன்—ஆனல்-அப்புறம் வேருென்றைப்பற்றி நினைத்தால்—உன்னைப்பிடிக்கவில்லை. இந்தக் கணத்தில் உன்னை ரொம்பவும் விரும்புகிறேன்—ஆனல் அடுத்த நிமிஷமே—உன்னிடமுள்ள பல குறைகள் எனக்குப் பிடிக்கவில்லை.—

ஆனால் உன்னை நான் வெறுக்கவேயில்லை. நான் சொல்வதை நம்பு—உன்னை நான் வெறுக்கவில்லை—"

"படித்த பெண்ணல்லவா! நன்றாக ஆராய்ந்து—சீர் தூக்கிப் பார்க்கும் திறமை பெற்றிருக்கிறாய்!—நானோ—படிக்காத முட்டாள்—கண்மூடித்தனமாக—ஒரே நிலையில்—"

திடீரென்று அவள் போக்கே மாறிவிட்டது; புதிதாக எதையோ உணர்ந்துகொண்டு விட்டவளைப்போலே—பேச்சின் சுழல் கதி மாறிவிட்டது.

"உன்னை ஏமாற்றி விட்டேன்; மனமறிந்து பொய்சொல்லி உன்னை மோசம் பண்ணிவிட்டேன்—நான் எழுதித்தந்த அந்தக்கடிதத்தில்— —"

"இனிமேல் அந்தக் கடிதப் பேச்சே வேண்டாம்; மதுரம்! அதில்—என்ன இருந்தாலும்—"

"இல்லை—கேளேன்? — இப்போது ஒளிக்காமல் நான் உள்ளதைச் சொல்லி விடுகிறேன்: அதில் நான் எழுதியிருப்பதை நீ தெரிந்து கொண்டால்—அப்புறம்—"

"நீ என்னிடமே பொய் சொல்லுவாயென்று நான் நம்பவே தயாராக இல்லை—நீ மேலும் மேலும் என்னைச் சோதிக்கிறாய்! அவ்வளவு தான்—உன் அன்பை நான் அறிவேன்—என் அன்பை நீ அறிவாய்—"

"சரி—அப்படித்தானென்றால் நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயார்தானே?" என்று ஆர்வம் பொங்கியெழக்கேட்டாள்.

வெறி பிடித்தவனைப்போலே அவன் சிரித்தான்.

"கல்யாணமா அதைப்பற்றிச் சிந்திக்கவே நான் யோக்கியதையற்றவன்—நீ மட்டும் எங்கேயாவது சௌக்யமாக—ஸந்தோஷமாக—வாழ்க்கை நடத்தினால்—அதுவே எனக்குப் பரம திருப்தி—"

பயந்துபோய் அவள் அவனைப் பார்த்தாள். என்னவோபோல் பேசுகிறாயே? என்மீது உனக்கென்ன கோபம்?"

"கோபமில்லை — குளிக்கத்தானே வந்திருக்கிறாய்?"

"ஆமாம்; அந்தக்கடிதம் கொடுத்ததிலிருந்து —உன்னை மறுபடியும் தனிமையில் சந்தித்து எவ்வளவோ சொல்ல ஆசைப்பட்டேன்: அதனால்தான் நேரத்திலேயே எழுந்து வந்தேன்; ஆனால்—வழக்கம்போல்—நீ வருவாயோ—மாட்டாயோ என்று சந்தேகித்தேன்—"

"நீ இனி என்னைச் சந்திப்பாயோ மாட்டாயோ என்று நான் சந்தேகித்தேன்."

அவள் சிரித்தாள் அவனும் சிரித்தான்

"இன்று இருவரும் சேர்ந்தே ஸ்நானம் செய்யலாமா?" என்று அவளே கேட்டாள்.

"ஆஹா; தண்ணீரில் அதிக நேரம் மூச்சுக் கட்டிக்கொண்டு யார் இருக்கமுடியுமென்று பார்க்கலாமா?" என்று அவன் கேட்டான். அவளும் சம்மதித்தாள்.

விடியற்காலம் ஐந்து மணி சமயமிருக்கும். ஆற்றங்கரையில் அவ்விருவரைத் தவிர வேறு யாருமே இல்லை.

பின் நிலவு பளீரென்று காய்ந்துகொண்டிருந்தது,

எங்கும் நிலவியிருந்த நிசப்தத்தை ஆந்தையின் அலறல் ஊடுருவியது,

"ஆந்தை கத்துகிறது; பயமாயிருக்கிறது; இப்போது மணி என்ன இருக்கும்?" என்று அவள் கேட்டாள்.

"அரை மணியில் விடிந்துவிடும்; அதற்குள் போகவேண்டாமா?" என்று அவன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"போகத்தான் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அவள் நீரில் மூழ்கினாள்.

அவள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவன் மூழ்கியவள் மீண்டும் தண்ணீருக்கு வெளியே தலை தூக்க முடியாதபடி, தன் முழுப் பலத்தையும் கொண்டு அவள் பிடரியை ஒரு கையாலும், முதுகுப் புறத்தை மற்றொரு கையாலும் பிடித்து, விடாப் பிடியாக நீரில் ஆழ்த்திக் கொண்டே நின்றான்.

தண்ணீருக்குள்ளே அவள் மூச்சுவிடமுடியாமல் திணறுவதையுணர்ந்தும் அவன் தன் பிடியைச் சற்றாவது தளர்த்தவேயில்லை. அவள் திமிறினாள்; முடியவில்லை—திணறினாள்—அவன் பிடி தளரவில்லை—

நீரின்மேல் காற்றுக் கொப்புளங்கள் கிளம்பி வெடித்தன.

உள்ளே ஆழ்ந்தவள் அப்புறம் வெளிக்கிளம்பவேயில்லை.

அவளுக்குப் பிரக்ஞை போய்விட்டதை அவன் உணர்ந்த பின்னரும் நீரை விட்டு வெளியே அவளை எடுத்துப் பார்க்க முற்படவில்லை—அப்படியே விட்டுவிட்டுப் போனவன் தான்—

பத்துப்பதினைந்து வருஷங்கள் வரையில் ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல்—எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு — கடைசியிலே வளர்த்த மண்ணிலேயே மீண்டும்கால் வைத்தான்.

எத்தனை வருஷங்கள் கழிந்தால்தானென்ன, ஒரு நாளாவது—ஒருகணமாவது — கடுகளவாவது—அவன் மனம் அமைதி நிலையை அடைந்ததேயில்லை—இனி அடையவும் முடியாது.

செத்தொழிந்த பின்னராவது அவனுக்குச் சாந்தி கிட்டுமோ?

ஆலமரத்தின்மீது மீண்டும் ஆந்தை அலற ஆரம்பித்துவிட்டது.

நிலவு சாய்ந்துவிட்டது — பட்டப்பகலைப் போலே 'சுரீர்' என்று காய்ந்தது—விடியற் காலம் நான்கு மணி சமயமாயிருக்கலாம்.

அதே பின் நிலவு காலம்— அதே வேளை—அதே ஆற்றங்கரை—அதே ஆல மரம்—ஆந்தையின் அதே அலறல்—அதே இடத்தில் தான்—அப்போதே—அவன் அவளைப் 'போக' விடுவித்தான்!

அந்த இடம் அவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.—இருந்தும்—சாந்தியில்லை— சந்தோஷமில்லை—திருப்தியில்லை—

ஓயாத நெஞ்சக் கொதிப்பே அவன் வாழ்வு—கொடூரம் மிக்க விஷச் சுழல்களே அவன் நினைவுகள்—

அத்தகைய ஆலகால விஷத்தை உள்ளே வைத்து மூடிக்கொண்டு அவன் எங்கோ போனால்தான் என்ன! என்ன செய்தால்தான் என்ன?

உள்ளேயுள்ள பாம்பு வெளியேறியாக வேண்டும்; அப்போதுதான் அவன் 'அடங்க' முடியும்; சதாசர்வதா உள்ளிருந்தபடியே அவனைக் கொத்திக்கொத்தி விஷவேகத்தை அதிகரிக்கச் செய்துகொண்டேயுள்ள பாம்பிருக்க, புற்றுப் பாம்பிற்கு அவன் ஏன் பயப்பட வேண்டும்?

அவனுக்குள்ளே கொடிய விஷப் பாம்பு இருப்பது உண்மை—அந்த மனிதன் சொன்னது போல் அந்தப் புற்றுக்குள்ளேயும் பாம்பு இருக்கிறதா—இல்லையா—என்று பார்த்துவிடவேண்டும்—என்று அவனுக்குத் தோன்றியது.

'பாம்பு பிடுங்க!' வென்று பலர் அவனைச் சபித்திருக்கிறார்கள்; புற்றின் மேலேயே இருந்தும்கூட அந்தச்சாபம் பலிக்கவில்லையே!

பரபரப்புடன் அவன் எழுந்தான்.

அருகில் நின்ற புற்றைக் கண்மூடித்தனமாக இடித்துப் பெயர்த்துச் சரித்துக் கலைக்கத் தொடங்கிவிட்டான் — — —

* * *

'பல பல' வென்று பொழுது புலர்ந்தது.

மாலையில் மண்வெட்டியுடன் அந்த வழியாகப் போன அதே மனிதன் காலையில் அதே மண்வெட்டியுடன் அதே வழியில் மறுபடியும் வந்துகொண்டிருந்தான்.

ஆலமரத்தடியைக் கவனித்த அவன் அப்படியே சிலையாகச் சமைந்துவிட்டான்.

அந்தப் 'பயித்தியம்' கலைந்து கிடந்த புற்றின் பக்கத்திலே—நீலம் பாரித்துப்போய்—மாண்டு கிடந்தது.

அவனுக்குச் சிறிது தூரத்திலே முரட்டுப் பாம்பொன்று அடிபட்டுக் கடிபட்டுத் துண்டாடப்பட்டுச் செத்துக்கிடந்தது. ●

காவேரி ஏஜண்டுகள்

தஞ்சாவூர் :	பம்பாய் :	டில்லி :
M. கருப்பண்ணன்	G. சாரநாதன்	மதராஸ் கன்ஸர்ன்ஸ்
மானோஜியப்பா தெரு	9/65 சரஸ்வத்காலனி	14, நூர்ஜஹான் ரோடு
தஞ்சாவூர்	மட்டுங்கா (G. I. P.)	புதுடெல்லி

அழகின் தோல்வி

முகவை ஜி. எஸ். மணியம்

பாரசீகத்தின் நைஜாப்பூர். காலை நேரம். எளியதொரு வீடு. அதன் எதிரேயுள்ள ஈச்சமரத்தின் கீழ் அமர்ந்து, ஈரானின் ஈடு இணையற்ற கவிஞர், ஆத்மஞானி, வைத்தியபூபதி, உமர்கய்யாம் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார். "கங்குல் கழிந்தது. கதிரெழுந்தது. வாழ்வு ஒரு மதுக்கிண்ணம். அது வற்றி வறண்டுபோகுமுன்பு, களித்துக் கூத்தாடுங்கள். எங்கிருந்தோ வந்தோம். இங்கு இருப்போம் சில நாழிகை. தேகம் அலுத்துச் சென்றால் மீண்டும் திருப்பி வருவோமென்பதில்லை. ஆசையால், நண்பனே, வா. கவலையென்னும்வாடைக்காலப்போர்வையினைக் களைந்து, வசந்தக் கனலில் வீசியெறி. காலமோ கழிவது, அழிவது ஆகவே, காலத்தைக் கழிப்புடன் களி. மது, மாது, கவிதை இவைதான் வாழ்க்கை." அவர் பாடிய பாட்டின் கருத்து இது.

அதோ! அண்மையிலே ஒரு ஒட்டகச் சாரை. ஒட்டகமொன்றின் மீது அமைக்கப்பட்டுள்ள அம்பாரியில் அலங்காரமாக அமர்ந்திருக்கும் அம்மங்கை நல்லாள் ஈரானின் கட்டழகி, மெஹ்ரு. பூக்களை வருடி, புதுமணமேறி, தண்

புனல் தழுவும் தென்றலைப்போல, கய்யா மின் அமுத கானம், காற்றிலே மிதந்து அவள் செவிகளிலே புகுந்தது. அரிய கருத்த மைந்த அழகுக்கவிதை. குரலினிமையோ தித் திக்கும் தேன். மெஹ்ரு மனமகிழ்ந்து தோழி கலீமாவை அருகில் அழைத்தாள்.

மெஹ்ரு: "கலீமா, விண்ணிலே ஒலிக்கும் அக் கீதத்தைக் கேட்டாயா? அவ்வினிய இசையை எழுப்பும் சிவன் யார்? நீ போய் அழைத்துவா"

இசை இழையும் திக்கு நோக்கி விரைந்தாள் கலீமா. இசையிலே தம்மைமறந்திருந்த உமர் கய்யாமைக் கண்டு வணங்கினுள்.

"ஐயா."

"பெண்ணே, யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?"

"என் பெயர் கலீமா. இந்நாட்டின் அழகு ராணி மெஹ்ருவின் அந்தரங்கத் தோழி. நைஜாப்பூர் அதிபதி கியாஸ்பெக்கின் விருந் தாளியாக வருகிருள் எங்கள் ராணி. வரும் வழியில் தங்கள் தெய்வகானத்தைக் கேட்டார் கள். அழைத்துவர என்னை அனுப்பினுர்கள்."

"என்னை உன் தலைவி அழைப்பது ஏன்?"

"காரணம், தங்களைப் பார்த்துத் தங்கள் பாடலைக் கேட்கத்தான்."

"அம்மா, வர இயலாமைக்கு வருந்துகிறேன். அல்லாவைத்தவிர வேறு யாருக்கும் அடிபணி வதில்லை நான். அல்லாவின் புகழ் பாடுவேனே தவிர, பணம் படைத்தோரின் பவிசைப்பாட வல்லேனல்லன்."

"அரசர் பலர் எங்கள் தேவியாரின் கடைக் கண் நோக்குக்குக் கற்பாந்த காலம் காத்துக் கிடக்கச் சித்தமாயிருக்கும்போது தாங்கள் ...."

"நான் அரசனல்லவே, அழகுக்கு அடிமை யாக."

"அழகான மலரை அடுத்து, எடுத்து, அனுபவிப்பதுதானே மனிதவியல்பு."

"ஆம். ஆனுல், மலரைச் செடியிலிருந்து பறித்துத்தான் நுகரவேண்டுமென்பதில்லை. அண்மையிலிருந்து அழகை அனுபவிக்க முடி யும்."

"சரி. கடைசியாக எங்கள் தலைவிக்குத் தாங்கள் தரும் விடை?"

"'வர இயலாமைக்கு வருந்துகிறேன்' என்பதுவே. போய் வா, அம்மா"

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு தெப்பக்குளம் போஸ்ட்.

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது !

S. 147-50 TM

கலீமா தனியாகத் திரும்பியதைக் கண்ட மெஹ்ரூவின் நெஞ்சம் வெதும்பியது. ஏன்? கய்யாமின் கவித்திறன் கண்டு, அவளுக்கு அவர்மீது அழியாத அன்பு ஏற்பட்டுவிட்டது.

"கலீமா, எங்கே அந்த இன்னிசையாளன்?"

"வர மறுத்துவிட்டார். கடவுள் பித்தனே யன்றி, கலைப்பித்தனல்லவம்மா அவர்"

"என் நெஞ்சை அள்ளும் அந்த இனிய இசை இனி என்றென்றைக்கும் என் காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கும். அந்த இசையரசு யார்?"

"உமர்கய்யாம் என்பது அவர் திரு நாமம். இந்த நாட்டு மக்களின் கவிஞன். வான சாஸ்திரி. வைத்தியருங்கூட."

"அழகிலும் நிலைமையிலும் நிகரில்லாத என் வேண்டுகோளை நிராகரித்துவிட்டார், கய்யாம். பார்க்கலாம்."

* * *

கியாஸ்பெக், மெஹ்ரூவையும் அவள் பரிவாரத்தையும் இன்சொல் கூறி வரவேற்றான். அவன் மெஹ்ரூவின் அழகைக்கண்டு, அவள்மீது அடங்காத காதல்கொண்டான். மெஹ்ரூ நைஜாப்பூர் வந்த அன்று இரவு, மெஹ்ருவின் நாட்டியக்கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்று இரவு. அரங்கத்திலே ஆடிய அவளது ஆடல் முதலில் சோபிக்கவில்லை. அவளுடைய கண்கள் சபையோருள் எவரையோ தேடுவதுபோலத் துருவித் துருவிப் பார்த்தனவென்பது, கியாஸ் பெக்குக்கு நன்ருகத் தெரியும். சில நேரம் கழித்து வந்தமர்ந்த உமர்கய்யாமைக் கண்டவுடன் மெஹ்ரூவின் கண்கள் பிரகாசமடைந்தன

SANJEEVI

வென்பதையும் அதிபன் அறிவான். உமர்கய்யாமின் பாடல் ஒன்றை, அற்புதமாகப் பாடி அபிநயம் பிடித்தாள். உமர்கய்யாம் தம் கையிலிருந்த ஜபமாலையைப் பரிசாக அவளுக்குத் தந்தார். "மெஹ்ரூ கய்யாமை நேசிக்கிருள்" என்று கண்டான் கியாஸ்பெக். கய்யாமை ஒழித்துவிடத் துணிவுகொண்டான்.

மற்றொரு நாள் இரவு மெஹ்ரூ, தந்திரமாக. உமர்கய்யாமைத் தன்னிருப்பிடத்திற்கு அழைத்துவர ஒரு உபாயம் செய்தாள், கலீமா கய்யாமிடம் சென்று, அவள் பாட்டிக்குச் சுரமென்று கூறி அவரை அழைத்து வரவேண்டியது. இதுவே அந்த உபாயம்.

கலீமா கய்யாமிடம் செய்தியைக் கூறியவுடன், அவர் கலீமாவுடன் மெஹ்ரூவின் உறைவிடம் சேர்ந்தார். தலையிலிருந்து கால் வரை போர்த்திக்கொண்டு படுத்திருந்த ஒருவரை நோயாளியென, கலீமா கய்யாமிடம் காட்டினுள். கய்யாம் நோயாளியின் கை நாடியைப் பரிசோதிக்கும்போது கலீமா அறையை விட்டு நழுவி விட்டாள். திடீரெனப் போர்வையைக் களைந்தெறிந்துவிட்டு மெஹ்ரூ கட்டிலின் மீது இருப்பதைக்கண்டவுடன் கய்யாம் சிறிது திடுக்கிட்டார். இருந்தும் சமாளித்துக்கொண்டார்.

"அம்மா, இதெல்லாம் என்ன? ஒன்றும் புரியவில்லையே."

"கவிஞர் ஒருவருக்குக் காதலின் தன்மை தெரியவில்லையென்றால், அது விந்தையினும் விந்தையே."

"அப்படியென்றால்..........."

"மங்கையொருத்தி தன் மனதிற்கிசைந்த காதலனிடம், தன் மனதை வெளிப்படையாகத் தெரிவிக்கிருள். ஆனால் அவர் அதை அறியாததுபோல் பாசாங்கு செய்தால்........."

"அறிந்தேன். என்மீது உனக்குள்ள காதல் வியர்த்தமே. எனக்குக் காதலின் தன்மை தெரியும். எனக்கும் காதலி உண்டு. கவிதை, என் நெஞ்சத்திலே நிரந்தரமாக உலவும் அழகுக்கன்னி. கவிதைப் பெண்ணைக் காதலித்துக் கடிமணம் செய்தபின், வேறெந்தப் பெண்ணுக்கும் என் இதயத்திலே இடமேது?"

"ஒரு பெண்ணின் காதலை ஒறுப்பது பாவமல்லவா?"

"ஆம், அது உண்மை. அப்பெண் காதலிக்கும் ஆண்மகனுக்கு ஏற்கனவே ஒரு காதலி இருக்கும்போது, அப்புதிய காதலை ஒறுக்கத்தான் வேண்டும்."

"........................."

"மெஹ்ரூ, கேள், இந்த நிலவுலகத்திலே உண்மைக் காதலர்களைக் காண்பது அரிது. கண்ணுக்கு அழகாக, மனதிற்கிசைந்ததாக ஒரு பொருளைக் கண்டவுடன் அப்பொருளை இச்சிப்பதே காதல். ஆனால், பெரும்பாலோர், காமத்தை, "காதல்" எனத் தவறுதலாக அழைக்கிறார்கள். நான் காதலுக்கு, ஒரு பெண்ணின் அழகுக்கு அடிமையல்ல."

"ஒரே ஒரு வேண்டுகோள்."

"சொல் பார்ப்போம்."

"நான் உங்களுக்கு முன் நடனமாடுகிறேன். அதைத் தாங்கள் கண்ணுறவேண்டும். இதையாவது ஒப்புக்கொள்ளுவீர்களா?"

"ஆகட்டும், நீ நடனமாடுவதை நான் பார்த்தாகவேண்டுமென்பது உன் அவாவானல் நான் மறுப்பதற்கில்லை."

உமர்கய்யாம் ஆசனமொன்றில் அமர்ந்தார். மெஹ்ரூ, அழகுத் தெய்வமெனும்படியாக அலங்கரித்து, கய்யாமின் முன்பாக நடனமாடினுள். அவள் தன் ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் தன் காதலைக் காண்பித்தாள். அவள் அங்கங்களிலே பொங்கிக் கிடந்த அழகு, உமரின் மனத்தில் எவ்வித உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை. புழுவென நெளிந்த அவள் உடலின் அழகு, நெஞ்சை ஈர்க்கும்படியாக இருந்தது. ஆனால், கய்யாமின் பரிசுத்தமான மன உறுதியானது, அவளுடைய பிரயத்தனத்தை வியர்த்தமாக்கி விட்டது. எனவே, தம் வாக்குப்போல மனமும் பரிசுத்தமானது என்பதை அவளுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காக எதிரே எரிந்து கொண்டிருந்த விளக்கில் கையை நீட்டினார். கை கரிந்தது. இதைக் கண்டாள் மெஹ்ரூ. அவளுடைய காதல் பக்தியாக மாறியது. அவள் அவருடைய கால்களிலே வீழ்ந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினாள். பெருந்தன்மையுள்ள கய்யாம் அவளை மன்னித்து விட்டார். கய்யாம் வீடு திரும்பும் சமயம் கியாஸ்பெக் அங்கு வந்தான். கய்யாமை வாயிலிலேயே சந்தித்தான். மெஹ்ரூவின் அந்தப்புரத்திலே, அதிலும் அர்த்தராத்திரியில் கய்யாம் என்றவுடன் அவனுள்ளம் கொதித்தது. கோபம் தணலெனப் பொங்கியது. கய்யாம் வீடு திரும்பினார். கியாஸ்பெக் நேராக மெஹ்ரூவினிடம் சென்றான்.

"மெஹ்ரூ, கய்யாம் இங்கு வந்த காரணம்."

"காரணம் சொல்வதற்கில்லை. அது என் தனிப்பட்ட வியவகாரம்."

"அர்த்த ராத்திரியில் ஆடவன் ஒருவனோடு தனியாக உரையாடுவது—?"

"எனக்கு விருப்பமான எவருடனும், எங்கும், எந்நேரத்திலும் உரையாட எனக்கு உரிமையுண்டு. அதை மறுக்க யாராலும் முடியாது."

"என்ன மமதையான பேச்சு? அழகாக இருப்பதால்தானே உனக்கு ஆணவம்? இவ்வழகு, அழிந்துபட்டால், ஏழைக் கவிஞன் கய்யாம்கூட உன்னை விரும்பமாட்டான். அழகோடு உன் ஆணவமும் அழிந்துபோகும். அழகு பொலியும் உன் முகத்தைக் குரூரப்படுத்த எவ்வளவுநேரம் பிடிக்கும்?" எனச் சொல்லிக்கொண்டே, கியாஸ்பெக், சமீபத்தில் எரிந்துகொண்டிருந்த திவட்டியொன்றை எடுத்து அவளுடைய முகத்தின்மீது நீட்டினன். பூரணச் சந்திரன் என விளங்கின மெஹ்ரூவின் முகம் கருமேகமென ஆயிற்று. முகத்தில் ஏற்பட்ட வெந்த புண்களின் வேதனை பொறுக்க முடியாமல் கதறினாள். கண்ணாடியில் தன் வதனத்தைக் கண்டு வருந்தினாள். "அழகு நிலையாதது, வாலிபம், இளமை வந்த விநாடியே போய்விடும். வாழ்க்கை, வானவில்லின் வர்ண ஜாலத்தைக்கொண்டது" என்ற கய்யாமின் வாக்கு அவள் நெஞ்சுக்கு ஆறுதல் தந்தது. ஆடம்பரமான வாழ்க்கையை வெறுத்தாள். செல்வத்தை நஞ்சென எண்ணினாள். கியாஸ்பெக்கின் மாளிகையைவிட்டு வெளியேறி, கய்யாமிடம் அடைக்கலம் புகுந்தாள். கய்யாமின் இரக்கச் சித்தம் அவளை அணைத்துக்கொண்டது. அன்று முதல் அவள் கய்யாமின் ஊழியக்காரியானாள்.

மெஹ்ரூ, கய்யாமுக்குத் தொண்டு செய்துகொண்டிருந்தாள், மனைவியென்ற முறையிலல்ல, மகளென்ற முறையில். காமவெறி பிடித்த கியாஸ்பெக்குக்கு, மெஹ்ரூவின் போக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

மெஹ்ரூவின் முகத்திலேற்பட்ட தீப்புண்களின் உபாதை அதிகமாகி, அவள் படுக்கையில் கிடக்க நேர்ந்தது. கய்யாம், தம் வைத்திய நிலையத்திலே, இரவுபகலாக ஆராய்ந்து, எந்த நோயையும் நொடியில் போக்கும் அமிர்தத்தைக் கண்டறிந்தார். அமிர்தம் கொண்ட மட்பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு தம் ஈடு இணையற்ற வெற்றியை நினைத்துச் சிரித்தார், களி மிகுதியாலே. மட்கலயம் படீரென வெடித்து அமிர்தம் தரையிலே வழிந்தோடியது. அப்பொழுது கய்யாம் அது தம் மமதைக்குகந்த வெகுமதி என எண்ணி, "அல்லாவே, என்னை மன்னித்துவிடு." என ஈசனிடம் முறையிட்டார். அதே நேரத்தில், கியாஸ்பெக்கினல் தூண்டப்பட்ட பல காலிகள் கய்யாமைக் கல்லால் அடித்துக் காயப்படுத்தியதுடன் அவர் வைத்திய நிலையத்திற்கும் தீயிட்டார்கள். கய்யாமின் வைத்திய நிலையத்திற்குப் பக்கத்திலிருந்த வீட்டிலொன்றில் படுக்கையில் கிடந்தாள் மெஹ்ரூ. எரிந்துகொண்டிருந்த வைத்திய நிலையத்திலிருந்து வெளிக்கிளம்பிய புகை வழிந்தோடிய அமிர்தத்தின் தன்மையைக்கொண்டு, மெஹ்ரூவின் தீப்புண்களின் மீது மோதும்போது அப்புண்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொளிந்தன. கய்யாமும் மெஹ்ரூவும் அல்லாவிற்கு அஞ்சலி செய்தார்கள். கியாஸ்பெக்கினுடைய சீற்றம் இன்னும் அடங்கியபாடில்லை. கய்யாமை நாடு கடத்தினன் கியாஸ்பெக்.

கய்யாம், மெஹ்ரூ, அவர் சீடர் அன்வர் மூவரும் பற்பல இடங்களுக்கும் சென்றார்கள். ஒரு நாள் ஸல்ஜிக்கி அரசாங்கத்தின் பிரதம மந்திரி முகம்மதுகான் என்பவன் வேட்டையாடச் சென்றான். அவன் வேட்டை முடிந்து, கூடாரமடித்து இளைப்பாறினன். அப்பொழுது கய்யாமின் பாடலொன்றைப் பாடிக்கொண்டே பிச்சையெடுத்து வந்தாள் மெஹ்ரூ. கய்யாமின் பாடலைக் கேட்டுக் களிப்படைந்த முகம்மதுகான், மெஹ்ரூவை அழைத்து வருமாறு தன் வேலைக்காரர்களுக்குப் பணித்தான். மெஹ்ரூ, அவனிடம் கய்யாமின் நிலையை விவரமாகக் கூறினாள். உடனே கான் கய்யாமை நேரில் கண்டு, அவருக்கு எவ்வித உதவியையும் செய்யத் தான் சித்தன் என்று சொன்னான். அவனுடைய உதவியைக்கொண்டு அவனுடைய நாட்டிலேயே கய்யாம் ஒரு சத்திரத்தைக் கட்டினார். அங்கு ஏழைகளுக்கு உதவியும், பிணியாளருக்குப் பிணி நீக்கியும் பணி செய்தார் கய்யாம்.

கியாஸ்பெக், கய்யாமை அங்கும் நிம்மதியாக இருக்கவிடவில்லை. அரசாங்கக் கைதியொருவன், கியாஸ்பெக்கின் சிறையை விட்டுத் தப்பிக் குதிரையிலேறிச் சென்றான். அவனைக் கியாஸ்பெக்கும் அவன் ஆட்களும் துரத்தினார்கள். அவர்களில் ஒருவன் எய்த அம்பு ஒன்று அக் கைதியின் முதுகில் பாய்ந்தது. ஆனாலும், அவன் தன் குதிரையைக் காற்றினும் கடிதெனச் செலுத்திக் கடைசியில் கய்யாமின் வீடடைந்தான். "அபயம்" என அலறிய அவனுக்குக் கய்யாம் அபயமளித்தார். அவனுடைய காயத்திற்கும் மருந்திட்டுச் சிகிச்சை செய்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம், கய்யாமின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்த கய்யாம், கியாஸ்பெக்கையும் அவனுடைய ஆட்களையும் கண்டார். அரசாங்கக் குற்றவாளிக்கு அபயம் தருவது ராஜத்துரோகம். ஆகவே, கய்யாம் கைதுசெய்யப்பட்டார்.

ஸல்ஜீக்கி மன்னனது சபையிலே, கய்யாம் தம் செயலை ஒப்புக்கொண்டார். மன்னர், கய்யாமைத் திர விசாரித்துத் தக்க தண்டனை அளிக்குமாறு முகம்மதுகானுக்குக் கட்டளை பிறப்பித்தார்.

முகம்மதுகான் அனலில் பட்ட புழுவென நெளிந்தார். ஊருக்கு உழைத்த உத்தமர் கய்யாமைத் தண்டிக்கவேண்டியிருக்கிறதே என மனம் புழுங்குவார் ஒரு கணம். நீதியின் பெயருக்குக் களங்கம் வராமல் காக்கவேண்டியது காவலனின் கடமையென்று நினைப்பார் மறு கணம்.

முகம்மதுகான், நீதிபதி என்ற முறையில், நீதி மன்றத்தில் கய்யாமை விசாரணை செய்தார். கய்யாம், அரசாங்கக் குற்றவாளிக்கு அடைக்கலந் தந்ததுடன், மறைத்தும் வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதியின் நேர்மையின்படி கய்யாம் மரணதண்டனை விதிக்கப்பட்டார். அதைக்கேட்ட கய்யாமின் உதடுகளில் அரும்பிய புன்னகை, அவருடைய அச்சமின்மையைத் தெளிவுறத் தெரிவித்தது. முகம்மதுகான், கய்யாமின் முடிவுகண்டு வருந்தினுர். வருந்திப்பயன், நீதி நிர்ப்பந்திக்கும்போது?

நிற்க. ஸல்ஜீக்கி மன்னன், தன்னந்தனியாக, குதிரையின் மீது அமர்ந்தவாறே, பாலைவனச்சோலையொன்றிலிருந்து, தூரத்திலே வியாபார நிமித்தம் செல்லும் ஒட்டகச் சாரையைக் கண்டு களித்துக்கொண்டிருந்தார். திடீரெனச் சீறி எழுந்தது ஒரு புயல் காற்று. பாலைவனச் சோலையிலிருந்த ஈச்சமரம் ஒன்றின் ஒடிந்த கிளை மன்னனின் தலையில் மோதியது. மன்னன் மயங்கிக் கீழே விழுந்தார். காற்று ஒடுங்கியதும், காயமுற்றுக் கிடந்த மன்னவனைக் கய்யாமின் வைத்திய நிலையத்திற்குக் கொண்டு சென்றுர்கள். 'மன்னர்' என எவரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அன்வர் மன்னனுக்குச் சிகிச்சை செய்தான். மன்னனும் சிறிது குணமடைந்தார். அந்த நேரத்தில், கய்யாமுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தி நோயாளிகளின் செவிகளுக்கு எட்டியது. அவர்கள் நெஞ்சம் கொதித்துக் குமுறினுர்கள். மன்னன், கய்யாமின்மீது மக்கள் கொண்டிருந்த பேரன்பைக் கண்டார். கய்யாமை மரணத்திலிருந்து தப்புவிக்க எண்ணங்கொண்டார். மன்னன். தமக்கு ஒரு குதிரை அளிக்கப்படுமானுல், கய்யாம் காப்பாற்றப்பட முடியும் எனக்கூறினுர். குதிரையும் கொண்டுவரப்பட்டது. மன்னன் குதிரை மீது அமர்ந்து, காற்று எனக் கடிது விரைந்தார் தூக்கு மேடை நோக்கி. பிறரும் பின் தொடர்ந்தனர்.

தூக்கு மேடையில் கய்யாம் நிற்கிருர். அவர் அல்லாவைப் பிரார்த்திக்கிருர். பின்பு கழுத்திலே தூக்குக் கயிறு மாட்டப்படுகிறது. இக் காட்சியைக் கண்ணுறும் மாந்தரெல்லாரும் அசைவற்று இருக்கிருர்கள். தூக்குக் கயிற்றை இழுக்குமாறு கட்டளையிடப்படுகிறது. கொலையாளியும் அதோ இழுக்கப் போகிருன் கயிற்றை. இன்னும் ஒரு விநாடி. கய்யாமின் உடல் தூக்குக் கயிற்றில் ஊசலாடப்போகிறது. அதென்ன பேரிரைச்சல்! "நிறுத்துங்கள்," இது மன்னனின் கட்டளை. மன்னன் தூக்கு மேடையை அணுகி, கய்யாமை மார்புறத் தழுவினுர். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. கியாஸ்பெக்கைத் தண்டிக்க முனைகிருர் மன்னன். கய்யாம் தடுத்துக் கூறுகிருர், "கியாஸ்பெக்கை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் ஒன்றும் அறியாதவர். வல்லான் வகுத்த வழியை மாற்ற வல்லவன் எவரேனும் உண்டா? இல்லை, அனைவருக்கும் அல்லாவின் அருள் கிட்டட்டும்."

கியாஸ்பெக், தனது அடாத செயலை உணர்ந்து கய்யாமின் பாதங்களில் வீழ்ந்து தன்னை மன்னித்து விடுமாறு வேண்டினுன். கய்யாம் அவனை அள்ளி எடுத்து, மார்போடணைத்துக்கொண்டு, "அன்பனே, யார் யாரை மன்னிப்பது? தவறுவது மனித இயல்பு. அநீதி இருக்குமிடத்திலேதான் நீதி பிறக்கும். கடந்துபோன சம்பவங்களை மறந்துவிடு. இனி யாவது நேர்மையாக வாழ்ந்திரு" என்றுர்.

ஸல்ஜீக்கி மன்னன் கய்யாமைத் தம்மிடம் இருக்குமாறு வேண்டினுர். கய்யாம் சொன்னுர்: "எனக்கு இதுவரை புகலிடம் தந்த இந்த அரசு நீடூழி வாழட்டும். நீதி தவருத முகம்மதுகானை மந்திரியாக உடைய உனக்கு எவ்வித தீங்கும் நேராது. என் சொந்த இடத்திற்குப் போகவே விரும்புகிறேன். ஆகையால் எனக்கு அன்புடன் விடை கொடுத்தனுப்பு. அனைவருக்கும் அல்லாவின் அருள் கிடைக்கட்டும்."

நைஜாப்பூரை நோக்கி ஒரு ஒட்டகச்சாரைப் புறப்பட்டுச் செல்கிறது. கய்யாம் ஒரு ஒட்டகத்தின் மீதமர்ந்து இனிமையாகப் பாடுகிருர், மற்ருெரு ஒட்டகத்தில் அமர்ந்திருந்த மெஹ்ரூ, அந்த இன்னிசையில் மெய்மறந்திருக்கிருள். வழியனுப்பிய ஸல்ஜீக்கி மன்னன், முகம்மதுகான், பிறர் கண்களில் நீர் நிறைந்தது. ஏன்? ஒருவேளை அது ஆனந்தக் கண்ணீரோ? ●

காலஞ்சென்ற பெர்தௌசி

என். சுப்பிரமணியம்

கவிஞர் பெர்தௌசி, தோட்டத்தில் அதிக நேரம் உலாவிக்கொண்டிருந்த காரணத்தால் அவருக்குக் குளிர்காய்ச்சல் இருப்பதாக வதந்தி பரவிற்று. காரணம் அரசாங்க கவிஞர்! வயதோ 95. வைத்திய சிரோமணிகள் பறந்தார்கள். வாய் வார்த்தையாகப் பரவி, அச்சிலும்அவர் அசௌக்கியம் இடம் பெற்றது, மனிதருள் சிறந்தவரும், கடவுளுக்கு அடுத்த படியிலுமுள்ள கவிஞர்பிரான் தேக நிலைமை கவலைக்கு இடமாயிற்று. அவரைச் சாகாவரம் பெற்ற மகான் என்றே மக்கள் நம்பி இருந்தாலும், பெர்தௌசி தாம் என்றாவது சாகப்போவதாக அடிக்கடி சொல்லுவார்.

மூன்றுநாட்கள் அவர் படுக்கையில் கிடந்தார். ராஜாங்க கவிகளில் பதினாலு பெயர், அவர் மரணத்தைக் கருமசிரத்தையாக எதிர்பார்த்தார்கள். அவர்கள் மனம் பட்டபாடு சொல்லத் தரமன்று. அவ்வப்போதுள்ள நிலைமை குறித்து ரகஸிய தூதுவர்கள் மூலம் கவிஞர்கள் தகவல் அறிய முயற்சி எடுத்தார்கள். எந்த விநாடியும் எப்படி இருக்கிறது என்றறிய உலக உள்ளங்கள் துடித்தன. பணத்தாசை பிடித்த ஊர் ரகஸிய உளவாளிகள் உண்மையை வெளியே சொல்லாமற்போகவே, பெர்தௌசி மாண்டார் என்று தெருவிலே சின்னஞ்சிறு துண்டுப் பிரசுரங்கள் விழுந்தன. இந்தப் பிரசுரங்கள் மணிக்கு மணி இப்போதுதான் மரித்தார் என்று புற்றீசல்போலப் புறப்பட்டன. இப்படி அடிக்கடி கவிஞர் பெர்தௌசி சாவதைக் கண்டு மக்களுக்கு அவர்மீது ஆத்திரம் பொங்க ஆரம்பித்தது. செத்துக்கொண்டிருந்த கவிஞர்மீது பலருடைய ஏச்சுகள் வந்துவிழுந்தன.

ஆனாலும் அவர் பதினாலாவது நாள்தான் மண்ணுலகைவிட்டு விண்ணுலகு அடைய முடிந்தது. ரகஸிய தூதுவர்கள் வாய்விட்டு, பெர்தௌசி இறந்தார் என்று சொல்ல, எங்கும் அவர் சாவு நிமிஷத்தில் பரவிற்று. இதைக் கேட்ட மக்களும் முக்கியமாகப் பதினாலு கவிஞர்களும் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டனர்.

ராஜாங்க கவிஞர் ஸ்தானம் யாருக்குக் கிடைக்குமென ஹேஷ்யங்கள் எழுந்தன.

2

காலஞ்சென்ற கவிஞர்பிரானுக்கு இதுவரை யாருக்குமே நடக்காதவண்ணம் விமரிசையான முறையில் பிரேத அடக்கம் நடத்த விழைந்தார்கள். ராஜா, அலீ...ரீதா, பிரகடனம் விடுத்தார். பாக்தாத் நகருக்கு எல்லா ராஜதானிகளிலிருந்தும் பிரமுகர்கள் வந்துசேர வேண்டியிருப்பதால் ஏழுநாட்கள் சென்ற பின்னரே பிரேத அடக்கமென அறிக்கை விடுத்

தார். ராஜ அறிக்கை பரவிற்று; காற்றெனப் பறந்தது. கவிஞர் உடலம் நொந்து போகாமல் இருக்கவேண்டிய வாசனைத் திரவியங்கள் எண்ணெய்கள் பூசி, பாதுகாக்கவும் முயற்சிகள் நடந்தன. ஆபரணங்கள் பூட்டினர்கள். தங்கத்தால் ராஜா உத்தரவுபடி சோடனைகள் செய்தார்கள்.

பிரதம மந்திரிகள், யுத்த தந்திரிகள், தளகர்த்தர்கள், பிரமுகர்கள் எல்லோரும் அந்தப் பிரேதத்தைச் சுற்றி அலங்காரமாகவந்து குழுமினர்கள். பிரிந்தார்கள். புஷ்பங்கள் மலைமலையாகத் தேசத்தில் பல பாகங்களிலிருந்தும் அந்த இடத்திற்கு வந்து குவிந்தன. சங்கங்கள், சமாஜங்கள், மன்றங்கள், சுகாதாரப் படைகள், பேச்சாளர்கள், பூச்சி சொல்லிகள் இந்த ரீதியில் யார் யாரோ பாக்தாத் நகரத்தை மொய்த்தார்கள். ஒவ்வொரு சங்கத்தின் தலைவர், உப தலைவர்கள், அவர்கள் காரியதரிசிகள், உப சிப்பந்திகள் சகிதம் பிரபலஸ்தர்கள் அங்கங்கே வந்து தங்கினர்கள். விடுதிகளிலே சாப்பாடும் மதுவும் கிராக்கிப் பொருள் ஆயின. யார் யார் எந்த எந்தச் சங்கம் கவிஞருக்கு மாலை சூட்டுவது, உபசாரப்பத்திரம் வாசிப்பது என்பதைத் தீர்மானிக்க அவசர கமிட்டிகள் கூடின; விவாதித்தன. யார் யார் வரிசைக் கிரமமாக மாலையிடலாமெனப் பிரத்யேகச் சீட்டுகள் வழங்கப் பெற்றன. ஒவ்வொருவரும் ஸ்தாபன ரீதியாகவோ, தனி நபராகவோ கவிஞருக்குத் தங்கள் அன்பை, காணிக்கையாகக் காட்ட உயர்ந்த ரக மாலை சூட்டுவதற்குப் போட்டியிட்டார்கள்.

பூக்கடைக்காரர்கள் பட்ட கஷ்டங்கள் ஏடு கொள்ளா.

3

ஒவ்வொரு பிரஜையும் தமக்கும் கவிஞர் பெர்தௌசிக்கும் உள்ள தொடர்பைப் பேசினர்கள். பத்திரிகை வாயிலாக எழுதினர்கள். மேடைகளில் கர்ஜித்தார்கள். கவிஞர் வாழ்க்கை வரலாறுகளைக் குடும்ப விபரங்களை எழுத ஆரம்பித்தனர். அவருடன் நட்புரிமை கொண்டவர்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ந்தது. தனிமையில் வாழ்ந்தவருக்கு இவ்வளவு நண்பர்களா என ஆச்சரியப்பட்டவர்களும் உண்டு. இதற்கிடையில் சவச் சடங்குகளை மறக்காது சிலர் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தார்கள். கவிஞர் வீட்டுக்கு முன்னல் பெரிய நோட் புஸ்தகம் வைத்தார்கள், வருகிறவர்கள் கவிஞர் பற்றிய விமர்சனங்களை எழுதுவதற்காக.

ஒரு சில மாதிரிக்குப் பாருங்கள்:

"பெர்தௌசியும் ஓர் கவிஞர்தான்."

"அவருக்கு உயர்வு நவிற்சி தவிர எதுவுமே தெரியாது."

"ஹாஸ்ய உணர்ச்சியே இல்லாதவர்."

"இவரிடமுள்ள அறியாமை ஹிமாசலத்தைவிடப் பிரம்மாண்டமானது."

4

கவிஞர் பெர்தௌசியின் சவ அடக்கத்தைப் பிரம்மாண்டமாகச் செய்ய அலி-ரீதா ராஜகுமாரனுக்கு ஆவல். உயர்ந்த நோக்கந்தான். பாக்தாத் நகரத்திற்கு வெளியே மலைச் சாரலில் பளிங்கு மண்டபமாய் ஓர் ராஜா நினைவுச் சின்னம் பாழடைந்து கிடந்தது. அலி-ரீதாவின் முப்பாட்டனுக்குப் பாட்டனை ஒரு ராஜாவை அடக்கம் செய்த இடமான அந்தப் பளிங்கு மண்டபம் வர வரப் பாழடைந்து கிடந்தது.

பெர்தௌசியின் சடலம் மேற்படி பளிங்கு மண்டபத்தில் ஒரு பகுதியில் புதைக்கப்பட வேண்டுமென்ருன். பளிங்கு மாளிகையைச் செப்பனிட உத்தரவு பிறந்தது. மாளிகையைச் சீர்படுத்த ஒருவாரம் பிடிக்குமென்றும் தெரிந்தது, இந்த ஏற்பாட்டைப் பலரும் ஆதரித்தார்கள்.

கொத்தனர்கள் பளிங்கு மாளிகையைச் செப்பனிடக் கரண்டி பிடித்தார்கள், குறிப்பிட்ட நாளில் சவ அடக்கம் நடக்கப்போவதாக நினைத்த பூக்கடைக்காரர்கள் நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து யானை விலை குதிரை விலை கொடுத்து, பூக்கள் வருத்தியும், வாங்குவதாக ஆர்டர் கொடுத்தவர்கள் வந்து வாங்க மறுத்தனர். புஷ்பங்களைக் கொண்டுபோய்க் கொடுத்தாலும் வாங்குவார் இல்லை,

"இன்று சவ அடக்கம் இல்லை. நாங்கள் பணம் தரமாட்டோம்" என வாதாடினர்கள்.

"சவ அடக்கத்தன்று புஷ்பம் கேட்டோம். அந்தநாள் என்ருே அன்றுதான் புஷ்பங்கள் வேண்டும்" என்று வியாக்யானம் செய்தார்கள்.

புஷ்பக் கடைகள்முன் போர்ப்படைகள் எழுந்தன. தங்கள் தவறு அல்லவென்று பிரேத ஊர்வலம் என்றைக்கிருந்தாலும் இவர்கள் போராடி வாதாடினலும் புஷ்பங்கள் என்னவோ வாடிப்போயின. இதனல் என்று அடக்கம் எனத் தெரியாமற்போகவே அன்ருடம் புஷ்பங்கள் எப்போதும் மூலை மூலைக்கு குவிந்துகொண்டிருந்தன.

தெருவெங்கும் வாடி வதங்கிய புஷ்பங்கள் சரிந்தன. நடைபாதைகளில் ஜன நெருக்கடியா

எஸ். மேனகா தன் சருமத்தைப் பாதுகாக்க ஏன் லக்ஸ் டாய்லட் சோப்பை விரும்புகிருர் என்று கூறுகிருர்

அவர் சொல்வதாவது:

"மாசு மறுக்களை விளைவிக்கக் கூடிய புழுதியையும் மற்றுமுள்ள அசுத்தங்களையும் லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான வெண்மை நுரை துப்புரவாக சுத்தம் செய்கிறது. அதனுல் சருமத்தை மிருதுவாகவும், அழகாகவும் தெளிவுடனும் இருக்கச் செய்கிறது. மேலும்," இன்னும் கூறுகிருர் "லக்ஸ் டாய்லட் சோப்பின் மென்மையான பரிமளம் உங்கள் சருமத்தை எப்பொழுதும் மலர்ச்சியுடனும் கவர்ச்சியுடனும். இருக்கச் செய்கிறது."

☆ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

லும் மற்றப் பிரதேசங்கள் பிரமுகர் கும்பலாலும் அசுத்தங்கள் பெருகுவதைப் பாக்தாத் நகர மக்கள் பொறுக்கமுடியவில்லை. மற்றவர்களை நோகாமல் கவிஞர் பெர்தௌசியை நொந்தார்கள் பத்திரிகையில் பக்கம் பக்கமாக அன்றாடம் கவிஞர் பற்றிய குறிப்புகளைப் பார்த்து வாசகர்களுக்குக் கசப்பு ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில் இரண்டு மூன்று பிரமுகர்கள் காலமானார்கள். அவர்களுக்கு ராஜ்யத்தில் கிடைக்க வேண்டிய ராஜாங்க மதிப்புக் கிடைக்காமல் போகவே, அவர்கள், சுற்றத்தார் காலஞ்சென்ற கவிஞரை மனமார வைதார்கள். தங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கவேண்டிய புகழ் கிடைக்காமற் போனதில் வருத்தம் இருக்கத் தானே செய்யும்.

ஆகப்போக, ஒரு மனிதன் பலருக்கும் எமனாக இருந்தான் என்றனர்.

இந்தப் பரிதாபகரமான சமயத்தில் கவிஞர் பெர்தௌசி வாழ்ந்த அதே தெருக்கோடியில் ஒரு அதிசய சம்பவம் நடைபெற்றது. ஒரு குடும்பத்தார் கையில் - இடது கையில் பன்னிரண்டுபேருக்கும் கத்திக்குத்து பட்டிருந்தது. இதில் மூன்று குழந்தைகள். இந்தக் கத்திக் குத்தின் நோக்கம் திருட்டு அல்லவென்றும் எவ்விதத் துரும்பும் திருட்டுப்போகவில்லை என்றும் விபரங்கள் வெளியாயின.

அவ்வளவுதான் இந்த மர்ம விபத்துக்கு உயிர் கிடைத்தது பொதுச் சபைகள் பிறந்தன. அப்பாவி பெர்தௌசியை மறந்தார்கள்.

கவிஞரின் பணிப்பெண் - அதாவது வேலைக்காரி ஸோரா மட்டும் தன்னந்தனியாய் இருந்தாள். ஈ காக்கை இரண்டு மூன்று நாட்களாக அந்தத் திசையில் கால்வைக்கவில்லை. சாவகாசமாக வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்தாள். எங்கும் நிசப்தம் நிலவியது.

இன்னும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அவள் இரவும் பகலும் கவிஞர் பெர்தௌசியின் சடலத்தருகே தனியாய் இருந்தாள்.

நாலாம் நாள் அவள் களைத்துப்போய், தலையைச் சாய்க்க நினைத்தபோது யாரோ வந்தார்கள். அவள் தான் தையல்காரன் மகள் ஸிலுபி. வந்தவள், பாவம், 'ஸோரா! நீ தனியாய் இங்கே அகப்பட்டு இருப்பதைக் கேள்விப்பட்டு வந்தேன்' என்று அன்பு காட்டினாள்.

ஸிலுபி வந்தது மிகவும் ஒத்தாசையாக இருந்தது. கையால் துணிமணிகளைத் தைத்துக் கொண்டே கவிஞரின் பாக்களைப் பாடுவாள். ஸிலுபி பாடும்போது ஸாராவுக்குத் தூக்கம் கலையும். அப்போது கவிஞர் பெர்தௌசி அவள் பாடலைக் கேட்டுப் புன்னகை பூப்பது போல இருக்கிறதாகப் படும் வேலைக்கார ஸோராவுக்கு.

அந்தத் தெருவில் நடந்த கத்திக்குத்து விஷயம் பற்றியும் குத்தப்பட்ட நபர்கள் பற்றியும் சந்தேகப்பட்டுப் பிடிபட்டவர்கள்பற்றியும்மக்கள் காரசாரமாக விவாதித்தனர். பெர்தௌசியின் அடக்கத்திற்காக வந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அங்கங்கே குடியில் ஆழ்ந்திருந்தார்கள். விலாசம் தவறி, தெருவில் திண்டாடிய பிரமுகர்களைக் காவலாளிகள் அவரவர்கள் ஜாகைக்குக் கொண்டுசேர்ப்பது பெரும் பாடாகப் போய்விட்டது.

ஒருவாறு அடக்கத்திற்காக ஏற்பாடுகள் நடைபெற்றும் விட்டன. ஊர்வலம் புறப்பட்டது. வெயிலோ கொளுத்துகிறது ஸோராவும் ஸிலுபியும் பின் தொடர்ந்தனர், சவப் பெட்டி மேல் இரண்டொரு மாலைகள், அதுவும் வாடி வதங்கிய புஷ்பங்கள், ஊர் பெயர் தெரியாத புஷ்பங்கள் கிடந்தன. அந்த இரு பெண்களுக்குப் பின்னால் பிரம்மாண்டமாக ஆடையணிந்த ஒரு அதிகாரி-அரசன் அனுப்பிய அதிகாரி-வந்தான். அவனுக்குப் பின்னால் ஐம்பது பெயர் புறப்பட்டார்கள், வெய்யிலின் உக்ரத்தால் அவர்களுக்கு அடிக்கடி நாவறட்சி யேற்பட்டு அங்கங்கே தாகவிடாய் தணித்து வந்த வீரர்களும் வராமல் இருந்தவர்களும் உண்டு. இவர்



கள் கவிஞர்மேலுள்ள பாசத்திற்காக வரவில்லை, அந்தந்தச் சங்கங்கள், சமாஜங்கள் தங்கள் அனுதாபங்களை வாசிப்பதற்காக அனுப்பப்பட்ட கூலிக்காரர்கள்; ரொம்பவும் நியாயத்திற்குப் பயந்தவர்கள். தங்கள் கையெழுத்துப் பிரதியால் விசிறிக்கொண்டே பின் பற்றினார்கள்,

இந்தப் பிரஸங்க மேடைகளுக்குப் பின்னால் பெட்டி வண்டிகளில் ராஜீய பிரமுகர்கள்—பார்த்தால் உயிருள்ளவர்கள்போலத் தெரியும். ஆனால் உணர்ச்சியற்றவர்கள் — வந்தார்கள், அவர்கள் பிரமுகர்கள்போன்று செய்யப்பட்ட மெழுகுப் பொம்மைகள், தாங்கள் கவிஞர் பெர்தௌசி மரணச் சடங்கில் கலந்துகொள்ளவில்லையென ராஜா எண்ணக்கூடாதேயெனத் தங்கள் தங்கள் மெழுகுப் பொம்மையை அனுப்பியிருந்தனர். இந்தத் தந்திரம் எல்லாம் பிரமுகர்களுக்கும் உதித்ததால் வெய்யிலின் உக்கிரம் தாங்காமல் மெழுகுப் பொம்மைகள் அழுது வடிந்தன. பிரமுகர்கள் கண்ணீர் உகுப்பதற்குப் பதில் தாங்களே உருகினார்கள். தெருவில் பொதுஜனங்களில் யாருக்காவது இந்த மெழுகுப் பொம்மைகள் ரகசியம் தெரியுமா? எவனாவது ஊர்வலத்தைத் திரும்பிக் கவனித்தால் தானே தெரியப்போகிறது. அவருடைய ராஜாங்கஸ்தானத்தைப் பிடிக்க நினைத்த பதினாலு கவிகளில் ஒருவனாவது அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவில்லை.

பளிங்கு மண்டபத்தைச் சவப்பெட்டி நெருங்கியபோது அங்கே எதுவுமே தயாராகவில்லை. ஒரு மேஸ்திரி குடித்த போதையில் தூங்கினான். இன்னொரு மேஸ்திரி தூங்கியபடியே கரண்டியைப் பிடித்திருந்தான். ஸோரா, 'ஐயோ! இது தானா ஒரு கவிஞருக்கு மதிப்பு? எவ்வளவு அவமானம், கேவலம்' என்று கத்தினாள். தூங்கியவனைக் கரண்டியால் தட்டி எழுப்பி, 'ஐயா, அந்த மாபிள் மரத்தடியில் ஒரு குழி தோண்டிக் கொடும், இதை இனி வீட்டுக்குக் கொண்டு போக முடியாது' என்று விளக்கினாள்.

ஐம்பது பிரசங்கிகளில் பத்துப்பேர்தான் கடைசியாக வந்துசேர்ந்தவர்கள். அவர்கள் யாருக்காகவும் காத்திருக்காமல் தங்கள் சொற்பொழிவைப் பொழிந்தார்கள். பேச்சு முடிந்ததும் ஒவ்வொருவராகப் பிறர் பேச்சைக் கேட்காமலே முகம் அலம்பப் போய்விட்டார்கள். பத்தாவது நபர் படிக்க ஆரம்பிக்கும்போது இரு பெண்கள், ராஜாவின் அதிகாரி, உருகிப்போன பிரமுகர்கள் திருக்கூட்டம் இவர்கள்தான் மிச்சம். ஆனாலும் அந்த மகானுபாவன் இத்தனை கோடி மக்கள் முன்னிலையில் நான் சொல்ல விரும்புவது என்றுதான் பேச்சை ஆரம்பித்தான். இடையிடையே கோடிக்கணக்கான பக்தர்கள், ரஸிகர்கள் என்றான்.

பத்தாவது பேர்வழியின் பேச்சு மிகவும் நீண்ட பிரசங்கமாக இருந்ததால் கொத்தனார்கள் குழிவெட்ட முடியாது என்று புறப்பட யத்தனித்தார்கள். ஒருவகையாகப் பத்தாவது பிரசங்கியைப் பயமுறுத்தி நிறுத்தும்படி நேர்ந்தது.

ஸோரா அழுதாள், ஸிலிபா பொருமினாள். அந்த அதிகாரி "ஏனம்மா நீ கவிஞருடைய பந்து அல்லவே, ஏன் அழுகிறாய்?" என்று கண்ணீரைத் துடைத்தான்.

"நான் உறவினள் அல்ல, ஆனாலும் மூன்று நாள் அவர் சடலத்தை இராக்கண் விழித்துப் பார்த்த பாசம்" என்றாள்.

"உன் அழகைப்போலவே குணமும் இருக்கிறது. ஸிலிபா அழாதே. கண்ணைத் துடைத்துக்கொள்" என்று இப்படிக் குளுமையாகச் சற்று நேரம் பேசினான். வர வர அவள் அழுகை குறையக் குறையக் கண்ணில் ஆனந்தம் மிதந்தது, இருவரும் கைகோத்துக் கொண்டு பாக்தாத் நகரை நோக்கித் திரும்பினார்கள். அவர்கள் பாக்தாத் நகரின் வாசற் கோட்டைக்குள் நுழையும்போது அவள் சிரிப்பு வெண்கலம்போலக் கணகணவென்றிருந்தது.

மகோன்னதமான கவிஞர்பிரான் சடலம் மாபிள் மரத்தடியில் அவருடைய பணிப்பெண் ஸோராவின் கண்ணீரும் கம்பலையும் மாலை மாலையாகப் பெற்று, அடக்கமாகிக்கொண்டிருந்தது. சுற்றுவட்டத்தில், அப் பணிப்பெண் தவிர யாருமே இல்லை. மண்ணை மூடிய பின்பும் அவள் மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள் தன்னந்தனியாக. ●



தங்க வேட்டை

ஸி. வி. ராமகிருஷ்ணன்

மாலை மணி நாலிருக்கும். டீயைக் குடித்துவிட்டு உச்சிமோட்டைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். திடீரென்று முதுகில் ஒரு அறை விழவே சொப்பன உலகத்தினின்றும் அலறி அடித்துக்கொண்டு இந்த உலகத்திற்கு வந்துசேர்ந்தேன்.

"ஏண்டா பழி, எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறாய். மணி ஐந்தாகிவிட்டது. இன்னும் ஆபீஸை விட்டுக் கிளம்பப் பிடிக்கவில்லையா" என்று கேட்டுக்கொண்டே இன்னொரு அறைவிடத் தயாராக நின்றான் என் நண்பன் ராமசாமி.

"ஐந்து மணிதானே ஆகிறது. இப்பொழுது வீட்டிற்குப்போய் என்ன செய்கிறது? நாளைக்குவேறு விடுமுறை. எழவு இந்த விடுமுறை 29ஆந் தேதிதான் வர வேண்டுமா! கையிலொரு காசுமில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. இந்த அழகில் பணமில்லாமல் விடுமுறை என்ன ரசிக்கப் போகிறதுடா" என்றேன்.

"ஓ, பணம் சம்பாதிக்கிற வழியைப் பற்றிக் கோட்டைகட்டிக் கொண்டிருக்கிறாயா. சரி, உடனே என்னுடன் கிளம்பு. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று ஔவையார் சொல்லியிருக்கிறாள். நாம் அவ்வளவு கஷ்டப்பட வேண்டாம். கார் எடுத்துக்கொண்டு கொஞ்சதூரம் போனாலே பணம் சம்பாதிக்கலாம். என்ன புரியலையா? நம் ஊருக்குப் பக்கத்திலே பூமியிலேயிருந்து நிறையப் பொன் கிடைக்கிறதாம். நாமும் போய்ப் பார்க்கலாம். ஏதாவது கிடைச்சா சுருட்டிண்டு வரலாம், வா." என்று சொல்லிக்கொண்டே என்னை இழுத்து ஆபீஸுக்கு வெளியே தள்ளிக்கொண்டு வந்துவிட்டான். அவன் காரிலேயே என்னை வீட்டுக்குக் கொண்டு வந்து, விட்டு, "டேய், நாளைக் காலை 5-மணிக்கு ரெடியாக இரு" என்றுசொல்லி விட்டுப் போனான்.

"தங்கம், நாளைக்குக் காலையில் 4 மணிக்கு எழுந்து வெந்நீர் போட்டு, காபி ரெடியாகணும். நான் தங்கவேட்டைக்குப் போகப்போகிறேன்" என்றேன். பாவம், பக்கத்து வீட்டுக்காரியைப் பார்த்து, நகைப் பைத்தியம் பிடித்து அலையும் தங்கம் தனக்கும் நிறைய நகை கிடைக்கும் என்றெண்ணி காலை 3 மணிக்கே எழுந்து வெந்நீர் முதலியன போட்டு, 4 மணிக்கே என்னை எழுப்பிவிட்டுவிட்டாள். எழுந்து க்ஷவர கல்யாணத்தை முடித்துக் கொண்டு டிரஸ் செய்துகொள்வதற்குள் என்னுடைய அருமைக் குழந்தைகளும் அலறி அடித்துக்கொண்டு எழுந்து டிரஸ் செய்துகொள்ள ஆரம்பித்தன. வாசலில் கார் ஹார்ன் கேட்கவே வானர சேனைகள்! வாசலுக்கு ஓடி, கார் எதிரில் ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்தன. என் மனைவி "அப்பா, ஆபீஸுக்குப் போய்விட்டு வந்து விடுவார்" என்று சமாதானம் கூற, குழந்தைகள் அலறிக்கொண்டு பிரிவுபசாரம் கொடுக்க, காரில் ஏறிக்கொண்டு பொன் வேட்டைக்குக் கிளம்பினேன். பெங்களூரில் காலை 5 மணிக்குக் கிளம்பின கார் 6 மணிக்குள் பங்காருப் பேட்டை போய்ச் சேர்ந்தது. அங்கு நின்று கொண்டிருந்த ஒருவரிடம் "அப்பா, இங்கு எங்கோ பொன் கிடைக்கிறதாமே எந்த இடமப்பா" என்று கேட்டேன்.

"பொன் கிடைக்கிறதா, ஓ, கோலார் தங்கச் சுரங்கமா? இங்கிருந்து 10 மைல் இருக்கிறது. இப்படி சோத்துக் கை பக்கம் போயி, நேரே போங்க சாமி," என்று கையைக் காண்பித்துவிட்டு, பீடியை இழுக்க ஆரம்பித்தான்.

அவன் சொன்ன மார்க்கத்தில் காரை விட்டோம். சில மைல்கள் சென்றபின் இரு பக்கமும் விளைச்சலில்லாத பொட்டல் நிலங்கள் காணப்பட்டன. மேலே விளைச்சலில்லாதது உள்ளேயிருக்கும் பொக்கிஷம் காரணமாகப் போலும்! 10ஆவது மைல் வந்தவுடன் ஜன சஞ்சாரம் காண

ஆரம்பித்தது. இரு பக்கமும் அழகிய வீடுகள் தென்பட்டன. உடைந்த கற்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன. இது தான் கோலார் தங்கச் சுரங்கம் என்று தோன்றிற்று. உடனே காரை நிறுத்தி விட்டு, சிரம பரிகாரம் செய்துகொள்வதற்காக, பக்கத்திலிருந்த பங்களாவிற்குச் சென்றோம். பங்களாவில் நுழைந்தவுடன் எங்கள் ஆபீஸில் வேலை செய்யும் ஸ்ரீனிவாசன் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் எங்களால் எங்கள் கண்களை நம்ப முடியவில்லை.

"ஏண்டா, சீனு. நீ எங்கடா இங்கே வந்திருக்கே" என்றேன். "அட, நீங்களா, இந்தப் பங்களாவில் என் மாமனார் துரைசாமி ஐயர் இருக்கிறார். அவர் தான் இங்கு சீப் இன்ஸ்பெக்டர்" என்றான். "ஓ மாமனார் வீடா! இப்ப புரியறது, சீனு சனிக்கிழமை ஒரு மணிக்கே ஆபீஸை விட்டுப் பறந்துபோற காரணம்! சரி, இங்கேயிருந்து கொஞ்சம் பொன் எடுத்துக்கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறோம். கொஞ்சம் தயவு பண்ணப்பா," என்றேன். "நல்ல வேளை. நாளைக்கு என் மாமனார் ரிடையராகப் போகிறார். இன்னிக்கே ஏதாவது முடியுமா என்று பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு உள்ளே கூட்டிக்கொண்டு போய், அவனுடைய மாமனாருக்கு அறிமுகம் செய்து வைத்தான். அவருடைய வீட்டில் அருமையான 'மைசூர் காபி' ஒரு கப் குடித்து விட்டு, எல்லோரும் சுரங்கத்தைப் பார்க்கக் கிளம்பினோம். போகும் பொழுதே தங்கச் சுரங்கத்தைப்பற்றி, சீப் இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொண்டு வந்தார்.

இந்த இடத்தில் ஏழு சுரங்கங்கள் இருக்கின்றன. இந்த இடத்தை டெய்லர் அண்டு சன்ஸ் (Taylor & Sons) என்ற பிரிட்டிஷ் கம்பெனி 100 வருட காலம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு பூமிக்குள் சுரங்கம் செய்து கடந்த 50 வருடங்களாகத் தங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் 15 வருடத்திற்குத் தங்கம் கிடைக்குமென்று தெரியவருகிறது. இது வரையில் சுமார் 10,000 அடி வரையில் கடல் மட்டத்திற்குக் கீழ் பாறைகளைக் குடைந்து சென்று தங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். கோலார் தங்கச் சுரங்கத்தைச் சுற்றிச் சுமார் 600 மைல் சுற்றளவுக்கும் குடைந்து சென்று தங்கவேட்டை ஆடியிருக்கின்றனர். இந்த விவரங்களை அவர் சொல்லிக் கொண்டேயிருக்கும்பொழுது ஊர்காம் சுரங்கம் வந்துவிடவே காரை நிறுத்தி விட்டுச் சுரங்கத்தைப் பார்க்கக் கிளம்பினோம்.

சுரங்க வாசலில் உள்ள காவலாளி எல்லோரிடமும் ஒவ்வொரு காகிதத்தைக் கொடுத்து அதில் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் கம்பெனி ஜவாப்தாரியல்ல என்று எழுதி வாங்கிக்கொண்டான். பின்னர் சுரங்கத்திற்குள் செல்வதற்காகத் தலையில் பிரம்புத் தொப்பியைப் போட்டுக்கொண்டு (மேலிருந்து தூசி முதலியன விழாது தடுத்துக்கொள்ள) தயாராகக் காத்துக்கொண்டிருந்தோம். சுரங்கத்திற்குள் செல்ல மின்சாரக் கூண்டுகளை (Electric Cages) உபயோகிக்கின்றனர். ஸ்டீல் கயிறுகளால் மின்சாரம் மூலம் இந்தக் கூண்டுகள் இயக்கப்படுகின்றன. இந்தக் கூண்டுகளை இயக்கும் சாதனம் (shaft) பிரம்மாண்டமானதென்பது முதல் படத்திலிருந்து தெரியவரும். இதை இயங்க



கூண்டை இயக்கும் மின்சார சாதனம் (Shaft)

வைக்கும் அறையில் எவ்வளவு வேகத்தில் கூண்டு போகிறது, எவ்வளவு அடியில் கூண்டு இருக்கிறது, என்பவைகளைக் காண்பிக்க மீட்டர்கள் இருக்கின்றன. அங்குள்ள சாதனம்மூலம் எந்த இடத்திற்கு வேண்டுமோ அங்கே கூண்டை அனுப்பச் சௌகர்யமாயிருக்கிறது.

கூண்டிற்குள் அனைவரும் ஏறிக்கொண்டு கதவுகளைப் போட்டுவிட்டோம். உடனே அது பாதாளத்தில் இறங்க ஆரம்பித்தது. சுரங்கங்களுக்குக் காற்றைக் குழாய்கள் மூலம் அனுப்புவதால் இறங்கும்பொழுது கொஞ்சம் குளிர ஆரம்பிக்கிறது. காதைவேறு அடைக்கின்றது. திடிரெனக் கூண்டு நின்றவுடன், இன்ஸ்பெக்டர் எங்களை வெளியே வரச்சொன்னார். வெளியே வந்ததும் எலெக்டிரிக் விளக்குகள் கொண்ட கைலாசநாதர் குகைபோல் தெரிந்தது. லண்டன் குகை ரயில்களைப்பற்றிக் கேள்விபட்டவர்கள் இந்தச் சுரங்கத்தைப் பார்த்தால் அது எப்படியிருக்கும் என்று தெரிந்துகொள்ளலாம். பலமைல்களுக்குக் குகையைக் குடைந்து சென்றிருக்கின்றனர். இங்கே தண்டவாளங்கள் அமைத்து, தள்ளு வண்டி Trolly மூலம் தங்கம் இருக்கும் கற்களை பல இடங்களினின்றும் கொண்டுவந்து கூண்டில் ஏற்றி வெளியே அனுப்புகின்றனர்.

குகையின் ஒரு ஓரத்தை அடைந்தோம். அங்கே பாறைகளில் தங்கரேகை போன்ற கீற்றுகள் gold reefs ஓடுவது தெரிந்தது. இந்தக் கீற்றுகள் உள்ள பாறைகள் தான் தங்கப் பாறைகளாகும். இக்கீற்றுகள் ஓடும் திக்கைக் குறிவைத்துக் கொண்டு பாறைகளை வெடிமருந்துமூலம் வெட்டி எடுத்துக்கொண்டு செல்வார்கள். அந்தக் கீற்றின் முடிவு வந்ததும், மறுபடியும் மற்றொருகீற்றின் பாதையை நோக்கிப் பாறைகளைத் துளைத்துக்கொண்டு செல்வார்கள். மிகுந்துள்ள பாறைகள் தலையில் விழாதிருக்க இரும்புக் குழாய்களைப் பொருத்திக்கொண்டே பல மைல்கள் உள்ளே குடைந்துசென்று தங்கவேட்டையாடுகின்றனர். இவர்கள் சுவாசிக்கக் காற்றை மேலிருந்து குழாய்கள்மூலம் அனுப்புகின்றனர். எங்காவது தண்ணீர் ஊற்று வந்தால் அதை வெளியே தள்ள மின்சாரப் பம்புகளை உபயோகிக்கின்றனர்.



நீர்த் தேக்கிகள்.

இந்தப் பாறைகளைத் தள்ளுவண்டிகள் மூலம் எடுத்துச்சென்று கூண்டு வழியாக வெளியேஅனுப்புகின்றனர். இந்தப்பாறைகளைப் பரிசோதித்து 100க்கு 3 பென்னி எடை தங்கமுள்ள பாறைகளை மட்டும் தங்கம் எடுக்க உபயோகிக்கின்றனர். அதாவது ரூ. 100 செலவு செய்தால் ரூ. 107½ வருமானம் கொடுக்கும் தங்கமாவது இருந்தால்தான் அந்தப் பாறையை உபயோகிக்கின்றனர்.

தங்கக் குகையைப் பார்த்தவுடன் மறுபடியும் கூண்டில் ஏறிக்கொண்டு மேலே செல்ல ஆரம்பித்தோம். காற்று அழுத்தத்திற்கு எதிராகச் செல்வதின் காரணமாகக் காற்று அபாரமாக அடிக்க ஆரம்பித்தது. "நாங்கள் நாலாயிரம் அடியில் பாதாளத்தில் இருக்கிறோம். தப்பித்தவறி, கூண்டு அறுந்தால் கூண்டோடு கைலாசம்" என்று நினைத்துப் பார்த்தவுடன் உடல் பதற ஆரம்பித்தது. நல்லவேளை, அதற்குள் தரை மட்டத்திற்கு வந்துவிட்டோம். பாதாள உலகத்தைப் பார்த்து விட்டு உயிருடன் திரும்பிவந்த பிரமையில்

கரிவேஷம் போட்டுக் கொண்டதைக் கூடக் கவனிக்காது நடையைக் கட்டினோம். இந்தச் சுரங்கத்தைச் சுற்றி ஆகாயத்திலிருந்து காற்றை உறிஞ்சுவதற்கு அமைத்துள்ள சாதனமும் air sucker, உள்ளே குளிர்ந்த காற்றை அனுப்ப ஏற்படுத்தியிருக்கும் குளிர் அறைகளும் Refrigeration chambers காற்றை அமுக்கும் சாதனமும் air compressors பார்க்க அபாரமாயிருக்கின்றன.



தங்கக்கல்லைப் பொடியாக்க மின்சார உலக்கைகள்.

பாறைகளில் தங்கம் இருப்பதைப் பார்த்துவிட்டுப்பாறைகளிலிருந்து தங்கம் பிரித்து எடுப்பதைப் பார்ப்பதற்காக அருகிலுள்ள தங்கம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைக்குச் சென்றோம். உள்ளே நுழையும்பொழுதே சப்தம் காதைத் துளைக்க ஆரம்பிக்கின்றது. உள்ளே மின்சாரத்தினால் இயக்கப்படும் இரும்பு உலக்கைகள் தங்கப் பாறைகளைப் பொடி செய்கின்றன. இந்தத் தூள்களை நுண்ணிய பொடியாக்க அரைக்கும் இயந்திரங்கள் Ball mills உபயோகப்படுகின்றன. இங்கே நீருடன் கலந்து தங்க மண் குழம்புபோல் ஆகிறது. இக் குழம்பினின்றும் தூசி முதலியவைகளை மிதத்தல் முறை flotation மூலம் பிரித்தெடுத்து, தங்க மண் குழம்பைச் சாய்வான படுகையில் மிருதுவான கம்பளித் துண்டுகள் மேல் பாயும்படி செய்கிறார்கள். அதிக கனமுள்ள தங்கம் கம்பளியில் ஒட்டிக்கொள்கிறது. பின்னர் அந்தப் படுகையினின்றும் கம்பளியிலுள்ள தங்கத்தைப் பிரஷ் மூலம் சேகரித்து எடுக்கின்றனர்.



தங்கக் குழம்பை அரைக்கும் இயந்திரம்.

மிக நுண்ணிய தங்கத் தூள்கள் கம்பளியின்மேல் தங்காமல் தண்ணீருடன் அடித்துச் செல்லப்படுகின்றன. இவற்றை வீணாக்காமல் பிரித்தெடுக்க ரசாயன முறையைக் கையாளுகிறார்கள். பெரிய தொட்டிகளில் இவற்றைச் சேகரித்துப் பொட்டாசியம் ஸயனைட் Potassium cyanide கலந்த தொட்டிகளில் இந்த நீரைப் பாய்ச்சுகின்றனர். இந்தத்

199323



கம்பளிப் படுகையில் பொன் தேங்குவதைக் காணலாம்

தொட்டிகள் மேல் நடந்து செல்லும்போது யமலோக ஞாபகம்தான் வரும். ஒரு உத்தரணி ஸயனைட் ஜலம் உடனே ஆளை அந்த உலகத்திற்கு அனுப்பிவிடும்!! காற்று இந்தத் தொட்டிகளில் சென்று, தங்கம் மாத்திரம் ஸயனைட் திரவத்தால் கரைக்கப்பட்டு மற்றப் பொருள்கள் அப்படியே தங்கிவிடுகின்றன. கரையாத பொருள்களைச் சூனிய வடிகட்டியின் மூலம் Vacuum filters வடிகட்டி, காற்றையும் நீக்கிவிட்டுத் துத்தநாகத் தகடுகளுடன் Zinc flakes பெரிய பாத்திரங்களில் கலக்கிறார்கள். ஸயனைட் துத்தநாகத்தைக் கரைத்து, ஸயனைடில் கரைபட்ட தங்கப் பொடியை வெளித் தள்ளுகிறது. ஆகவே தங்கம் அடியில் பொடியாக நிற்கிறது. மேலும் மேலும் துத்தநாகம் கரைக்கப்படுகிறது. இந்தத் தங்கத் தூளை நைட்டர் முதலியவைகளுடன் உருக்கி, தங்கத்தை எடுக்கின்றனர்.

மற்ற உலோகங்களைப்போல் தங்கம் இதரப் பொருள்களுடன் கலந்து அகப்படாமல் தனியே பாறைகளினூடே மிகச் சிறிய அளவில் தங்கி நிற்கிறது. வெள்ளி, தாமிரம் முதலிய உலோகங்களைப் பிரித்தெடுத்தபின் எஞ்சிநிற்கும் பொருளிலிருந்தும் slime தங்கம் நமக்கு கிடைக்கிறது. இவற்றிலிருந்து தங்கத்தை எடுக்கவும், தங்கத்தைச் சுத்தப் படுத்துவதற்கும் மின்சார விபாகமென்ற முறையை electrolysis உபயோகிக்கின்றனர்.

பெரிய கண்ணாடிப் பாத்திரங்களில் தங்க குளோரைட் Auric chloride கலப்பையை நிரப்புவார்கள். சிறிது ஹைட்ரோகுளோரிக் அமிலமும் ஊற்றுவார்கள். மின்சாரத்தை அசுத்தமான தங்கக் கட்டிகளாலான anode மூலமும் சுத்தமான தங்கத்தகட்டினலான cathode மூலமும் இந்தக் கலப்பில் பாய்ச்சுவார்கள். அசுத்தமான தங்கக் கட்டிகளிலிருந்து தங்கம் கரைக்கப்பட்டு மின்சாரத்தின் உதவியால் மேலும் மேலும் சுத்தத் தங்கத் தகட்டின்மேல் படியும் இவ்வாறு பெரிதாக்கப்பட்ட சுத்தத் தங்கக்கட்டிகளைச் சேகரிப்பார்கள். இம்முறையால் 100 சதவிகிதம் சுத்தமான



பாலத்திற்கு கீழே யமலோகம்!! ஸயனைட் தொட்டி.

தங்கம் தயார்செய்யமுடியும். மேலும் அதிக மான செலவு ஒன்றும் கிடையாது. அசுத்த மான தங்கக்கட்டிகளில் சுமார் 3-லிருந்து 10 சதவிகிதம் வரை சுத்தமாக்கப்படும் பொழுது குறைந்துவிடும்.

இப்படியாகச் சேகரிக்கப்பட்ட எல்லாத் தங்கத்தையும் உருக்கிக் கட்டிகளாகச் செய்து, மாத மிருமுறை பம்பாயிலுள்ள நாணயம் அச்சிடும் சாலைக்கு அனுப்பி விடுகின்றனர். ஒரு கட்டியின் மதிப்பு, சுமார் ½ லக்ஷம் ரூபாய். தங்கக் கட்டி களைப் பார்த்தவுடன் ஆனந்தத் தாண்டவ மாட ஆரம்பித்தோம். அதைக் கொஞ் சம் நெருங்கினேன். பைத்தியம்போல எங்களைச் சுற்றிக்கொண்டு வந்த ஒருவன் "ஸார், எங்கே போறீங்க" என்றான். "அவன்தான் ரகசிய போலீஸ் ஆள். இங்கு ஒரு தூசிப் பொன்கூடத் திருடமுடி யாது. பாதுகாக்கும் தெய்வம்" என்று காதேடு கூறினார் இன்ஸ்பெக்டர். "அடடா. கண்ணுக்குத் தெரிந்தது, கைக்கு எட்டவில்லையே" என்று கூறிக் கொண்டே வெளியே வந்தோம். சுரங்கத் தைச் சுற்றிலும் தங்கம் நீக்கப்பட்ட மண்ணைக் குவியலாகக் கொட்டிக்கிடப் பதைப் பார்த்ததும் உள்ளிருக்கும் பொக் கிஷத்தைக் காக்கும் இயற்கை அரண்கள் போலத் தெரிகின்றது.

நேராக இன்ஸ்பெக்டர் வீட்டிற்குச் சென்று ஆனந்தமாகச் சாப்பிட்டுவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பெங் களூரை நோக்கிக் கிளம்பினோம். பாவம்! 25 வருஷம் தங்கச் சுரங்கத்திலேயே வேலை செய்தும்கூடத் தங்கத்தாலேயே இழைக் கப்பட்டிருப்பதற்குப் பதிலாக ஓய்வில் லாது உழைத்து உடல் கறுத்துக் கிடக்கி றான் மனுஷன். 25 நிமிஷம்கூடச் சுரங்கத் தில்இல்லாத நமக்கு எங்கே பொன் கிடைக் கப் போகிறது. நல்ல வேளை பொன் எடுப் பதையாவது பார்க்கக் கொடுத்து வைத் தோமே என்று ஆறுதலுடன் கிளம்பி னேன்.

மாலை ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந் தோம். என் மனைவியும், குழந்தைகளும் ஆசையாக என் வரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் ஒரு தட்டான் என் வீட்டைவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்தான்.

"ஏண்டி, தட்டான் என்னத்திற்கு வந் தான்" என்றேன்

"நீங்கள் பொன் வேட்டையாடி நிறையப் பொன் கொண்டுவரப் போறேன்னு சொன்னேளேன்னு தட்டானைக் கூப்பிட்டு எனக்குச் செயின், வளையல், குழந்தை களுக்குச் செயின் முதலியவைகளுக்கு எவ் வளவு பொன் ஆகுமென்று விசாரித் தேன்" என்றாள்.

"அடி பைத்தியம், அங்கே எனக்கு முன்னாலேயே ஒரு வெள்ளைக்காரன் வந்து எல்லாப் பொன்னையும் அடிச்சுண்டு போயிட்டான். போனாப் போறான். அழகு இல்லாதவாளுக்குத்தானே பொன், நகை எல்லாம். நீதான் பேருக்கு ஏற்றாப் போலத் தங்கமாய் இருக்கிறாய். குழந்தை களோ ஒவ்வொன்றும் வைரமாய் இருக்கு. நமக்கு என்னத்துக்கு இந்தச் செயற்கைத் தங்கமெல்லாம். ஒழிஞ்சு போறான், அந்த வெள்ளைக்காரனே எல்லாத்தையும் எடுத் துக் கொள்ளட்டும். வாங்க, நாம் எல்லோ ரும் தங்க வேட்டை Gold rush ன்னு ஒரு சினிமா நடக்கிறது. அதைப் பார்த்து விட்டு வரலாம்" என்று சொல்லி எல்லோ ரையும் நண்பனுடைய காரிலேயே ஏற்றிக் கொண்டு பாலஸ்தியேட்டரை நோக்கி, காரை விட ஆரம்பித்தேன். ●

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிட்

[ஆட்டோமோபைல் & ஜெனரல் இன்ஜினீயர்ஸ் உயர்தர கருவிகளும் உபகரணங்களும் உற்பத்தியாளர்கள்]

மதராஸ் 2

எங்கள் சொந்த தயாரிப்புகள்.

இணையற்றது. நம்பக்கூடியது.

கீழ் கண்டவைகளை விற்பனை செய்கிரோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்ரோம் :-

- வில் பாரோஸ்
- கொல்லுலைகள், துருத்திகள்
- அஸிடிலைன் ஜெனரேடர்கள்
- பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
- கைத்தொழிலுக்குரிய ஸ்டீல் சக்கரங்கள்
- ட்ராலிகள், ட்ரெய்லர்கள்
- ஸாகெட் ரின்ஞ்செஸ் (23 டைப்)
- போர்ட்டபில் க்ரேன்கள் (தொழிற்சாலைகளுக்கு)
- வண்டிகளுக்கான ஸ்டீல் ப்ராப்ஸ்
- தண்ணீர் தொட்டிகள் & தூக்கு வண்டிகள் முதலானவைகள்

தலைமை ஆபீஸ் & தொழிற்சாலை

202/203, மவுண்ட்ரோடு, மதராஸ்—2.

பிராஞ்சுகள் :

பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)

டெப்போ :

கோயமுத்தூர்

லண்டன் கடிதம்

லீலா கோபாலன்

இந்த மாதக் கடிதத்தைத் தொடர்ந்து எழுதுமுன், சகோதர சகோதரிகள் அனைவருக்கும் என் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். தாய்நாடெங்கும் மங்களம் பொங்குமாறு ஈச்வரனைப் பிரார்த்திப்போம்.

என் கடிதங்களைக் காவேரியில் படித்து வரும் அநேகம் சகோதரிகள் எனக்கு நேரிட, கடிதம் எழுதுவது எனக்கு மிகவும் சந்தோஷம். நான் என் விலாசத்தைத் தெரியப்படுத்தாவிட்டாலும், லண்டன் பி. பி. ஸி. தமிழோசை என்று விலாசமிட்டுக் கடிதங்கள் வருகின்றன: என்னுடைய சந்தோஷத்தை நான் உங்களுக்கு எழுதிச் சாத்தியப்படாது. என்னால் முடிந்தவரை உங்கள் கடிதங்களுக்குப் பிரத்யேகமாகப் பதிலும் எழுதுகிறேன். உங்கள் சந்தேகங்களையும் கூடியவரை நிவர்த்தி செய்கிறேன்.

என்னுடைய இந்தமாதக் கடிதத்தைத் தகதகவென்று எரியும் கணப்பு அடியில் இருந்துகொண்டு எழுதுகிறேன். காரணம் சென்ற பத்து நாட்களாக விட்டு விட்டுப் பெய்யும் பனி மழைதான். இந்தப் பனி மழையைப்பற்றி உங்களுக்குக் கொஞ்சம் வர்ணித்துத்தான் எழுதவேண்டும். காற்றில் பஞ்சு பறப்பதுபோல் விடாது கீழே விழும் இந்தப் பனி, தரையின்மேல் விழுவது வெள்ளை வெளேரென்று பார்க்க மிகவும் அழகாகத்தான் இருக்கிறது. வீட்டுக் கூரைகள், தோட்ட வெளிகள், மொட்டையாக நிற்கும் மரங்கள் எல்லாம் வெள்ளையாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால் நாங்கள் வெளியில் நடந்துசெல்லப் படும்பாடு சொல்லி முடியாது. காலை ஊன்றிக் கவனமாக நடக்காவிட்டால் கீழே விழுந்து கை காலை முறித்துக் கொள்ளவேண்டியதுதான். இந்தப் பஞ்சு போன்ற பனி கீழே விழுந்ததும் சில மணி நேரங்களுக்குப்பின் கட்டியாக உறைந்து விடுகிறது. மோட்டார், பஸ், மற்றும் ரயில் போக்குவரத்துக்கூட, தடைபெற்று விடுகிறது. இந்தப் பனி மழை இடையே Fog என்று சொல்லப்படும் மூடுபனி வேறே. இந்த மூடுபனி வந்து சூழ்ந்து கொண்டால் எதிரில் வரும் உருவம் கண்ணில் தெரியாது. ஏன்? மிகவும் கடுமையாக இருந்தால் நம் கையை நமக்கு முன் நீட்டினால், உள்ளங்கையைப் பார்க்க முடியாது. இப்படி இருந்தால் பாதையில் நடமாட்டம் என்ன கதியில் இருக்கும்? குளிரோ அப்பப்பா! நடுக்குகிறது. இந்த வருஷ குளிர்காலம் டிசம்பர் ஆரம்பத்திலேயே இப்படி இருந்தால் இன்னம் போகப்போக எவ்வளவு இருக்கப்போகிறதோ என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த ஊர்க்காரர்களுக்கு ஒரு திருப்தி. இந்த வருஷம்தான் அவர்களுக்கு வெள்ளை க்ரிஸ்மஸ், அதாவது எங்கும் பனியுடன் இருக்கப்போகிறதாம். இது 4, 5, வருஷங்களாக இல்லை. வெள்ளை க்ரிஸ்மஸ் கொண்டாடினால் நாட்டில் சுபிக்ஷம் உண்டாகுமாம்.

மேலே இதே வார்த்தைகளைப் பேசும் ஜனங்கள், மற்றொரு பக்கம் இன்னொரு உலக யுத்தம் வரப்போகிறது என்று பயப்பட்டு, தங்கள் தங்கள் அபிப்ராயங்

களைக் கொட்டித் தீர்க்கிறார்கள். சென்ற ஒன்று இரண்டு மாதங்களாகவே, இங்கு இந்தமாதிரியான பேச்சுக்கள், பஸ், ரயில், கடைகள் எல்லா இடங்களிலும் அடிபடு கின்றன. கொரியாவில் சீனத் துருப்பு கள் புகுந்ததும், அமெரிக்கர்கள் அணுக் குண்டு உபயோகப்படுத்துவதா இல் லையா என்று ஆலோசனை செய்யும் பொழுதும், இந்த நாட்டு ஆண் பெண் அடங்கலும் 2, 3 தினம் தூக்கமில்லாமல் பேசிவந்தனராம். நான் சந்திக்கும் ஒவ் வொருவரும், "ஐயோ யுத்தம் வந் தால் எங்களால் இந்தத்தடவை தாங்க முடியாது. யுத்தம் ஒய்ந்து 5, 6 வரு ஷம்தானே ஆகிறது; என்ன செய் யப் போகிறோமோ?" என்று பிரலா பித்ததோடு நிற்காமல் என்னைத் தாய் நாட் டுக்குத் திரும்பிச் சென்றுவிடு என்றும் புத்திமதி கூற ஆரம்பித்தனர். ஆனால் இங்கிலாந்து பிரதமர் அட்லி அமெரிக்கத் தலைவரை நேரில் கண்டுபேசி வந்தபின் இந் தமாதிரியான பேச்சுக்கள் சற்று ஒய்ந்து இருக்கின்றன. எப்படி இருந்தால் என்ன, கொரியாவில் யுத்தம் ஒருவாறு முடிந்து இதர சில்லறைச் சச்சரவுகளும் ஒய்ந்தால் தான் யுத்த பீதி ஒழியும் என்று பத்திரி கைகள் எழுதுகின்றன. எல்லாம் போகப் போகத்தான் தெரியும் என்றும் சிலர் தைரியப்படுத்திக் கொள்கின்றனர்.

இங்கும் அமெரிக்காவிலும் ஜனங்க ளிடை கலவரத்தை உண்டு பண்ணும் மற் றொன்று "Flying Saucers" பறக்கும் சாசர்கள் என்று சொல்லப்படும் ஒரு புதிய விமானம்தான். அநேகம் பேர்கள் இதை நேரில் கண்டதாகச் சாட்சி சொல்லு கின்றனர். தூரப்பார்வைக்கு ஒரு அலை சாசர் மாதிரி காணப்படுகிறதாம். விஞ்ஞா னிகளும், ஆராய்ச்சியாளர்களும், இந்தப் பறக்கும் சாசர்கள் இந்த உலகத்தையே சேர்ந்ததல்ல, செவ்வாய்க் கிரகத்தி லிருந்து வருகிறது, உலகத்தை அல்லா மல் எல்லா மண்டலத்திலும் ஜனங்கள் வாசம் செய்வதோடு அல்லாமல் நம் எல் லோரையும்விட அபூர்வ சக்தி வாய்ந்தவர் கள் என்றும் எழுதுகிறார்கள். இன்னம் சிலர் "இதெல்லாம் பொய், இந்த உலகத் தில்தான் ஏதோ ஒரு நாடு புதிய விமா னங்களையும் அபூர்வ யுத்த ஆயுதங்களை யும் கண்டுபிடித்து, புதுப் புது ஆராய்ச்சி களைச் செய்து வருகிறது; அந்த நாடுதான் எது என்று கண்டு பிடிக்க வேண்டும்" என்றும் கர்ஜனை செய்கிறார்கள். எதை நிஜம், எதைப் பொய் என்று நம்புவது? என்று பாமர ஜனங்கள் பிரலாபிக்கின் றனர்.

லண்டன் பத்திரிகைகளில் வாரப் பதிப் புகள் சில இந்த Flying Saucer என்ற விமானத்தின் சரித்திரத்தை நாலைந்து வாரங்களாகப் பிரசுரித்து வந்தன. நான் எழுதியபடி ஒவ்வொருவர் ஒவ்வொரு யோஜனை கூறுகின்றனர். ஆராய்ச்சி நிபு ணர்கள் என்னதான் உத்தேசமாய்க் கூறி னாலும், இது எங்கிருந்து வருகிறது, எந்த நாட்டைச் சேர்ந்தது என்று ஒருவராலும் நிச்சயமாகக் கூறமுடியவில்லை.

மேற்சொன்ன ராக்ஷஸ விமானம் (இந்தப் பெயர்தான் பொது ஜனங்கள் அளித்தி ருப்பது) யார் மனதைக் கலக்கினாலும் பெண்கள் தங்கள் நாகரிகச் சின்னங்கள் சிலவற்றைFlying Saucer Model என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இந்தப் புதிய பெயர் கொண்ட தலை அலங்கார மோஸ்தர் ஒன்று கிளம்பி இருக்கிறது. முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் தலை மயிரை வட்டமாகவும் அதில் அதிக கன மாக இல்லாமல் மட்டமாகவும் சிங்காரப் படுத்தப்பட்டிருப்பதுதான் இந்தப் புதிய மாதிரி. அதில் நாம் ஜடைவில்லை, திரு குப்பூ உபயோகிப்பதுபோல ஆபரணங் கள் வேறு. இங்குதான் Winter, Spring, Summer, Autumn என்று நான்கு காலத் திற்கும் ஏற்ற நாகரிகம் ஒவ்வொரு வருஷ மும் மாற வேண்டுமே. ஏதாவது புதிய பெயரைக் கொண்டுவந்தால்தானே பெண் கள் மனதும் கொஞ்சம் குஷிப்படும்.

பெண்களின் நாகரிகத்தைப்பற்றிச் சொல்லும்போது லண்டனின் Evening Standard என்ற பத்திரிகை பெண்களை உற்சாகப்படுத்த நடத்திய ஒரு சிறு போட்டியைப்பற்றி எழுதாமல் இருக்க முடியாது. இதை ஒரு எதிர்பாராத போட்டி என்றுதான் சொல்லவேண்டும். Christmas Belles என்ற தலைப்புடன் இதை ஆரம்பித்து நடத்தியவர் இந்தப் பத்திரிகையின் பெண்கள் பகு தியைநடத்திவரும் Veronica Papworth என்ற பெண்மணி. க்ருஸ்மஸ் பண்டிகைக் காக, கடைகளுக்குச்சாமான் வாங்கச் செல்

லும் பெண்மணிகள் மத்தியில் யார் இந்தத் தலைவரின் கண்ணுக்கு அழகாகப்படுகின்றனரோ அவர்கள் ஒரு Christam Belle ஆகப் பொறுக்கப்படுவர். அவருக்கு உடனேயே 5 பவுன் கடையில் செலவழிக்கப் பரிசு கொடுக்கப்படும். மொத்தம் 25 நாரி மணிகள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். இந்த 25 பெண்களுக்கும் ஒரு விருந்து அளிக்கப்பட்டு, அவர்கள் மத்தியில் மிகவும் அழகானவள் ஒருத்தி, நாலைந்து பிரமுகர்கள் கொண்ட ஒரு கோஷ்டியால் தீர்மானிக்கப்பட்டு, 50 பவுன் வெகுமதி அளிக்கப்பட்டாள். Veronica Papworth என்ற அம்மை ஒரு வாரம் கால்கடுக்க லண்டன் கடைகள் எல்லாவற்றிலும் நடந்து நடந்து ஒரு நாளைக்கு 5 பெண் மணிகளை மிகவும் கஷ்டத்துடன் தான் தேர்ந்தெடுத்தார் என்று சொல்லவேண்டும். பெண்களுக்கு அதிக சிரத்தையைக் கொடுத்தது இந்தப் போட்டி என்றுதான் நான் சொல்லுவேன். நானும் கடைகளுக்கு இந்த வேடிக்கையைப் பார்க்கச் சென்றிருந்தேன். ஆனால் என்னை அவர்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளவில்லை.

பிறக்கப்போகும் புது வருஷம் 1951 இங்கிலாந்து சரித்திரத்திலேயே ஒரு மங்கள அம்சமாக விளங்கும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் பறைசாற்றுகிறது. காரணம், வருகிற வருஷம் மே மாதம் முதல் செப்டம்பர் மாதம்வரை நடக்கப் போகும் Festival of Great Britain தான். 1851-ஆம் வருஷம் இங்கு நடந்த ஒரு பெரிய கண்காட்சியின் 100ஆவது வருஷமாகிற 1951-ல் இந்தப் பெரிய திருநாளைக் கொண்டாடச் செய்யப்படும் ஏற்பாடுகள் அநேகம். இந்த வைபவத்திற்கென்றே தேம்ஸ் நதிக்கரையில் பல ஆயிரம் பவுன்கள் செலவிடப்பட்டுக் கட்டப்பட்டு வருகிறது ஒரு மண்டபம். பொதுவாக லண்டன் நகரில்தான் அதிகம் கொண்டாட்டங்கள் இருந்தாலும் மற்ற நகரங்களும் தங்கள் தங்கள் திறமையைக் காட்டி, கண்காட்சிகளையும் விளையாட்டுகளையும் நடத்துமாம். ஜனங்கள் யாவருக்கும் கொண்டாட்டம் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இங்கிலாந்தின் திறமையையும், புதுப்புது ஆராய்ச்சிகளையும் வெளிநாடுகளுக்கு எடுத்துக்காட்ட விவசாயம், மின்சாரம், கலை உணர்ச்சி, கைத்தொழில் யாவும் நிறைந்த கண்காட்சிகள் பல ஏற்பாடு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு மக்களை அழைத்து, தங்கள் நாட்டில் வந்து தங்கும்படி இந்த அரசாங்கத்தார் அழைப்புகளை அள்ளி வீசுகின்றனர். மேலும் அவர்கள் வந்து இந்த நாட்டில் வசதியாகத் தங்குவதற்கு இடம் கொடுக்க, இந்நாட்டு மக்களை விடுமுறை எடுத்து அன்னிய நாடுகளுக்குச் செல்லுமாறு பிரசாரம் செய்கின்றனர். பண வசதி வேண்டாமா என்று ஆக்ஷேபம் செய்தால், போக்கு வரத்துக் கட்டணங்கள் 30 சதவிகிதம் குறைக்கப்படும் என்று பிரயாண இலாகா கூறுகிறது. எல்லாவற்றையும் கேட்டால் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கப் போகிறது பிறக்கப்போகும் புது வருஷம் என்று தோன்றுகிறது. கோடையில் மேல்நாட்டுக்கு விஜயம் செய்ய எண்ணி இருக்கும் சகோதர சகோதரிகள் யாவரும் முன்னேற்பாடுகளை இப்பொழுது முதலே செய்யுங்கள். பிரயாண வசதியும், குடியிருப்பு வசதியும் கொஞ்சம் கஷ்டம்தான். மற்றவை அடுத்த மாதக் கடிதத்தில் காண்க. ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

தொடர் கதை

கே. எம். முன்ஷி — ஸுரேந்திரநாத் சாஸ்திரி

மொழி பெயர்ப்பு — கீழையூர் தி. சேஷாத்திரி

அத்தியாயம் — 13

உமாவும் சங்கரனும்

பௌஷ சுக்கில—பூர்ணிமா—வியாழக்கிழமை. ஆறு நாட்களாகவே சௌளாவினுடைய வாழ்க்கை ஆனந்த நடன மயம்தான். நிமிஷத்துக்கு நிமிஷம் ருத்ராவதாரமான பீமதேவன் ஜபம், அவருடைய எண்ணம், அவருக்கு ஊழியம், அவருக்கு வழிபார்த்து நிற்றல்—இவைகள்தான் சௌளாவின் உயிர்ப்பாக ஆகிவிட்டன. பகவான் சங்கரர் திரிபுரசுந்தரிக்கு விரோதமாக வந்திருக்கிறார், ஆனால் அவள் உமா அவருடைய சேவைக்குத் தயாராய்க் காத்து நிற்கிறாள். இந்தக் கற்பனையில் அவள் ஈடுபட்டிருந்தாள். இதுவரை அனுபவித்துக் கண்டிராத ஒரு புதுப் பேரானந்தத்தில் அவள் முழுகியிருந்தாள்.

கோயில் மதில் சுவரின் உட்புறத்தில் கோயிலின் வெளிப்புறத்தில் ஒரு மண்டபமும், முதல் மாடியில் மூன்று பெரிய அறைகளும் உண்டு. அவைகளில் ஒன்றில் மகாராஜா பீமதேவன் தங்கியிருந்தார். நடு அறையில் குருதேவர் எழுந்தருளியிருந்தார். மூன்றாவது அறையில் தான் சௌளாவும் மற்ற இரு சேவிகைகளும் தங்கியிருந்தனர். அறைக்கு வெளியே நான்கு

பக்கமும் மொட்டை மாடி வெளி அதிகம் இருந்தது. புருஷர்கள் அநேகமாக வெளியில் தானே இருந்தனர். அவள் குருதேவர் அறை வழியாகப் பீமதேவன் அறைக்கு ஓடிவிடுவாள். சிரிப்பாள் ஆடுவாள் பாடுவாள். சில சமயம் அம்மாவிடம் இரைந்து பேசுவாள். சிலசமயம் பீமதேவனையே பிடித்து அவனிடம் அவளுடைய குழந்தைப் பருவக் கதை எல்லாம் சொல்லச் சொல்லிக் கேட்பாள். அன்றன்று பீமதேவன் செய்யும் வேலை எல்லாம் கேட்டுப் பார்த்து விம்மிதம் அடைவாள். சிலசமயம் கோயிலின் உள் கோபுரத்தின்மீது ஏறி மிக உயர்ந்த வாயில் வழியாகப் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் கோட்டைச்சுவர், அகழ், பிராகாரங்களில் நிற்கும் படைவீரர்களின் கும்பல், ஆயுதம் தாங்கிச் செல்லும் வீரர்களின் கூட்டம் இவைகளைப் பார்ப்பாள்; அங்கேயே ஒரு ஆட்டமும் ஆடிக்கொள்வாள். இரண்டொரு தடவை அவள் அங்கிருந்தபடியே சேனாதிபதிகளுடன், ஊருக்கு வெளியே சுற்றும் மகாராஜாவையும் பார்த்தாள். உயர்ந்து, கவசம் அணிந்து, தேஜஸ் பொருந்தி கட்டளையிடும் அவரை, எல்லோரும் மரியாதையுடனும் அன்புடனும் பணிந்து ஏத்தும் அந்த மகாராஜரை அவள் பார்க்கும்போதெல்லாம் அவள் உள்ளம் அவளிடம் இருக்காது. ஒரு நாளுக்கு ஒரு தடவை எப்படியாவது அவள் கடவுளுக்கெதிரே நாட்டிய மாடிவிடுவாள். அங்கே இப்பொழுது கூட்டம் கூடுவதில்லை. வில்வபத்திரம் போடக்கூட யாராவதுதான் எப்பொழுதாவது வருவார்கள். அநேகமாக அவளும் அவளுடைய பகவானுமே இருந்து வந்தனர், ஆதலால் அவள் அவனிடம் தன் மனதிலுள்ளதைத் தைரியமாய் இரைந்து சொல்லி ஆடுவாள்.

இந்தச் சுகத்தோட்டத்தில் ஒரே ஒரு விஷச்செடி இருந்தது. அவள் எங்காவது வெளிக்கிளம்பினால் சிவராசி சுற்றினான். ஹரதத்தன் கண்டால் குனிந்து நமஸ்காரம் செய்வான்; அவள் ஓடிவிடுவாள்!

நாள் ஆக ஆக, பீமதேவன் வேலையும் அதிகரித்து வந்தது. அவரும் வேலையிலேயே முற்றிலும் ஈடுபட ஆரம்பித்தார். இரவில் வெகுநேரம் கழித்து இருக்கைக்கு வருவார், ஸ்நானம் போஜனம் செய்து படுத்துக்கொள்வார். அநேகமுறை அவளே, ஆகாரம் பரிமாறுவாள். கொஞ்சம் பேசுவாள். பிறகு குரு தேவர், ராய், பரமார் யாராவது வந்துவிடுவார்கள். எல்லோரும் பின்பக்கம் திறந்தவெளியில் உட்கார்ந்துகொண்டு மிகவும் முக்கியமான சமாசாரம் பேசத் தொடங்கிவிடுவார்கள். அந்தச் சமயம் சௌளா அறையின் ஒரு மூலையில் இருந்து பார்த்துக்கொண்டு நிற்பாள். பீமதேவன் கொஞ்ச நேரம்தான் தூங்குவார்; அவள் தன் தாயாரிடம் சென்று குப்புறப் படுத்திருப்பாள்.

பௌஷ மாதம் சுக்லா சதுர்தசி புதன்கிழமையன்று மகாராஜன் மிகவும் நேரம்சென்று வந்தார், போஜனம் செய்து மேல்பக்கம் போய் விட்டார். சௌளாவும் வழக்கம் போல் ஒளிந்துகொண்டு நின்றாள். இன்று ஒருவரும் வரப்போவதில்லை என்று தெரிந்தது. மகாராஜா தனியாகவே அலைந்துகொண்டிருந்தார். தலையைக் குனிந்து—நீண்ட அடி வைத்து—ஏதோ மிகவும் முக்கியமானதொரு கவலையில் ஈடுபட்டவராக அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார். சௌளா அவருடன் பேசத் துடித்தாள். ஆனால்தைரியம் வரவில்லை.

பீம தேவன் நின்றார், தம் அறைப்பக்கம் திரும்பினார். சௌளா நிற்பது எப்படியோ தெரிந்துவிட்டது. யாரோ என்று எண்ணி, பீமதேவன் வாளில் கை போட்டு, யாரது? என்று அதட்டினார்.

சௌளா வெளியே வந்தாள். "அட சௌளாவா ? இந்த நேரத்திலே ?"

மகாராஜாவின் கண்கள் அலை மோதின நிலவில் சாராயக் கோப்பைகளாயின. சௌளாவின் இதயம் வெடித்துவிடும்போலிருந்தது.

அவள், "மகாராஜா! தூங்குங்கள். நாளைக் காலையில் எழுந்திருக்க வேண்டாமா?" என்றாள்.

"சௌளா! எனக்குத் தூங்குவதும் விழிப்பதும் ஒன்றுதான்"

சௌளா பீமதேவன் எவ்வளவு களைப்பும் அலுப்பும் கொண்டிருக்கிறார் என்று தெரிந்துகொண்டாள்.

சௌளா நான்கு பக்கமும் ஒரு முறை பார்த்துவிட்டு அருகில் வந்து, "நான்தான் ஒரு அடிமை இருக்கிறேனே, மகாராஜா. என்னால் ஏதாவது ஆகும் என்றால் உத்தரவு இடக்கூடாதா ?" என்றாள்.

பீமதேவன் உள்ளம் மதுஉண்டது. அவர் ஒரு முறை அந்த ரோஜா உதடுகளையும் ஆசைக் கண்களையும் பார்த்தார். இந்த அப்ஸரஸைத்தான் அவர் ஒரு முறை தம் கையிலே ஏந்தி அணைந்திருந்தார். எல்லாம் ஞாபகம் வந்தன. அவருடைய தலைச் சுமை குறைந்தது. அவருடைய நரம்புகளில் சங்கீதத்தின் எல்லையற்ற ஒலி அலை அடித்து எழும்பிற்று.

"சௌளா" என்றாரம்பித்தது மகாராஜா வீணுடைய ஆவல் துடிக்கும் குரல். "உன்

எதிரில் இருந்தாலேயே என் சுமை குறைகிறது என்று நம்புகிறேன். நீ சொன்னது உண்மையாகி நான் வெற்றிபெற்றால் என் சுமையை எப்பொழுதும் உடன் இருந்து குறைக்கவேண்டும், சம்மதம்தானா?" என்றார்.

வார்த்தைகளைவிட அதன் பொருளும் அதைப் பற்றி எழுந்த கற்பனையும் சௌளாவைக் கட்டியணைந்து கசக்கின.

"மகாராஜா! அப்பொழுது என்னை நீங்கள் மறந்துவிடமாட்டீர்களா?"

"என்ன, உன்னை மறப்பதா? இரண்டும் பரஸ்பர விசேஷமான சொற்கள் அல்லவா?" என்று சொல்லிக்கொண்டே பீமதேவன் தன் கையை அவள் தோள்மேல் வைத்தார். இருவர் உடலிலிருந்தும் ஒன்றன்பின் ஒன்றாய் இன்பத் தீ ஜ்வாலைகள் எழுந்து ஓங்கிச் சென்று அடங்கின.

"ஒருநாளும் இல்லை!" என்று சொல்லி, பீமதேவன் அவளை அப்படியே வாரித்தூக்கி அணைந்து முத்தமிட்டார். இருவரும் சற்றுநேரம் தங்களையே மறந்தனர். அவர்கள் பிரிந்தபோது இயற்கையே சங்கீதம் பாடினாள் அழகுடை அணிந்து. இருவரும் சற்றுநேரம் பேசவேயில்லை. சௌளா நிலவுப் பெண்போல் ஆகிக்கொண்டிருந்தாள்!

2

டங்காக்கள் அலறின; புது உற்சாகத்துடன் மகாராஜா குதித்து வெளியேறினார். அவருடைய கண்களில் இன்று ஒரு புத்தொளி வீசிப் படர்ந்தது. அவர் கைகளில் எல்லையில்லாத பலம் போராடத் துடித்துக்கொண்டிருந்தது. இன்று அவருக்குக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. அதற்குள்ளேயே குருதேவர் ராய் ரத்னாதித்யர், பரமார், சாளுக்கிய அரசர், கமாலாக்காணி எல்லோரும் மந்திரிகள் முதலியோருடன் குழுமி அவரை எதிர்பார்த்து நின்றனர். ஒரே குதியில் மகாராஜாவும் கோட்டைச் சுவரின்மேல் வந்துசேர்ந்தார். நான்கு பக்கமும் இன்னும் இருள் பிரியவில்லை. தொலைவில் அங்கங்கே ஆயிரக்கணக்கான தீவட்டிகள் முகம் வெளுக்கப் பிரகாசம் கொடுத்துக்கொண்டிருந்தன. அமீருடைய வரவை அறிந்து பீமதேவன் மார்பகம் விரிந்து பருத்தது. "ராய்! வந்துவிட்டான்-வந்துவிட்டான் போ! சேனையைத் தயாராக்கு." என்று கத்தினார் அரசர்.

கிழக்கு வெளியில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது. 'பீமதேவா. இது என்ன?' என்று கேட்டார் குருதேவர். காடுகளிலிருந்து ஒன்றிரண்டு கறுத்த உருவங்கள் வெளியேறி வெளிச்சத்தில் வந்துகொண்டிருந்தன. அந்த உருவங்கள் எண் அதிகமாயின; நூறு, இருநூறு மேலே, இன்னும் அதிகம், இப்படியே அதிகரித்தன. சிலர் குதிரைமேல் வந்தனர். சிலர் வண்டியில் அவர்கள் அருகில் வர ஆரம்பித்தனர். அவர்கள் கலவரத்தை உஷக்காலத்துக் காற்று அங்கே தாங்கிவந்தது.

ராய், தேல்வாடா மக்கள் ஓடிவருகிறார்கள்போலிருக்கிறது என்றார். நீர்ச்சொட்டுகள் விழுவதுபோல் மனிதர்கள் காட்டுக்குள்ளிருந்து வெளியேறி வந்தனர்.

குருதேவர் தம் கடவுளிடம் கூறினார். "போலாநாதரே! நீர் எதுசெய்தாலும் சரி."

மந்திரி விமலன்: "அட, அவர்களிடையே பெண்களும் சிறுவர்களும்கூட இருக்கிறார்கள் போலிருக்கிறதே."

குருதேவர்: "ஐயோ, அவர்கள் அதோ விழுகிறார்களே அட சிவ, சிவா சிவா..." வெளிச்சம் ஆகிவந்தது. அழுகைக்குரல் இட்டுக்கொண்டு ஆண்களும் பெண்களும் அருகே வந்தனர். எவ்வளவோ மக்கள் நடுவிலேயே விழுந்தும்விட்டனர்.

பீமதேவன் உதட்டை உதட்டுடன் சேர்த்து, "என்ன தேல்வாடாவும் வீழ்ச்சியடைந்துவிட்

டதா?" என்று கேட்டார். அவர் குரலில் ஆழ்ந்த ஓர் உணர்ச்சி தொனித்தது. அவர் கண்கள் அந்தப்பக்கம் ஆகாயவெளியில் சுழன்றன. அவர் விமலனுக்குக் கட்டளையிட்டார்:

"விமலா போ. நதிப்பக்கம் உள்ள கதவைத் திறந்து எவ்வளவு படகுகள் முடியுமோ அவ்வளவை எடுத்துச் சென்று அகழில் நிறுத்து. உயிருடன் தப்பி வருபவர்களை எல்லாம் உள்ளே அழைத்துவா."

கிழவன் கமாலாக்காணி குறுக்கிட்டான். "இவர்கள் எல்லோரையும் உள்ளே அழைத்து என்ன செய்வது? சாளுக்ய அரசே! நம்மிடம் இரண்டு மாதத்துக்குப் போதுமான உணவு கூட இல்லையே."

"லாக்காணி, இரண்டு மாதமா கஜினி தங்குகிறான்! அப்படியானால் அவன் தொலைந்தான் என்று நிச்சயம் செய்துகொள். சரி விமலா, நம்மிடம் எவ்வளவு வாகனங்கள் இருக்கின்றன?"

"மூன்று இருக்கின்றன, மகாராஜா?"

"பெண்களையும் குழந்தைகளையும் அவைகளில் ஏற்றி வெளியே அனுப்பு."

சரி என்று பணிந்து விமலன் சென்றான்.

ராய் இடையிலே கட்டித் தொங்கிய சங்கை எடுத்து ஊதினான். அதன் நாதம் நான்குபக்கமும் அலறிப் பரவிற்று. டங்காக்களும் நகராக்களும் சண்டைக்கு அழைப்புவிட்டன. சூரியோதயத்துக்கு முன்னரே பிரபாசி முழுவதும் யுத்தத்துக்குத் தயாராகி நின்றது. காலையில் எழுந்த சூரியன் கோட்டைச் சுவரின்மேல் மூவாயிரம் வில்வீரர்கள் அம்பைத் தயாராய் வில்லில் ஏற்றி வரிசையாய் நிற்பதைக் கண்டான்.

ஒட்டகங்கள்கூடச் சுவரின்மேல் பாகத்தில் நகராக்களைத் தாங்கி நிறுத்தப்பட்டிருந்தன. சேனாதிபதிகள் அழகிய சுவர்மேல் ஏறி, பெரிய பிராகாரச் சுவர்களின்மேல் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

கங்காவும் சௌளாவும் கோபுரத்தின்மேல் அறைகளில் ஏறிக்கொண்டனர். நான்குபக்கமும் சேனை, அங்கங்கே பறக்கும் கொடிகள்— கோட்டையின் அழகைக் கண்டு சௌளா பிரமித்துவிட்டாள். "அம்மா, பார் அம்மா. கோட்டையின் அழகை, எட்டே நாளில்என்ன மாய வேடிக்கை நடந்துவிட்டது அம்மா."

மிக உயர்ந்த ஓர் இடத்தில் குருதேவர் மற்ற அரசர்களுடன் நின்றுகொண்டிருந்தனர். அவர்களும் பீமதேவனைத்தான் புகழ்ந்து வந்தனம் செலுத்திக்கொண்டிருந்தனர். பிரபாசிக் கோட்டை வீர உயிர்ப்புக் கொண்டுசூரியனுடைய உதயகிரணங்களின் அஞ்சலியை ஏற்றுக் கொண்டிருந்தது. அதன் மேல் ஸோமநாதருடைய கொடி உலகுக்கெல்லாம் நன்மைதரும் பாவனையுடன் பறந்துகொண்டிருந்தது.



மகாராஜா ஒரு பெருமூச்சுவிட்டார். தம் கட்சிச் சக்தியில் நம்பிக்கையுடன் கத்தியை உருவி 'ஜய் ஸோம்நாத்'! என்று ஒரு கோஷத்தைக் கிளப்பினார். மூவாயிரம் வீரர்களும் கூடவே முழக்கம் செய்தனர். திடீர் என்று மகாராஜா— 'ராய் அதோ பார்!' என்று கத்தினார். அங்கே நதியின் கரை ஓரமாகவே ஒரு குதிரைச்சேனை கோட்டையை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தது.



'இந்தப் பக்கமும்' என்றான் பரமார். அங்கேயும் ஒரு சேனை வந்துகொண்டிருந்தது.

"நதியின் பக்கம் நம் வழியை அடைத்துவிட இவர்கள் முயற்சி செய்கிறார்கள் போலும்."

ஒருபுறம் வருகிற சேனை இயந்திரம்போல் தொடர்ந்து இயங்கி முன்னேறி வந்துகொண்டிருந்தது. பிரபாசிக் கோட்டையின் அந்தப் பக்கம் அகழின் அக்கரையில் காலமுகர்கள் வசித்து வந்தனர். குருதேவர் அவர்களை உள்ளே அழைத்தார்; அல்லது கம்பாதத்துக் காவது போய்விடுங்கள் என்று சொன்னார். ஆனால் பயங்கரமான வாழ்வில் மற்றதை மறந்து நிற்கும் அவர்கள் குரு அதை மறுத்து விட்டார். எந்தச்சண்டையிலும் யாரும் அவர்களிடம் வந்து அவர்களை எட்டிப் பார்த்தது கூடக் கிடையாது. இந்தச் சண்டையில் மட்டும் யார் தொந்தரவு செய்வார்கள்? பாவம், வருகிறவன் ஹிந்துமத விரோதி என்று அவர் கண்டாரா?

கஜினி முகமதின் சேவகர்கள் இவர்கள் பெருமையை எப்படி உணர்வார்கள்! தோட்டக்காரன் புல்லை அறுத்துக் குவிப்பதுபோல் குவித்துவிட்டனர். குருதேவருக்கு என்றுமே அந்தச் சம்பிரதாயிகளிடம் அனுதாபம் இருந்தது கிடையாது. அவர் ஒரு பெருமூச்சுவிட்டு "போலாநாதரே, நீர் எது செய்தால் யார் என்ன செய்யமுடியும்?" என்றார்.

இவ்வளவில் தேல்வாடா பக்கம் பார்த்த மகாராஜா அப்படியே மலைத்து நின்றார். அந்த வழியில் எல்லை தெரியாத ஒரு பெரிய சேனை கடல் ஆரவார அலையடித்து வந்துகொண்டிருந்தது.

"ராய், பரமார். நீங்கள் இருவரும் ஆற்றின் வழியைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் இந்தச் சைனியத்தைப் பார்த்துக்கொள்கிறேன்."

ராயும் பரமாரும் தங்கள் இடத்துக்குச் சென்றனர். கஜினியின் சேனை தேல்வடாவின் காட்டுப் பக்கத்திலிருந்து அகன்று பரந்து அலையடித்து வந்துகொண்டேயிருந்தது. குதிரை வீரர்கள் ஆவேசத்துடன் வந்துகொண்டிருந்தனர். ஐந்தா, ஐம்பதா, ஐந்நூறுதானா? ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளே புக முடியாதபடி அணிவகுத்தபடி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் கைகளிலே அம்பு ஏந்தி வில் தயாராயிருந்தது. அவர்களுக்குப் பின்னே யானைகள் நகரும் கோட்டைகள் போல் வந்துகொண்டிருந்தன? அதற்கும் பின்னால் வந்த சில யந்திரங்களைப் பீமதேவன் தம் ஆயுள் நாட்களிலே பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை.

விமலன் மெதுவாக, 'மகாராஜா! சாமந்தன் சொன்னது அவ்வளவும் உண்மைதான்.

இது என்ன சேனையா இது? ஒரு நகரமே யல்லவா திரும்பிவந்திருக்கிறது' என்றான்.

"சரி, கடவுள் நம் பக்கம் இருக்கிறார்!" என்றார் பீமதேவன்.

குருதேவர் மகாராஜாவுடைய தோளில் கை வைத்து, "பீமதேவா. தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய இந்த யுத்தத்தை உனக்குத் தந்திருக்கிறார் ஸோமநாதர்." என்றார் ஆசிர்வாதம் செய்துகொண்டே.

"குருதேவா! தேவர்களும் செய்திராத ஒரு யுத்தத்தை நானும் இன்று செய்து காண்பிக்கிறேன்."

பிரபாசி நகரைச் சூழ்ந்து நின்று எக்களித்தது யவனர் சேனை. பிரளய காலத்துச் சமுத்திரம்போல் சூழ்ந்த அந்தச் சேனை 'அல்லாஹோ அக்பர்' என்ற ஒரு முழக்கத்தால் உலகையே மூழ்க அடிக்க முயன்றது.

பீமதேவன் குருதேவரை அங்கேயே இருக்கச் சொல்லி, உத்தரவு வாங்கிக்கொண்டு, கமாலாக்காணியுடன் அப்பால் நடந்தார். விமல மந்திரியும் அவர்களுடன் சென்றான். அவர்கள் உச்சியிலிருந்து கீழே இறங்கினர். முக்கிய வாசலுக்கு மேல் ஓடிச்சென்று நின்றனர். அகழுக்கு மறு கரையில் குதிரைப்படை சூழ்ந்துநின்றது. அந்த அணிவகுப்பைப் பற்றித்தான் என்ன சொல்ல! மிகவும் அழகாகவும் முன்பின் பார்த்திராததாகவும் இருந்தது. மூன்று பக்கங்களிலும் மூன்று கும்பல்கள். எல்லோர் கையிலும் நாணேற்றிய வில்லில் அம்பு வைத்து நின்றனர். ஆனால் ஒருவரும் அம்பை மட்டும் விடவில்லை, நதிப்பக்கம் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் பிரபாசிக் கோட்டை சூழப்பட்டுவிட்டது.

மீண்டும் அல்லாஹோ அக்பர் என்ற முழக்கம் எழும்பிற்று. பீமதேவனும் அவர் வீரர்களும் ஜெய் ஸோம்நாத் என்று எதிர்முழக்கம் செய்தனர். பகைவர்களால் சூழப்பட்டுப் பீமதேவன் முதலிய வீரர்களைத் தாங்கி நிற்கும் அந்தக் கோட்டை காளிய மடுவில் படமெடுத்தாடும் பாம்பின் மேல் நர்த்தனமாடிய கண்ணனைப் போன்று தோற்றமளித்தது.

கஜினிமுகம்மத் பிரபாசிக் கோட்டையின் பலத்தை அளந்துகொண்டே முன்னேறினான். அவனுடைய வீரர்கள் அல்லாஹோ அக்பர் என்று கோஷமிட்டனர். ராஜபுத்திரர்களும் 'ஜய் ஸோம்நாத்' என்று எதிர்கோஷம் செய்தனர். பீமதேவன் கை மீசையைத் தடவிக்கொடுத்துக்கொண்டது.

மகமூத் வெகு நேரம்வரை பிரபாசிக் கோட்டையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு வில் வீரர்களில் சிறந்தவர்களிடம் விடு அம்பை என்று உத்தரவு கொடுத்தான். ஒருவன் அம்பு அகழிலே முழுகிற்று. மற்றொருவனுடைய அம்பு சுவரில் மோதி அகழிலே விழுந்து மாண்டது. ராஜபுத்திரன் சேனை இதைக்கண்டு கடகட என்று சிரித்தது. மகமூத் வெகுண்டு முன்னேறினான். அவன் ஒரு அம்பை விட்டான். மகாராஜாவும் தான் தயாராயிருந்தாரே! அவர் அம்பும் வில்லை விட்டு 'ஜிவ்' என்று வெளியேறிற்று. இருவர் அம்புகளும் ஒன்றை ஒன்று தாண்டித் தம் வழிச் சென்றன. மகமூத் அம்பு கோட்டைச் சுவரில் உராசிக் கீழே விழுந்தது. மகாராஜாவின் அம்பு காற்றுவேகத்தில் வந்து மகமூத்தின் வயிற்றில் பாய்ந்து, குதிரை வயிற்றில் தைத்தது. குதிரை கீழே விழுந்து உருண்டது. வீரனும் புரண்டான். ராஜபுத்திர சேனை அலறிச் சிரித்தது. அந்தச் சேனையிலும் பல வீரர்கள் மகாராஜாவைப் பார்த்துத் தங்கள் அம்புகளையும் எய்தனர். ஆனால் எல்லாம் அகழியிலேயே நீந்த ஆரம்பித்துவிட்டன.

மகமூத் புண்ணுக்குப் பட்டி கட்டிக்கொண்டு மஹமூத்தினிடம் வந்து சேர்ந்தான். இன்று அமீர் சண்டை துவக்குவதாக இல்லை. அவன் சேனை சற்றுநேரம் நின்றது. பிறகு அமீர் உத்தரவுபெற்று அங்கேயே பாசறை அமைத்துச் சாப்பிடவேண்டிய ஏற்பாட்டைச் செய்யத் தொடங்கிவிட்டது.

பிரபாசியில் வெற்றி முழங்க ஆரம்பித்தது. முதல் அம்பு ராணாவே செலுத்தினார். இது மிகவும் நல்ல ஆரம்பம் என்று எல்லோரும் சொல்லொணாச் சந்தோஷ வெறிகொண்டனர். நடுப்பகலில் பார்க்கும்போது மகமத்தின் சேனை ஏதோ மாதக் கணக்கான நாட்களுக்கான ஏற்பாட்டைச் செய்வதுபோல் தோன்றிற்று. நாலாபக்கங்களிலிருந்தும் மண் கொண்டுவந்து வில் வீரர்களுக்கு மறைவாகச் சுவர் எழுப்பிக்கொண்டிருந்தனர். அன்று முழுவதும் அந்த வேலைதான் நடந்து கொண்டிருந்தது. கோட்டைமேல் நின்ற ராஜபுத்திர வீரர்கள் இதைப் பார்த்துப் பார்த்துச் சிரித்தனர்.

3

ஓரதத்தன் பைத்தியம்கொண்டவன்போல் ஊர்முழுவதும் சுற்றித் திரிந்தான். ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு திரிபுரசுந்தரி கோயில் கதவை அடைத்துவிட்டார்கள். அவளைத் தரிசிக்கவே முடியாமல் போய்விட்டது. பூஜை செய்யும் உரிமையையும் பறித்துவிட்டார்கள். கூடவே கள், மாமிசப் பிரசாதமும் கிடைப்பது நின்றுவிட்டது. கள் நாற்றத்தில் விசிறப்பட்டு, ஆடும் ஆண் பெண்களுடைய அழகில் சிதறி மனதை மயக்கும் அந்த உத்ஸவங்களும் நின்றுவிட்டன. அவன் ஆடம்பரமாய்ப் பூஜை செய்த இடத்தில் இன்று குரு

தேவர் தனித்துச்சென்று மௌனமாய்ப் பூஜை விதிகளை நிறைவேற்றி வந்துகொண்டிருந்தார். அவனுடைய மகாமாயையின் கோயில் சிறையும் மயானமும்போல் ஆகிவிட்டது. அவனுடைய நித்யானுஷ்டானம் ஒழிந்துவிட்டது. ஆகவே அவன் நாள் பூராவும் பல்லைக் கடித்து உறுமிக்கொண்டு சுற்றியலைந்துகொண்டிருந்தான்.

சில கோயில்களைப் படைவீரர்கள் ஆக்ரமித்துக்கொண்டிருந்தனர். இதையும் பார்த்த அவன் கண்கள் ரத்தம் சிந்தின. இந்தப் புனிதமான இடத்தில் இம்மாதிரியான இழிவு நடத்தை என்றுமே நடந்ததில்லை. பின் எப்படி மகமுத் வராமல் இருப்பான்? ஹரதத்தனுடைய சிறிய அறிவுக்கு, வழிதவறிய குருவைத் தண்டிக்கவே மகமுத் உருவத்தில் கடவுள் யாரையோ அனுப்பியிருக்கிறார் என்று தான்பட்டது. யார் ஜயித்தாலும் யார் தோற்றாலும் அவனுக்கு ஒன்றுதான். அவனுக்குக் கோவில் திறந்தாகவேண்டும்.

இப்படி எண்ணி வளையம் வந்த அவனுக்கு ஏற்றவாறு சில தோழர்களும் வந்து சேர்ந்தனர். ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். ஆகா, பூஜை போயிற்றே. அந்தப் பிரசாதமும் போயிற்றே, இதற்கெல்லாம் யார், அந்தக் குருதானே பொறுப்பாளி? இன்னம் அவர் என்னென்ன பாபம் செய்திருக்கிறாரோ? மஹாமாயையின் கோயிலைச் சாத்தினதொன்றே போதாதா?

குருதேவர் தம் இருக்கையில் அமர்ந்திருந்தார். எதிரே சென்று ஹரதத்தனும் மற்றச் சில சாதுக்களும் அமர்ந்தனர். அவர்கள் இருக்கும் நிலையில் இருந்தே குருதேவருக்கு அடங்கிப் பேசுகிறவர்களாக இல்லை.

“குருதேவா, மஹாமாயையின் கோயிலைத் திறவுங்கள். இல்லாவிட்டால் இந்த ஆபத்துப் போகாது. என்றாவது இந்தக் கோயில் மூடப்பட்டதுண்டா?” ஹரதத்தன் கையில் சிமிட்டா சத்தம் காட்டிற்று. அவன் கண்கள் ஓநாயின் கண்கள்போல் தோற்றமளித்தன.

“கோயில் எங்கே மூடியிருக்கிறது. நான் தான் தினம் பூஜை செய்கிறேனே.” என்றார் குருதேவர் அமைதியாய்.

“ஆனால் எங்கள் தரிசனம்...?”

“நீங்கள் செய்த பிசகு. உங்களுக்குத் தரிசனம் நின்றுவிட்டது”

ஹரதத்தன் உறுமினான். “குருதேவா, என்னை இந்த ஐம்பது வருஷங்களாகக் குறை கூறியவன் கிடையாது. இன்று நீங்கள் செய்தீர்கள். இதோ கஜினி மகமுத் வந்துவிட்டான். மஹாமாயா சும்மா பொறுத்திருப்பாளா?”

கங்கசர்வக்ஞர் பதறாமல், “ஹரதத்தா, எனக்கும் லகுலேசன் அருளால் பூஜை விதிகள் எல்லாம் தெரியும்” என்றார்.

ஹரதத்தன் பின் ஏன் மஹமுத் வந்தானாம்? என்று கேட்டான்.

“தேவதை பூஜை என்ற பெயரால் புண்ணிய இடத்தில் அட்டூழியம் நடந்தது அதனால்...”

ஒரு சாது, “அது சரி நீங்கள் கதவைத் திறக்கப் போகிறீர்களா, இல்லையா?” என்று அதட்டினான்.

“முடியாது; என் செய்கையினால்தான் இந்தக் கஷ்டம் வந்ததென்றால் நான் கடவுளே. ஆபத்து எனக்குமட்டும் வரட்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.”

சர்வக்ஞர் அமைதி ஹரதத்தனை உலுக்கி எடுத்தது. “ஆனால் இந்த ஆபத்தெல்லாம் எங்களுக்கல்லவா வந்திருக்கிறது!” அவனுக்கு இருந்த கோபத்தில் குருதேவரிடமும் ஏதாவது அசட்டுத்தனம் செய்து விடுவானோ என்று பயமாயிருந்தது.

“அப்படியானால் இதெல்லாம் என் செயலின் பலனல்ல என்றுதான் சொல்லவேண்டும். நானும் இன்று பல வருஷங்களாகப் பாசுபத சம்பிரதாயத்தின் குரு பதவியில் இருந்திருக்கிறேன். நான் இன்றுவரை என் தர்மத்திலிருந்து தவறியதில்லை. இந்தச் சோதனை வந்த நாளிலும் நான் தவறப் போகிறவனில்லை. மகமூத்தை மகாராஜா விரட்டாதவரை மஹாமாயையின் கோயில் திறக்காது.”

“சரி இருக்கட்டும்” என்று உறுமிக்கொண்டே ஹரதத்தன் எழுந்துபோய்விட்டான். அவன் அப்படிச் செய்ததே நல்லதாய்ப் போயிற்று.

குருதேவர் ஒருமுறை, “மகாராஜா இவர்களை அனுப்பிவிடு என்று சொன்னபோது நாமும் ஒத்துப் போயிருந்தால் நல்லதாய்ப் போயிருந்திருக்கும்” என்று எண்ணிவிட்டுப் பிறகு தியானத்தில் ஈடுபட்டார்.

ஹரதத்தனும் மற்றச் சாதுக்களும் நேரே சிவராசி தவம் செய்யும் இடம் சென்றனர். அவன் பஞ்சாக்னி மத்தியில் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருந்தான். சிவராசி தன் தவம் பூர்த்தியடையாததனால்தான் மஹாமாயா ஏமாற்றிவிட்டாள் என்று நம்பினான்.

அவன் பார்வதியைக் குறித்துத் தவம் இயற்ற ஆரம்பித்திருந்தான்.

ஹரதத்தனும் மற்றச் சாதுக்களும் அவன் நிஷ்டையைக் கண்டு மகிழ்ந்து புகழ்ந்தனர். அவர்களுக்குக் குருதேவருடைய விசால அறிவு சாந்தமான சுபாவம், பெருந்தன்மை ஒன்றும் பிடிபடவில்லை. ஆனால் ராசியினுடைய சாதாரணமான சாதுவுக்கேற்ற குணங்கள் நன்கு புரிந்தன. தவம், விதிமுறை, லகுலேச மதத்தின் சாதாரண சம்பிரதாயங்கள் எல்லாம் அவர்களுக்கு விருப்பமானவைதான். சிவராசியை அவர்கள் நன்கு அறிவார்கள். அதனால்தான் அவர்கள் அவனிடம் அணுகி, தம் குறை கூற வந்தார்கள். அவர்களுக்குக் குருதேவர் பனி மூடிய உயர்ந்த சிகரத்தின் உச்சியில் அமர்ந்து பயமுறுத்துகிறவர்போல் காணப்பட்டார். ஆனால் ராசியோ மரங்களின் கீழே மற்றவருக்கும் நிழல்காட்டும் ஒரு சிறிய உச்சிபோல் காணப்பட்டான்.

ராசி சமாதி கலைந்தான். பஞ்சாக்னி மண்டலத்தின் மத்தியிலிருந்து வெளியேறி அவர்களை வரவேற்றான். ஹரதத்தன் ஒன்றுக்கும் பொறுக்கவில்லை.

"மஹாமாயையின் கோயில் திறக்காவிட்டால் நாங்கள் உயிரை விட்டுவிடுவோம்."

"குருதேவர் கட்டளை நமக்குத் தெய்வ ஆணை"

"அதற்காக? நாங்கள் மஹாமாயை தரிசனம் செய்யாமல் எப்படி உயிர் வாழ்வோம்? துடித்துச் சாவதா?"

"ஹரதத்தா, உன் பார்வை ஸ்தூலமாயிருக்கிறது. சூட்சுமமான ஆத்ம திருஷ்டிகொண்டு பார்த்தால் உண்மை விளங்கும். கோயில் மூடிய நாள்முதல் மஹாமாயை மானிட உருவில் அங்கும் இங்கும் திரிகிறாள், பக்தியுள்ளவன்தான் அந்த உருவில் மஹாமாயையைத் தரிசிக்க முடியும்."

"யாருடலில் சௌளாவிடமா?" என்றான் ஹரதத்தன்.

சிவராசி மிகவும் இயற்கையாக, "யாரப்பா மஹாமாயையைச் சுவரிற்குள் அடைத்து வைக்கமுடியும்?" என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

"பிறகு ஏன் இந்த மஹமூத் வந்தான்?"

"இதை அறியத்தானே நான் இவ்வளவு நாள் முயன்று கொண்டிருக்கிறேன். ஒருவாறு இதன் காரணத்தையும் ஸ்பஷ்டமாகக் கண்டுபிடித்துவிட்டேன்."

"என்ன அது?"

"அது மிகவும் கூடமானது. அதற்கும் ஓர் உபாயத்தை யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான் சிவராசி.

"எங்களுக்கும் சொல்லேன்?" என்று அங்கலாய்த்தான் ஒரு சாது.

"சமயம் வந்தால் சொல்லுகிறேன்."

ஹரதத்தன் பொறுமையிழந்தான். "ஊம் ஊகும், முடியாது. இப்பொழுதே சொல்லி விடுங்கள். இல்லையானால் மாயாதேவியின் கோயில் வாசலில் உண்ணாவிரதம் ஆரம்பித்து விடுவோம்."

"இவ்வளவுகூட என்னிடம் நம்பிக்கை இல்லையா? நீ மட்டும்தான் மஹாமாயையின் பக்தன். நான் அல்லனோ?" என்று சிவராசி கேட்டான்.

"நீங்கள் குருபக்தியை யல்லவா அதிகம் மதிக்கிறீர்கள்!" என்றான் ஹரதத்தன்.

"நான் குருபக்தனானபடியால் தான் மஹாமாயையிடம் அதிக பக்தியிருக்கிறது."

"அது சரி, இன்னும் மஹாமாயை அவளுடலில் இருக்கிறாள் என்று நம்புகிறீர்களா?"

"ஆம். அதற்கென்ன சந்தேகம்? இரவிலே அவள் தனித்துச்சென்று கடவுளுக்கு நடனமாடி மகிழ்விக்கிறாளே, அப்பொழுது சென்று பார் தெரியும்."

"அவள் நாட்டியமாடுகிறாளா, என்ன?"

"ஆமாம், பீமதேவ மகாராஜா அதிகாரத்துக்கு மஹாமாயை கட்டுப்படுவளா என்ன?"

"நன்றாய்ச் சொல்லும் சிவராசி! எங்களுக்கு உம்மைவிட்டால் யார் கதி? ஏன் சொல்லாமல் மறைக்கிறீர்?" என்று ஒரு சாது வேண்டிக் கொண்டான்.

"அதனால்தான் என்னிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று சொல்கிறேன்."

"நீங்கள் ஹரதத்தனிடம் சொன்னாலும் போதும், எப்படியாவது இந்தப் புனிதக் கோயிலுக்கு வந்த இழுக்காறு நீங்கவேண்டும்." என்று கைகூப்பி நின்றான் ஒரு சாது.

"சரி நான் ஹரதத்தனிடமே சொல்கிறேன். நீங்கள் போய் உங்கள் வேலையைப் பாருங்கள். மஹாமாயா எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள்" என்றதைக்கேட்ட சாதுக்கள்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமேட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

எல்லோரும் ஹரதத்தனை மட்டும் விட்டு வெளியேறினர்.

ஹரதத்தன், ' என்ன உபாயம் அது?' என்று கேட்டான்.

சிவராசி, 'அன்று முடியாத பூஜையை முடிக்கவேண்டும்!' என்று ஹரதத்தன் காதுக்குள் சொன்னான். இருவர் கண்களிலும் ஒளி சுடர்விட்டது.

4

பீமதேவ மகாராஜாவுக்கும் ஆனந்தம்தான். முதல் அம்பு அவருடையது. அவருடைய வில் திறமையைக் கண்டு எதிரியின் சேனையே அலறிப் போயிருக்கவேண்டும். கஜினி சேனை முற்றுகையை இரண்டு மாதம் நீடித்தாலும் இவர்கள் ஆனந்தமாய்க் காலம் கழித்து அவர்களைக் களைக்கவைக்கலாம். அல்லது அது எதிர்க்க ஆரம்பித்தாலும் அதைத் தோற்கவைக்கக்கூடிய அவ்வளவு சாதனமும் இவர்களிடம் இருந்தன, இப்படி எண்ணம் கொண்டு அவர் கோட்டையின் மேல் நாலா பக்கமும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். வீராமட்டும்தான் அவர் பின்னால் இருந்தான்.

அவர் நதியின் பக்கத்திலுள்ள கதவருகே சென்றார். அப்பொழுது ராவ் கமா ஒரு கண்ணால் நதியைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய முகம் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டிற்று.

"என்ன ராவ்? என்ன பார்க்கிறாய்?"

"அதோ பார்த்தீர்களா. மகாராஜா?"

மகாராஜா வானமுகட்டில் விழியை நிறுத்திக் கவனித்தார். "அதோ ஏதோ சில கரும் புள்ளிகள்போல் தோன்றுகின்றன. அது தானே!"

லாக்காணி, "ஆமாம் கப்பல்கள் அல்ல?" என்று கேட்டான்.

"எனக்குப் புரியவில்லையே!"

"நான் கச்ச தேசவாசி. குழந்தை முதல் கடலின் படியில் வாழ்ந்தவன். கப்பல்கள் தான் இந்தப் பக்கம் வருகின்றன. வந்ததோ நாம் தொலைந்தோம்." என்றான் கச்ச தேச வீரன்.

"ஏன்?"

"மகமூத் நதியின் கரையில் இரு புறமும் குதிரை வீரர்களை நிறுத்தி வைத்திருக்கிறான். நம்முடைய வாகனங்கள் அவன் பிடியிலே சிக்கிக்கொண்டால் நதியின் வழி அடைபட்டு விடும்."

கமாலாக்காணி மீண்டும் பார்த்தான். "சரி, ஒரு உபாயம் இருக்கிறது" கமா ஒரு கண்ணை மூடித்திறந்தான். "அங்கே சென்று கப்பல்களை நிறுத்தியாகவேண்டும்."

"அப்படியானால் நல்ல வீரர்களை அனுப்ப வேண்டும். அவசியம் ஏற்பட்டால் அவர்கள் படகுகளில் அமர்ந்து சண்டை செய்யலாம்."

கமா சிரித்தான். "மகாராஜா. இது சாதாரண வேலையா? அரை யோஜனை தூரம் முழுகிச் செல்பவர்கள் அல்லவா வேண்டும்?" அவனுடைய குரலில் நீந்தும் தைரியத்தின் பெருமை வண்ணம் காட்டி நின்றது.

"எப்படி?"

"என் சேனையில் சில வீரர்கள் இருக்கின்றனர். எகிப்திலிருந்து சீன தேசம் வரை யாத்திரை செய்துவந்தவர்கள். அவர்களை ஏற்பாடு செய்கிறேன்."

"அவர்கள் நதியில் இருந்து சண்டை செய்வார்களா?"

"அதுதான் எங்கள் குலத் தொழிலாயிற்றே."

"சரி அவர்களுக்கு 'நாயக்' யார்? என்னிடம் இருக்கும் ஓரிரு கம்பாத வாசிகளுக்கு இது தெரியாதே."

கமா மீண்டும் ஒரு முறை தன் ஒற்றைக் கண்ணை மூடி விழித்தான். "என் பையன் இருந்தால்......அது போகட்டும் எனக்குப் போன தீவாளிக்கு 72 வயதுதானே ஆயிற்று." என்று சிரித்துவிட்டு "அரை யோசனை தூரம் கண் மூடித்திறப்பதற்குள் போய்ச் சேர்ந்துவிடுவேன்."

"ராவ், சபாஷ், சபாஷ்"

"சரி. நான் சென்று, ஆட்களைப் பொறுக்கிச் சேர்க்கிறேன். இருட்டுவதற்குள் ஈராயிரம் வில்லம்புகள் இங்கே வரவேண்டும். மகமூத் கரையிலிருந்து அம்புவிட்டால் நம்மிடம் வரக்கூட வராது. ஆனால் குதிரைகளை நதியில் இறக்கிக்கொண்டு சண்டைபோட்டால் நாம் மாட்டிக்கொள்வோம். அந்தச் சமயத்தில் எங்களைக் காப்பாற்றுவது உங்களுடைய வேலை."

"ராவ் பயப்படாதே; அதற்கு நான் இதோ ஏற்பாடு செய்துவிடுகிறேன்."

அதிகச் சந்தடி செய்யாமல் பீமதேவன் நதிப் பக்கத்து வாசலின்மேல் இரண்டாயிரம் வீரர்களைச் சேகரித்து நிறுத்திவிட்டார். சூரியன் அஸ்தமித்தான். இருட்டுப் படர ஆரம்பித்தது. அமீர் சேனையின் பாசறைகளில் பல்லாயிரம் தீவட்டிகள் எரிய ஆரம்பித்தன. இங்கே தீவட்டிகள் ஏற்றவேண்டாம் என்று சக்கரவர்த்தியின் உத்தரவு. கமாலாக்காணி முந்நூறு நீந்தத் தெரிந்த வீரர்களுடன் பிரபாசி சமுத்திரக்கரைக்கு எதிரே இருந்த கோட்டைக் கதவருகில் போய் நின்றுகொண்டான். மகாராஜாவும் ராவும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். விமலன் கதவை மெதுவாகத் திறந்துவிட்டான்.

வீரனை கமா வில் அம்பருத்தூணிகளைக் கழுத்தில்சேர்த்துக் கட்டிக்கொண்டான். இடையிலே சிறுவாளைச் செருகிக்கொண்டான். கச்சையை இறுகக்கட்டிக்கொண்டு ஸோமநாதர் பெயரை ஸ்மரித்து, திறந்தகதவு வழியாக 'சப்' என்று நீரில் புகுந்தான். கொஞ்சம் சப்தம் கேட்டது. சில கொப்புளங்களும் கிளம்பின. பிறகு ஒரே நிசப்தம்தான். கால்மணி நேரத்திற்குப் பிறகு ஏதோ ஒரு பக்ஷி பேசுவதைப்போன்ற சப்தம் கேட்டது. உடனே மற்றொரு கச்ச தேசவாசி குதித்தான் தண்ணீரில். இப்படியே மெதுவாக முந்நூறு வீரர்கள் நீரில் குதித்து மூழ்கி மறைந்தனர். வேலை நடந்த திறமையில் அருகிலேயே அகழிக்கப்பால் நின்ற கஜினி சேனையின் காவலாளர்க்கு இதைப்பற்றியே ஒன்றும் தெரியாமல் இருந்துவிட்டது.

கிட்டத்தட்ட நடு இரவில் கடைசிக் கச்ச வீரன் விடைபெற்றான். பிறகு மகாராஜாவின் உத்தரவைப்பெற்று அங்கங்கே தீவட்டிகள் எரிய ஆரம்பித்தன. கமா மிகவும் பயங்கரமான ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தான். இருட்டிலே அலையடிக்கும் கடலிலே எதிரிகள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அரை யோசனையோ ஒரு யோசனையோ நீந்திச் செல்வது என்பது சாதாரணவேலையில்லை. அங்கே போயும் அந்தக் கப்பல்கள் யாருடையது என்று பார்த்துத்தான் தெரியவேண்டும். எதிரிகளுடையதாயிருந்து விட்டாலோ, வேறு அனர்த்தம் வேண்டாம். இவ்வளவு நேரம் சென்ற பிறகும் கமாவின் அடையாளம் ஒன்றும் தெரியவில்லை. கடைசியில் பீமதேவன் மனது வருத்தத்துடன் தம் இருக்கைக்குச் செல்ல எண்ணி நடந்தார். அப்பொழுது ஆகாயத்தில் நடுக்கடலில் அநேக தீவட்டிகள் அங்குமிங்கும் ஆடின. பீமதேவன் "சபாஷ். என்னுடைய கமா, சபாஷ்!" என்று கூவினார்.

அப்பொழுது மகமூதுடைய காவலாளிகளும் விழித்தனர். அம்பு செலுத்தத் தயாராயினர். ராஜபுத்திரர்கள் கையும் துடிக்க ஆரம்பித்தது, ஆனால் தீவட்டிகள் மறையவே அந்தச் சேனை அமைதியாய் உறங்கப் போயிற்று.

5

இரவு ஆனதும் சிவராசி நிஷ்டையிலிருந்து எழுந்து ஸ்நானம் செய்தான். பிறகு பகவானைத் தரிசனம் செய்து வில்வபத்திரம் கொண்டு அருச்சித்து இருக்கை சென்று சித்தேசுவரன் தந்த ஆகாரத்தை உண்டான். இன்று தவத்தினால் அவன் உள்ளம் இன்னம் பரிசுத்த மடைந்திருந்தது. அவன் மகாமாயைதான் சௌளா உருவத்தில் திரிகிறாள் என்பதைத் தீவிரமாய் நம்ப ஆரம்பித்தான். கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் ஒழிந்தது. அவள் பூஜை முடிவேறும்வரை மகமூத் தோற்கமாட்டான் என்றும் அவன் நிச்சயம் செய்துகொண்டான். பூஜை முடிந்ததும்தான் மஹாமாயை சௌளாவைவிட்டுப் போவாள். பிறகு சௌளா சௌளாவாவாள். புராணமான புனித முறைப்படி அவன் ஆசாரியன் என்ற முறையில் சௌளாவிற்கு அதிகாரியாவான். என்ற எண்ணமும் அவன் தவத்தால் பண்பட்ட மனதிலும் ஒரு மூலையில் அமர்ந்திருந்தது. அவன் அதையும் பூஜை முடியுமானால் ஒழித்துவிடத் தயாராயிருந்தான். காமம், குரோதம், மோஹம் எல்லாவற்றையும் தியாகம் செய்து அவன் அந்தப் பூஜையை நிறைவேற்ற வேண்டும் என்று தீவிரமாக எண்ணினான்.

அவன் மெதுவாக எழுந்து பகவானுடைய கோயிலுக்குச்சென்று ஒரு தூணருகில் சென்று உட்கார்ந்தான். சிவலிங்கத்துக் கெதிரே ஒரு விளக்கு மந்தமாக எரிந்துகொண்டிருந்தது, கொஞ்சநேரம் பார்த்தான். சௌளா ஆவல் துடிக்க ஓடிவந்தாள். பகவானுடைய பாதங்களில் விழுந்தாள். பிறகு எழுந்து கொஞ்சம் நடனமாடினாள். சிவராசி அந்த மகாமாயையின் சொரூபத்தைக் கண்களால் பருகிக்கொண்டேயிருந்தான். இந்த மஹாமாயையயின் பூஜையை எப்படி முடிக்கிறது? என்ற கவலைதான் அவனை ஆட்டிவைத்தது. அவன் உடல் மயிர்க்கூச்செறிந்தது. "பக்தன் உடலல்லவா!" என்று எண்ணிக்கொண்டான். ஆட்டம் முடிந்தது. சௌளா தன்னிஷ்டப்படி கடவுளிடம் காதல்மொழி கூறினாள். ராசி இப்பொழுதே பூஜையை முடித்துவிடுவோமா என்று துடித்தான். ஆனால் இது சமயமல்ல என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

சௌளா தன் இருக்கைக்குச் சென்றாள். சிவராசியும் தொடர்ந்தே போனான். போகும் போதும் பூஜையைப்பற்றிய எண்ணம் அவன் மனதைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. அது இதோ எதிரில் உடல் தாங்கிச் செல்லும் மகாமாயையயின் அடிச்சத்தத்

துக்கு ஏற்ப அவன் உள்ளத்தில் தாளம் போட்டுக்கொண்டே சென்றது.

சௌளா சீக்கிரமாகவே மேலே சென்று அடைந்தாள். அவள் நடந்துபோவதாகவே தெரியவில்லை. இறகு கட்டிய கால்களுடன் ஏதோ ஒரு மாயத்தேவதை மேலே ஆகாயத்தில் அடிவைத்துச் செல்வது போலவே இருந்தது. மஹாமாயை அல்லவா? சௌளா பீமதேவன் அறைக்குள் நுழைந்தாள். சிவராசிக்கு ஒரே ஆச்சரியமும் அதைத் தொடர்ந்த ஆத்திரமுமாய்ப் போய்விட்டது. மகாமாயா என்ன காரணம் கொண்டு இந்தவழி செல்கிருள்?



அங்கே இருட்டு வெளியில் ஒரு புருஷன் நின்றுகொண்டிருந்தான், பீமதேவனாகத்தான் இருக்கவேண்டும்; பின் யார் அங்கே இவ்வளவு உயரமுள்ளவர்கள்?

"மகாராஜா!" என்றழைத்தாள் ஆனந்தம் ததும்ப, சௌளா.

"இதோ வா, நான் உன்னைத்தானே தேடி நிற்கிறேன்."

சிவராசி பார்த்தான். இரண்டு நிழலுருவங்கள் ஒன்றை ஒன்று அணுகி ஒன்றி நின்றன. பிறகு......

சிவராசி உள்ளம் எரிந்தது; உடல் எரிந்தது. அவன் கண்ணெதிரே இந்த மகாபாதகம் நிகழ்கிறதே! பீமதேவன் உதடுகள் மஹாமாயையின் உதடுகளைத் தொடுகின்றனவே.

சிவராசி அவரைச் சபித்தான் மனதாரத் தேவேந்திர தேவனைப் பீமதேவனை அழிக்க அழைத்தான், அந்தத் தவச்ரேஷ்டன். மனதாரச் சபித்துக்கொண்டே அவன் தன் இருக்கை சேர்ந்தான். இந்தக் கடையன், பாதகனுக்கு வாழக்கூட உரிமை கிடையாது.

அத்தியாயம்—14

புஷ்யம், கிருஷ்ணபக்ஷம், பிரதமை, வெள்ளிக்கிழமை

அருணோதயம் ஆகிவிட்டது. கஜினி சேனையில் ஓட்டமும் பிடியும் ஆரம்பித்தன. குதிரைகள் தீவட்டி தாங்கிகளுக்குப் பின்னால் ஓட ஆரம்பித்தன. சங்கு ஊதப்பட்டது. சௌகீதார் பேரி முழக்கினர். பீமதேவன் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தார். கமலக்கைகளின் மென்மையைப் பார்க்காமலேயே கவசத்தை வாங்கி அணிந்துகொண்டார். சங்கை ஊதிக்கொண்டே கோட்டை மேல் ஓடிச்சென்றார். ராயும் தன் ஆயுதங்களணியக் கோட்டையின் மேல் வந்தான். அவனும் தன்னுடைய கொம்பை எடுத்து ஊதினான். பரமாரும், விமலனும் வந்து சேர்ந்தனர். பீமதேவன் நின்ற அந்த வாயிலின் மேலேயே எல்லோரும் குழுமி நின்றனர்.

மகமூத் சேனையில் விசித்திரமான பரபரப்பு ஏற்பட்டிருந்தது. பொருள் புரியாத ஏதோ மொழியில் இரைந்து உத்தரவுகள் இடப்பட்டுக்கொண்டிருந்தன. குதிரைகள் கனைத்தன.

ஆயுதங்கள் ஆரவாரம் செய்தன, காட்டின் நடுவில் இருந்த கஜினி அமீரின் பாசறைப் பக்கம் பல தீபங்கள் ஏற்றப்பட்டன. அங்கிருந்து குதிரைகள் வெளியேறின. இயந்திரத்தால் இயக்கப்பட்டவர்கள்போல் வீரர்கள் அங்கங்கே அணிவகுத்து நின்றுகொண்டனர். பீமதேவனும் உடனே தம் பக்கத்தையும் ஆயத்தம் செய்தார். வில் வீரர்களைக் கோட்டை மேல் ஏற்றித் தயாராய் நிறுத்தி வைத்தார். அந்த வரிசைக்குப் பின்னால் கேடயம் தாங்கி ஒரு வரிசையும் அதற்குப் பின்னால் கவசம் அணிந்த ராஜபுத்திர வீரர்களும் நின்றுகொண்டனர்.

குருதேவரும் மேலே வந்தார். பீமதேவன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். குருதேவர் ஆசிர்வாதம் தந்து அரசர்களுக்குப் பொட்டு இட்டார். குங்குமம் மஞ்சள்நீர் வாரி இறைக்கப்பட்டது. 'ஜய் ஸோம்நாத்' என்ற கோஷம் ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பிற்று.

இருட்டுத்திரை அகன்றது. பீமதேவன் நான்கு பக்கங்களிலும் பார்வை செலுத்தினார். மகமூத் சேனையின் அமைப்பே மாறிநின்றது. மூன்று பக்கமும் நீளமான பருத்த பெரிய கேடயங்களுக்கு உள் ஆமைகள்போல் மறைந்த வீரர்கள் இரு வரிசையாக நின்றனர். அவர்கள் கண்களும் வாள்களின் நுனிகளும் மட்டும்தான் வெளியே தெரிந்தன. ஒவ்வொருவரும் அகழ் தாண்ட ஒரு பலகையும் வைத்திருந்தனர்.

அவர்களுக்குப் பின்னே நான்கு வரிசை, ஆறு வரிசைகள் குதிரை வீரர்கள் வில் ஏந்தி நின்றனர். அவர்கள் மார்பில் தோல் கவசங்கள் இருந்தன. அவர்களுடைய நிறம்கொண்ட தாடி பரவியிருந்தது. அவர்களுடைய தலையில் கொம்புகள் கொண்ட தொப்பிகள் இருந்தன. உத்தரவு வெளியானதும் பதினாயிரம் அம்புகள் வெளியேறச் சித்தமாக இருந்தன. அவர்களுக்கும் பின்னால் யானைகள் நின்றுகொண்டிருந்தன. ஒவ்வொரு யானையின் பேரிலும் மூன்று நான்கு வில்வீரர்கள் இருந்தனர். ஒருவன் கோட்டையின்மேல் ஏற ஒரு ஏணியும் வைத்துக்கொண்டிருந்தான்.

ராய் இதை எல்லாம் கண்டு பீமதேவனிடம், "மகாராஜா நாம் ஜயித்தால் கடவுள் கிருபைதான்" என்றான்.

"பகவான் கிருபை; க்ஷத்திரியர்களின் சுணை. நாம் ஏன் தோற்கிறோம்? சண்டை நம் உயிரல்லவா?" என்றார் பீமதேவன்.

"தர்மம் வெற்றியடையும்." என்று சிரித்தவாறே சொல்லிவிட்டுக் குருதேவர் கீழே இறங்கிச் சென்றுவிட்டார்.

கொம்புகள் ஒலிக்கத் தொடங்கின. யவன சேனையில் இடைவெளி ஏற்பட்டது. படைவீட்டிலிருந்து மகமூத் கிளம்பினான். அவனுக்குப் பின்னும் பக்கங்களிலும் அநேக குதிரை வீரர்கள் இருந்தனர். எல்லோருக்கும் முன்னால் பச்சைத் தலைப்பாகை அணிந்து கம்பீரமாக வந்தான் மகமூத். அவன் சிவந்த நீண்ட தாடி காற்றில் அலைந்துகொண்டிருந்தது. அவனுக்கு அருகில் பொன்போல் மின்னும் பிறைச் சந்திரன் அடையாளங்களைத் தாங்கி, குதிரை வீரர்கள் வந்துகொண்டிருந்தனர்.

நான்கு பக்கமும் பரவி நிற்கும் அந்த அசுரச் சக்தியைப் பார்த்ததும் பீமதேவன் உள்ளம் கொழுந்துவிட்டு எரிந்தது. அவர் தலையில் யாரோ சுத்தியல்கொண்டு அடிப்பது போல் தோன்றிற்று. ஒரே தாவலில் வீரா அலங்கரித்து நிறுத்திய குதிரைமேல் தாவி ஏறினார். பக்கத்தில் நின்ற வீரர்கள் அவர் உத்தரவை எதிர்பார்த்து நின்றனர்.

"இன்று என்னுடைய, பட்டணுடைய ஸோமநாதரின் பெருமை உங்கள் கையில் தான் இருக்கிறது. வீரர்களே! ஸ்வர்க்க வாசல் திறந்துவிட்டது. ஒவ்வொரு க்ஷத்திரியனும் ஆயிரம் யவனர்களைக் கொல்லவேண்டும். காலைப் பின் வைப்பவன் க்ஷத்திரியனின் மகனல்லன்."

ராய்க்கும் ஒரு ஆவேசம் வந்தது; அவனும் குதிரைமேல் பாய்ந்து ஏறினான். வாளை உருவி, 'பீமதேவனுக்கு ஜய்!' என்று கூவினான். வீரர்களும் கோஷமிட்டனர். ஆனால் பீமதேவன் நின்றார். சிரித்தார். வாளை உருவி ஆட்டி, 'சொல். ஜய் ஸோமநாத்' என்றார். எல்லோரும் வானம் அளாவ அண்டம் அதிர 'ஜய் ஸோம்நாத்!' என்று முழங்கினர்.

மகமூத் இந்தச் சப்தத்தைக் கேட்டான். தாடியைத் தடவிவிட்டுக்கொண்டு, கோட்டையைப் பார்த்துக்கொண்டே நின்றான். உலகை வெற்றிகொள்ளக் கிளம்பின அவன் எவ்வளவோ கோட்டைகளைப் பார்த்தே எரித்திருக்கிறான்! ஆனால் இது இதுவரை பாராத தொன்றாய் இருந்தது. இதை அடையத்தான் அவன் பரந்த ஒரு பாலைவனத்தை எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தாண்டினான். அவனுடைய எல்லையற்ற சைனியம் தயாராய் நின்றது. எதிரிகளோ கொஞ்சம்; ஆனால் பிரதிக்கினை எடுத்து ஆவேசத்துடன் நிற்கிறது. ஒரு நிமிஷம் அவன் உள்ளம் தயை நிறைந்தது. "ஆயிரமாயிரம் ராஜபுத்திர வீரர்கள் சென்ற வழி தானே இவர்களும் போவார்கள்."

அவன் சரித்திரத்தின் ஒரு பக்கத்தில் தன் பெயரை அழியாத எழுத்தால் எழுதிவைக்கப்

பிறந்தவன். ஸோமநாதர் ஆலய அழிவு அந்தக் கீர்த்திக் கோயிலின் வெற்றிக் கலசம். அந்தக் கலசத்தை ஏற்றிவைப்பதற்குத் தடையாக நிற்கிறது இந்தச் சேனை. 'காபிர்' களுடைய இந்தச் சேனைகளேதான் அழிந்து, அவன் கீர்த்தியை ஜோடிக்களனவேதான் ஏற்பட்டிருக்கின்றன.

அவன் கண்கள் மின்னின. "அல்லாஹோ அக்பர்!" என்றலறினான். டங்காக்கள் முழங்கி எழுந்தன. நான்கு பக்கமும் அல்லாஹோ அக்பர் என்ற சப்தம் கடலொலி போல் கிளம்பிற்று. சைனியத்தின் பகுதிகள் எல்லாம் இரைவிழுங்க ஊரும் மலைப் பாம்புபோல் கோட்டையை விழுங்க முன்னேறி நடந்தன.

2

மகாராஜா முக்கியமான வாசலின் மேல் நின்று கொண்டு மேலேறி வரும் மனித ஆமைக்கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். 'குதிரை வீரர்கள் அருகில் வந்தால் அம்பு விடுங்கள். ஆமைகள் மேல் விடவேண்டாம்!' என்று உத்தரவிட்டார்.

மஹாராஜா பிறகு வீரா பக்கம் திரும்பி, "வீரா, செல்; உடனே. விமலனிடம் சொல்லி வீரர்களைக் கல்லை எடுத்துக்கொண்டு இங்கே அனுப்பச்சொல். ஆமைகள் தண்ணீரில் இறங்கியவுடன் முதுகில் போட்டுக்கொல்ல வேண்டும்." என்றார். வீராவும் மகாராஜாவின் குதிரை மேலேயே ஏறிக்கொண்டு விமலனைச் தேடிச்சென்றான். மகாராஜா தம் வில்லை அம்பேற்றி வைத்துக்கொண்டு நான் விடும்போது விடுங்கள். அதுவும் குதிரைமேல்" என்று உத்தரவிட்டார்.

ஆமைகள் தவழ்ந்து முன்னேறின. பின்னாலேயே குதிரைகளும் தொடர்ந்தன. பின்னால் யானைகளும் நகர்ந்தன. குதிரை வீரர்கள் அம்பிலக்குக்குள் வந்ததும் அம்புவிடத் ஆரம்பித்தனர். குதிரைகளையும் தூண்டினர். ஆமைகளும் கால்களில் நின்று ஓட ஆரம்பித்தன. இந்த மூன்று வேலைகளும் ஒரே சமயத்தில் நடந்தன.

அப்பொழுது பீமதேவனும் அம்பு விட்டார். அவரைப் பார்த்துப் பல்லாயிர வீரர்கள் தங்கள்



தங்கள் அம்புகளை எய்தனர். நூற்றுக்கணக்கான குதிரைகள் வரிசையை விட்டு ஓட்டம் எடுத்தன. பல குதிரைகள் அங்கேயே விழுந்து உருண்டன. கோட்டைமேல் நின்றவர்களுள் சில வீரர்களும் காயமடைந்து வீழ்ந்தனர். மற்றவர்கள் மகமூத்துடைய சேனையைத் துளைக்க மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டிருந்தனர்.

குதிரைகள் சளைத்தன. யானைகள் மட்டும் அசையவில்லை. அம்பு விடுவதா இல்லையா என்ற சந்தேகம் வரவே வில் வீரர்கள் நின்றுவிட்டனர். ஆமைகளும் குதிரை யானைகள் உதவியில்லாமலேயே அகழின் பக்கம் வந்தன. விஷயம் அறிந்ததும் மகமூத் முன்னே வந்தான். குதிரைகள் ஆமைகளைக் காப்பாற்ற அனுப்பப்பட்டன.

மீண்டும் இருபுறத்திலும் அம்புகள் செலுத்தப்பட ஆரம்பித்தன. மழைபோலப் பொழிந்தனர் வீரர்கள். பீமதேவனும் அவருடைய வீரர்களும் விட்ட அம்பு ஒருபொழுதும் தவறுவதில்லை. ஒரு குதிரையின் முதுகு, ஒரு வீரனின் மார்பகம், ஒரு வீரனுடைய சரீரம் ஏதாவது கண்ணில் படவேண்டியதுதான் தாமதம். உடனே அங்கே குஜராத்திய அம்புகள் செருகப்பட்டன. பீமதேவனும் அங்கும் இங்கும் நன்கு பார்த்து முக்கியமானவர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களை உருட்டிவிட்டுக் கொண்டிருந்தார். தொலைவில் நின்ற யானை கூட அவர் இலக்குக்குத் தப்பவில்லை. ஆமை வீரர்களுக்கும் ஏணி கொண்டுவரும் யானை வீரர்களுக்கும் இடைவெளி அதிகமாகி விட்டது.

மகமுத்தினுடைய ஒரு சேனாபதி இந்த நிலையைப் பார்த்தான், சில குதிரை வீரர்கள் ஏணிகளை வாங்கிக்கொண்டு ஓடிவந்தனர். ஒன்றிரண்டு யானைகளும் நெருங்கி வந்தன, ஆமை வீரர்கள் கையிலும் சில ஏணிகள் தரப்பட்டன.

மகாராஜா மீண்டும் "ஆமைமேல் விடும் அம்பு வீண். குதிரைமேலேயே விடுங்கள்" என்று கட்டளையிட்டார். மகமூத்தினுடைய வீரர்களும் நெருங்கிவந்து அம்புவிட ஆரம்பித்தனர், எவ்வளவோ பட்டண் வீரர்கள் அடிபட்டு விழ்ந்தனர். ஆனால் பீமதேவனுடைய கவசம் அணிந்த வீரர்கள் இங்கும் அங்கும் சுழன்று எதிர்த்தனர். அவர்களுக்கு நடுவே



பீமதேவனுடைய களைப்படையாத கைகள் கற்பனையையும் மீறிய அரிய சாகசச் செயல்களைச் செய்து காட்டிக் கொண்டிருந்தன. ஆமை வீரர்கள் ஒரு கையில் ஏணியும் ஒரு கையில் பலகையும் கொண்டு அகழில் குதித்து மூழ்க ஆரம்பித்தனர்.

"விமலா, விமலா."

"மகாராஜா தயார்."

"என்ன, கற்கள் கொண்டுவந்திருக்கிறாயா?"

"ஆம். மகாராஜா!"

"ஆமைகளை அடிக்காதே; பாணங்கள் வீணாகும். நகர், வழிவிடு." மகாராஜா உரத்த குரலில் கட்டளையிட்டார். வீராவின் கையில் வில் அம்பைக் கொடுத்து மகாராஜா அருகில் நின்ற ஓர் ஆளிடம் கல்லை வாங்கினார். எடுத்துக் குறிவைத்து வீசினார். கல் நேராகச் சென்று ஒரு ஆமையின்மேல் விழுந்தது. ஆமை வீல் என்று ஒரு சத்தம் கொடுத்து, தண்ணீருக்குள் அழுங்கியவன் பிறகு மேலே வரவேயில்லை. மகாராஜாவினிடமிருந்து செயல்முறையைத் தெரிந்துகொண்ட மற்ற வீரர்களும் கற்களை வாங்கி எடுத்து அடித்தனர். அநேக ஆமைகள் ஓடு ஒடிந்து அழுந்தி மறைந்தன.

வெகுநேரம்வரை இந்த யுத்தம் நடந்தது. புதுப்புது ஆமைகள் வந்து தண்ணீரில் இறங்கின, கற்களைத் தப்பிச் சுவரேற வந்தாலும் அம்புகளால் துளைக்கப்பட்டு உயிரிழந்தன. சில சமயம் குதிரை வீரர்கள் அகழின் கரைக்கே வந்தனர். பிறகு அம்படிபட்டு அகழில் வழுக்கி விழுந்து அழிந்தனர். அல்லது பயந்து திரும்பி ஓடினர். இங்கே கோட்டையிலும் அநேக வீரர்கள் அடிபட்டுப் பூமியிலே விழுந்தனர். புண்பட்டவரும் அம்பு செலுத்தினர். சாகப்போகிறவர்களும் கல்லை எறிந்து ஆளை அழித்துச் செத்தனர்.

பீமதேவ மகாராஜனும் ஒரு சமயம் கால் நடையாக, ஒரு சமயம் குதிரைமேல் ஏறியும் அங்கும் இங்கும் அலைந்து உத்தரவிட்டுக்கொண்டும்; கல்லை எறிந்துகொண்டும் இருந்தார். சில சமயம் இலக்கு மாறாத அம்பும் விட்டுக்கொள்வார் 'ஜெய் ஸோம்நாத்' என்று கர்ஜித்து வீரர்கள் உள்ளத்துக்குத் தெம்பு ஊட்டுவார். அவருடைய ரோஜா நிறத் தலைப்பாகையும் அதன் உச்சியில் பிரகாசிக்கும் மயில் தோகையும் தெரியும் இடத்தில் எல்லாம் பட்டணிகள் உற்சாகத்துடன் சண்டையிட்டனர். அதே தோகையைச் சாவுக்கு அடையாளம் என்று குறித்தே எதிரிகள் அம்பு செலுத்தினர். ஆனால் அந்த அம்புகள் அவரைச் சமீபிப்பதற்குள்ளேயே வலிவிழந்து கீழே விழுந்தன. மேலிருந்து கீழ்வரை அவர் பொன் நிறமான கவசம் அணிந்திருந்தார். இடையிலேயே மங்கிய சிவப்பு நிறக் கசை கட்டியிருந்தார். அதிலிருந்து மணியிழைத்த வாள் தொங்கிக் கொண்டிருந்தது. ஆறு மனிதர்கள் அம்பு நிறைந்த துணிகளை எடுத்துக்கொண்டு பின்னாலேயே சென்றுகொண்டிருந்தனர். அவருடைய கைகளும் நன்கு பழகிய அதிர்ஷ்டக்காரக் கைகள். விடுபட்ட அம்பு வீண் போவதேயில்லை. யாராவதொருவனைக் கீழே வீழ்த்தியே விட்டது.

கோயிலின் சிகரத்தின் ஒரு உயர்ந்த அறையில் கங்காதேவியும் அவள் மகளும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அந்தக் கிரீடத்தையும் அதன் தோகையையுமே பார்த்துக்கொண்டிருந்தனர். "அம்மா. அம்மா அதோ, அதோ போகிறார் அவர். ஐயோ, அப்பாடி! கடவுளே, பகவானே!" கிரீடம் மறைந்தால் சௌளா பயப்படுவாள். தோகை பறந்தால் அவள் உள்ளமும் குதிக்கும். அம்பு விட்டுச் செல்லும்போது அவளும் உடலை வளைத்துக் காலைத் தூக்கி நாட்டியமாடுவாள். அவள் உயிர் முழுவதுமே கண்கள் வழியே பாய்ந்து தோகையில் சேர்ந்திருந்தது. அந்தத் தோகை கீழே விழுந்தால் அவள் உயிரும் உடலைச் சாய்த்திருக்கும். இவ்வளவில் பின்னாலிருந்து குருதேவர் வந்தார். அவரும் அவர்கள் பின்னால் நின்று அவருடைய சௌர்யத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"குருதேவா! மகாராஜா ருத்ரனின் அவதாரம்தானே?" என்று கேட்டாள் சௌளா.

குருதேவர் சிரித்தார். "ஆமாமடா கண்ணே! இதில் என்ன சந்தேகம்?" என்று சொல்லிவிட்டு அவர் திரிபுர சுந்தரியைப் பூஜை செய்யப்போய் விட்டார்.

[தொடரும்]



எஸ். கோமதி சுப்ரமணியம்

கதவைப் படபடவென்று தட்டினான் அவன். பதிலே இல்லை. "அம்மா இதோ உன் மகள் வெளியே காத்திருக்கிறேனம்மா. கதவைத்திற' என்று குரல் கொடுத்தாள் அவனுடன் நின்றுகொண்டிருந்த தங்கை விமலா.

உள்ளே யாரோ ஈனஸ்வரத்தில் ஏதோ முண முணத்த சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து 'யாரு' என்ற தெளிவற்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு கதவு திறக்கப்பட்டது.

"நான்தானம்மா உன் மகன் வேலு" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான் வாலிபன்.

"அம்மா உன் உடம்பு நலமாயிருக்கிறதா. உனக்கு உடல்நலமில்லையென்று அப்பா கடிதமெழுதியிருந்தார்களே. இப்பொழுது சுகமாயிருக்கிறாயா அம்மா?" என்று வாத்ஸல்யம் பொங்கும் கேள்வியுடன் தாயை நோக்கி விரைந்தாள் விமலா.

"அம்மாவாவது ஆட்டுக்குட்டியாவது, யாரடி நீ? மெதுவாக மக்ள் முறை கொண்டாடிக்கொண்டு என் சொத்தையெல்லாம் பறிக்கவா பார்க்கிறாய்?" என்று சிறிப்பாய்ந்து அடிக்க ஓடிவந்தாள் அந்த அம்மாள்.

தன் தாய்—தன்னைப் பெற்றதாய்—தன் மகளில்லை என்று அடிக்க வருவதைக் கண்டு பொறிகலங்கிப் போனாள் விமலா. 'அண்ணா'வென்று ஓடிப்போய், தன் சகோதரனிடம் அடைக்கலம் புகுந்தாள் தாயால் நிராகரிக்கப்பட்ட பேதை.

அவனது உள்ளம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. தாயின் போக்கு, சகோதரர்களிருவரையும் திகில் கொள்ளச் செய்தது.

ஒரு வாரத்திற்குமுன் தந்தை எழுதிய கடிதத்தில் உன் அம்மாவுக்கு உடல் நலமில்லையென்று கண்டிருந்தது. ஆனால் வியாதி என்ன என்பது தெரிவிக்கவில்லை. ஏதாவது ஜ்வரம் அல்லது வேறெந்த வியாதியாவது இருக்குமென்று நினைத்திருந்தார்கள். ஆனால் உலகத்திலேயே மிகப் பயங்கரமான வியாதி தன் தாயைப் பிடித்திருக்கப் போகிறதென்று அண்ணனோ தங்கையோ கனவிலும் கருதவில்லை.

எதிரே நின்ற தன் அன்னையின் பயித்தியக்காரப் போக்குக்குத் தகுந்தபடி

போய்த்தான் திரும்ப வேண்டுமென்று கருதிய வேலுவின் மனதில் சட்டென்று ஒரு யோசனை உதித்தது.

"அம்மா இவள் என்னுடன் படிக்கிறவளம்மா. என் தங்கை மாதிரி இந்த லீவில் நம் வீட்டில் தங்கிப் போகலாமென்று அழைத்து வந்திருக்கிறேன். வீட்டிற்கு வந்த விருந்தாளிக்கு மரியாதை கொடுக்காமல் வம்புக்குப் போகிறாயே அம்மா" என்று மெய் போல் நடித்தான் வேலு.

"ஓ உன்னுடன் படிக்கிறவளா? தாராளமாக வரட்டுமே. என்னுடைய மகள் என்று சொன்னதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. இதோ என் மகளை அழைக்கிறேன் பார்" என்று கூறிவிட்டு உள் பக்கம் திரும்பி "விமலா" என்று குரல் கொடுத்தாள்.

"என்னம்மா" என்று கேட்டுக்கொண்டு வந்து நின்ற பெண்ணைக் கண்டதும் மீண்டுமொருமுறை தூக்கிவாரிப் போட்டு நின்றனர், வேலுவும் விமலாவும்.

"ஆ நீயா..." என்று ஏதோ பேசத் தொடங்கிய வேலுவை ஜாடை காட்டி ஒன்றும் பேசாதே என்று வாயடைத்துவிட்டாள் அந்தப் பெண் சுசீலா.

வேலுவின் அத்தை மகளான சுசீலா என்றால் ஜன்மப்பகை அம்மாவுக்கு. சுசீலா என்ற பெயரைக்கூட உச்சரிக்க விரும்பாத அம்மா இன்று அதே சுசீலாவைத் தன் பெண் என்று கூறிக்கொள்கிறாள். அதோடுமட்டு மல்ல. தனது சொந்தப் பெண்ணே எதிரே வந்து நின்றும் ஒப்புக்கொள்ள மறுக்கிறாள்.

இதெல்லாம் என்ன புதிர் என்று கேட்க நினைத்தான் வேலு. ஏதாவது எக்கச்சக்கமாய்ப் பேசி, காரியத்தைக் கெடுத்துவிடாதீர்கள் என்று கேட்பது போலிருந்தது சுசீலாவின் கெஞ்சல் பார்வை.

தன் தங்கை தெருவில் நிற்க இவளுக்கு வந்த வாழ்வென்ன என்கிற ஆத்திரம் அவன் இதயத்துள் எரிமலைபோல் குமுறி வந்தது.

"இப்பொழுது தான் வந்தீர்களா அண்ணா?" என்று அவள் பாகத்தைத் திறமையுடன் நடித்துக் காண்பித்த சுசீலாவின்முன், 'ஆமாம்' என்ற பேச்சுக்கு மறு வார்த்தை பேச, சக்தியற்றவனாகி நின்றான் வேலு.

தூரத்தே படுக்கையில் கிடந்த தந்தையைக் கண்டதும் உள்ளம் பதறி ஓடினாள் விமலா, அவர் கட்டிலினருகில்.

"எதையாவது பேசி எக்கச்சக்கமாக எல்லோரையும் மாட்டி விடாதேயம்மா. விஷயம் முழுவதையும் விபரமாக உனக்கு அப்பால் தெரிவிக்கிறேன். அதுவரை நீ இந்த வீட்டு விருந்தாளியாகவே நடித்துக்கொண்டிரு" என்று மகளைக் கேட்டுக் கொண்டபோது அவர் கண்கள் அவரையுமறியாமல் நீரைக் கக்கின.

'அப்பா' என்று கண்ணீர் சொரிய, கதறி நின்றாள் விமலா.

அவள் அப்பா என்ற குரல் பைத்தியத்தின் செவிகளுக்கு நாராசமாய்ப் பாய்ந்தது.

"ஏண்டி மகள் முறை கொண்டாடாதே என்று உனக்கு எத்தனை தரம் கூறுவது?" என்று அடிக்க ஓடினாள் எழுந்து.

வேலு மட்டும் அந்தச் சமயம் அங்கு இல்லையானால் விமலாவின் கதியை நினைத்துப் பார்க்கவே முடியாது.

"அம்மா, அவள் என் சகோதரி மாதிரி என்று முன்பே உன்னிடம் கூறினேனே. நான் அவள் சகோதரனானால் என் தந்தை அவளுக்கு அப்பா இல்லையாம்மா. மீண்டும் மீண்டும் நீ இப்படித் துரத்துவதானால் அந்தப் பெண்ணை அவள் ஊருக்கு அனுப்பிவிடுகிறேனம்மா........" என்று கலங்கிய குரலில் மொழிந்தான் வேலு.

"வேலு, என்றுவது உன் விருப்பத்திற்கெதிராக நான் நடந்ததுண்டா? என் ஆசையெல்லாம் நீயும் விமலாவும் சௌக்யமாக, சந்தோஷமாக இருக்கவேண்டுமென்பதுதானே பிரார்த்தனை."

அம்மாவின் பிரார்த்தனையைக் கேட்டு உள்ளம் துடித்துப் போனாள் விமலா. அம்மா என்று ஓடிப்போய், தாயைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்கிற ஆசை உள்ளத்தை உந்தித் தள்ளியது. தன் ஆசையை நிறைவேற்றியுமிருப்பாள்.

இடையே எழுந்த அண்ணனின் குரல் அவள் ஆசைக்குத் தடை கோலிற்று.

"அம்மா உன்னால் அவளுக்கு எவ்வித இடையூறும் இல்லை என்கிறது நிச்சயமாகும்வரை அவள் இங்கிருக்க முடியாதம்மா. ஒவ்வொரு தடவையும் நீ இப்படி................."

"இல்லவேயில்லையப்பா, இனி உன் விருந்தாளிக்கு என்னால் எவ்வித இடையூறும் ஏற்படாது என்று உறுதியாய்க் கூறுகிறேன். இதை இவள் வீடாகப் பாவித்து, தங்கியிருக்கட்டும் என்று என் சார்பாக நீ கேட்டுக்கொள்" என்று கூறி முடித்தாள்.

சாப்பாட்டிற்கு இலை போட்டாகிவிட்டது என்று சுசிலா தலையை நீட்டவே விருந்தாளி உள்பட எல்லோரும் சாப்பாட்டு அறைக்குச் சென்றனர்.

2

தான் பிறந்த வீட்டில் அந்நியப் பெண் போல் வந்து, விருந்து சாப்பிடுவது விமலாவின் மனதை மிகவும் துன்புறுத்திக்கொண்டிருந்தது. நடந்துவரும் பல விஷயங்களையும் நினைத்து மனம் குழம்பியவளாய், பாதி சாப்பாட்டில் எழுந்து ஹாலுக்கு வந்துவிட்டாள்.

தன் மகள் கைப்படச் சமைத்ததை ரஸித்துச் சாப்பிடாமல் எழுந்துசென்ற விருந்தாளியின் மீது சற்றே வெறுப்புத் தோன்றியது பைத்தியம் காமுவுக்கு.

அதைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட வேலு, "புது இடமல்லவா, சங்கோஜத்தால் பாதியில் எழுந்துவிட்டாளம்மா அந்தப் பெண்" என்று தாயைச் சமாதானப் படுத்தினான் வேலு.

அதன் பிறகு சுவாரஸ்யமான சம்பாஷணையினூடே சாப்பாடு நடந்துகொண்டிருந்தது.

ஏகாங்கியாய் ஹாலினுக்குள் வந்தவள் தன் நிலையை நினைத்து வருந்தத் தொடங்கினாள். மனம் சோர்ந்து போய் வந்து நின்ற தன் மகளைக் கண்டதும் வியாதியால் நைந்துபோயிருந்த தந்தையின் உள்ளம் மேலும் விசனத்தால் குன்றிப் போய்விட்டது.

மகளைத் தம் அருகில் வரும்படி கையசைத்தார். தந்தையின் முகத்தைக் கண்டதும் எதுவும் பேசமுடியாமல் குழந்தை போல் விக்கி விக்கி அழுத விமலாவைத் தேற்றும் வகை தெரியாமல் திணறினார் அவர்.

மனம் குமுறும் தம் மகளைச் சமாதானப் படுத்துவதற்காக ஏதேதோ முயன்று பார்த்தார். ஆனால் எந்த வார்த்தையும் வாயைவிட்டு வந்தால் தானே.

"விமலா, எல்லாம் என்னால் வந்த வினை தானம்மா. இன்று உனது ஏகாங்கியான நிலைக்கு உன் அன்புத் தந்தையான நானே காரணம் என்று தெரிந்தால் நீ இந்தப் பாவியை எப்படி வெறுப்பாயோ." அவர் குரல் அடைத்துக்கொண்டது.

"அப்படியெல்லாம் எதுவும் பேசி மனதைப் புண் படுத்திக் கொள்ளாதீர்களப்பா. அம்மாவின் இந்த மன மாற்றத்திற்கு நீங்கள் காரணம் என்றீர்களே அது என்னப்பா?"

"அனாதையாய் நின்ற ஒரு பெண்ணைக் காப்பாற்ற நினைத்து ஒரு குயுக்தி எடுத்தேன். அதன் பலன் இன்று என் செல்லப் பெண் என் கண்முன்பாகவே புறக்கணிக்கப்பட்டு நிற்கக் கண்டு மனம் புழுங்குகிறேன்......"

ஹாலில் ஏதோ அடியோசை கேட்கவே காமுதான் வருகிறாளோ என்று இருவரும் ஜாக்கிரதை படுத்திக்கொண்டனர்.

"நான்தானப்பா வேலு. அம்மா தூங்க ஆரம்பித்துவிட்டாள். எழுந்திருக்க இன்னும் இரண்டு மணியாவது ஆகும். அதற்குள் அம்மாவின் விருத்தாந்தத்தைக் கேட்டுக்கொண்டு என் தங்கைக்கு வழி செய்ய வேண்டுமென்பதற்காகவே வந்தேன்" என்றான்.

பரிதாபத்தோடு ஒருவரையொருவர் கண்டு கண்ணீரைப் பெருக்கினர். பெருகும் கண்ணீருடனும் நெஞ்சை அடைக்கும் துக்கத்துடனும் தொடங்கினார் பெரியவர்.

3

"உம் அத்தையையும் அத்தை மகள் சுசீலாவையும் கண்டால் உம் அம்மாவுக்கு வேப்பங்காய் என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. பாலியத்தில் நாத்தனார் கொடுமைப் படுத்தினாள் என்பதற்காக, மாமியார் இறந்து சுய ராஜ்யம் கிடைத்தபின் நாத்தனாரைப் பழிக்குப் பழிவாங்கக் கங்கணம் கட்டிக்கொண்டாள் உன் அம்மா.

"என் தங்கை இங்கு வருகிறாள் என்றாலே போதும். வீடு போர்க்களமாக மாறிவிடும். வந்தவள் ஊர் திரும்பினாலொழிய எங்கள் போர்க்களம் குடித்தனமாக மாறாது. இந்நிலையில் இரண்டொரு தடவை வந்து போனவள் மீண்டும் தன் வாசற்படிக்கே வரக்கூடாதெனக் கண்டிப்பான வழியனுப்பலுடன் ஊர்போய்ச் சேர்ந்தாள். அதன் பிறகு ஒருவருக்கொருவர் முகாலோபனம்கூடக் கிடையாது. நான் மட்டும் அவள் அறியாமல் இரண்டொரு முறை தங்கையைப் போய்ப் பார்த்து வருவதுண்டு. கஷ்டப்படும் அவர்கள் குடும்பத்திற்கு என்னாலியன்ற சிறு உதவியைக் அவ்வப்போது செய்து வந்திருக்கிறேன்.

இந்நிலையில் என் சகோதரி ஒரு பெண்ணை விட்டுவிட்டு, கண்ணை மூடிவிட்டாள். ஐந்தாறு வயதுப்பெண்ணை வைத்துக்கொண்டு தனியாக வாழமுடியாதென்று நினைத்த என் தங்கையின் புருஷன் மறுமணம் செய்துகொண்டான். சிறு வயதிலேயே தாயை விழுங்கிவிட்ட அக்குழந்தைக்கு வந்தவளாவது நல்லவளாக இருக்கக்கூடாதா! தன் மூத்தவளின் குழந்தையைக் கொடுமைப் படுத்துவதின்மூலமே தன்னுடைய செல்வாக்கு அதிகரிக்க ஏதுவாகும் என்று நினைத்ததே போல, சுசீலாவைக் கொடுமைப் படுத்துவதே தொழிலாகக் கொண்டிருந்தாள் வந்தவள். இந்நிலையில் அந்தப் பெண்ணுக்குக் கலியாண பருவம் வந்தது

நல்ல வரன்கள் பார்த்துக் கொடுப்பதானுல் பணம் விசாமல் காரியம் நடக்காது. அதனுல் எதோ கிழமோ கெட்டையோ பார்த்துத்தான் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அடம் பிடித்தாள் இளையாள் பார்வதி. இந்நிலையில் அவதிப்பட்டனர் தந்தையும் மகளும்.

"ஒரு நாள் என்னிடம் வந்து யோசனை கேட்டார். உன் அண்ணனுக்கு அந்தப் பெண்ணைக் கட்டிக்கொள்வதில் எனக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. ஆனுல் உன் அம்மா சம்மதிக்க வேண்டுமே. நல்ல புத்தியுடனிருக்கும்போதே அவர்கள் வாடையே ஆகாதென்கிறவள் இப்பொழுது புத்தி தடுமாறிய நிலையில்.

"அப்போதுதான் உங்கம்மாவுக்குமூளைக் கோளாறு ஆரம்பமாகியிருந்தது. பேச்சுக்குப் பேச்சு வேலு, விமலா இவர்கள் சுகமாக வாழவேண்டும். அவர்கள் வம்சம்......அந்த நாசமாப்போற வம்சம் அடியோடு போகவேண்டுமென்று இறந்து போன என் தங்கையின் வம்சத்தைத் திட்டிக்கொண்டிருப்பாள்.

"அவள் மூளைக்கோளாறு எனது குயுக்திக்கு ஒரு வகையாகப் பயன் பட்டது, நீயும் உன் அண்ணனுமோ ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கிறீர்கள். எனக்கும் உடம்பு அசந்துவிட்டது. உன் அம்மாவோ நாளுக்கு நாள் புத்தி தடுமாறிப் போகிருள். இந்நிலையில் எங்கள் உதவிக்கு ஆள் அவசியம் தேவைப்பட்டது. இந்த இடத்தில்தான் ஒரு தந்திரத்தைக் கையாண்டேன்.

"நமது உதவிக்காகப் படிப்பை நிறுத்தி விமலாவை அழைத்து வந்துவிட்டேன் என்று கூறி, சுசிலாவை அவள் முன் நிறுத்தினேன். சுசிலாவை எப்பொழுதோ சிறு குழந்தையில் பார்த்திருந்த முகம் தானே. மேலும் புத்தி சுவாதீனமில்லாத நிலையில் எவ்வித மறுப்புமில்லாமல் அவளை நீ என்று நினைத்து ஏற்றுக் கொண்டாள்.......இப்படியாவது அந்தப் பெண்ணை, சிற்றன்னையின் கொடுமையினின்றும் மீட்டு வந்துவிட்டால் பிறகு உன் தாயாரின் மனதை மாற்றிவிடலாமென்று நினைத்தேன்.

"நான் ஒன்று நினைக்க, தெய்வம் வேறென்று நினைத்துவிட்டது" என்று கண்ணீர் பெருக்கினுர் பெரியவர்.

தந்தை கூறிய விஷயங்களை விவரமாக மனதில் பதியவைத்துக்கொண்டு வெகு நேரம் சிந்தித்தான் வேலு.

"அப்பா, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி நடந்தாலென்ன?" என்று கேட்டான். அவன் யோசனையைக் கேட்டபோது தந்தையும் மகளும் மன மகிழ்ந்து நின்றனர்.

4

ஒரு வாரத்திற்குப் பின் பகல் போஜனம் அருந்திவிட்டு யாவரும் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பைத்தியமும் அவர்கள் நடுவே கலந்துகொண்டிருந்தாள்.

"அம்மா, விருந்தாளி இன்று மாலை ஊருக்குத் திரும்புகிருளம்மா. போகும் போது என்னையும் விமலாவையும் தன் விருந்தாளியாக அழைத்துப்போக விரும்புகிருளம்மா" என்று கூறி முடித்தான் வேலு.

"ஓ, பேஷாப் போயிட்டு வாங்களேன்... இல்லை நீ மட்டும் போனுல் போதாதா, விமலா எதற்கு?" என்று முகத்தைச் சுளித்தாள்.

"நான் வந்திருக்கவில்லையாம்மா உங்கள் வீட்டில். உங்கள் விமலாவும் வரட்டுமே எங்களுடன்" என்று விருந்தாளியே நேராகக் கூறியபொழுது பைத்தியமானுலும் அவள் வார்த்தையை மறுக்கமுடியவில்லை. மறுதினமே புறப்பட்டனர் மூவரும்.

தன்னுடன் காலேஜில் படிக்கும் நண்பனொருவனின் விலாசத்தைத் தேடிக் கொண்டுபோய்ச் சேர்ந்தான் வேலு.

தன்னுடன் படிக்கும் வேலுவையும் அவன் தங்கையையும் தெரியும் அந்த நண்பனுக்கு. மூன்ருவதாக வந்த நபர் புதிதாய் இருக்கவே வேலுவுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டான் நண்பன்.

"ஏண்டா பழி, உன் கல்யாணத்திற்கு எனக்கெல்லாம் தெரியப்படுத்தினால் வந்துவிடுவேனென்று ஒரு கடிதம்கூட அனுப்பவில்லை" என்று நண்பன் கூறுவது வேலுவுக்குச் சிரிப்பாய் வந்தது.

"கலியாணம் இன்னும் ஆகவில்லையப்பா. ஆகப்போகிற பெண்தான். அதற்காகத்தான் உனது உதவியை நாடிவந்தேன்."

"சரிதான்போ. கள்ளக்காதலாக்கும்."

"அட அவசரக்குடுக்கை. விஷயத்தைப் பூராவும் புரிந்துகொள்ளாமல் எதற்காகக் கன்னாபின்னா என்று உளறுகிறாய். பிரகஸ்பதி!" என்று கடிந்துவிட்டு, தன் வரலாறு முழுவதையும் எடுத்து விளக்கினான்.

பின்னும் ஒரு வாரத்திற்குப் பிறகு நிஜ விமலா போலி விமலாவின் உடையில் புறப்பட்டாள் தன் வீட்டிற்கு.

பயித்தியக்காரத்தாய் நம்புவதற்காகத் தனது காலேஜ் பாணியைத் துறந்துவிட்டு, போலி விமலாவின் நகைகளை அணிந்துகொண்டு, அவள் நடைநொடி பாவனைகளையும் கற்றுக்கொண்டு அவளிடமிருந்து புறப்பட்டாள் தன் வீட்டிற்கு.

5

மகன் லீவு முடிந்து ஊர் திரும்புவதற்குள் மணமுடித்துப் பார்த்துவிடத் துடித்துக்கொண்டிருந்த காமுவின் மனதை இரண்டு வகையில் குளிரப் பண்ணினான் வேலு.

அம்மா என்னுடன் வந்ததே ஒரு பெண், அதை எனக்குக் கொடுக்கிறேனென்கிறாளம்மா அவள் பெற்றோர்கள். அதோடு மட்டுமல்ல அந்தப் பெண்ணின் சகோதரனுக்கு நம் விமலாவை.

துள்ளிக் குதித்தது பைத்தியம். ஒரே கல்லில் இரண்டு மாங்காயல்லவா. "அந்தப் பெண் உன்னுடன் பழகும்போதே நினைத்தேன்."

"சரி இனிமேலே நடக்க வேண்டியதைப் பாருங்கள்," என்று ஜோஸியரை அழைத்துவர ஆளனுப்பினாள்.

நண்பன் வீட்டில் விட்● வந்த சுசீலா விமலாவின் காலேஜ் பாணியில் உடையணிந்துகொண்டு வேலுவுக்கு மாலையிட்டாள்.

சமயத்தில் தங்க இடம் கொடுத்து உதவி செய்த நண்பன் நிஜ விமலாவை மாலையிட்டான்.

கலியாணம் சுபமாக முடிந்தது.

கலியாணத்தின் பின் ஒரு நாள். யாவரும் அமர்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இருந்தாற்போலிருந்து கடகடவென்று சிரிக்கத் தொடங்கினாள் காமு.

ஏது பைத்தியம் அதிகமாகிவிட்டது போலும் என்று பயந்து மற்ற யாவரும் செய்வதறியாமல் விழித்துக்கொண்டு நின்றனர்.

"வேலு நீயும் உன் அப்பாவும் என்னை ஏமாற்றிவிட்டதாகத்தானே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் தொடர்ந்து நடித்துக்கொண்டிருப்பீர்கள்" என்று அவள் கேட்டபோது திகிலுற்று நின்றனர் யாவரும். மாறாத அதே சிரிப்புடன் மேலும் அவள் பேசலானாள்.

"சொல்லப்போனால் திறமையுடன் கூடியது என்னுடைய நடிப்பே,"

"என்ன நடிப்பா" என்ற வார்த்தைகள் பலரது வாயிலிருந்து ஒரே சமயத்தில் வெளிப்புறப்பட்டது.

"என்னைப் பயித்தியமென்றுதானே இதுவரை நினைத்திருந்தீர்கள்? இல்லை, பயித்தியமாக நடித்தேன்.

"என் நாத்தனார் பாலியத்தில் என்னைக் கொடுமைப் படுத்தியதற்காக, எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோது அவளை ஓட்டிக்கு ரெட்டியாகக் கொடுமைப்படுத்தித் துன்புறுத்தினேன். அவள் துன்பமுறக் கண்டு மிகவும் மன நிம்மதியடைந்தேன்.

"ஆனாலும் இயற்கையிலேயே நல்ல நோககமும் நல் மனச்சாட்சியும்கொண்ட என் மனம் என்னை இடித்துக்கொண்டிருந்தது. உன்னைத் துன்புறுத்தியவளை நீ உபசரித்து அவள் குற்றத்தை அவளே உணரும்படி செய்யவேண்டுமே தவிர, அதற்காக இப்படிப் பழிக்குப்பழி வாங்குவது தவறு என்று சிலசமயம் தோன்றுவதுண்டு. அதை யடுத்து நான் நடப்பதே சரியான முறை என்று அடிநாளில் நான் பட்ட துன்பம் நினைவில் தோன்றி என் செய்கையை ஆதரிக்கும்.

இந்த இரண்டு விதமான போராட்டத்தின் முடிவுதான் என் சிந்தனையைச் சற்றுக்குழப்பிவிட்டு நிஜமாகவே எனக்குப் பயித்தியம் தோன்றியிருந்தது. ஆனால் அந்தப் பயித்தியம் நெடுநாள் நீடித்து நிலைக்கவில்லை. என் சிந்தனைக்கு முடிவு கிடைத்துவிட்டபோது என் மூளைக்குக் கோளாறு ஏது? நெடுநாளைப் போராட்டத்திற்குப் பிறகு அல்லல்படும் நாத்தனாரின் குடும்பத்தை ஆதரிக்க வேண்டியதே நமது கடமை என்றமுடிவுக்கு வந்துவிட்டது என்மனம்.

ஆனால் என்முடிவைவெளிப்படையாகத் தெரிவித்தால் யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்களல்லவா? ஆகவே பைத்தியத்தை,தொடர்ந்து நடித்தே சுசிலாவைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தேன்.

என் கண்மணி விமலாவை என் குழந்தையில்லையென்று விரட்டும்போது என் நெஞ்சு எப்படித் துடித்தது தெரியுமா? நான் எடுத்துக் கொண்ட பாகத்தை வெற்றியுடன் நடிக்க வேண்டுமென்பதற்காக என் பாசம், ரத்தம் இதயம் துடித்ததை யெல்லாம் கட்டுப்படுத்திக் கொள்ள என்ன பாடுபட்டேன்?

"அம்மா" என்று ஓடிவந்து கட்டிக்கொண்டாள் விமலா. இதுவரை தாயின் அன்புக்கு ஏங்கியிருந்த விமலா தாயின் அன்புப் பெருக்கில் தன்னை மறந்து நின்றாள்.

அத்தை என்று நமஸ்கரித்த சுசிலாவைப் பரிவுடன் தூக்கி நிறுத்தி நீங்களிருவருமாவது நாத்தி மதனி கொடுமையில்லாமல் சௌஜன்யமாயிருங்கள் என்று தன் மனமுவந்த ஆசிர்வாதத்தை அளித்தாள் பயித்தியப்போர்வையினின்று விடுபட்ட காமு. ●

எமது
அபிமானிகள் வாடிக்கைக்காரர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
மங்களமான எமது பொங்கல்
வாழ்த்துகள்

★

ரதோட் டிரேடிங் கம்பெனி
பிரஸிடெண்ட் விஜிடேபிள் ஹேர் ஆயில்
பிரஸிடெண்ட் ஸ்கோ தயாரிப்பவர்கள்
சௌகார்பேட், மதராஸ்.

பர்த் "ஸ்டேபிரைட்" எவர்ஸில்வர்
ஸ்டீல் பாத்திரங்கள்

சுகாதாரத்திற்கு உகந்தவை

- ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகள் அனைத்திற்கும் அவசியமானது
- கல்யாணங்களுக்கும் மற்றும் எல்லாவித விசேஷங்களுக்கும் சீர்வரிசையாகவும் வெகுமதியாகவும் கொடுப்பதற்கு மிகவும் கண்யமானவை
- நீடித்த உழைப்பு, உறுதி, நம்பிக்கை, விலை மலிவு முதலிய சகல அம்சங்களுடன் மொத்தத்திலும் சில்லரையிலும் கிடைக்கும்
- உபயோகத்தில் கருக்காதவை, கைக்காதவை உடையாதவை

எம். ஏ. எதிராஜுலு நாயுடு
7/4. ஈவினிங்பஜார் (போன் 4108) மதராஸ்

ஸ்ரீ ஸ்துதி

உலகத்தில் மாந்தர்கள் உய்வதற்கு ஞானம்தான்முக்ய ஸாதனம். அநேக மஹான்கள் அவதரித்து அந்த ஞானத்தை உபதேசித்து வந்திருக்கிறார்கள். இத் தென்னாட்டில் அப்படிப்பட்ட ஞானவான்களுக்குள் மிக்க சிரேஷ்டராகவும் ப்ரஸித்தி பெற்றவராகவும் ஸ்ரீ வைஷ்ணவ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்த ஆசார்யர்களில் ஒருவராகவும் ஸ்ரீ விஷ்ணு கண்டாவதாரர், ஸ்ரீவேங்கடநாதர் எனப் பேர்பெற்ற ஸ்ரீ வேதாந்த தேசிகர் அவதரித்து அநேக வடமொழி, தென்மொழி நூல்களை நூற்றுக் கணக்கில் அருளிச்செய்து ஞான, வைராக்ய, பக்தி மார்க்கங்களை உலகிற்கு வகுத்துக் கொடுத்தார்.

இவர் இயல், இசை, நாடகம் என்ற கலா பிவிருத்தியும் ஏற்பட அரும் பாடுபட்டிருக்கிறார். இவர் நூல்களில் அநேகம் இசைக்கு இணங்கினதாகவே இருக்கின்றன.

இவருடைய கலாஞானத்தின் உயர்வை அவருடைய ஸமகாலத்தவர்களான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் முதலான பெரிய பண்டிதர்களும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் ஒரு ஸமயம் விஜயநகரத்தில்தாம் உயர் பதவி வகித்த காலத்தில் தேசிகனை, பண்டிதர் என்ற முறையில் ராஜஸபைக்கு வரும்படி அழைத்தபொழுது தேசிகர், ஸ்ரீ பகவானைத்தவிர, பூமி பாலகர்களையோ, மற்ற அதிகாரி வர்க்கங்களையோ பாலன சக்தியுள்ளவர்களென்று மதிப்பதில்லையாதலால் வைராக்ய பஞ்சகம் என்ற 5 சுலோகங்களை எழுதியனுப்பி ராஜாவினால் அடையக்கூடிய ஸகல விபவங்களையும் வெறுத்து ஸ்ரீ குசேலஸ்வாமியைப்போல் வாழ்ந்தார்.

இவருக்கு ஸ்ரீ வித்யா உபாஸனையும் உண்டு. ஸ்ரீ ஹயக்ரீவ உபாஸனை ஸித்தி பெற்றவர். இதனால் அநேக நூல்களை அநாயாஸமாகச் செய்யமுடிந்தது. இவருடைய ஞான, வைராக்ய, பக்தி இவைகளுக்குப் பரீக்ஷார்த்தமாக உலகத்தோர் சிலர் இவரிடம் கொண்ட அசூயையினால் பொருள் சேமிப்பில்லாத இவரிடம் ஒரு அர்த்தார்த்தியான பிரும்மசாரியை அழைத்து ஸ்ரீ தேசிகர் ஏராளமாகப்பொன் கொடுப்பர் என்று அவரிடம் போகும்படி அனுப்பிவைத்தார்கள். காசுகூடத் தமக்கென்று வைத்துக்கொள்ளாத இவர் எப்படிப் பொன் கொடுக்கமுடிந்தது? உடனே ஸ்ரீய:பதி ஸ்ரீமந் நாராயணனிடத்தில் மனதை நிலை நிறுத்தி, ஸ்ரீதேவியை ஸ்தோத்திரம் செய்தார் ஸ்ரீதேவி பக்தபராதீனையல்லவா? அப்பொழுதே கனகதாரை வர்ஷித்தது. அந்தப் பிரும்மசாரியை எடுத்துக்கொள்ளும்படி நியமித்தார். அவரும் பொருளுடன் பரம திருப்தியடைந்து சென்றார்.

"ஸ்ரீ ஸ்துதி" என்ற பெயருடன் உத்தமமான ஒரு கிரந்தம் உலகிற்குக் கிடைத்தது. இதற்கு "ஸ்ரீ தேசிகன் கனகதாரா ஸ்தவம்" என்று பெயர். இதன் உயர்வு வர்ணிக்கமுடியாத பெருமை வாய்ந்தது. இந்த ஸ்தோத்திரத்தில் உள்ள அம்சம் பூராவும் வேதாந்த விஷயங்களை உட்கொண்டதாகவும் ஸ்ரீ வித்யா உபாஸக யோக மார்க்கத்தை உபதேசிப்பதாகவும் விளங்குகிறது. அளவற்ற ஐச்வர்யத்தையும், எல்லாவிதமான இஷ்ட ஸித்தியையும் கொடுக்கவல்லது. இதன் மகிமையைப் பற்றி எழுதிய ஒரு முன்னுரையில் சென்னை மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்ரீமான் வ. வெ. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் "மந்த்ர ஸித்தி பெறுவதற்கு அதிகாரிகள் அல்லாதவர்களுக்கும் அசக்தர்களுக்கும் கூட அதே பலனையடையக்கூடிய ஸுலப மார்க்கத்தைச் செய்தருளின ஸ்ரீ தேசிகனைக் கிருபாநிதி என்றல்லவோ நாம் கருதவேண்டும்" என்று புகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஸ்ரீ ஸ்துதி லயபத்தமாக இசைக்கு ஒத்திருக்கிறதென்பது தனிச் சிறப்பு.

இந்த ஸ்தோத்திரத்தை ப்ராசீன கர்னாடக ஸங்கீத வித்வத்திலகம் நாமக்கல் பல்லவி நரஸிம்மய்யங்கார் அவர்களுடைய முக்ய சிஷ்யர்களுள் ஒருவராகிய ஸங்கீத வித்வான் (கல்கத்தா) ஸ்ரீ A. K. ராகவாச்சாரியார் ஒவ்வொரு சுலோகமும் ஒவ்வொரு ராகமாக 25 சுலோகங்களையும் 25 ராகங்களில் விளம்ப, மத்யமகால ஸ்வரஜதி சிட்டையுடன் அழகான ரீதியில் ராகமாலிகையாகத் தொடுத்து ஸங்கீத உலகத்திற்கு அரும்பணியாற்றி யிருக்கிறார். ஸங்கீத அபிமானிகளும், ரஸிகர்களும் ஏனையோர்களும் ஸ்ரீ தேவியின் கிருபையைப் பெற இது ஒரு அரிய ஸந்தர்ப்பம்.

ஸ்ரீஸ்துதி

मानातीतप्रथितविभवां मङ्गलं मङ्गलानां
वक्षःपीठीं मधुविजयिनो भूषयन्तीं स्वकान्त्या ।
प्रत्यक्षानुश्रविकमहिमप्रार्थिनीनां प्रजानां
श्रेयोमूर्तिं श्रियमशरणस्त्वां शरण्यां प्रपद्ये ॥

மாநாதீத ப்ரதித விபவாம் மங்களம் மங்களா நாம்
வக்ஷ : பீடீம் மது விஜயிநோ பூஷயந் தீம் ஸ்வகாந்த்யா ।
ப்ரத்யக்ஷா நுச்ரவிக மஹிம ப்ரார்த்திநீ நாம் ப்ரஜாநாம்
ச்ரேயோ மூர்த்திம்ச்ரியமசரண ஸ்த்வாம் சரண்யாம் ப்ரபத்யே ॥

நாட்டைக்குறிஞ்சி

ஆதி 2 கலை

ஸ்ா ; ; ; ஸ் ஙி தா நீ ; தா ஙி ஸ் ஙி த நீ தா மா தா , ஙி	ஸ்ா ; ; , ·ரி ஸ் ஙி தா நீ பா	தா , ஙி ஸர் நீ ஸர் ; ; ;
மா நா தி த ப்ர	தி த வி	ப வாம்
நீ ஸ் ஙி ஸ்ா ரிக் ·ரீ ஸ்ா ஸ்ா நீ தா ஙி ஸ் தா நீ நீ மா தா ;	தா, ஙி ஸ்ா நீ தா மா மா கா	கா ரீ காமப க ம ரி கஸா ;
ம ங்க . ளம்	ம ங் க	ளா நாம்
மா கா மா தா தா மா ; ; ம நீ த தா ·ரிஸ் ஸ ஙி நீ தா மா	தா ; ; ; தா ஙி ஸ் த நீ ப	ப ஙி தா ; ; நீ ; ; ;
வ . . . . . க்ஷ பீ டீம் ம	து வி . . ஜ . .	யி . நோ
தா, ஙிஸ்ா நீ ஸ்ா ; ·ரீ ; ·ரி ஸ்ா ·ரி கர் மர் ·ரீ ·ரி க் க் ஸ்ா ,	ஸ்ா , க் நீ ; ; ; ; ;	ஸ் த ஙி ப தா , ஙி ஸ் ஙி ஸர் ; ;
பூ . . ஷ ய ந்தீம்	ஸ்வ	கா ந்த்யா

மத்யம கால நடை

கா மா தா நீ ·ரீ ஸ்ா நீ தா மா தா மா நீ தா மா கா ஸா	ஸா ரீ கா மா நீ தா மா தா	மா நீ தா நீ ஸ்ா நீ ஸர் ;
ப்ர . த்ய க்ஷா . நு . ச்ர வி க ம . ஹி . ம	ப்ரா . ர்த்தி . நீ . நாம்	ப்ர . ஜா . நா ம்
மர் க்ா ஸ்ா நீ தா நீ பா தா நீ ஸ்ா ; தா நீ ; ஸ்ா ·ரீ	ம்ா க்ா ஸ்ா ஸ்ா நீ தா மா கா	ஸா ; ; தா நீ பா தா நீ
ச்ரே . யோ . மூ . ர்த்தி ம் ச்ரி ய ம ச ர ண	ஸ்த்வாம் ச . ர ண்	யாம் ப்ர . ப . த்யே

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; நீ தா நீ பா தா நீ தா தா மா ; கா மா பா	கா மா ரீ கா ஸா ; நீ ஸா	ரீ கா மா நீ தா ; ; ;
ஸா த த க தி ன நீ தா த ஜம் கா மா பா	த கி ட த ஜம் நீ ஸா	ரீ கா மா நீ தா ; ; ;
தா மா ; நீ ; தா ; நீ பா தா நீ ஸ்ா ; நீ ; ஸ்ா	மர் கர் ஸர் நீ தா மா கா ஸா	கா கா ஸா தா நீ பா தா நீ
த ஜம் நீ தா நீ கி ட த ஜம் நீ ஸ்ா	ம்ா க்ா ஸ்ா நீ தா மா கா த	– ஜ்ஜ ம் த தி கி ண தொம்

आविर्भावः कलशजलधावध्वरे वापि यस्याः
स्थानं यस्याः सरसिजवनं विष्णुवक्षःस्थलं वा ।
भूमा यस्याः भुवनमखिलं देवि दिव्यं पदं वा
स्तोकप्रज्ञैरनवधिगुणा स्तूयसे सा कथं त्वम् ॥ ॥ २ ॥

ஆவிர்பாவ : கலச ஜலதா வத்வரேவாபி யஸ்யா :
ஸ்தாநம்யஸ்யாஸ் ஸரஸிஜவநம் விஷ்ணுவக்ஷஸ்தலம் வா |
பூமாயஸ்யா: புவநமகிலம் தேவி திவ்யம் பதம் வா
ஸ்தோக ப்ரஜ்ஞைரநவதிகுணா ஸ்தூயஸே ஸா கதம் த்வம் ||

ஆதி 2 களை

தர்பார்

லகு

ஸ் ; ; ; நீ ·ரி ஸ்ா ; ரி ஸ்ா ·ரிஸ் நிஸ் பதாப பா ;
ஆ வி . ர் பா வ
ரிமா ரி ரி பம பா ; ; ; பாதா தபபம பா தா ;
வ . . த்வ . . ரே வா பி
நி ஸர் ; ; நி ஸ்ா ; ·ரீ ; ப்ம்·ரி ·ரிம் ரிம் ஸ்ரீஸ்ஸ்ா ;
ஸ்தா நம் ய ஸ்யா
தா, நிஸ்ா பா தா நீ பா ; பாமா பமமரி ரிஸா ரிமா
வி . ஷ்ணு வ க்ஷ

த்ருதம்

; மாபா ; தா, நிபா ;
க ல ச
தா ; ; ; நீ ; நிஸ்ா ப
ய
தர் ·ரி ஸர் ; பா தா நீ பா
ஸ . ர . ஸி . ஜ
பா ; ; ; த நீ, பா ;
ஸ்த

த்ருதம்

தநிபம ரிமரிம ஸரீஸஸா ;
ஜ . ல தா
தர் ரீ ·ரிஸ்ஸ்நி ஸர் ; ; ;
ஸ்யா
பாதா தபபம பா ; தா ;
வ நம்
மபதநி பமரிம ஸரீஸஸா ;
லம் வா

மத்யம கால நடை

தா தா பா ; பா மா பா தா நீ ஸர் ·ரி ·ரிமர் ஸ்ா ·ரீ ஸ்ா
பூ மா ய , ஸ்யா , புவ ந ம , கி , லம்
ரி மா பா தா நீ ஸ்ா ·ரி ; ப்ம் ·ரிம் ·ரி ஸர் நீ ஸர் தா பா
ஸ்தோ . க . ப்ர . ஜ்ஞை ர . ந . வ தி கு . ணா .

தா ரி ஸர் ; பா தா நீ பா
தே . வி தி . வ்யம்
; தா நீ ஸ்ா ஸர் பா ; தா
ஸ்தூ . ய ஸே . ஸா

பா தா தபபம பா ; தா ;
ப . தம் வா
நீ பா பம ரி ; மா பா தா
. க தம் . . த்வம் . .

ஸ்வர ஜதி

பா ; ; தா ; நீ பா மா பா தா நீ பா ; த நி பா மா
பா தா நீ கி ட த த ஜ ணு த . தி மி
தா தா நீ பா ; தா மா பா தா நீ ; ஸ்ா ·ரி ம்ா ·ரி ஸர்
த கி ட பா தா மா பா தா நீ ஸா த த ஜ ணு

ரிமஸரி, ஸா ரி மா பா தா
த . ளா . . ங்கு ரி மா பா தா
நீ ஸர் தா பா ம ப தா நீ பா
நீ ஸா தா பா த . ளா . ங்கு

; நீ பா மா பா ; ; ;
; நீ பா மா பா ; ; ;
மா ரி ரிஸ ரி மா பா தா நீ
த க த . தி . கிண தோம் ;

தெய்வம்
தந்தது
DEVAN

மாயாவி

டேபாபு பம்பாய்க்கு வந்த புதிதில் ஒரு சாதாரண குஜராத்தி ஹோட்டலில் தங்கி உணவு உண்டுவந்தார். ஆனால், அந்தஸ்தும், பணப் புழக்கமும் பெருகப் பெருக, அவர் தமது வாழ்க்கை நிலையையும் உயர்த்திக் கொள்ளவேண்டியதாயிற்று. சென்ற மூன்று மாதங்களாக அவர் பம்பாயின் உயர்தர ஹோட்டல்களில் ஒன்றாகிய 'வெஸ்ட் எண்ட்' ஹோட்டலில் தங்கியிருந்தார். அவர் நிலயத்துக்கும் ஹோட்டலுக்கும் அதிக தூரமில்லை. எனவே நாங்கள் அங்கு நடந்தே சென்று சாப்பாட்டை முடித்துக்கொண்டோம். பிறகு டேயிடம் விடைபெற்று, நான் 'மரைன்லைன்ஸ்' ஸ்டேஷனை வந்து அடைந்தபோது மணி பத்தேகால் ஆகிவிட்டது. இரவு பின்நேரம் ஆகிவிட்டதால், பகலைப்போல ஐந்து நிமிடங்களுக்கு ஒரு ரெயில் கிடையாது, பத்து-முப்பத்துஐந்துக்குத்தான் அடுத்த வண்டி என்று 'இண்டிக்கேட்டர்' காட்டிற்று. 'சிவனே' யென்று அங்கிருந்த பெஞ்சு ஒன்றில் உட்காரச் சென்றபோது, ஒரு சிறு விஷயத்தில் டேயை ஏமாற்றி வந்துவிட்டது, தெரிந்தது.

அப்பொழுது மழைக்காலம். பம்பாயின் மழைதான் பிரசித்தமானது ஆயிற்றே! நான் உட்காரச்சென்ற ஸ்டேஷன் பெஞ்சு, சாரல் அடித்து நனைந்திருந்தது.

தினசரிப் பத்திரிகையை விடாமற் படிக்கும் இயல்புடையவன், நான். காலையில் ரெயிலில் பிரயாணம் செய்யும்போதும், காரியாலயத்தில் ஒழிவு கிடைக்கும் போதும், படித்து முடித்த பத்திரிகையை, மழைக்காலத்தில் இது போன்ற இடத்தில் விரித்து உட்காரப் பயன் படுத்திக் கொள்ளுவேன். அந்த முறையில், இன்று ஸ்டேஷன் பெஞ்சில் விரிக்கத் தினசரிக்காகக் கையைப் பார்க்கும்பொழுது, அதற்குப் பதிலாக 'சர்வோதயம்' இதழ் இருந்தது. ஆம், வீட்டுக்குப் போகும் அவசரத்தில், தினசரியை டேயின் அறையில் விட்டு விட்டு, அவருக்குப் படிக்கக் கொடுத்திருக்க வேண்டிய 'சர்வோதய'த்தை எடுத்துவந்துவிட்டேன். "சரி; நாளைக்கு அவர் இதற்குத் தனியாக ஒரு 'டோஸ்' கொடுக்கப்போகிறார்" என்று எண்ணி, நின்றவாறே காலத்தைப் போக்கி ரெயில் வந்ததும் ஏறி அமர்ந்தேன்.

நாள்தோறும் இரண்டு மணி நேர ரெயில் பிரயாணம் வாழ்க்கைத் தேவைகளில் ஒன்றாகிவிட்ட எனக்கு அதைப் பொழுதுபோக்காகக் கடத்திவிட முடியாதிருந்தது. அந்நேரத்தைக் காலையில் பத்திரிகை படிக்கவும், மாலையில் தூங்கவுமாகப் பிரித்து உபயோகித்து வந்தேன். அவ்வழக்கப்படி இன்றும் ரெயிலில் உட்கார்ந்த உடனே கண்களை மூடிவிட்டேன். ஒரு நிமிஷந்தான், உறக்கம் என்னைக் கவ்வுவதற்கு முன்பே "ஸார்" என்றொரு குரல் அருகில் கேட்டது. கண்களை விழித்தபோது எதிர் சாரி பெஞ்சில் உட்கார்ந்திருந்த பெரியவர் ஒருவர் என்னை விளித்துக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

"என்ன?"

"அந்தப் பத்திரிகையைச் சற்றுப் பார்க்கலாமா?"

"அது தமிழ்ப் பத்திரிகை அல்லவா?"

"நானும் தமிழன்தான்."



எங்கள் சம்பாஷணை ஆங்கிலத்தில் நிகழ்ந்ததாலும், அவர் குஜராத்திப் பாணியில் உடை அணிந்திருந்தாலும், அவரைத் தமிழர் என்று நான் நினைக்கவே இல்லை.

"அதற்கென்ன; எடுத்துக்

கொள்ளுங்களேன்" என்று 'சர்வோதய'த்தை அவரிடம் கொடுத்தேன்.

பத்திரிகையின் மடிப்பைக் கலைத்துப் பெயரைப் பார்த்தார், அவர்; அவ்வளவுதான்; "இந்தப் பத்திரிகையா? தாங்க்ஸ்" என்று என்னிடம் திருப்பித் தந்துவிட்டார்.

"ஏன் படித்த இதழோ?" என்றேன் பத்திரிகையை வாங்கி வைத்துவிட்டுக் கண்களை மூடியவாறு.

"ஆமாம்; இந்த இதழைப் படித்தேன்; இனி எந்த இதழையும் தொடவேமாட்டேன்"

எனது மூடிய கண்கள் சட்டெனத் திறந்தன. "ஏன் ஸார்?" என்று கேட்டேன் அவரைக் கூர்ந்து நோக்கியவாறு.

"பின் என்ன ஸார்? நம் ஊரிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஆயிற்றே என்று விலைக்கும் தரத்துக்கும் உள்ள வித்தியாஸத்தைப் பாராட்டாது வாங்கினால், அதில் அபத்தமான கட்டுரைகளையா வெளியிடுவது?"

"நீங்கள் எந்தக் கட்டுரையைக் கூறுகிறீர்கள்?"

"'என்ன வேண்டும்' என்ற கட்டுரையைப் படித்தீர்களா? கதை எழுதுகிற பேர்வழிகளெல்லாம்; என் ஸார், கட்டுரை எழுதிக் கழுத்தை அறுக்கவேண்டும்? இந்த ஆசாமி 'மாயாவி'யின் கதைகளை நானும் எங்கள் வீட்டிலும் விரும்பிப் படிப்போம், ஸார். அவருடைய நெடுங் கதைகளைப் படித்துவிட்டு அவருக்குச் சிறிது மதிப்புக்கூடக் கொடுத்திருந்தோம். அனைத்தையும் ஒரு நிமிஷத்தில் போக்கடித்துக்கொண்டுவிட்டாரே மனுஷன். அவர் யார் ஸார்? பம்பாயில் எங்கே வசிக்கிறார்? அந்த மனிதரைக் கண்டு, "ஸ்வாமி, நீங்கள் கட்டுரையே எழுதாதீர்கள்; அப்படி எழுதினாலும், இப்படி உதவாக்கரை விஷயங்களை எழுதாதீர்கள்' என்று எச்சரிக்க விரும்புகிறேன். அவர் விலாசம் உங்களுக்குத் தெரியுமா?"

'நான் தான் ஸார், அந்தப் பேர்வழி. ஏன்? அந்தக் கட்டுரையில் என்ன தவறைக் கண்டுவிட்டீர்கள்? உள்ளதை எடுத்துக் காட்டினால் உடம்பு எரிச்சல் ஏற்படுகிறதோ? 'என்று வெடுக்கெனக் கேட்டுவிட ஒரு கணம் துடித்தேன். ஆனால், ஆளைக் காட்டிக்கொள்ளாமலே, அக்கட்டுரையில் எதை 'அபத்தம்', எதை 'உதவாக்கரை' என்கிறார் என்பதை அறிந்துகொள்ளுவதுதான் நல்லதென்று பதற்றத்தை அடக்கிக்கொண்டேன். சொன்னேன்: "ஆச்சரியமாயிருக்கிறதே! உங்கள் குறைபாடு. அந்தக் கட்டுரையைப் பாராட்டி நான்கூட அதன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன்; நீங்களானால் அது சுத்த அபத்தமான கட்டுரை என்று சொல்லுகிறீர்களே' ஏன் ஸார், அவர் எழுதியிருப்பது அனைத்தும் உண்மைதானே, ஸார்? எவ்வளவு பணத்தை, நாம் அந்த ஸ்வாமீஜி, இந்தப் பாகவதர், 'ஸம்–எச்ஸ்' சாஸ்திரி என்று வாரி இறைத்திருக்கிறோம். முதலில் நம் தெய்வத்துக்கு ஒரு கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்தபிறகல்லவா, இந்தக் கோலாகலங்களையெல்லாம் அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்?'

"நிறுத்துங்கள்" என்று குறுக்கிட்டார், அப் பெரியவர். தொடர்ந்தார்: "அதைச் சொல்லவில்லை, ஸார்; நம்மிடையே தெய்வமே இல்லாதிருக்கும்போது, யாருக்குக் கோவில் கட்டவேண்டும் மென்கிறார், அவர்?"

'தாணா' *ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிவந்த பைத்தியத்திடம் பேசிக்கொண்டிருக்கிறேனோ என்ற பீதி இதைக் கேட்ட உடனே எனக்கு உண்டாயிற்று. அல்லது, இந்த மனிதர் நாஸ்திகரா? பின் என்ன? மாதம் தவறினாலும் விழாத் தவறாது மாதுங்காவின் 'பஜனை'–'ஆஸ்திக' சமாஜங்கள் போட்டி போட்டு ஜமாய்த்துக்கொண்டிருக்கையில், தெய்வ பக்தியில்லாமலா அவர்கள் அவற்றைச் செய்கிறார்கள்? பம்பாய்த் தமிழரிடையே தெய்வம் இல்லையென்றால், இந்த உலகில் வேறு எங்கேதான் அது இருக்கப்போகிறது? இல்லை; இந்த மனிதரின் கூற்று ஆதாரமற்றது. இவருடன் வாதாடுவது மதியீனம். சொந்த விருப்பு வெறுப்பு எவற்றையோ மனதில் கொண்டு தான் இவர் இப்படி எல்லாத் தமிழர்களையும் தாக்கிப் பேசுகிறார்.' என்று எண்ணி, சுவாரசியமற்றவனாக, மீண்டும் கண்களைமூட யத்தனித்தேன். ஆனால், அவர் என்னை விட்டால் தானே?

"ஏன் ஸார். பேசமாட்டேன் என்கிறீர்கள்?" என்று ஆரம்பித்துச் சரமாரியாகப் பொழிந்து தள்ளிவிட்டார். "எங்கே ஸார், இருக்கிறது, தெய்வம்? சொல்லுங்கள். உங்களை, என்னைப்போன்ற புருஷர்களிடமா? அல்லது நம்முடைய பெண்மணிகளிடமா? நமது சந்ததிகளிடமா? நம்முடைய இல்லங்களிலா? ஆபீசிலா? அல்லது இத்தனை திருவிழாக்களை நடத்துகிறார்களே, அந்தச் சமாஜங்களிலா? எங்கே இருக்கிறது சொல்லுங்கள், அந்தத் தெய்வம்." என்று அவர் வெறிபிடித்

* பம்பாயின் படுகையிலுள்ள ஒரு டவுன். இங்கேதான் 'கீழ்ப்பாக்க' ஆஸ்பத்திரியைவிடப் பெரியதும் நிறைய நோயாளிகள் கொண்டதுமான பைத்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறது.

தவர்போலக் கேட்டபொழுது, பிரகலாதனை நோக்கி 'எங்கே அந்த ஹரி?' என்று கேட்ட ஹிரணியகசிபுவைப்போலவே எனக்குத் தோன்றினார்.

ஆளை அறியாமல் அகப்பட்டுக் கொண்டு விட்ட உணர்ச்சியுடன் நடுங்கி அமர்ந்திருக்க, அவர் என்னை நோக்கி இன்னும் சொன்னார்: "தெய்வம் எங்குமே இல்லை, ஸார், அதற்கு வசிக்க ஒரு இடங்கூடக் காலியில்லாது எங்கும் வஞ்சகமும், சூதும், வாதும், ஏமாற்றமும் நிறைந்துகொண்டு விட்டன. நாம்தாம் எத்தனை ஒழுங்காக இருக்கிறோம், ஸார்? பிறிதொருவன் வாழச் சகிக்கிறோமா? எத்தனை அட்டூழியங்களை மனமறிந்து செய்கின்றோம்? நம் பெண்டுகளோ, அடேயப்பா; அத்தனையும் கபடு; அவ்வளவும் வேஷம். ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் ஏமாற்ற முயலுகிறோம். கணநேர இன்பத்துக்காக, கால்காசு வரும்படிக்காக, இந்த ஒரு சாண் வயிற்றுக்காக, நம் ஆடம்பர வாழ்க்கைக்காக, பொறுக்க முடியாத பிழைகளைச் செய்துவிட்டு அவற்றை மூடி மறைக்கிறோம். பகல் வேஷம் போட்டு 'ஸ்வாமி' என்றும், 'தெய்வம்' என்றும் பசப்பி, திருவிழாக்களும், கதைகளும், காலட்சேபங்களும், கச்சேரிகளும் நடத்துகிறோம்.

"தெய்வம் எங்கே ஸார், இருக்கிறது? சொல்லுங்கள். அது நம்மிடையே இருந்தால், இந்த அடாத செய்கைகளை ஏன் உடனே அம்பலப்படுத்தி அபராதிகளைத் தண்டிப்பதில்லை? அதனால்தான் சொல்லுகிறேன் ஸார் - தெய்வம் இல்லை; அது நம்மிடையே இல்லை; இந்தப் பம்பாயிலும் எப்பகுதியிலும் இல்லை; இந்த உலகிலும் இல்லை என்று. 'நாளுக்கு நாள் பெருகிவரும் அட்டூழியத்தினால், இந்தச் சராசரம் ஒரு நாள் பிரளயத்துக்கு உட்பட்டு அழிந்து போகப்போகிறது, இதன் அநியாயப் போக்கு மாறவே மாறாது' என்று அத்தெய்வம் நம்மை விட்டு ஓடிப்போய் விட்டது, ஸார், இதை உணர்ந்து எழுதியிருக்கிறாரா, அந்த எழுத்தாளர்? ஏன் ஸார்? உங்களைத்தான் கேட்கிறேன்; சொல்லுங்களேன். இதைக் கொஞ்சமாவது மனதில் கொண்டு இருக்கிறாரா, என்பதை. எப்படிக் கொள்ளுவார், ஸார்? அவரும் அந்தக் கும்பலில் ஒருவர்தானே! அதிலும், கற்பனை என்ற நாகரிகப் பெயரில், பொய்—புனை—சுருட்டு இவற்றை வனைந்து கதையை உருவாக்கி, நம்மையெல்லாம் ஏமாற்றும் பேர்வழிதானே ஸார், அவர்? எனவே, மேலும் மேலும் வேஷம்போட, 'இல்லாத தெய்வத்துக்கு ஒரு கோவிலைச் சமையுங்கள்; அங்கேயும் அந்தத் தெய்வத்தின் பெயரால், இன்னும் அட்டூழியங்களைப் புரிந்து வருவோம்,' என்றுதானே இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்? என்ன உலகம், ஸார், இது? மருந்துக்குக்கூட ஒரு நல்லவன் இருக்கமாட்டானா? நல்லவனாக வாழ முயற்சித்தாலும், கெட்டவனாக, பொய்யனாக, வேஷதாரியாக மாறினாலன்றி வாழமுடியாது என்ற நிலையை அல்லவா, நமது இன்றைப் பழக்க வழக்கங்கள், திரை மறைவு நாடகங்கள், தெய்வம் ஊமையாகச் செவிடாகச் செயலற்றதாக இருக்கிறது என்பதால் எழுந்த ஊக்கம், ஏற்படுத்தி விட்டிருக்கிறது........."

அவர் அன்று முழுவதும் தமது குறை பாட்டை அழுது தீர்த்திருப்பார்; ஆனால் இடையே நான் இறங்கவேண்டிய இடம் வந்து விட்டது. எனவே, அவரைக் கவனியாமல் எழுந்துவிட்டேன்.

"என்ன ஸார் கிளம்பிவிட்டீர்கள்?" என்று அவர் இன்னும் என்னை விடாது துரத்தலானார்.

"நான் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்து விட்டது."

"எந்த ஸ்டேஷன் இது?"

"அந்தேரி"

"அந்தேரியா?"

அவரும் எழுந்துவிட்டார். "நீங்கள் அந்தேரியிலா இருக்கிறீர்கள்?"

"ஆமாம்" என்று சொன்னால், எங்கே என்னைப் பின்பற்றி வீட்டுக்கும் வந்து, தமது வசைப் புராணத்தை ஆரம்பித்து விடுவாரோ, என்ற பயந்தான், எனக்கு. எனவே, இல்லை; இங்கே ஒரு நண்பரைப் பார்த்துவிட்டு அடுத்த ரெயிலில் மாதுங்காவுக்குத் திரும்பவேண்டும். அங்கேதான், நான் இப்போது இருக்கிறேன்" என்று புளுகிவிட்டு, மரியாதைக்காக, "நீங்கள் இங்கேதான் வசிக்கிறீர்களோ?" என்று கேட்டு வைத்தேன்.

"அந்தேரியில் இல்லை; 'வெர்ஸோவா'*வில் இருக்கிறேன்" என்றார், அவர்.

"வெர்ஸோவாவிலா? அப்படியானால், இப்பொழுது நீங்கள் நடந்தல்லவா போக வேண்டும்? இரவு 10 மணிக்குப் பிறகு பஸ் கிடையாதென்று என் நண்பர் சொல்லுவாரே"

நாங்கள் ஸ்டேஷனைவிட்டு வெளியேறி, பேசிக்கொண்டே நடந்தோம். அவர் அலட்

* அந்தேரி ஸ்டேஷனிலிருந்து மூன்றரை மைல்கள் மேற்கே இருக்கும் ஓர் கடற்கரைக் கிராமம்; அந்தேரியிலிருந்து இந்தக் கிராமத்துக்கு பஸ் போக்குவரவு உண்டு

சியமாகச் சிரித்துவிட்டுச் சொன்னார்: "எனக்கு என்ன ஸார், பயம்? இந்த மூன்று மைல்களென்ன? முப்பது மைல்களானாலும், எந்த நடு இரவிலும் நடக்க அஞ்சுபவனல்ல, நான். இந்த உடல் வஞ்சகம் நிறைந்த இவ்வுலகத்திலே தவறிப் பிறந்தது. இது உண்மையான ஈசுவர பக்தியிலும் தயாளத்திலும், தூய்மையிலும் வளர்ந்தது. எனவே, உங்களைப் போல பேய்-பிசாசுகள் என்றோ, திருடர் என்றோ, நெடுந்தொலை என்றோ, இரவென்றோ, களைப்பென்றோ, எவ்விதப் பீதியும் என்னை அணுக முடியாது........."

நாங்கள் பிரியவேண்டிய இடம் வந்துவிட்டது. அவர்பாட்டுக்குப் பேசிக்கொண்டே நடந்தார். நான் மெல்ல நழுவி, வீட்டுக்குப் போகும் சந்தில் நுழைந்து மறைந்தேன். "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டுவிட்டு, வீட்டை நோக்கி நகர்ந்தபோது, அன்று என் அனுபவவலையில் விழுந்த இரு உருவங்கள் உள்ளத்தில் விரிந்தன.



உருவங்களா, அவை? இல்லை; இரு துருவங்கள். ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையே இரு துருவங்களுக்கிடையிலுள்ள வெளியைக் காட்டிலும் அகன்ற வெளியல்லவா இருந்தது? முதலில், டேயின் கதையின் வழி என்சிந்தனையில் சுழன்ற அந்தஐயர்; பிறகு இந்தத் தொணதொணப்புப் பேர்வழி. இரண்டுபேரும் கிழவர்கள் தாம்; இருவரும் அநுபவஸ்தர்கள்தாம்; இருந்தாலும், குணத்தில், போக்கில், நம்பிக்கையில் எத்தனை வித்தியாசம்! முதலவர் உலகத்து ஜீவராசிகள் அனைத்தும் தூய்மையானவை என்று கருதுபவர்; இவரோ எல்லாமே பகட்டு என்று அகற்றுபவர். அவர் காற்றுவாக்கில் வந்த சொல்லில்கூடத் தெய்வம் இருப்பதாக நம்பும் இயல்புடையவர். இவரோ, தெய்வத்தைப் பூசிக்கும் கோவில்களில்கூட அது இல்லையென்று சாதிப்பவர். அடேயப்பா! எவ்வளவு வித்தியாசம்!! எத்தனை விசித்திரம்!!! இதனால்தான், உலகம் விசித்திரமானது என்று அறிஞர்கள் கூறுகின்றார்களோ?

8

நான் வீடுவந்து சேர்ந்தபோது, மணி பதினொன்றைத் தாண்டிவிட்டது. மனைவி விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். எட்டு மணிக்கு வீடு திரும்புவதற்கே குறைப்பட்டுக்கொண்டிருந்தவள், இன்று பதினொரு மணிக்குப் பிறகு வந்திருப்பதற்குக் கோபம் கொள்ளத்தான் கொள்வாள். இருந்தாலும், நானென்ன வேண்டுமென்றா தாமதமாக வருகின்றேன்? மனிதன் என்றால், வீடு—வாசல் ஒன்றையே குறியாகக் கொண்டு காலம் கடத்திவிட முடிகிறதா? எத்தனையோ எதிர்பாராத அலுவல்கள்; புறக்கணிக்க முடியாத இன்றைய நிகழ்ச்சியைப் போன்ற எவ்வளவோ நிகழ்ச்சிகள்; அவற்றை உதறித் தள்ளிவிட முடிகிறதா? ஆனால், என் மனைவிக்கு அதெல்லாம் எங்கே தெரிகிறது!

கதவைத் தட்டியதும் அவள் எழுந்துவந்து திறந்துவிட்டு, "மணி பன்னிரண்டுதான் ஆயிற்று" என்றாள். அவள் முகம் பசிக்களைப்பாலும், கோபத்தாலும் தொங்கிக்கொண்டிருந்தது.

"இல்லை; பதினொன்றுதான் ஆகியிருக்கிறது" என்று திருத்தினேன்.

"போதாதா? பேசாமல் உங்கள் பத்திரிகைக்காரரை அங்கேயே ஒரு வீடு கட்டித் தந்துவிடச் சொல்லுங்கள். அப்புறம் கவலையின்றி, சவுகரியமாக, இஷ்டப்படி வந்துபோகலாம்"

"வீடு கட்டித்தரும் அளவுக்குப் பொருளாதாரநிலையில் இருந்தால், அவர் ஏன் இந்தப் பத்திரிகைப் பிழைப்பை மேற்கொள்ள வருகி

றார்? ஆனால் இன்று நான் அங்கே போகவில்லையே"

"பின் எங்கே போயிருந்தீர்களாம்? நீங்கள் பாட்டுக்கு எங்கேயாவது சுற்றிவிட்டுக் காலங் கெட்ட காலத்தில் வாருங்கள்; நான் இங்கே இல்லாத கவலையெல்லாம் பட்டுக்கொண்டு, பசியும் பயமும் வாட்ட அவஸ்தைப்படுகிறேன்."

அவளுக்குப் பசிக் கோபம். வயிற்றில் அன்னமயம் சேர்ந்தாலன்றி, இனி அவள் கோபம் தணியாது. எனவே சொன்னேன்: "சரி, நீ போய் சாப்பிடு; நான் சாப்பிட்டாகி விட்டது."

"சாப்பிட்டுவிட்டீர்களா? பொய்; உங்களுக்கு யார், இந்த ரேஷன் காலத்தில், சோற்றை வைத்துக்கொண்டு அழைக்கிறார்கள்? நான் கோபித்துக்கொண்டதற்காகப் பொய் சொல்லிப் பட்டினியே படுத்துக்கொள்ளாதீர்கள்."

"இல்லை வேதம்; டேயிடம் போயிருந்தேன்; நேரமாகிவிட்டது; சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டுமென்று, அவருடைய ஹோட்டலுக்கு இழுத்துச் சென்றுவிட்டார்"

"அவர் ஒருவர். வேலையற்ற மனிதர்; தன்னைப்போல உங்களையும் பெண்டு—பிள்ளைகளற்ற சந்நியாசியென்று நினைத்துக்கொண்டிருக்கிறார். இப்போது அங்கே என்ன வேலையாம், பாதி ராத்திரி வரையில்?"

"எல்லாம்பிறகு சொல்லுகிறேன்; நீ முதலில் போய்ச் சாப்பிடு" என்று அவளை அனுப்பிவிட்டுக் காரியாலய உடைகளைக் கழற்றி வழக்கமான ஆடையை அணிந்துகொண்டேன்.

அவள் முணு-முணுத்துக்கொண்டே சாப்பிட உட்கார்ந்தாள். பசி வெறி அடங்கியதும் அவள் பேச்சில் நின்ற வெறியும் அடங்கிப்போயிற்று. சரசமான குரலில் "உங்களுக்கு ஒரு பயணம் வந்திருக்கிறதே" என்றாள்.

"பயணமா?"

"ஆமாம்; உங்கள் தம்பிக்குக் கலியாணமாம்"

"யாருக்கு, குருவுக்கா?"

"ஆமாம்; காலையில் நீங்கள் ஆபீசுக்குப் போனபிறகு தந்தி வந்தது. மேஜைக்குள் இருக்கிறது, பாருங்கள். நாளை நின்று மறுநாள் கலியாணமாமே; எப்படிப் போகப் போகிறீர்கள்?"

நான் அவசரமாகத் தந்தியை எடுத்துப் படித்தேன். கிட்டத்தட்ட ஒரு சிறு கடிதத்தின் அளவுக்கு அது இருந்தது.

"அண்ணா"

நெடுநாளாக நீங்கள் எதிர்பார்த்திருந்த சம்பவம், எதிர்பாராத குறுகிய காலத்தில் முடிவாகிவிட்டது. பதினாலாம் தேதி காலையில் மதுரை வேங்கடசாமி நாயுடு அக்கிரகாரத்தில் 34-வது இலக்கமிட்ட என் ஒன்றுவிட்ட மாமனார் வீட்டில் கலியாணம் நடக்கிறது. எப்படியும் மதனி—குழந்தைகளுடன் வந்து கலியாணத்தை நிறைவுறச் செய்யவேண்டும்; மற்றவை நேரில்—குருசாமி"

என் மனத்தில் அப்பொழுது எழுந்து நின்ற உணர்ச்சிகளின் மோதலை விவரிப்பது துர்லபம். ஒரு புறம் கலியாணத்துக்குப் போய் விடவேண்டுமென்ற துடிதுடிப்பு. மற்றொரு புறம், டேயின் சிகிச்சைக்கு உதவுவதாக வாக்களித்துவிட்டோமேயென்ற தவிப்பு. இவற்றிற்கிடையில் நெடுநேரம் ஊசலாடி நின்ற உள்ளத்துக்கு என் மனைவிதான் கடைசியில் முடிவு கட்டினாள்.

சாப்பிட்டு வந்ததும். தந்தியை விரித்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த என்னைக் கண்டு, அவள் சொன்னாள்: "என்ன ஆலோசிக்கிறீர்கள்? நாம் எல்லோரும்தான் போக முடியாது; நீங்களாவது கட்டாயம் போகத்தான் வேண்டும். நாளைப் பகல் எக்ஸ்பிரஸைப் பிடித்துப் போனால், கலியாணத்தன்று காலையில் சரியாக மதுரை போய்ச் சேர்ந்துவிடலாமே."

"எக்ஸ்பிரஸை நம்பினால். அவ்வளவுதான். அது பெரும்பாலும் பட்டணத்துக்கு 'லேட்'டாகவே போய்ச் சேருகிறது. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் நான் வருகிறேன் என்பதற்காக எழும்பூரில் காத்திருக்குமா, என்ன?"

"அப்படியானால்?"

நாளை இரவிலோ, நாளை நின்று பகலிலோ புறப்படும் 'பிளேனைப்'ப் பிடித்துப் போனால்................."

"எப்படிப் போவீர்களோ, எனக்குத் தெரியாது; கலியாணத்துக்கு நீங்கள் அங்கே கட்டாயம் இருந்தாகவேண்டும். இல்லாவிட்டால், உங்கள் அம்மாவை நான் அடுத்த தடவை நிமிர்ந்து பார்க்கமுடியாது."

" அது சரிதான், வேதம், ஆனால்........"

" ஆனால் என்ன ஆனால்? இங்கே அந்தக் கால் காசுக்குப் பயனில்லாத பத்திரிகை வேலை பாழாய்ப் போகிறதே என்று தயங்குகிறீர்களா?"

" அதுவல்ல வேதம்; நம் டே பாபு இருக்கிறாரே........"

" ஆமாம்; டேயும் ஆச்சு; பேயும் ஆச்சு. உங்கள்மீது உயிரையே வைத்திருக்கிறார்கள், அவர்கள் அம்மாவும் பிள்ளையும். நான் ஊரிலிருந்து வந்தபொழுது ஆயிரந்தடவை சொல்லிவிட்டார்கள். இந்த வருஷம் எப்படியும், எந்தப் பெண் வந்தாலும் கலியாணத்தை நிச்சயித்துவிடப்போகிறேன். கடிதாசு போடச் செய்வேன்; முன்னதாக வந்து சம்பந்தி ஸ்தானத்தை ஏற்று நடத்திவைக்கவேண்டும்-என்று. அவரும் கடிதாசுதோறும் எழுதிக்கொண்டிருக்கிறார். எந்த விநாடியும் புறப்படத் தயாராக இருக்கவேண்டும்-என்று. அவர்கள் மாசற்ற அன்பின் முன்பு.........!"

அன்பு!

ஆம்; அன்புதான் எங்களைச் சகோதரர்களாக்கிற்று. மூன்று வருடங்களுக்கு முன்பு இந்தக் குருசாமி யாரோ? நான் யாரோ? என்றிருந்த நாங்கள் இன்று ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகளென இணைக்கப்பட்டுவிட்டோமென்றால், அந்த இணைப்புக்கு அஸ்திவாரமாக இருந்தது, ஆத்மார்த்தமான உள்ளன்புதான்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் குருவிடமிருந்து வந்த அந்த முதற் கடிதம்—அதன் ஆரம்ப வார்த்தைகள்—என்றும் சிரஞ்சீவியாக என் உள்ளத்தில் வாசம் செய்கின்றன.

" அன்புள்ள 'மாயாவி' அண்ணா!"

முகமறியாத பேர்வழி ஒருவரிடமிருந்துவந்த கடிதம் இந்த உறவு முறையுடன் ஆரம்பித்தது கண்டு நான் திகைத்துப்போய் விடவில்லை. ஏனெனில், அச்சமயம் என் 'விசிறி'கள் பலரிடமிருந்து வந்த கடிதங்கள், இதே வார்த்தையை ஏதாவது ஓரிடத்தில் தாங்கியிருந்தன.

அப்பொழுது, நான், இதைப் போன்றதொரு நெடுங் கதை எழுதி, அது ஓர் பிரபல மாதச் சஞ்சிகையில் வெளியாகிக் கொண்டிருந்தது. அந்தக் கதையில் அதன் ஆசிரியரான நானும் ஒரு பாத்திரமாக இடம் பெற்றிருந்தேன். அதில் வரும் கதாநாயகி என்னை 'அண்ணா' உறவுடன் அழைப்பதாக எழுதப்போக, அந்த உறவு, என் கதைகளை விரும்பிப் படிக்கும் வாசகர்களிடையே ஓர் சர்ச்சைப் பொருளாயிற்று. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றியவாறு அந்த உறவு முறையை விமரிசித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். அந்த ரீதியில் இந்த ஆசாமி அவ்வுறவு முறையை ஆதரிப்பதன் அடையாளமாக, என்னை அதே உறவிட்டுக் கடிதத்தை ஆரம்பித்திருக்கிறார் என்று எண்ணினேன்.

அவர் அதை ஆதரித்துத்தான் கடிதத்தின் முற்பகுதியை எழுதியிருந்தார். ஆனால் பிற்பகுதியில் ஓடிய வாக்கியங்கள் என் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. அதில் குரு எழுதியிருந்தான்:

"சாரதா (பிரஸ்தாபக் கதையின் நாயகி) பாக்கியம் செய்தவள், அண்ணா. 'அண்ணா' உறவுடன் உங்களை அண்டிய அவளுடைய இருண்ட வாழ்வில் விளக்கேற்றிவைத்துவிட்டீர்கள். அவளைப்போலவே 'அண்ணா' உறவுடன் உங்களை இன்று நெருங்கியிருக்கும் எனக்கும் ஆதரவு காட்டுவீர்கள் என்பது என் நம்பிக்கை. 'ஏதடா இந்த மனிதன் பணங்-காசுக்கு அடிபோட்டு இப்படி உறவு கொண்டாடிவருகிறானே' என்று நினைத்து விடாதீர்கள். எளிய வாழ்க்கையில் உழலுபவன்தான் என்றாலும், என் உள்ளம் பணத்துக்காகப் பள்ளமிட்டு நிற்கவில்லை. அதில் விழுந்திருக்கும் குழியை நாணயங்கள் நிரப்ப முடியாது. அன்பு ஒன்றுதான் அதை நிறைக்கும். ஆகவே, நான் யாசிப்பது உங்கள் அன்பு மொழிகள்; ஆதரவு தரும் கடிதங்கள்.

"அண்ணா, சிறு பிராயத்தில் தந்தையைப் பறிகொடுத்த நான் இத் திருச்சி நகரில் என் அன்னையின் அணைப்பிலே வளர்ந்து வருகிறேன். இந்த இருபத்துமூன்று வயதளவும் அந்த அன்புக் கரங்கள் என்னை அணைத்து ஆதரித்துத்தான் வருகின்றன; என்றாலும், ஏதோ ஒரு தனிமை உணர்ச்சி குழந்தையிலிருந்தே என்னுடன் வளர்ந்துவருகிறது. ஆம் அண்ணா; நீங்கள் உங்களைப்பற்றி இக் கதையில் குறிப்பிட்டிருப்பதுபோல, நானும் 'ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை' தான். சுற்றம் என்பது எனக்கு எட்டாக் கனி; எங்கள் ஏழ்மை நிலை. அதற்கு ஒரு வேலியிட்டிருக்கிறது, எனவே, சங்கடமோ சஞ்சலமோ ஏற்படுகையில், அன்னை ஒருத்தியின் மடியைத் தேடித்தான் நான் போகவேண்டியிருக்கிறது. எனக்குத் தைரிய வார்த்தைகள் கூறித் தேற்ற வழி அறியாத அவளும் என்னுடன் சேர்ந்து கண்ணீர் வடிப்பாள். அதுபோன்ற சமயங்களில் உடற்பிறப்பின் தேவை எனக்குத் தெற்றெனத் தெரியும். 'அன்புருவான அண்ணா ஒருவர் எனக்கு இருந்திருப்பாரானால், இப்போது நாங்கள்—தாயும், தம்பியும்—கண்ணீர் சோர நிற்பதைக் காணச் சகிப்பாரா?' என எண்ணுவேன்.

"இந்த எண்ணம் சேரச் சேர, 'அண்ணா'ப் பைத்தியம் என்னைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. ஆனால், யாரையாவது நான் 'அண்ணா' என்று அழைத்து, அவரும் என்னைத் 'தம்பி' என்று அழைத்துவிட்டால் மாத்திரம் என் குறை நீங்கியதாகி விடுமா? உறவில் பிறக்கவில்லையெனினும், அன்பில் பிறந்த அண்ணா ஒருவரை என் உள்ளம் நெடுநாட்களாகத் தேடி நின்றது. நீங்கள் எழுதிய கதையைப் படித்த பிறகு, அது, 'இதோ குரு, தெய்வம் உனக்குத் தந்த அண்ணா' என்று உங்களைக் காட்டிற்று. எனவே, அந்த உறவுடன் இன்று உங்களை நெருங்கியிருக்கிறேன்.

"எனது இக்கடிதத்தைக் கதையின் மயக்கத்தில் எழுந்த பிதற்றல் என்று ஒதுக்கிவிட வேண்டாம். அப்படி நீங்கள் ஒதுக்கிவிட முயன்றாலும், நான் விலகப் போவதில்லை. என் சஞ்சலங்களை அவ்வப்போது உங்களுக்கு எழுதத்தான் எழுதுவேன். அதற்கு ஆறுதலான பதில் உங்கள் உள்ளத்திலிருந்து பேனாவின் வழி இறங்கி என்னை நோக்கி வரும் என்றும் எதிர்பார்ப்பேன். பதில் வந்தால் சஞ்சலத்தை மறப்பேன். இல்லாவிட்டால், அது என் துர்ப்பாக்கியம் என அச்சஞ்சலங்களுடனே ஐக்கியமாகி மனம் மாய்வேன்.

"ஆனால் அண்ணா, அத்தகைய நிலை ஏற்படவே ஏற்படாது என்று என் உள்ளம் உறுதியளிக்கிறது. எழுத்தாளன் தீட்டும் கதைகளில் ஓரளவேனும் அவன் உள்ளம் பிரதிபலிக்காது இருப்பதில்லை என்பது உண்மையானால், சகோதர வாஞ்சையைச் செலுத்த ஏங்கியிருக்கும் உங்கள் உள்ளம் அதையே யாசித்து வந்து நிற்கும் என்னை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்?

"ஏற்றுக்கொண்டது என்ற உங்கள் பதிலை நான் உடனே எதிர்பார்ப்பது தவறல்லவே.

அனந்தகோடி நமஸ்காரம்.
உங்கள் அன்புள்ள தம்பி
......................."

இந்தக் கடிதம் என் உள்ளத்தைத் தொடவில்லை என்றால் என்னை மனித உணர்ச்சியுடையவன் என்று எப்படிச் சொல்லிக்கொள்வது? என் மனைவிகூட அதைப் படித்துவிட்டு "இதென்ன? முன் ஜன்மத்தில் 'விட்ட குறை' போலல்லவா இருக்கிறது?" என்று விமரிசித்தாள்.

அவள் விமரிசித்தது சரியாகவே இருந்தது. விட்ட குறை'யைப் போலவே நாங்கள், ஒட்டிக்கொண்டோம். ஒன்றரை வருடத்துக் கடிதப் போக்குவரவில் எங்கள் உறவு நூல் நன்றாக முறுகிவிட்டது. ஒருவர் முகத்தை மற்றவர் அறியமாட்டோம் என்றாலும், எங்கள் உள்ளங்கள் ஒன்றையொன்று நன்றாக அறிந்து இணைந்துவிட்டன. குரு பிறந்தது முதல் அன்றுவரையிலுள்ள வாழ்க்கைக் கதை எனக்கு மனப்பாடமாயிற்று. அது போல, என் பிறப்பு, வளர்ப்பு, சுற்றம் எல்லாவற்றையும் அவனும் தெரிந்துகொண்டான்.

இப்படி நாங்கள் ஒரு தாயின் சேய்களாக ஒன்றான பிறகுதான் எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

அப்பொழுது என்மனைவி கருவுற்றிருந்தாள். அவளைப் பிரசவத்துக்காக என் பெற்றோரிடம் கொண்டுவிட்டு வரக் கிளம்பினேன். திருச்சியைத் தாண்டித்தான் எங்கள் ஊருக்குச் செல்லவேண்டும். அன்புப் பிணைப்பில் கட்டுண்டிருந்த நாங்கள் திருச்சியில் இறங்கி, என்னைப் பெறாமல் பெற்ற தாயையும், தெய்வம் தந்த சகோதரனையும் முதல் முறையாக முகங்கண்டு அளவளாவிச் செல்லவேண்டுமென்று விரும்பினோம், ஆயினும், என் மனைவி அச்சமயம் நிறை கர்ப்பிணியாக இருந்தாள். சேவகா விருத்தியில் காலந்தள்ளிச் சுதந்திரத்தை இழந்திருந்த நான், உரியகாலத்தில் காரியாலயம் விடுமுறை அளிக்க மறுத்துவிட்ட காரணத்தால், அவளை முன்னதாக ஊருக்கு அழைத்துச் செல்லமுடியவில்லை. அவள் என்னவோ, தனது தளர்ந்த நிலையையும் பொருட்படுத்தாது திருச்சியில் இறங்கிச் செல்லவேண்டுமென்றுதான் கூறினாள். ஆனால் எனக்கு அத்தனை தைரியம் ஏற்படவில்லை.

எனவே, குருவுக்கு எங்கள் வருகையை அறிவித்துக் கடிதம் எழுதிவிட்டு, அதிலே, திருச்சியில் இறங்கிச் செல்லமுடியாது இருப்பதற்கு விசனத்தையும் தெரிவித்திருந்தேன். அதற்கு அவனிடமிருந்து பதில் வந்தது–நிலைமையை உணர்ந்துகொண்டோம், அண்ணா, ஆயினும் தனது பிள்ளையையும் மாட்டுப் பெண்ணையும் காண அன்னை துடித்துக்கொண்டிருப்பதால் அவளுடன் திருச்சி ஜங்ஷனில் உங்களைச் சந்திக்கிறேன்.

குருவின் அக் கடிதத்துக்கும் நான் பதில் அனுப்பியிருந்தேன். "திருச்சிக்கு எக்ஸ்பிரஸ் அகாலத்தில் வருவதால், அன்னையை அவ்வேளையில் அங்கே அழைத்து வரலாகாதென்றும், மனைவியை ஊரில் விட்டுத் திரும்புங்கால் அவர்கள் ஆசியைப் பெற நானே வீடு தேடி வருவேன்" என்றும் எழுதினேன்.

ஆனால், 'சந்திக்கிறேன்' என்று எழுதிவிட்டானே; முகமறியாத என்னை அந்த நெடு

தொடரில் அக்குறுகியகால அளவில் எப்படித் தேடிக் கண்டுபிடிப்பான் என்ற சிந்தனையே அப்பொழுது எனக்கு எழவில்லை. தனக்கும் அது தோன்றவில்லையென்றும், ஏதோ நெடுங் காலம் கட்டிப்புரண்டு பழகிய உணர்ச்சியே எங்களிடையில் கடிதத் தொடர்பு ஏற்பட்டது முதல் தனது உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்த தென்றும். ஸ்டேஷனை அடைந்தபிறகுதான் அந்தப் பிரச்னை தோன்றிற்று என்றும், குரு பிறகு சொன்னான்.

அதே நினைவு என்னுள்ளும் படர்ந்திருந்த தால்தானோ, என்னவோ, அன்றிரவு திருச்சி ஸ்டேஷனில், சிரமமோ, காலதாமதமோ இன்றி, ஒருவரை ஒருவர் கண்டுகொண்டுவிட்டோம்.

ரெயில் ஸ்டேஷனில் வந்து நின்றதும், நான் பிளாட்பாரத்தில் இறங்கி, வண்டி வண்டியாகத் தேடிவந்த ஒவ்வொருவரையும் உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். கடந்த ஒன்றரை வருடத்துக் கடிதப் பழக்கத்தில் என் உள்ளம் குருவைத் தன் போக்கில் ஒருவிதமாக உருச் செய்திருந்தது. அதைப் போன்ற ஆசாமி யாரேனும் தென்படுகிறார்களா என்றுதான் நான் ஒவ்வொருவரையும் கவனித்துப் பார்த்தேன். நாலைந்து பேர்கள் என் வண்டியையும், என்னையும் பார்த்துப் போய் விட்டார்கள். ஆறுவதாகப் பக்கத்து வண்டி ஜன்னலின் உள்ளே தலையை நுழைத்துப் பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார் ஒருவர். ஆம்; என் உள்ளம் உருவகப்படுத்திய குருவைப் போலவே இருக்கிறாரே!

நான் ஓரடி முன்னேக்கி நடந்தபோது அவரும் என்னை நோக்கி ஓடி வந்தார்.

"நீங்கள்............"

"மாயாவி அண்ணாதானே!"

நாங்கள் 'ஆம்' என்றுகூடச் சொல்லிக் கொள்ளவில்லை; அதற்குள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு விட்டோம்.

"நீ என்னை எப்படிக் கண்டுபிடித்தாய், குரு?"

"நீங்கள்?"

என் மனம் உன்னை ஏற்கனவே சந்தித்திருந்தது."

"அதுவேதான் எனக்கும்"

"பூர்வ ஜன்மத்தில் விட்டகுறை' என்று என் மனைவி அன்று சொன்னாளே; அவ்வார்த்தைகள் அச்சமயம் என் மனத்தில் ஓடின.

"மதனி, குழந்தைகள் எல்லோரும் எங்கே?"

"இதோ"

குரு அங்கே தாவி ஓடினான், மதனிக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுக் குழந்தைகளுக்குப் பாட்டி அனுப்பியிருந்த ஆசியுடன், தின்பண்டங்களையும் ஈந்தான்.

"நான் புறப்படும் வரையில், அம்மா, தானும் வருவேனென்று ஒற்றைக் காலில் நின்றாள். நீங்கள் கண்டிப்பாக இந்த அவவேளையில் அழைத்து வரலாகாதென்று எழுதியிருந்ததால்........."

இப்படி எவ்வளவோ பேசினோம். என்னென்ன பேசினோம் என்பது இப்போது கோவையாக நினைவில் இல்லை. அப்பொழுதிருந்த இன்ப மிதப்பு அதை மறக்கடித்துவிட்டது. அரை மணி நேரம் அரை வினாடியாக ஓடிவிட்டதுபோலத் தோன்றிற்று. ரெயில் ஊதியபோது பிரியா விடை பெற்றுப் பிரிந்த எங்கள் இருவர் கண்களையும் கண்ணீர் பனித் திரையிட்டிருந்தது.

ஒரு மாதத்துக்குப் பிறகு மனைவியை ஊரில் விட்டுவிட்டுப், பம்பாய்க்குத் திரும்பினேன். திருச்சியில் ஒரு நாள் தங்கிப் போகத் திட்டமிட்டு, குருவுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். ஸ்டேஷனுக்கு வந்து என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றான், அவன்.

திருச்சி டவுனில் நெருக்கடி நிறைந்த ஸ்டோர்கள் ஒன்றில் தணிந்த கூரையும், வாயிலும் உடைய வீட்டில் அவன் வசித்து வந்தான். அந்த வீட்டுப் படியேறியபொழுது நடந்த ஒரு சிறு சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

எழுத்தாளன் என்ற முறையிலோ, அல்லது குரு என்னை ஒரு பெரிய மனிதனாக உருவகப் படுத்தியிருந்தானோ, தெரியாது; அந்த ஸ்டோரின் தலைவாயிலில் நுழைந்தபோது ஆணும்—பெண்ணும், குழந்தையும் குட்டியுமாக சுமார் நூறு கண்கள் என்னைக் களிப்புடன் வரவேற்றன. அது, நான் சற்றும் எதிர்பாராத வரவேற்பு. எனவே பெருமை என்னை ஒருகணம் ஆட்கொண்டுவிட்டது. அந்தப் பூரிப்பில், ஓர் அன்புத் தெய்வத்தின் ஆலயத்தினுள் நுழைந்த நான், அதற்குரிய பயபக்தியை மறந்து, பெருமையுடன் நிமிர்ந்து நடந்தேன்.

படார்!

இந்த வணங்காமுடியோனுக்கு அக்கோவில் வாயிலின் நிலை பாடம் கற்பித்துவிட்டது.

என்ன? என்ன? என்று ஓடிவந்தாள் ஒரு மூதாட்டி.

"இவள் தான் நம் அன்னை" என்றான் குரு.

நான் அவள் பாதத்தைத் தொடக் குனியுமுன்பே, அந்த அன்புக் கரங்கள் என் உச்சந் தலையில் அடிபட்டஇடத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தன.

பல காலம், பல தெய்வங்களை வேண்டியபின் பிறந்தவன் நான். எனவே பெற்றெடுத்தவள் என்னிடம் எத்தகைய அன்பு செலுத்தியிருப்பாள் என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால், முப்பத்துஐந்து வருடங்களாக நுகர்ந்து இன்புற்ற அந்த அன்பு வெள்ளம் அனைத்தையும் மிஞ்சி மிதந்தது, இந்தத் தாயின் அன்பு! மண்டையில் பட்டிருந்த அடி உதிரத்தைக் கக்கவில்லையெனினும், பலமான அடிதான். ஆயினும் அதன் வேதனையை அடியோடு விரட்டிவிட்டது, இந்த அன்புப் பெருக்கு.

திருச்சியில் தங்கியிருந்த இருபத்துநான்கு மணிநேரமும் வற்றா ஊற்றாக அது பெருகி வழிந்தது. எத்தனை அள்ளி அள்ளிப்பருகியும் அது எனக்குத் தெவிட்டவில்லை. பலகாலம், தூரதேசத்தில் வாழ்ந்து திரும்பிய மகனிடம் தாய் எவ்வளவு ஆசைதீரப் பேசிக் களிப்பாளோ, அவ்வாறு களித்தாள் என் இந்த அன்னையும். குருவிடமிருந்து வராத கதைகளெல்லாம் அவளிடமிருந்து வந்தன. அந்த என் புதுக் குடும்பத்தின் முந்திய மூன்று தலைமுறைச் சரித்திரங்கள்கூட அன்று என் நினைவுக் குறிப்பில் சேர்ந்தன.

அந்தச் சம்பாஷணையின் இடையேதான் நான் கேட்டேன். "ஆமாம், அம்மா, இந்த வீட்டுக்கு மருமகள் வர இன்னும் நாள் ஆகவில்லையா?" என்று.

"என் வீட்டுக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்பே மருமகள் வந்துவிட்டாளே" அப்பா என்று கூறி, அவள் என்னைக் குறிப்புடன் நோக்கினாள்.

நான் புரிந்துகொண்டு சொன்னேன்: "ஆனாலும்அம்மா, அந்த மருமகள் உங்களிடம் அழுத்தமாகச் சொல்லச் சொன்னாள்:" 'நான் பெற்றுத் திரும்பும் போது. திருச்சி வீட்டில் என்னை வரவேற்க 'ஓர்ப்படி' இருக்க வேண்டும் என்று.'"

"அது எப்படியடா அப்பா, முடியும்? பருப்பில்லாமல் கலியாணம் நடத்த முடியுமா? என் வீட்டின் முதல் லட்சுமியல்லவா, வருகிறவளுக்கு மங்கள ஆராத்தி சுற்ற வேண்டும்? அதிருக்கட்டும்; முதலில் உன் தம்பியைக் கலியாணத்துக்குச் சம்மதிக்கச் செய்; பிறகு மற்ற விஷயங்களை ஆலோசிப்போம்."

"ஏன்? குரு கலியாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறான்?"

"அதென்னவோ. உன் எதிரே நிற்கிறானே நீயேக் கேட்டுக்கொள். மூன்று வருடங்களாக நானும் தலைகீழாக நின்று பார்க்கிறேன். ம்ஹூம். 'அண்ணாவுக்குத்தான் குழந்தை குட்டிகள் இருக்கின்றனவே; நாம் பிரும்மச்சாரியாகவே இருந்துவிடுவோம்' என்று நினைத்திருக்கிறானோ, என்னவோ?"

"அப்படியா, குரு?"

அவன் தயங்கினான்.

"சொல்லேண்டா; என்னை வாயடைக்கச் செய்ததுபோல உன் அண்ணாவைச் செய்துவிட முடியாது." என்று தூண்டினாள் அன்னை.

"இல்லை அண்ணா........"

"தயங்காதே; சும்மா சொல்."

"உங்களிடம் சொல்ல வெட்கம் என்ன? உங்களிடம் சொல்லாமல். வேறு யாரிடம் சொல்லி என் குறையைத் தீர்த்துக்கொள்ளப் போகிறேன்? வேறொன்றுமில்லை, அண்ணா; பொருளாதார நிலையே, கலியாண விஷயத்தில் என் ஊக்கத்துக்குத் தடையாக இருக்கிறது

ஒரு சிறு ரைஸ்மில்லில், சொற்பச் சம்பளத்தில், குமஸ்தாவாக உழன்று வரும் நான், அந்நிலை மாறுமட்டும் கலியாணத்தைக் கனவில் தான் கண்டு களிக்கவேண்டும்.''

"இது தவறான முடிவு, குரு. உலகில் குபேரர்கள் தாம் குடும்ப சம்பத்துடன் இருக்கிறார்கள்; ஏழைகள் பிரும்மச்சாரிகளாகவே இருக்கிறார்கள் என்பதில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தக்கவாறு குடும்ப வாழ்க்கை நடத்தித் தான் வருகிறார்கள்.''

"அது சரிதான், அண்ணா; நாங்கள் இருவர் குடிக்கும் கூழை மூவர் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் விவாகம் என்ற மாயமந்திரம் குடும்ப விருத்திக்காகவே என்றிருக்கும்போது.........''

"இங்கேயும் உன் கொள்கையை நான் ஆதரிக்க முடியாது, குரு. இதோ என்னையே எடுத்துக்கொள். நான் குபேரனல்ல, உன்னைப் போலவே குமாஸ்தா வாழ்வில் காலந்தள்ளுபவன்தான். இருந்தாலும், நான்கு குழந்தைகளையும், மனைவியையும் பெற்றோரையும் காப்பாற்றும் வலிவை எனக்கு ஈசன் அளித்திருக்கவில்லையா? அதுபோல அவர், உனக்கும் தேவையான நேரத்தில் வழிகாட்டுவார். வழி காட்டவும் ஆரம்பித்துவிட்டார். குரு, பணம் காசினால் நீங்கள் செலுத்தும் அன்புக்கு ஈடு செய்ய முடியாத எனக்குச் சில மாதங்களாக ஒரு தீர்மானம் உருவாகியிருக்கிறது. இந்த மில் வேலையில் உன் வாழ்க்கை வளர்ச்சிக்கு ஏற்ற முன்னேற்றம் இராது என்ற ஊகத்தில், உன்னைப் பம்பாயில் அதிக வருவாயுள்ள ஓர் வேலையை ஏற்கத் தகுதியுடையவனாக்கி, அங்கு அழைத்துக்கொண்டுவிடத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவும் போகிறேன். ஆனால், எனக்கு நீ ஒரு உறுதிமொழி தரவேண்டும்-பம்பாய்க்கு வரும்பொழுது, உன் மதனிக்கு உதவியாக இருக்க ஓர் மனைவியை ஏற்று அழைத்து வருவதாக.''

குருவின் கண்களில் வியப்பு விரிந்தது. "அண்ணா, நீங்கள் தெய்வம்'' என்றான் அவன் களிப்பு மிகுதியால்; "என் கனவில் இருந்தது எப்படி உங்கள் நினைவில் மிதந்தது?''

"அதுதான் உண்மையான உள்ளன்பின் அடையாளமடா, குரு'' என்றாள் எங்கள் அன்னை.

குரு கலியாணத்துக்கு இசைந்துவிட்டான். அவனை இசையச்செய்தது பெரிதில்லை அப்பா, அவனுடைய பெற்றோரின் இடத்திலிருந்து நீயும் என் மாட்டுப்பெண்ணும் அதை நடத்தியும் வைக்கவேண்டும். பெண் பார்த்து நிச்சயித்ததும் கடிதம் எழுதச் செய்கிறேன். பிறகு எல்லாம் உன் பொறுப்பு'' என்று நான் புறப்பட்டபோது கூறி அனுப்பினாள் அன்னை.

அதைத்தான் என் மனைவி பம்பாய்க்குத் திரும்பியபோதும் நினைவுபடுத்தியிருந்தாள். குருவும் கடிதந்தோறும் குறிப்பிட்டுக்கொண்டிருந்தான். இத்தகைய நிலையில், டேய்க்கு அளித்த வாக்குறுதியின் காரணமாகவோ, காரியாலயத்தில் வேலையிருந்த காரணத்தாலோ, நான் இக் கலியாணத்துக்குப் புறப்படாமல் நின்றுவிட முடியுமா? ஏன்? போதிய அவகாசம் மாத்திரம் கிட்டியிருந்தால் என் குடும்பம் முழுவதுமே அந்த மகோற்சவத்தில் கலந்துகொண்டிருக்கும். அதுதான் இல்லாது போய்விட்டது; என்ன அவசரமோ, அல்லது அவசியமோ? இப்படிக் 'கெடுபிடி'யாக நிச்சயமாகியிருக்கிறது அதற்கு நானும் போகாதிருந்தால்?

எனவே கிளம்பிவிட்டேன். மறு நாள் முதல் வேலையாகக் காரியாலயத்தில் ஒரு வாரம் 'லீவு' பெற்றுக்கொண்டு, டேயைக் காணச் சென்றேன். விஷயத்தை அறிந்ததும் அவர் அதைப் பொய்யென்று நம்ப மறுத்தார். கஷ்டமான வேலையைச் சுமத்திவிட்டதால், அதைக் கழித்துக் கட்டக் காட்டும் பாசாங்கு என்றுகூடக் கூறினார். ஆனால், தந்தியைக் காட்டியதும் அவர் வாயடைத்துப் போயிற்று. "போய் வாருங்கள், ராம்; சிகிச்சையை என் தமிழ் உபாத்தியாயரை வைத்துக்கொண்டு சமாளித்துக் கொள்கிறேன்'' என்று விடை அளித்தார்.

நான் புறப்பட்டு ரஸ்தாவில் இறங்கிவிட்ட பிறகு டே என்னை மீண்டும் கூப்பிட்டு, "ராம், மதுரைக்குத்தான் போகிறீர்களே; பொழுது கிடைத்தால் ஐயரின் கேசு விஷயமாக ஏதேனும் செய்திகளைத் திரட்ட முடியுமாவென்று பாருங்களேன்'' என்றார்.

"ஆகட்டும்'' என்று கூறி வந்தேன்.

மறுநாள் பகல் விமானத்தில் 'சான்ஸ்' டிக்கட்டு ஒன்றில் இடம்பெற்றுச் சென்னை வந்து, அன்றிரவே, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் மதுரைக்குப் பயணமானேன்.

(தொடரும்)

"என் கிராமத்தில் விரோதி மலேரியாவை நாங்கள் வீழ்த்தி விட்டோம். இதற்கு உதவியது பாலுட்ரின்……

மலேரியாவைப்பற்றி எங்களுக்கு இனி பயமேயில்லே. எங்கள் கிராமத்திலே அது மிகவும் பயங்கரமான கஷ்டங்களைக் கொடுத்து வந்தது. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் 3 நாட்கள் உட்கொண்டால் மலேரியாவைக் குணப்படுத்தும் என்பது இப்போது எங்களுக்குத் தெரிந்துவிட்டது. மலேரியா வராமல் தடுக்க வாரம் ஒரு மாத்திரை உட்கொள்ளவேண்டும் என்பதையும் நாங்கள் அறிவோம்".

ஒரு நாளைக்கு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை விகிதம் (ஆகாரத்திற்குப் பிறகு தண்ணீருடன்) 3 நாட்கள் உட்கொண்டால் சாதாரணமாக மலேரியா பாதிப்பு அகலும். வாரம் ஒரு மாத்திரை விகிதம் உட்கொள்ளுவதனுல் புதியதாக மலேரியா தொத்துவதினின்றும் தடுக்கச் செய்யும். பின்னிட்டு நேரிடும் விரும்பத்தகாத கோளாறுகள் எதும் இல்லாதது 'பாலுட்ரின்'. சிறுவர்கள், வயோதிகர்கள், கர்ப்பிணி ஸ்திரீகள் யாவரும் முழு நம்பிக்கையுடன் உட்கொள்ளலாம். ஒரு மாத்திரை விலே ஒரு அணு. 'பாலுட்ரின்' 8 அணுவுக்கு 8 மாத்திரைகள் அடங்கிய தாள்களில் கிடைக்கும்.

'பாலுட்ரின்'

மலேரியாவுக்கு அற்புதமான ஔஷதம்.

குணத்தின் ICI சின்னம்

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்,

கல்கத்தா பம்பாய் சென்னை கொச்சி புதுடில்லி கான்பூர்.

உன்னுடைய க்ஷேமத்திற்கும் பாதுகாப்பிற்கும்

அமெரிக்கன் மாடல் தானாக இயக்கும்

ஆறு ரவைகொண்ட கைத்துப்பாக்கி

(லைசென்ஸ் தேவையில்லை)

முற்றிலும் புதிய ரகம். பார்வைக்கும், பழக்கத்திற்கும் அசலைப்போன்றது. ஒரே தடவையில் ஆறுதடவை சுடலாம். விலங்குகளையும், திருடர் கொள்ளைக்காரர்களை பயமுறுத்தவும் சினிமா, நாடகங்களில் உபயோகப்படுத்தவும் இன்றியமையாதது. பயங்கர சப்தத்துடன் நெருப்பைக் கக்கிக்கொண்டு வெடிக்கின்றது.

விலை ரூ. 7—8—0

தபால் பாக்கிங் செலவு ரூ. 1—8—0 தனி

ஒவ்வொரு துப்பாக்கியுடனும் ஒரு டஜன் ரவைகள் இனாமாக கொடுக்கப்படும்

தனி ரவைகள் டஜன் விலை ரூ. 1—0—0

தோல்பெட்டி பெல்டுடன் ஒன்று ரூ. 2—8—0



அமெரிக்கன் மாடல்

பாக்ஸ் காமிரா

மலிவு அழகு உறுதி
டின்பாடி ஸ்ப்ரேகலர்
மிக்க சக்திவாய்ந்த—
லென்ஸுடன்

இந்தக் காமிராவில் 120, நம்பர் பிலிமில் 2½" x 3½" சைஸில் மிக்க அழகான போட்டோக்கள் எடுக்கலாம். இக் காமிராவால் போட்டோ எடுக்க முடியாவிட்டால் விலை வாபீஸ். உபயோகிக்கும் விதம் இனாமாக அனுப்பப்படும்.

விலை

நெ. 101, ஒன்றுக்கு ரூ. 6–8–0

நெ. 1001, DELUX ஒன்றுக்கு ரூ. 8–8–0

பாக்கிங் & போஸ்டேஜ் ரூ. 1–8–0 தனி

தோல் பெட்டி ஒன்று ரூ. 3–0–0

Address, தபால் அவசியம் ஆங்கிலத்தில் எழுதவும்

BENGAL TRADERS (68)

P. O. 21 — ALIGARH U. P.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

தமிழ்நாடு அரசு ... சென்னை-600 008
19323

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?

வாயைச் சுத்திகரித்து
மூச்சின் நாற்றத்தை
போக்குகிறது.

உமிழ்நீர்
கெடுதலைத் தடுத்து
ஈறுகளைப் பாதுகாக்கிறது.

மேலே உள்ள கறைகளை அகற்றி
பற்களுக்கு
வெண்மை
தருகிறது

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் டூத் பேஸ்ட் உபயோகிக்கும்போது நீங்கள் உங்கள் பற்களுக்கும், ஈறுகளுக்கும் சிறந்த பாதுகாப்பு அளிக்கிறீர்கள். பற்கள் வெண்ணிறமாகி பளபளக்கிறது; அதே சமயத்தில் சுவாசத்திலும் நறுமணம் உண்டாகிறது. அதனால்தான் லக்ஷக் கணக்கான மக்கள் மக்ளீன்ஸைத் தவிர வேறு எதையும் உபயோகிப்பதில்லை.

இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்!

MTX-5 TM

Regd. No. M 4405 CAUVERI

24 JAN 1951

The Cauveri Colour Press, Kumbakonam.